

# மாண்புமிகு
# தமிழ்நாடு முதலமைச்சர்
# புரட்சித்தலைவி அம்மாவின்
# எழுச்சிமிகு உரைகள்

தொகுப்பு-6



# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்

தொகுப்பு-6

சிறப்பு வெளியீடு எண். 36

# தமிழரசு

இலவச வெளியீடு

மே 2014

வெளியிடுபவர் :
இயக்குநர்,
செய்தி–மக்கள் தொடர்புத்துறை,
சென்னை.

அச்சிட்டோர் :
தமிழரசு அச்சகம்
110, அண்ணா சாலை
சென்னை – 600 002.



# அறிமுகவுரை

**“மக்களால் நான்**
**மக்களுக்காகவே நான்”**

என்ற உயர்ந்த இலட்சியத்துடன் தமிழக மக்கள் நலனுக்காகவே வாழ்ந்துவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் பல்வேறு நிகழ்ச்சிகளில் ஆற்றிய உரைகள் (21.09.2013–21.02.2014) தொகுக்கப்பட்டு **“மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மாவின் எழுச்சிமிகு உரைகள்”** தொகுப்பு–6 என்ற நூலாக வெளியிடப்படுகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித்தலைவி **அம்மா** அவர்கள், ஆட்சிப் பொறுப்பேற்று மூன்றாண்டுகள் நிறைவடைவதையொட்டி, வெளியிடப்படும் இந்நூல், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் தொலைநோக்கு சிந்தனைகளையும், அரிய கருத்துகளையும் பொதுமக்கள் அறிந்து பயன்பெற மிகவும் உதவும்.

இந்நூலினை தொகுத்து வெளியிட்டுள்ள செய்தி – மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் திரு. **மகேசன் காசிராஜன்,** இஆப அவர்களையும், உறுதுணை புரிந்த செய்தித்துறை அலுவலர்களையும் பாராட்டுகிறேன்.

**முனைவர் மூ. இராசாராம்,** இஆப
அரசுச் செயலாளர்
தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை



# பொருளடக்கம்


| வ. எண். | உரை விவரம் | பக்கம் எண். |
|---|---|---|
| 1. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியத் திரைப்பட நூற்றாண்டு விழாவைத் தொடக்கி வைத்து ஆற்றிய உரை (21.9.2013) | 1 |
| 2. | டெல்லியில் நடைபெற்ற தேசிய ஒருமைப்பாடுக் குழுவின் கூட்டத்தில் வாசிக்கப்பட்ட மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உரையின் தமிழாக்கம் (23.9.2013) | 12 |
| 3. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்தியத் திரைப்பட நூற்றாண்டு நிறைவு விழாவில் ஆற்றிய உரையின் தமிழாக்கம். (24.9.2013) | 26 |
| 4. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிற்றுந்துகள் (Small Buses) மற்றும் புதிய பேருந்துகளைத் துவக்கி வைத்து ஆற்றிய விழாப் பேருரை (23.10.2013) | 30 |
| 5. | மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இலங்கையில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா புறக்கணிக்க வலியுறுத்தி, சட்டமன்றப் பேரவையில் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை (24.10.2013) | 36 |

6. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மின் நிலைமை குறித்து சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின் மீது ஆற்றிய பதிலுரை (25.10.2013) .......... 45

7. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் தாது மணல் குறித்து ஆற்றிய உரை (29.10.2013) .......... 60

8. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர்களுக்கு நிவாரண உதவிகள் குறித்து சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய உரை. (30.10.2013) .......... 69

9. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் விலைவாசி குறித்து சட்டமன்றப் பேரவையில் ஆற்றிய விளக்கவுரை (30.10.2013) .......... 74

10. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருச்சியில் பாலியல் பலாத்காரத்திற்கு இலக்கான மாணவி பிரச்சினை குறித்து சட்டமன்றப் பேரவையில் அளித்த பதிலுரை (30.10.2013) .......... 80

11. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் 2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவின் மீதான விவாதத்திற்கு பதில் அளித்து ஆற்றிய உரை. (30.10.2013) .......... 83

12. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உலக சதுரங்க வாகையர் போட்டியைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரையின் தமிழாக்கம். (7.11.2013) .......... 94

13. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் இலங்கை காமன்வெல்த் மாநாட்டில் இந்தியப் பிரதிநிதிகள் பங்கேற்க கூடாது என வலியுறுத்தும் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை (12.11.2013) ........ 103

14. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சென்னை, அண்ணா பல்கலைக்கழக 34ஆவது பட்டமளிப்பு விழா உரையின் தமிழாக்கம் (22.11.2013). ........ 110

15. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரையின் தமிழாக்கம் (11.12.2013)........ 123

16. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரையின் தமிழாக்கம் (12.12.2013) ........ 139

17. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரையின் தமிழாக்கம் (13.12.2013)........ 142

18. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை மற்றும் 312 அறிவிப்புகள் (13.12.2013)........ 146

19. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14ஆவது நிதிக்குழு கூட்டத்தில் ஆற்றிய உரையின் தமிழாக்கம் (16.12.2013) ........ 185

20. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 14ஆவது நிதிக்குழு கூட்டத்தில் தமிழக மின்நிலைமை குறித்து அளித்த விளக்கம் (16.12.2013) ........ 202

21. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீலகிரி மாவட்டம், குன்னூரில் நடைபெற்ற அரசு விழாவில் அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை! (4.1.2014) ........ 208

22. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில் 27.01.2014 அன்று நடைபெற்ற 4 ஆவது அகில இந்தியக் காவல் அதிரடிப்படையினர் திறன்போட்டி நிறைவு விழாவில் ஆற்றிய பேருரையின் தமிழாக்கம்! ........ 220

23. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 3.2.2014 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு அளித்த பதிலுரை ........ 232

24. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டப்பேரவையில் 20.02.2014 அன்று நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் சட்டம் ஒழுங்கு பற்றி அளித்த விளக்கம் ........ 299

25. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சென்னை ஹோட்டல் ஐடிசி கிராண்ட் சோழாவில் 21.2.2014 அன்று தமிழ்நாடு தொலைநோக்கு ஆவணம் 2023–பகுதி–II, தமிழ்நாடு தொழிற்கொள்கை 2014, தமிழ்நாடு ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோ உதிரிபாகங்கள் கொள்கை 2014 மற்றும் தமிழ்நாடு உயிரித் தொழில்நுட்பக் கொள்கை 2014ஆகியவற்றையும், தமிழ்நாடு அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் வலைதளத்தையும் வெளியிட்டும், புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் நிகழ்வுக்கு முன்னிலை வகித்தும் ஆற்றிய உரையின் தமிழாக்கம் ........ 304

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
21.9.2013 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கத்தில் தமிழ்நாடு அரசும், தென்னிந்தியத் திரைப்பட வர்த்தக சபையும் இணைந்து நடத்திய இந்தியத் திரைப்பட நூற்றாண்டு விழாவைத் தொடங்கி வைத்து ஆற்றிய உரை.




## மக்களை நல்வழிப்படுத்தவே திரைப்படங்கள்!

இந்த இனிய விழாவில் வரவேற்புரை ஆற்றிய தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபையின் தலைவர் திரு. சி. கல்யாண் அவர்களே,

திரைப்படத் துறையின் முன்னணிப் பிரமுகர்களே,

திரைப்படத் துறையைச் சேர்ந்த எனதருமை சகோதர, சகோதரிகளே,

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,

நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே,

உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே,

வாழ்த்துரை வழங்கிய தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே,

நன்றியுரை ஆற்றவுள்ள தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபையின் கௌரவச் செயலாளர் திரு. எல். சுரேஷ் அவர்களே,

தென்னிந்தியத் திரைப்பட வர்த்தகச் சபையின் நிர்வாகிகளே,

திரைத்துறைச் சங்கங்களின் தலைவர்கள் மற்றும் நிர்வாகிகளே,

விருதாளர்களே,வணக்கத்திற்குரிய பெரியோர்களே,

என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே,

இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே,

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இனிய மாலைப் பொழுதில் இந்திய சினிமா நூற்றாண்டு விழாக் கொண்டாட்டத்தினைக் குத்துவிளக்கு ஏற்றித் துவக்கி வைத்து, எனக்கு முகவரி தந்த திரைப்படத் துறையைச் சார்ந்த உங்களிடையே உரையாற்றுவதிலும், திரைப்படத் துறையில் சாதனை படைத்துள்ள 59 பேர்களுக்கு விருதுகளை வழங்கி கௌரவிப்பதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**பார்போற்றும் பரிணாம வளர்ச்சி**

சினிமாவிற்கு முதலில் வடிவம் கொடுத்தவர்கள் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த லூமியர் சகோதரர்கள் என்றாலும், இந்தியாவில் முதன்முதலில் பேசாப் படத்தைத் தயாரித்து வெளியிட்டப் பெருமை இந்திய சினிமாவின் தந்தை என்றழைக்கப்படும் தாதா சாகிப் பால்கே அவர்களையே சாரும். இவர் தயாரித்த ‘‘ராஜா அரிஷ்சந்திரா’’ படம் 1913 ஆம் ஆண்டில் வெளிவந்ததன் அடிப்படையில், இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழாவை நாம் இங்கே கொண்டாடிக் கொண்டு இருக்கிறோம்.

இதனைத் தொடர்ந்து, ‘‘கீசக வதம்’’ என்ற ஊமைத் திரைப்படம் திரு. நடராஜ முதலியார் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1916 ஆம் ஆண்டு வெளிவந்தது. பின்னர், இந்தி மொழியில் ‘‘ஆலம் ஆரா’’ என்ற பேசும் படம் தயாரிக்கப்பட்டு திரையிடப்பட்டது. தமிழ் மொழியில், முதல் பேசும் படமாக ‘‘காளிதாஸ்’’ திரைப்படம் 1931 ஆம் ஆண்டு திரையிடப்பட்டது. ஊமைப் படங்களாக ஆரம்பித்து, பேசும் படங்களாகவும், வண்ணப் படங்களாகவும் மாறி, இன்று பலர் போற்றும் அளவுக்கு, சினிமாத் துறை பரிணாம வளர்ச்சிப் பெற்றுள்ளது.

முந்தைய காலங்களில், நான் திரைப்படங்களில் நடித்த காலத்தில், ஒரு திரைப்படம் 100 நாட்கள் ஓடியது என்றாலே அது மிகப் பெரும் வெற்றி; மிகப் பெரும் சாதனை என்று கருதப்பட்டது. நூறு நாட்கள் முடிந்த பின் வெற்றி விழா நிகழ்ச்சி நடத்தப்பட்டு, நடிகர், நடிகையர், தொழில்நுட்பக் கலைஞர்கள் என அத் திரைப்படத்தில் பங்குபெற்ற அனைவருக்கும் நினைவுப் பரிசுகளும், கேடயங்களும் வழங்கப்படும். ஒரு சினிமா படம், நூறு நாட்கள் ஓடினாலே, மிகப் பெரும் சாதனை, என்று கருதப்படும்போது, இந்திய சினிமா இன்று நூறு ஆண்டுகள், நிறைவு செய்துள்ளது என்பது, பிரமிக்கத்தக்க, பிரம்மாண்டமான சாதனை. இது நம் அனைவரையுமே மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துகிறது.

இந்திய சினிமாவின் வளர்ச்சிக்கு உதவிய பிரபல திரைப்படத் தயாரிப்பாளர்களும், திரைப்படங்களை தயாரிக்கும் ஸ்டுடியோக்களையும் நிறுவியவர்களுமான, தாதாசாகிப் பால்கே, ஏ.வி. மெய்யப்ப செட்டியார், நாகி ரெட்டி, சக்கரபாணி, எஸ்.எஸ். வாசன், ஸ்ரீராமுலு நாயுடு, எம்.எம்.ஏ. சின்னப்ப தேவர், மாடர்ன் தியேட்டர்ஸ் சுந்தரம், L.V. பிரசாத், B.R. பந்தலு, V. சாந்தாராம்;

பிரபலத் திரைப்பட இயக்குநர்களான சத்யஜித் ரே, பிமல் ராய், வேதாந்தம் ராகவைய்யா, ஏ.பீம்சிங், கே. சங்கர், விட்டலாச்சாரியா, ப. நீலகண்டன், ஏ.சி. திருலோகச்சந்தர், கிருஷ்ணன்—பஞ்சு, யோகானந்த், பி. புல்லைய்யா, A.P. நாகராஜன்;

தன்னுடைய கதைகளின் மூலம் தமிழ்நாட்டில் மறுமலர்ச்சியை ஏற்படுத்திய பேரறிஞர் அண்ணா;

திரைப்படங்களின் மூலம் மக்களுக்கு நல்ல கருத்துகளைப் பரப்பி, மக்கள் நெஞ்சங்களில் நீங்கா இடம் பிடித்திருக்கும் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.;

பிரபலத் திரைப்பட நடிகர்களான தியாகராஜ பாகவதர், பி.யூ. சின்னப்பா, கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நடிகர் திலகம் சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், என்.டி. ராமா ராவ், அக்கினேனி நாகேஸ்வர ராவ், உதயகுமார், ராஜ்குமார், பிரேம் நசீர், சத்யன், கே.ஏ. தங்கவேலு, சந்திரபாபு, நாகேஷ், திலீப் குமார், ராஜ் கபூர், தேவ் ஆனந்த், பி.எஸ். வீரப்பா, எம்.என். நம்பியார், பிரான், S.V. சுப்பைய்யா, S.V. ரங்கா ராவ், ரேலங்கி, கும்மிடி வெங்கடேஸ்வர ராவ்;

பிரபல நாடக நடிகர்களான டி.கே.எஸ். சகோதரர்கள், விஸ்வநாத தாஸ், S.V. சஹஸ்ரநாமம்;

பிரபல திரைப்பட நடிகைகளான கண்ணாம்பா, பி. பானுமதி, T.A. மதுரம், T.R. ராஜகுமாரி, பண்டரிபாய், நர்கிஸ், சுரைய்யா, மதுபாலா, பத்மினி, சாவித்ரி, தேவிகா, வைஜயந்தி மாலா, ஜமுனா,

சரோஜா தேவி, அஞ்சலி தேவி, சவுகார் ஜானகி, கிருஷ்ணகுமாரி, சூரியகாந்தம், T.P. முத்துலட்சுமி;

பிரபல ஒளிப்பதிவாளர்களான மாருதி ராவ், பிரசாத், மார்கஸ் பார்ட்லே, ஏ. ராமமூர்த்தி, வின்சென்ட், சுந்தரம், வர்மா;

பிரபல நிழற்படக் கலைஞர்களான நாகராஜ ராவ், வெங்கடா சாரி, ஸ்டில் சாரதி;

பிரபலநடனஇயக்குநர்களான K.N. தண்டாயுதபாணிபிள்ளை, சோஹன்லால், ஹிராலால், ஏ.கே. சோப்ரா, தங்கப்பன், சின்னி சம்பத், பி. கோபால கிருஷ்ணன், பசுமர்த்தி கிருஷ்ணமூர்த்தி, வெம்பட்டி சத்யம்;

பிரபல இசையமைப்பாளர்களான ஜி. ராமநாதன், நவுஷாத், சங்கர்–ஜெய்கிஷண், கே.வி. மகாதேவன், விஸ்வநாதன்–ராமமூர்த்தி, இளையராஜா, ஹேமந்த்குமார், C.ராமச்சந்திரா, மதன் மோகன், லக்ஷ்மிகாந்த் பியாரேலால், ஆதிநாராயண ராவ்;

பிரபல பாடலாசிரியர்களான பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம், கண்ணதாசன், மருதகாசி, வாலி;

பிரபல பின்னணிப் பாடகர்களான டி.எம். சவுந்தரராஜன், சீர்காழி கோவிந்தராஜன், பி.பி. ஸ்ரீனிவாஸ், முகமது ரபி, கிஷோர் குமார், கண்டசாலா, A.M. ராஜா;

பிரபல திரைப்பட பின்னணிப் பாடகிகளான பி. லீலா, ஜிக்கி, லதா மங்கேஷ்கர், ஆஷா போன்ஸ்லே, கீதா தத், பி. சுசீலா, எஸ். ஜானகி, ஜமுனா ராணி, L.R. ஈஸ்வரி போன்ற எண்ணற்றோரின் பங்கு மகத்தானது.

**மக்கள் நெஞ்சங்களில் முதலில் நிற்கும் எம்.ஜி.ஆர்.**

அரசியலிலும், பொது வாழ்விலும், மொழி மாறுதல்களிலும், வட்டார வேறுபாடுகளை மக்களிடையே எடுத்துச் சென்றதில், திரைப்படங்களுக்கு முக்கியப் பங்கு உண்டு என்றாலும்,

அரசியலில் திரைப்படத்தின் ஆதிக்கம் என்றவுடன், நம் நெஞ்சங்களில் முதலில் நிற்பவர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான்.

மனிதன் நாகரிகமடைந்து உருவாக்கிய படைப்புகளிலேயே உன்னதமான கலைப் படைப்பு சினிமா என்று சொன்னால் அது மிகையாகாது. சினிமா கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பு, இசை, இலக்கியம், ஓவியம், நாட்டியம், நாடகம் என, பல கலைகள் மக்களின் மனதை மகிழ்விக்கவும், வளப்படுத்தவும், பலப்படுத்தவும் பயன்பட்டன. இந்தக் கலைகளோடு, அவ்வப்போது கண்டுபிடிக்கப்படும் நவீன அறிவியல் யுக்திகள் மற்றும் கலைகளும் சினிமாவில் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் தான், வேறு எந்தக் கலை வடிவத்தையும் விட எளிதாக மக்களை ஈர்க்கும் வலிமை திரைப்படத்திற்கு இருக்கிறது.

சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், திரைப்படம் இன்று மனித வாழ்க்கையில் இன்றியமையா இடத்தைப் பெற்றுள்ளது என்று கூறலாம். புராணக் கதைகளையும், இந்திய விடுதலைக்காகப் போராடியவர்களின் வரலாற்றினையும், பகுத்தறிவுச் சிந்தனையையும் மக்களிடையே எடுத்துச் சென்ற பெருமை சினிமா துறையையே சாரும்.

**இன்றியமையாத் தன்மை வாய்ந்த திரைப்படத்துறை**

உலகின் நெடுந்தூரம் சென்று காண முடியாத அற்புதங்களை, இருந்த இடத்திலிருந்து காண திரைப்படம் வழி வகுத்துள்ளது. பலருக்கு வேலைவாய்ப்புகள் கிடைக்க உறுதுணையாக திரைப்படத் துறை உள்ளது. மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு, பல்வேறு துறைகளில் திரைப்படம் உதவி செய்கிறது. அரசின் நிகழ்ச்சிகளை, ஆக்கப்பணிகளை, மக்கள்நலத் திட்டங்களை, மக்களிடையே எடுத்துச் செல்ல திரைப்படங்கள் பெரிதும் உதவுகின்றன.

இப்படிப்பட்ட இன்றியமையாத் தன்மை வாய்ந்த திரைப்படத் துறையில் நானும் பணியாற்றியிருக்கிறேன் என்பதை நினைக்கும் போது, எனக்கு மிகவும் பெருமையாக இருக்கிறது.

திரைப்படங்கள் மக்களை நல்வழிப்படுத்துவதற்காகவே அமையவேண்டும் என்ற எனது விருப்பத்தினை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**சரம் சரமாய் சலுகைகள் சாதனை படைத்த திட்டங்கள்**

நான் முதலமைச்சராக பொறுப்பேற்கும் போதெல்லாம் திரைப்படத் துறையினருக்கு, பல்வேறு சலுகைகளை அளித்திருக்கிறேன்.

குறைந்த முதலீட்டில் திரைப்படம் எடுக்கும் சிறு தயாரிப்பாளர்களை ஊக்குவிக்கும் வகையில், அந்தத் திரைப்படத்திற்கான மானியத் தொகையையும், திரைப்படங்களின் எண்ணிக்கையையும் உயர்த்தியது; தயாரிப்பாளர்களின் அலைச்சலைக் குறைக்கும் வகையில், ஒற்றைச் சாளர முறையில் படப்பிடிப்பு நடத்த அனுமதி அளிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது; நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் பெயரில் ‘சிவாஜி கணேசன் விருது’ தோற்றுவிக்கப்பட்டது; திரைப்படத் தொழிலாளர்கள் பணிபுரியும்போது உயிரிழந்தாலோ, ஊனமுற்றாலோ, அவர்களுக்கு உதவித் தொகை வழங்கும் திட்டம் கொண்டு வரப்பட்டது; பெண்களை உயர்வாகச் சித்தரிக்கும் கதையம்சம் கொண்ட திரைப்படத்திற்கு, அரசு விருது வழங்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது; ‘சிறந்த திரைப்பட ஒப்பனைக் கலைஞர்’ ஒருவருக்கும், ‘சிறந்த திரைப்படத் தையற் கலைஞர்’ ஒருவருக்கும் விருது வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது; பின்னணிக் குரல் கொடுப்பவர்களுக்கு விருது வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது; சிறந்த நகைச்சுவை நடிகை, சிறந்த குணசித்திர நடிகர், சிறந்த குணசித்திர நடிகை ஆகியோருக்கு

புதிய விருதுகள் தோற்றுவிக்கப்பட்டது; சட்டத்திற்குப் புறம்பாக திருட்டு வீடியோக்கள் எடுக்கப்படுவதை தடுக்கும் வகையில், 'காணொலித் திருட்டுத் தடுப்புப் பிரிவு' எனும் ஒரு தனிப் பிரிவு உருவாக்கப்பட்டது; திருட்டு வீடியோ தொழிலில் ஈடுபட்டு குற்றம் இழைப்போரை குண்டர் சட்டத்தில் கைது செய்ய வழிவகை செய்தது என, அடுக்கிக் கொண்டே போகும் அளவுக்கு பல்வேறு திட்டங்கள் எனது ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன.

மேலும், சென்னை சர்வதேசத் திரைப்பட விழாவிற்கு, கடந்த ஆண்டு, அரசு சார்பில் 50 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டது. எம்.ஜி.ஆர். அரசு திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி பயிற்சி நிறுவனத்தில், 2013–2014 ஆம் கல்வியாண்டு முதல் Animation and Visual Effects எனும் புதிய பாடப்பிரிவு தொடங்கப்படவும்; அதற்கென 41 பணியிடங்களைத் தோற்றுவிக்கவும் 9 கோடியே 50 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து நான் உத்தரவிட்டேன். அங்குள்ள Preview Theatre நவீன வசதிகளுடன் 99 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டு வருகிறது. திரைப்படத் துறையினர் நல வாரியத்தில் அதிகளவில் உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு, அவர்களுக்குப் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, கடந்த இரண்டு ஆண்டுகளாக எனது ஆட்சியில் திரைப்படத் துறை சுதந்திரமாகச் செயல்பட்டு வருகிறது.

**சர்வ சுதந்திரமாய்ச் செயல்படும் இன்றைய தமிழ் சினிமாத்துறை**

வந்தாரை வாழ வைக்கும் பூமி தமிழ்நாடு. இன்று கூட, பல்வேறு மொழி பேசும் நடிகர், நடிகையர், பின்னணிப் பாடகர்கள், இசையமைப்பாளர்கள், தமிழ்த் திரைப்படத் துறையில் முன்னணியில் இருக்கிறார்கள். தானும் வாழ வேண்டும், அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்று நினைப்பவர்கள் தமிழ் திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள்.

வந்தாரை வாழ வைக்கும் தமிழ் சினிமாத் துறை, கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு எப்படி இருந்தது என்பதை

நான் சொல்லி, நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

இந்த உலகத்தில் தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறவர்கள் உண்டு. தானும் வாழ வேண்டும், அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்று நினைக்கிறவர்களும் உண்டு.

எப்படியாவது தான் மட்டும் வாழ்ந்தால் போதும் என்று நினைக்கிறவர்கள், எப்போதும் அவர்களுடைய வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறவர்களை மட்டும் அல்லாமல், தனக்குப் போட்டியாக இருப்பவர் எனக் கருதப்படுபவரையும் அழித்துவிட வேண்டும் என்று நினைப்பார்கள்.

**அடுத்தவரைக் கெடுக்க நினைத்தால்**
**அதல பாதாளத்தில் வீழ்வார்**

ஓர் ஊரில் ஒரு மனிதர் இருந்தார். அவர் நிறைய பாவங்களைச் செய்ததால், நரகப் படுகுழி என்கிற கிணற்றில் விழுந்து விட்டார். அந்தக் கிணற்றில், ஏற்கெனவே பாவம் செய்தவர்கள் விழுந்து கிடந்தார்கள். உள்ளே ஏகப்பட்ட சத்தம். இப்பொழுது விழுந்த அந்த மனிதரின் சத்தம் கொஞ்சம் அதிகமாக இருந்தது.

அந்தக் கிணற்றுக்குப் பக்கத்தில் ஒரு மகான் இருந்தார். இந்த மனிதர் போடுகின்ற சத்தம் அதிகமாகக் கேட்டதும், கிணற்றை எட்டிப் பார்த்தார் அந்த மகான்.

மகானை பார்த்தவுடன், அந்த மனிதர், “சுவாமி! என்னைக் காப்பாற்றுங்கள்” என்று கத்தினார்.

அந்த மனிதரைப் பார்த்ததும், மனித சமுதாயத்திற்கு அந்த மனிதர் என்னென்ன கெடுதல் செய்திருக்கிறார் என்ற விவரம் மகானின் கண் முன்னே தெரிந்தது. இருந்தாலும், அந்த மனிதரைக் காப்பாற்ற ஏதாவது வழி உண்டா என்று யோசித்தார். ஏதாவது ஒரு நல்ல காரியத்தை அந்த மனிதர், தனது வாழ்நாளில் செய்திருக்கிறாரா என்று பார்த்தார்.

ஒரு சமயம், அந்த மனிதர் தன் காலடியில் மிதிபட இருந்த சிலந்தியை, தன்னை அறியாமல், மிதிக்காமல் தாண்டி போயிருந்தது தெரிய வந்தது. இந்தச் செயலுக்காக, அந்த மனிதரைக் கரையேற்ற முடியுமா என்று சிந்தித்தார். உடனடியாக, அவர் கையில் சிலந்தி ஒன்று வந்து நின்றது. அதனிடமிருந்து, நூலிழை வெளிவர ஆரம்பித்தது. அந்த நூல் இழை, கிணற்றின் ஆழம் வரைக்கும் நீண்டு கொண்டே போயிற்று.

உடனே அந்த மகான், கிணற்றில் இருந்த மனிதரைப் பார்த்து, ‘‘இந்த நூலைப் பிடித்துக் கொண்டு மேலே ஏறி வா’’ என்றார்.

இதற்கு அந்த மனிதர், ‘‘சிலந்தி நூல், என்னைத் தாங்குமா ?’’ என்று கேட்டார்.

‘‘எல்லாம் தாங்கும். அதைப் பிடித்து வா’’ என்றார் மகான்.

சந்தேகத்துடனேயே அந்த நூலிழையைப் பிடித்து இழுத்துப் பார்த்தார் அந்த மனிதர். நூலிழை வலுவாக இருந்தது.

எனவே, அதைப் பிடித்துக் கொண்டு மெதுவாக ஏறி வர ஆரம்பித்தார். பாதி தூரம் வந்தவுடன், அந்த மனிதரின் காலுக்குக் கீழே கொஞ்சம் சத்தம் கேட்டது. கீழே குனிந்து பார்த்தார் அந்த மனிதர். வேறு சிலரும், அந்த நூலிழையைப் பிடித்துக் கொண்டு மேலே வந்து கொண்டிருந்தார்கள்.

உடனே அந்த மனிதருக்குக் கோபம் வந்தது. தன் இடுப்பில் இருந்த கத்தியை எடுத்து, தன் காலுக்குக் கீழே உள்ள நூலிழையை வெட்டிவிட்டார். இனிமேல், தான் மட்டும் மேலே ஏறிவிடலாம் என்று நினைத்தார் அந்த மனிதர்.

ஆனால் நடந்தது என்ன தெரியுமா ?

மொத்த நூலிழையும் அறுந்து விழுந்தது. அந்த மனிதரும் பொத்தென்று கீழே விழுந்துவிட்டார். மறுபடியும் கத்த ஆரம்பித்தார். ஏற்கெனவே தன்னை அறியாமல், அந்த மனிதர் செய்த ஒரு நற்செயல், அந்த நூலிழைக்கு உறுதியைக்

கொடுத்தது. இப்போது அவர் செய்த பாவம் அந்த நூலிழையை வலுவிழக்கச் செய்துவிட்டது.

அடுத்தவர்களும் வாழ வேண்டும் என்ற எண்ணம் அந்த மனிதருக்கு இருந்திருந்தால், அந்த மனிதர் கரையேறியிருப்பார். ஆனால், அவர் அதைச் செய்யவில்லை. எனவே அதல பாதாளத்தில் வீழ்ந்து விட்டார் அந்த மனிதர்.

**அனைத்து உதவிகளையும் நல்கும் அரசு**

திரைப்படத் துறையால், தானும், தன் குடும்பமும் மட்டும் செழிப்படைய வேண்டும் என்று நினைத்தவர்கள் இந்த நிலைமையில்தான் இன்று இருக்கிறார்கள். திரைப்படம் என்பது, பல்வேறு கலைஞர்களின் கலைத் திறனை வெளிப்படுத்தும் ஒரு கருவி என்றாலும், நல்ல கருத்துகளையும், முற்போக்குச் சிந்தனைகளையும், எண்ணங்களையும், இளைய சமுதாயத்தினரிடம் எடுத்துச் செல்லும் வகையிலும்; சாதி மற்றும் மத ரீதியிலான வகையில், பிறர் மனம் புண்படாமல் இருக்கும் வகையிலும்; வன்முறை மற்றும் ஆபாசக் காட்சிகளைத் தவிர்த்தும் படங்களை எடுக்க வேண்டும் என்று திரைப்படத் தயாரிப்பாளர்களை இந்தத் தருணத்தில் அன்போடு கேட்டுக் கொள்வதுடன், திரைப்படத் துறைக்குத் தேவையான அனைத்து உதவிகளையும் எனது தலைமையிலான அரசு நல்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நன்னாளில், இந்தியத் திரையுலகம் மேன்மேலும் வளர்ச்சிப் பெற வேண்டும்; திரைப்படத் தொழிலாளர்கள் எல்லா நலமும், வளமும் பெற்று மகிழ்ச்சியோடு வாழ வேண்டும் என்று மனதார வாழ்த்தி;

அண்ணா நாமம் வாழ்க ! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க ! என்று கூறி விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

★ ★ ★

புதுடெல்லியில் **23.9.2013** அன்று மாண்புமிகு பிரதமர்
**டாக்டர் மன்மோகன்சிங்** அவர்களின் தலைமையில் நடைபெற்ற
தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் கூட்டத்தில்,
**மாண்புமிகு முதலமைச்சர்** அவர்களின் சார்பில் பங்கேற்ற,
மாண்புமிகு நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, சட்டம்,
நீதிமன்றங்கள் மற்றும் சிறைத்துறை அமைச்சர்
கே.பி.முனுசாமி அவர்கள் வாசித்த
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்** அவர்களின்
உரையின் தமிழாக்கம்.



**சட்டத்தின் முன் அனைவரும் சமம்
என்ற இலக்கை அடையும் மாநிலங்களில்
தமிழ்நாடு முதன்மையாகத் திகழ்கிறது!**

இரண்டு ஆண்டுகள் இடைவெளிக்குப் பிறகு 16ஆவது தேசிய ஒருமைப்பாட்டுக் கவுன்சில் கூட்டத்திற்காக நாம் தற்பொழுது இங்குக் கூடியுள்ளோம். பிரிட்டன் ஆட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்த இந்தியா, விடுதலைப் பெற்று 67 ஆண்டுகளாகின்றன. அவர்கள் நம்மிடையே விட்டுச்சென்ற இந்தியாவின் சொத்துக்களை, பிரிவினையுடன் கூடிய பின்னணியில், நாம் ஜனநாயகக் கடமைகளை கடினமாக மேற்கொண்டுள்ளோம். சாதி ரீதியிலான பிரிவினை, பன்மொழி பேசும் மக்கள், அவர்களின் பன்முகத்தன்மை, சுதந்திரத்திற்குப் பிந்தைய பிரிவினைவாதம், தீவிரவாதம் போன்ற சவால்கள் இருந்தபோதிலும், நமது அரசியல் சாசன சட்டத்திற்கு உட்பட்டு ஜனநாயக மதிப்பீடுகளை நிலைநிறுத்தி, மேற்கத்திய நாடுகள் அல்லாத ஒரு வெற்றிகரமான மதச்சார்பற்ற ஜனநாயக நாடாக இந்தியா உலகளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற சிறப்பான வரலாறு இருந்தபோதிலும், இந்தியா வல்லரசு நாடாக உருவெடுப்பதைத் தடுக்கும் வகையிலும், நாட்டின் கட்டமைப்புக்கு ஊறுவிளைவிக்கும் வகையிலும் பிரிவினைவாத சக்திகள் அச்சுறுத்தல் விடுத்துள்ளன. வெளிநாட்டு விரோத சக்திகள் மற்றும் உள்நாட்டிலேயே தவறான வழி காட்டுதலுடன் செய்யப்படும் சமூக விரோத சக்திகள் ஆகியவை,நமது உள்நாட்டு பிரச்சினைகளை மேலும் அதிகரிக்கும் வகையில் தொடர்ந்து செயல்படுகின்றன.

**வேற்றுமையில் ஒற்றுமை**

சமூக–பொருளாதார காரணிகள், அதுபோன்ற சில சக்திகளை ஊக்குவித்து வருகின்றன. பொருளாதார வளர்ச்சியின் பலன்கள், சமூகத்தின் பல பிரிவினைக்குச் சமமற்ற வகையில் கிடைப்பதாக சில பிரிவினைவாத சக்திகள் கொண்டுள்ள தவறான கருத்துக்களின் அடிப்படையில் அந்த சக்திகள் செயல்படுகின்றன. நாட்டின் ஒட்டுமொத்த

பொருளாதாரத்தை தவறாக கையாண்ட மத்தியில் உள்ள ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசின் செயல்பாடுகளால், குறிப்பிடத்தக்க அளவு பணவீக்க உயர்வு, சமீபகாலமாக சரிந்துவரும் பொருளாதார நிலைமை போன்ற காரணங்களால் சமுதாயத்தில் பதற்றம் அதிகரித்திருப்பதில் சந்தேகம் ஏதுமில்லை.

இந்தியாவின் பன்முகத்தன்மை மற்றும் கலாச்சார நம்பிக்கையைத் தொடர்ந்து கடைபிடிப்பது, சமூக மற்றும் பொருளாதார சமநிலை போன்ற நமது அடையாளங்களை மேம்படுத்த வேண்டியது தற்போதைய தேவை. அதுவே வேற்றுமையில் ஒற்றுமை என்ற கருத்தை உண்மையில் மேம்படுத்தும். நமது ஜனநாயக கட்டமைப்பில் பிளவை ஏற்படுத்த முயலும் பிரிவினைவாத சக்திகளை உறுதியுடன் முறியடிக்க, இதுபோன்ற தேசிய ஒருமைப்பாட்டு கவுன்சில் கூட்டத்தைப் பயன்படுத்தி, பாரம்பரிய இந்தியாவின் மதிப்பினை நாம் வலுப்படுத்துகிறோம் என்று நான் கருதுகிறேன்.

சமுதாயத்தில் அமைதி மற்றும் பொது ஒழுங்கைப் பராமரித்தல், குடிமக்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதே மாநில அரசுகளின் முதல் மற்றும் தலையாய கடமை. இதன் காரணமாகவே, சமுதாயத்தில் மத ரீதியிலான பதற்றம், பிரிவினைவாதம் அல்லது அதுபோன்ற ஊறுவிளைவித்தலைத் தடுக்கும் வகையில், தமிழகத்தில் வளர்ச்சியை உள்ளடக்கிய முன்னேற்றத்தை எட்டும் வகையில் மாதிரி வளர்ச்சித் திட்டத்தை நான் செயல்படுத்தியிருக்கிறேன்.

நவீன சமுதாயத்தில் தமிழகம் வறுமை இல்லாமல்,மக்கள் அனைத்து அடிப்படை உரிமைகளையும் பெற்று சுமூகமான சூழ்நிலையில் வாழ வேண்டும் என்ற அடிப்படையிலும், நாட்டிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாகத் திகழவேண்டும் என்ற நோக்கிலும், 2023 தொலைநோக்குத் திட்டம்

அறிவிக்கப்பட்டது. அதிகப் பொருளாதார வளர்ச்சியை மட்டும் கவனத்தில் கொள்ளாமல், வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய வெளிப்பாடுகளிலும் தமிழக அரசு கவனம் செலுத்தியுள்ளது.

**மக்களின் தேவைக்கு முன்னுரிமை**

தமிழகத்தில் பொதுமக்களின் உயரிய பராமரிப்புகளைக் கருத்தில்கொண்டு மாநிலத்தின் முக்கிய பிரச்சினைகளுக்கு அதிக முக்கியத்துவம் அளித்து, அவர்களின் நேர்மையான உணர்வுகளை எனது அரசு புரிந்துகொண்டு, அதற்கான உறுதியான செயல்பாடுகளைத் திறமையுடன் நிறைவேற்றி வருகிறது. மாநில மக்களின் விருப்பங்கள் மற்றும் தேவைகளைக் கருத்தில்கொண்டு அவற்றிற்கு உயர் முன்னுரிமை அளிக்க வேண்டியது மாநில அரசுகளின் கடமை. அடித்தட்டு மக்களின் உணர்வுகளையும் அறிந்து, உள்ளாட்சி நிருவாகம் அமைய வேண்டியது அவசியம்.

அந்த வகையிலேயே தமிழகத்தில் மாவட்ட நிருவாகம் செயல்படுகிறது. அடித்தட்டு மக்களின் எதிர்பார்ப்புக்களுக்கு நேர்மையான பதிலை அளிப்பதுடன், மாநில நிருவாகம் மக்களின் தேவைகளை கண்காணித்து வருகிறது. தமிழகத்தில் மத நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் எனது தலைமையிலான அரசு பல்வேறு தீவிர நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு சிறுபாண்மையினர் ஆணையம், தமிழ்நாடு சிறுபாண்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், சிறுபாண்மையினர் நல இயக்ககம் ஆகியவற்றின் மூலமாக சிறுபாண்மையினரின் நலன்களில் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. இளைஞர் விழாக்கள் மற்றும் இளைஞர்களிடையே போட்டிகளை நடத்துதல் போன்ற திட்டங்களின் வாயிலாக எண்ணற்ற மத நல்லிணக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பிற

மத மற்றும் சமுதாய விழாகொண்டாட்டங்களில் பங்கேற்பதற்கு, சமுதாயத் தலைவர்கள் மற்றும் அரசு சாரா அமைப்புகள் ஊக்குவிக்கப்படுகின்றன.

**தமிழகம் அமைதிப் பூங்கா**

மெக்கா, ஜெருசலம், மானசரோவர், முக்திநாத் ஆகிய இடங்களுக்குப் புனித பயணம் மேற்கொள்ளும் யாத்ரீகர்களுக்குத் தமிழக அரசு நிதியுதவி வழங்கி வருகிறது. மத நல்லிணக்கத்தைப் பராமரிப்பதில் தமிழக அரசு பாரபட்சமற்ற முறையில் சாதனை புரிந்துள்ளது என்பதை நான் பெருமையுடன் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்குப் பராமரித்தலை பொறுத்தவரை, இதுவரை தமிழகத்தில் மத அடிப்படைவாதம், இடதுசாரிப் பிரிவினைவாதம், மதவாத வன்முறைகள் இல்லை என்பதை இந்தச் சபையில் பெருமையுடன் தெரிவிக்கிறேன். இதற்குக் காரணம், சட்டம்—ஒழுங்கைப் பராமரிப்பதில் காவல் துறையினருக்கு நான் சுதந்திரமான, சமரசம் செய்து கொள்ளாத ஆதரவை அளித்திருப்பது தான். சட்டம்— ஒழுங்கைப் பராமரிப்பதில் தமிழகம் சிறப்பான சாதனை புரிந்து, தேசிய அளவில் தற்போது தமிழகம் அமைதிப் பூங்கா என்ற நற்பெயரை எடுத்திருக்கிறது.

தமிழகத்தில் மத மோதல்கள் அல்லது சாதி அடிப்படையிலான பதற்றங்களை உருவாக்க முயலும் எந்தவொரு சக்திகளுக்கும் எனது தலைமையிலான அரசு இடங்கொடாமல், அது போன்ற சக்திகளின் நடவடிக்கைகளை இரும்புக்கரம் கொண்டு அடக்குவதற்குக் காவல் துறையினருக்கு நான் உத்தரவிட்டுள்ளேன்.

தமிழக உளவுத்துறையினரின் சிறப்புப் பிரிவினர், மதவாத அமைப்புகளின் அனைத்து நடவடிக்கைகளையும் உன்னிப்புடன் கண்காணித்து வருகிறார்கள். பேச்சுக்கள்,

துண்டுப் பிரசுரங்களில், ஒலி—ஒளி வெளியீடுகள் மற்றும் இதர நடவடிக்கைகள் மூலம் மத உணர்வுகளைத் தூண்டும் வகையில் செயல்படுவோர்க்கு எதிராக உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அல்—உம்மா, அகில இந்திய ஜிகாத் அமைப்பு போன்ற அடிப்படைவாத அமைப்புகள் தமிழகத்தில் தடை செய்யப்பட்டுள்ளன. ஏற்கெனவே இருந்த SIMI அமைப்பின் செயல்பாடும் கண்காணிக்கப்படுகிறது. பதற்றம் நிறைந்த இடங்களில் நிரந்தர அமைதிக் குழுக்கள் ஏற்படுத்துதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள். மாநிலத்தில் பெரிய அளவிலான வன்முறைச் சம்பவங்களைத் தடுக்க ஏதுவாகக் குற்றவியல் நடைமுறை சம்பவங்களைத் தடுக்க ஏதுவாகக் குற்றவியல் நடைமுறை சட்ட விதிமுறைகளைப் பாதுகாப்புக் கருதி உறுதியுடன் செயல்படுத்துவதுடன், வழிபாட்டுத் தலங்கள் உள்ளிட்ட முக்கிய இடங்களிலும், முக்கிய விழாக்களின் போதும் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சூழ்நிலையில், பொதுமக்களின் நலன்களைப் பாதுகாப்பதை முக்கியமாகக் கருத்தில் கொண்டே தடுப்புக் காவல் சட்டங்களை மாநில அரசு பயன்படுத்துகிறது எனத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டு மக்களின் தனிப்பட்ட சுதந்திரத்தைக் கருதி, இதுபோன்ற சட்டங்களை மாநில அரசு வெளியிட்ட தடுப்புக் காவல் உத்தரவுகளை, குறிப்பாக அரசியல் காரணங்களுக்காக, பின்னர் மத்திய அரசு ரத்து செய்கிறது.

மத்திய அரசின் இதுபோன்ற நடவடிக்கைகள், மாநிலங்களில் பொது அமைதியைப் பராமரிப்பதில் தீவிர சமரசம் செய்துகொள்ளும் வகையிலும், மாநில அரசுகளின் அதிகாரத்தில் தேவையின்றித் தலையிடும் வகையிலும் அமைந்திருக்கிறது. நாட்டில் சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பது

மாநில அரசுகளின் அடிப்படைக் கடமையாகும். ஆனால், அதற்கு மாநில அரசுகளுக்கும், மத்திய அரசுக்கும் இடையேயான புரிந்துணர்வும், ஒத்துழைப்பும் அவசியம். உள்நாட்டுச் சண்டையில் இருந்து நாட்டைப் பாதுகாப்பதற்கு,மத்திய அரசும்,மாநிலங்களும் சம அளவிலான பங்குதாரர்களாக இருப்பதுடன், மாநில அரசுகளுக்கு மத்திய அரசு சம உரிமைகளை அளிக்க வேண்டும். என்றாலும்,அரசியல் சாசனத்தில் மாநில அரசுகளுக்கு உள்ள உரிமைகள் மீது ஆதிக்கம் செலுத்தும் வகையில், மத்திய அரசு தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொள்வது அதிகரித்து வருகிறது. மத்திய அரசு ஏற்படுத்த உள்ள தேசிய தீவிரவாத எதிர்ப்பு மையம் தொடர்பான அம்சங்களில், ஆக்கப்பூர்வமற்ற அணுகுமுறைகளை மத்திய அரசு கொண்டிருப்பது மத வன்முறை எதிர்ப்பு வரைவு மசோதாவில் இடம் பெற்றுள்ள அம்சங்கள் ஆகியவை குறித்து உரிய நேரத்தில் எனது கருத்துக்களை மத்திய அரசுக்குத் தெவித்திருக்கிறேன்.

**மாநில சுயாட்சி மீதான தாக்குதல்**

இந்தியாவின் சில பகுதிகளில் விரும்பத்தகாத வகுப்புக் கலவரங்கள் நடைபெற்றதையடுத்து, 2011 ஆம் வருடத்திய வகுப்புவாத வன்முறைத் தடுப்புச் மசோதாவைச் சட்டமாக்க வேண்டுமென கோரிக்கை எழுந்திருக்கிறது. இந்த மசோதாவுக்கு ஏற்கெனவே தமிழக அரசு சார்பிலும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் சார்பிலும் கடும் எதிர்ப்புத் தெரிவித்துள்ளேன். இந்தச் சட்டமசோதா, மத அல்லது வகுப்பு கலவரத்தையோ, திட்டமிட்ட வன்முறையோ தடுக்கும் நோக்கத்தைப் பூர்த்தி செய்ய இயலாது என்பது எனது கருத்து. மசோதாவில் இடம்பெற்றுள்ள பல ஷரத்துகள் வார்த்தை ஜாலமாக இருப்பதால்,அவற்றைத் தவறாகப் பயன்படுத்த சாத்தியம் உள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக, அரசியல் சட்டம் வழங்கியுள்ள மத்திய – மாநிலங்களுக்கு

இடையிலான அதிகாரப்பகிர்வுக்கு எதிராக மசோதா உள்ளது. இம்மசோதாவின் 20ஆவது பிரிவில் மத்திய அரசுக்கு விரிவான அதிகாரங்கள்வழங்கப்பட்டுள்ளன. இதில்உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய மத நல்லிணக்க ஆணைக்குழு, நீதி மற்றும் இழப்பீடு ஆகியவை மாநில சுயாட்சி மீதான நேரடித் தாக்குதலாகும். மத்திய – மாநில அரசுகளிடையே உணர்வுபூர்வமான ஒத்துழைப்பு தேவைப்படக்கூடிய சிக்கலான பிரச்சினைக்குத் தீர்வாக இந்த சட்ட மசோதாவையும், அதில் உத்தேசிக்கப்பட்டுள்ள தேசிய மத நல்லிணக்க ஆணைக் குழுவையும், முன் வைப்பது அறிவார்ந்த செயல் ஆகாது. பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படுவதை விட, அதனை மேலும் சிக்கலாகிவிடும் என்பதே உண்மை.

சட்டம் – ஒழுங்கை சீர் குலைக்க முயலும் சமூக விரோத சக்திகளின் சவால்களை, வலுவான, திறமையான, ஆயுதபலம் பொருந்திய, கட்டுக்கோப்பான காவல்துறையால் மட்டுமே சந்திக்க முடியும். இதனை உணர்ந்து எனது தலைமையிலான அரசு காவல்துறையை நவீனப்படுத்தவும், ஆள் பலம் மற்றும் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும் கணிசமான நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

### நிதியை அதிகரிக்க வேண்டும்

காவல்துறையை நவீனப்படுத்துவதும், உளவுப்பிரிவு மற்றும் காவல்துறைப் பயிற்சிக் கட்டமைப்பு வசதியை வலுப்படுத்துவதும் அவசியம் என்பதை மாநில முதலமைச்சர்கள் நன்கு அறிவார்கள். காவல்துறையை மேம்படுத்தவும், நவீனப்படுத்தவும் மாநில அரசுகள் மேற்கொள்ளும் முயற்சிகளுக்குக் குறுக்கீடாக நிதி கட்டுப்பாடு உள்ளது என்பதை மாண்புமிகு முதலமைச்சர்கள் அனைவரும் ஒப்புக் கொள்வார்கள். காவல்துறையை நவீனப் படுத்துவதற்காக வழங்கப்படும் நிதியுதவியை கணிசமாக உயர்த்த வேண்டுமென மத்திய அரசை நான் கேட்டுக்

கொள்கிறேன். 2012–2013ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் காவல்துறையை நவீனப்படுத்துவதற்காக மத்திய அரசு வழங்கிய நிதியுதவி கணிசமாகக் குறைந்து விட்டது. நவீனமயமாக்கும் திட்டத்திற்கான மத்திய அரசின் பங்களிப்பு 75 சதவீதத்திலிருந்து, 60 சதவீதமாகக் குறைந்திருப்பது ஏமாற்றமளிப்பதாக உள்ளது. எனவே, மாநிலங்களில் காவல்துறையை நவீனமாக்குவதற்காகத் திருத்தி அமைக்கப்பட்ட தேசிய திட்டத்தை அறிவிப்பதோடு, மாநிலங்களுக்கான நிதி ஒதுக்கீட்டினையும் கணிசமாக உயர்த்த வேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்.

நாளுக்கு நாள் பெருகி வரும் குற்றங்கள், குற்றங்களின் தன்மை, வகுப்புவாதம், நவீன தகவல் தொடர்புத் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி வெறுப்புணர்வைத் தூண்டும் பிரச்சாரம் போன்றவை நாட்டின் ஒருமைப்பாட்டிற்கு அச்சுறுத்தலாக உள்ளன. நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி அவை கட்டுப்படுத்தப்படுகின்றன. தகவல் தொழில் நுட்பத்தை தவறாகப் பயன்படுத்தி, தீவிர வெறுப்புணர்வைத் தூண்டும் பிரச்சாரத்தையும், சைபர் குற்றங்களையும் ஒடுக்குவதற்கும் நவீன சாதனங்கள் பெறுவதற்கும், காவல்துறையினருக்கு பயிற்சி அளிப்பதற்கும், கணிசமான முதலீடு தேவைப்படுகிறது. இதற்காக தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் முதலீடு செய்துள்ள போதிலும், இந்திய அரசு தனது பொறுப்பினை தட்டிக்கழிக்காமல், நிதி ஒதுக்கீட்டினை அதிகரிக்க வேண்டும்.

மக்கள் தொடர்பு மற்றும் சரியான தகவல் பரிமாற்றம் ஆகியவற்றுக்கு சமூக ஊடகங்களைத் திறம்படப் பயன்படுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டியது அவசியமாகிறது. இணைய ஊறுகளான hacking,cyber bullying and capture உள்ளிட்ட சமூக ஊடகத்தை, சமூக விரோத சக்திகள் தவறாக பயன்படுத்துவதை குறைக்க, இத்தகைய இணைய தளங்களில் பயிற்சி பெற்ற ஊழியர்கள் மூலம்,

தேவையான தடுப்பு நடவடிக்கைகள், தீவிரக் கண்காணிப்பு மற்றும் நிருவாகம் மேற்கொள்ளப்படவேண்டும்.

வகுப்புக் கலவரங்களைத் தடுக்கவும், நிலைமையை சமாளிக்கவும், உரிய நேரத்தில் உளவுத் தகவல்களை சேகரித்து செயல்பட வேண்டியது அவசியமாகிறது. பொது ஒழுங்கிற்கு சவால் விடும் பல்வேறு அச்சுறுத்தல்களை கண்காணிக்க தனிப் பயிற்சி பெற்ற பல உளவுப் பிரிவுகள் தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில் உளவுப்பிரிவு திறமையான, தொழில்முறையான அமைப்பாகும்.கிடைக்கும் தகவல்களையும், முக்கிய தடயங்களையும், மத்திய மற்றும் மாநில உளவு அமைப்புகளுக்கு துணை பன்முகமை மையத்தின் மூலம் பரிமாறிக்கொள்கிறது. தமிழக உளவுப்பிரிவின் தொழில் திறன் மற்றும் பலம் தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**மகளிருக்கு அதிகாரம் அளிப்பு**

மகளிர் பாதுகாப்பு விவகாரத்திற்கு இந்தக் கூட்டத்தில் உரிய முக்கியத்துவம் அளிக்கப்படுவதாகக் கருதுகிறேன். தமிழகத்தில் பாலின சமத்துவம் என்ற குறிக்கோளை அடைய நான் எப்போதும் ஆர்வம் காட்டி வருகிறேன். பெண்கள் வீட்டில் கடின உழைப்பை எதிர்கொள்ளவும், திறமையான வேலையாளாக செயல்படவும், முன்னோடி நடவடிக்கையாக, அவர்களுக்கு எனது அரசு விலையில்லா மிக்சி, மின்விசிறி, கிரைண்டர், மின் அடுப்பு ஆகியவற்றை வழங்கி வருகிறது. மேலும், மகளிர் கல்வி, விதவை மறுமணம், கலப்புத் திருமணம் போன்ற சமூக முக்கியத்துவம் வாய்ந்த குறிக்கோள்களை ஊக்குவிக்கும் வகையில் திருமண உதவித்திட்டங்கள், பணிபுரியும் பெண்களுக்கு விடுதிகள், ஆதரவற்ற பெண்களுக்குச் சேவை இல்லங்கள், பெண்சிசு பாதுகாப்புத் திட்டம், விலையில்லா கறவைமாடுகள் மற்றும் ஆடுகள் வழங்கும் திட்டம், பெண்கள் பெயரில் நில உரிமை என பல்வேறு திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

இதன் மூலம் பெண்களுக்கு உரிய அதிகாரங்கள் அளிக்கப்பட்டு அவர்களின் பொருளாதார பாதுகாப்பு அதிகரித்துள்ளது.

**மகளிர் நீதிமன்றங்கள்**

எனது முயற்சிகளின் விளைவாக, சந்தேகத்திற்கு இடமின்றி, தமிழ்நாடு இன்றைய தினம் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்ற இலக்கை அடையும் மாநிலங்களில் முதன்மையாக திகழ்கிறது. பெண்கள் பாதுகாப்பாக வாழும் மாநிலமாக விளங்குகிறது. 20 ஆண்டுகளுக்கு முன்பே 1992ஆம் ஆண்டில், இந்தியாவிலேயே முதன்முறையாக அனைத்து மகளிர் காவல் நிலையங்களைத் தமிழகத்தில் ஏற்படுத்தியது. எனது அரசுதான் என்பதை இங்குப் பதிவு செய்ய விரும்புகிறேன். தற்போது, தமிழகத்தின் ஒவ்வொரு காவல்துறை சப்–டிவிஷனிலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்படுவதைப் பெருமிதத்துடன் குறிப்பிட்டிருக்கிறேன்.

நாட்டிலேயே உயர்ந்த பட்சமாக தமிழகக் காவல்துறையில்தான் பெண்களின் விகிதாச்சாரம் 17.2 ஆக உள்ளது. பாலியல் பலாத்கார வழக்குகளில் அளிக்கப்படும் தண்டனை கடுமையாக்கப் பட்டுள்ளது. பாலியல் பலாத்காரம் காரணமாக மரணம் அல்லது தற்கொலைச்சம்பவங்களில் குற்றச்சாட்டிற்கு ஆளானவரே தான் நிரபராதி என்பதை நிரூபிக்க வேண்டும் என 2002ஆம் ஆண்டு தமிழக சட்டமன்றப் பேரவையில் எனது அரசு, மகளிர் கொடுமை தடுப்புச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்நதது. பாலியல் வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்க வலுவான சட்ட அடித்தளம் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, 13 அம்சத் திட்டம் ஒன்றை அண்மையில் நான் அறிவித்துள்ளேன். இத்திட்டத்தில் விரைவு மகளிர் நீதிமன்றங்கள் அமைத்தல், பெண்அரசு வழக்கறிஞர்களை நியமித்தல், குண்டர், சட்டத்தில் திருத்தம், மகளிருக்கு உதவிட 24 மணி நேரமும் இயங்கக்கூடிய “1091” என்ற தொலைபேசி எண் மகளிருக்கு எதிரான குற்றங்கள்

மற்றும் விசாரணையைக் கண்காணிக்கும் பொறுப்பு உயர் காவல்துறை அதிகாரிகளுக்கு ஒப்படைப்பு, நீதிமன்றங்களில் தினந்தோறும் விசாரணை, புலனாய்வில் உதவிட சிறப்புப் பயிற்சி, அரசு செலவில் மருத்துவ சிகிச்சை, மறுவாழ்வு, பொதுஇடங்களில் கண்காணிப்பு எனப் பல்வேறு அம்சங்கள் இடம் பெற்றுள்ளன. நமது மனசாட்சியின் மீது களங்கமாக உள்ள, பெண்களுக்கு எதிரான கொடிய குற்றங்களை இதுபோன்ற நடவடிக்கைகள் நீண்ட காலத்திற்குத் தடுக்கும் என நான் நம்புகிறேன்.

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும், 42 மகளிர் நீதிமன்றங்களை அமைக்க தமிழக அரசு உத்தரவிட்டிருப்பதன் மூலம், இந்தியாவிலேயே இத்தகைய நடவடிக்கை மேற்கொண்ட மாநிலம் தமிழ்நாடுதான். இதுபோன்ற நடவடிக்கைகள், பெண்களுக்குப் பணியிடம் உள்ளிட்ட அனைத்துப் பகுதிகளிலும் பாதுகாப்பான சூழலுக்கு உத்தரவாதம் அளிக்கும் என நான் நம்புகிறேன்.

வளர்ச்சி மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளில் தமிழ்நாடு முன்னோடியாக திகழ்கிறது. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், குற்றப் பரம்பரையினர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் போன்ற வகுப்பினருக்கு கல்வி மற்றும் வேலை வாய்ப்பில் 69 சதவீத இட ஒதுக்கீட்டிற்கு வகை செய்யும் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த தமிழ்நாடு சட்டம் – 45, 1994ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. எனது முயற்சி காரணமாக இந்திய அரசியல் சாசனத்தில் 9ஆவது அட்டவணையில் இது சேர்க்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசியல் சாசனத்தின் 31B பிரிவின் கீழ் சட்டரீதியான பாதுகாப்புக்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதனால், மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ளவர்கள் வளர்ச்சி காண வழிவகை ஏற்படும்.

**ஆய்வுக் கூட்டங்கள்**

எனது தலைமையிலான தமிழக அரசு, ஆதிதிராவிடர்கள் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிரான வன்முறையைத் தடுக்கவும், அருவருக்கத்தக்க தீண்டாமை கொடுமையை ஒழிப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை எடுக்க உறுதி பூண்டுள்ளது. காவல்துறை கூடுதல் தலைவர் தலைமையில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் பாதுகாப்புக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. காவல்துறை ஆய்வாளர்கள் தலைமையில் ஏற்படுத்தப்பட்ட நடமாடும் காவல் குழுக்கள், ஒவ்வொரு காவல் மாவட்டத்திலும், மாநகரப் பகுதிகளிலும் இயங்கி வருகின்றன. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவர் பாதுகாப்புச் சட்டம் 1989இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள வழக்குகள், 11 காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள் மூலம் கண்காணிக்கப்படுகின்றன. மாவட்டக் காவல்துறை கண்காணிப்பாளர்கள், காவல்துறை ஆணையர்கள், காவல்துறை கூடுதல் தலைவர் ஆகியோரால் நடத்தப்படும் மாதாந்திர ஆய்வுக்கூட்டம் மூலம் இந்தச் சட்டத்தின் விதிமுறைகள் அமல்படுத்தப்படுவது உறுதி செய்யப்படுகிறது. மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் இச்சட்டம் அமலாக்கப்படுவது குறித்த ஆய்வுக்கூட்டங்கள் நடத்தப்படுகின்றன. மேலும், கடந்த ஜுன் மாதம் 25ஆம் தேதி நடைபெற்ற ஒரு கூட்டத்தில், நானே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்புச் சட்ட அமலாக்கம் குறித்து ஆய்வு செய்தேன்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையிலான வழக்குகளின் விசாரணைக்காக 4 சிறப்பு நீதிமன்றங்கள் இதற்காகவே இயங்குகின்றன. மேலும், 2 சிறப்பு நீதிமன்றங்கள் நடப்பாண்டில் தொடங்கப்படவுள்ளன. இந்த வழக்குகளை விசாரிப்பதற்கென்றே 32 அரசு வழக்கறிஞர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தன்னார்வ அமைப்பின் பங்களிப்புடன், காவல்துறை அதிகாரிகள், அரசு

வழக்கறிஞர்கள் மற்றும் மூத்த அதிகாரிகள் ஆகியோருக்கு, இந்த சட்டம் குறித்த விரிவான பயிற்சி மற்றும் நுட்பத்திறன் தொடர்பான திட்டங்களுக்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பாதிக்கப்பட்டவர்களுக்கு, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ், புணரமைப்பு மற்றும் உடனடி நிதி உதவி வழங்கப்படுகிறது.

சட்டம் – ஒழுங்கு பராமரிப்பு மற்றும் காவல்துறை, இவையெல்லாம், அரசியலமைப்பு சட்டப்படி, மாநிலம் சார்ந்த விஷயங்கள் என்பதை மத்திய அரசு உணர வேண்டும். மாநிலங்கள் சமமான கூட்டாளிகளாக மதிக்கப்பட வேண்டும். ஆதாரங்கள், தகவல்கள், நுண்ணறிவு ஆகியவற்றை மாநிலங்களுக்கு இடையே பகிர்ந்துகொள்ள வேண்டும். இதன்மூலம், பயங்கரவாதம், அடிப்படைவாதம், தீவிரவாதம், வகுப்பு வாதம் ஆகியவற்றைத் தீவிரமாக ஒடுக்க முடியும்.

நமதுநாடு, மிகவும் வலிமையானது. சுகாதாரம், கல்வி, வேலைவாய்ப்பு மகளிர் மேம்பாடு ஆகிய துறைகளில் உறுதியான கொள்கைகளைப் பின்பற்றுவதன் மூலம், இளைஞர்களிடையே வகுப்புவாத நல்லெண்ணம் மற்றும் சகோதரத்துவ உணர்வுகளை நமது நாட்டு மக்களிடையே குறிப்பாக, இளைஞர்களிடத்தில் பதிய வைக்க முடியும். நிறம், மொழி, சாதி, இனம் மற்றும் கலாச்சார ரீதியில் பிரிந்து காணப்பட்டாலும் நாம் அனைவரும் இந்தியர்கள் என்பதை உலகிற்குப் பறைசாற்றுவதுடன், நமது தேசிய பெருமையை வலுப்படுத்தி, நவீன மற்றும் பாரம்பரிய இந்தியா, ஒரே நாடு என்னும் அடையாளத்தை வலுப்படுத்த வேண்டியது அவசியம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில்
24.9.2013 அன்று தமிழ்நாடு அரசும் தென்னிந்தியத் திரைப்பட
வர்த்தக சபையும் இணைந்து நடத்திய
இந்தியத் திரைப்பட நூற்றாண்டு விழாவில்
ஆற்றிய உரையின் தமிழாக்கம்.




## திரைப்படத்துறையின் வளர்ச்சிக்கு எனது அரசு என்றும் துணை நிற்கும்!

இந்தப் பிரம்மாண்ட விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இந்திய சினிமாவின் புகழ்மிக்க 100 ஆண்டு சாதனைகளைக் கொண்டாடும் வகையில் நடத்தப்படும் இந்த விழா, நமக்கு மிகுந்த பெருமை அளிக்கிறது.

ஒரு நூற்றாண்டை நிறைவுசெய்து, அடுத்த நூற்றாண்டை நோக்கி வெற்றிகரமாக அடியெடுத்து வைக்கும் இந்தியத் திரைப்படத்துறையின் இந்த விழாவை, தமிழகத்தில் நடத்துவதில் மிகுந்த பெருமிதம் அடைகிறேன்.

இந்த 100 ஆண்டுகளில் இந்திய சினிமா சாதனைகள் நிகழ்த்தி, வரலாறு படைத்துள்ளது சமூகத்தின் மீது சினிமாத்துறை செலுத்திவரும் தாக்கத்தையும், சினிமாத் துறையின் செல்வாக்கையும் உலக சமுதாயம் நன்றாக அறிந்துகொண்டுள்ளது. கலாச்சாரம், கல்வி, பொழுதுபோக்கு, பிரச்சாரம் ஆகியவற்றுக்கான தவிர்க்கமுடியாத சாதனமாக சினிமா திகழ்கிறது. உலகில், சினிமா அறிமுகப்படுத்தப்பட்ட நாளில் இருந்து, சக்திவாய்ந்த மக்கள் ஊடகமாக அது திகழ்கிறது. சினிமாவை முதலில் கண்டுபிடித்த லூமியர் சகோதரர்கள், எதிர்காலம் இல்லாத ஒரு கண்டுபிடிப்புதான் சினிமா என்று தெரிவித்தார்கள். ஆனால், அவர்களின் கருத்து தவறானது என்பது நிரூபணம் ஆகியுள்ளது. தற்போது, இந்திய சினிமாவின் நூற்றாண்டு விழாவை நாம் சிறப்பாக நடத்திக் கொண்டிருக்கிறோம். இதுமட்டுமின்றி சினிமாத்துறைக்கு மென்மேலும் வளமான எதிர்காலத்தையும் எதிர்நோக்கியிருக்கிறோம். சினிமாத்துறையின் மேலதிகாரம் மிக்க செல்வாக்கை நாம் கண்கூடாகப் பார்த்து வருகிறோம். இந்திய மக்களுக்கு சினிமா என்பது, உலகையே இணைக்கும் ஒரு சாதனமாகத் திகழ்கிறது.

இந்திய சினிமா, நமது நாட்டின் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரங்களின் பிரதிபலிப்பாகவே இருந்து வருகிறது. கல்கத்தா, சென்னை, மும்பை போன்ற இடங்களில் ஏராளமான மௌனப் படங்கள் தயாரிக்கப்பட்டதில் இந்திய சினிமா உலகத்திற்கு ஒரு சாட்சியாக விளங்குகிறது. 1920ஆம்



ஆண்டிலிருந்து 1931ஆம் ஆண்டு வரை இந்தியத் திரைப்படத் தயாரிப்புகளின் எண்ணிக்கை 207 ஆக உயர்ந்தது.

இந்தியத் திரைப்படத்துறை தென்மாநிலங்களில் மிகப்பெரிய நடைபோட்டு வருகிறது. தமிழ், தெலுங்கு, மலையாளம் மற்றும் கன்னடம் ஆகிய மொழி சினிமாக்கள் தென்னிந்தியாவை ஆக்கிரமித்துள்ளன. இந்தியத் திரைப்பட உலகுக்கு முதல் பெண் இயக்குனரான “சினிமா ராணி” என்று அழைக்கப்படும் டி.பி.ராஜலட்சுமியை வழங்கியது தமிழகம்தான் என்பதில் பெருமை அடைகிறேன். அவரை கவுரவிக்கும் வகையில், எனது உத்தரவின் பேரில், அவரது பிறந்த நாள் அண்மையில் அரசு விழாவாகக் கொண்டாடப்பட்டது.

1950 மற்றும் 1960 ஆம் ஆண்டுகளில் இந்திய சினிமாத் துறைக்கு மிகப்பெரிய உத்வேகம் அளிக்கப்பட்டது. அந்த காலத்தை இந்திய சினிமாவின் பொற்காலம் என்று அழைத்தனர். அந்தச் சமயத்தில் “மக்கள் திலகம், புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்”

மிகப் பெரிய நடிகராகத் திகழ்ந்தார். தமிழக மக்கள் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்தார்.

தமிழக அரசு தமிழ் திரையுலகத்தை ஊக்கப்படுத்தியும், வழிகாட்டியும் அதன் பின்னால் உறுதியாக நிற்கிறது. எப்பொழுதெல்லாம் நான் முதலமைச்சராகப் பொறுப்பேற்கிறேனோ, அப்பொழுதெல்லாம் தமிழ் திரைத்துறைக்கு தேவையான அனைத்து ஊக்கத்தையும், உதவியையும், ஆதரவையும் அளித்து வருகிறேன்.

ரசிகர்கள் இல்லையென்றால், சினிமா கிடையாது. இன்றளவும் இது உண்மையாக இருந்து வருகிறது.ரசிகர்கள் அமோக ஆதரவு அளித்து வருவதால்தான், இந்திய திரைப்படத்துறை நூற்றாண்டுக்கு மேலாக நிலைத்து நீடித்து வருகிறது. எனவே, திரைப்படத்துறையினர் அவர்களை மேலும் கவரும் வகையில் நல்ல திரைப்படங்களை எடுத்து வழங்க வேண்டும். ரசிகர்கள் தான், சினிமாவைப் பற்றிய இறுதித் தீர்ப்பை வழங்கக் கூடியவர்கள்.

திரைப்படத்துறையில் இருப்பவர்கள் அனைவரிடமும் நான் விடுக்கும் வேண்டுகோள் என்னவென்றால், அதாவது கடந்த காலத்தில் பிரதிபலித்தது போன்று எதிர்காலத்தையும் அணுக வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன். இந்தத் திரைப்படத்துறை இன்னும் பல நூற்றாண்டுகள் சாதனை படைக்க வேண்டும் என வாழ்த்துகிறேன்.

* * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 23.10.2013 அன்று
சென்னை, ஜவஹர்லால் நேரு உள்விளையாட்டு அரங்கில்
நடைபெற்ற விழாவில் போக்குவரத்துக் கழகங்களில் ஒய்வு பெற்ற
பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பணப் பயன்களை வழங்கியும்,
சிற்றுந்துகள் (Small Buses) மற்றும் புதிய பேருந்துகளைத்
துவக்கி வைத்தும் ஆற்றிய விழாப் பேருரை.




## தமிழகத்தில் போக்குவரத்துப் புரட்சி!
## சென்னை மாநகரில் சிற்றுந்து சேவை அறிமுகம்

இந்த இனிய விழாவில் வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. வி. செந்தில் பாலாஜி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகளே, வரவேற்புரை

ஆற்றிய தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, நன்றியுரை ஆற்றவுள்ள போக்குவரத்துத் துறை முதன்மைச் செயலாளர் திரு. B.K. பிரசாத் அவர்களே, சென்னை மாநகரப் போக்குவரத்துக் கழக மேலாண் இயக்குநர் திரு. இராஜேந்திரன் அவர்களே, போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களே, வணக்கத்திற்குரிய பெரியோர்களே, என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே, இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தை முதலில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனித வாழ்வின் முன்னேற்றத்திற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும், இன்றியமையாததாக விளங்குவது போக்குவரத்து வாகனங்கள் என்று சொன்னால் அது மிகையாகாது.இதில் சாலைப் போக்குவரத்து முக்கியப் பங்கு வகிக்கிறது.சாலைப் போக்குவரத்துச் சேவையைக் குறைந்த கட்டணத்தில் மக்களுக்கு வழங்கும் பணியை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் மேற்கொண்டு வருகின்றன. அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் சேவையை மேலும் வலுப்படுத்தும் வகையில் புதிதாக 610 பேருந்துகள் மற்றும் சென்னை மாநகர மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் 50 புதிய சிற்றுந்துகள், அதாவது Small Buses ஆகியவற்றை இன்று துவக்கி வைப்பதிலும், 257 கோடி ரூபாய் மதிப்பிலான ஓய்வூதியப் பயன்களை ஓய்வு பெற்ற போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கு வழங்குவதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

**6,000 புதிய பேருந்துகள்**

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் நிலைமை அதல பாதாளத்தில் இருந்தது. 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில்

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் ஒட்டுமொத்த இழப்பு 6,150 கோடியே 95 இலட்சம் ரூபாய் ஆகும். முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிதி நிருவாகச் சீர்கேட்டினால் பணியிலிருந்து ஓய்வுபெற்ற போக்குவரத்துத் துறை தொழிலாளர்களுக்கான ஓய்வூதியப் பயன்கள் நிலுவையில் வைக்கப்பட்டிருந்தன. போக்குவரத்துத் துறைத் தொழிலாளர்களுக்கு சம்பளம் கூட அளிக்க முடியாத நிலைமை இருந்தது. பல பேருந்துகள் இயக்க இயலாத நிலையில் இருந்தன. மொத்தத்தில், அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் முடங்கிப் போகும் நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டன. இவை அனைத்திற்கும் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் நிருவாகத் திறமையின்மையே முக்கியக் காரணம்.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு போக்குவரத்துக் கழகங்களைத் திறம்பட செயல்படுத்திட வேண்டும் என்ற நல்ல நோக்கத்தில் போக்குவரத்துக் கழகங்களுக்கு நிதி உதவி அளித்தல், புதிய பேருந்துகளை வாங்குதல், பழைய பேருந்துகளைப் புதுப்பித்தல் போன்ற பல்வேறு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்தேன். தகுதியற்ற பேருந்துகளுக்கு மாற்றாகப் புதிதாக 1,026 கோடி ரூபாய் செலவில் 6,000 புதிய பேருந்துகள் வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதில் 3,051 பேருந்துகள் வாங்கப்பட்டு தற்போது இயக்கப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாமல், அடிச்சட்டம் மற்றும் எஞ்சின் நல்ல நிலையில் உள்ள 483 பேருந்துகள் 34 கோடி ரூபாய் செலவில் புதுப்பிக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் போக்குவரத்துக் கழகங்களில் இயக்கப்படும் பேருந்துகளின் பராமரிப்பிற்காகப் புதிதாக 68 பணிமனைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. தொலைதூரத் தடங்களுக்கு மின்னணுப் பயணச் சீட்டு முன் பதிவு முறை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

**16,661** ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் தொழில்நுட்பப் பணியிடங்கள் நிரப்பப்பட்டுள்ளன. பணியில் இருக்கும்போது இறந்து போன பணியாளர்களின் **346** வாரிசுகள் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். **9,157** பதிலி பணியாளர்களின் பணி வரன்முறை செய்யப்பட்டுள்ளது. **45** வயதிற்கு மேற்பட்ட ஓட்டுநர்களுக்கு முழு உடல் பரிசோதனை செய்யும் வசதி அறிமுகப்படுத்தப்பட்டு உள்ளது. பண்டிகை காலங்களில் பொதுமக்களின் நலன் கருதி சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

**கூடுதல் வருமானம்**

அரசுப் போக்குவரத்துக் கழகங்களின் வருமானத்தைப் பெருக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பேருந்துகளில் விளம்பரம் செய்வதன் மூலம் கடந்த இரண்டு ஆண்டுகளில் **28** கோடியே **13** இலட்சம் ரூபாய் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்குக் கூடுதல் வருமானம் கிடைத்துள்ளது. இதேபோன்று அஞ்சல் சேவைகளை அறிமுகப்படுத்தியதன் விளைவாகக் கடந்த இரண்டு ஆண்டுகளில் **44** இலட்சத்து **21** ஆயிரம் ரூபாய் வருமானம் கிடைத்துள்ளது. இது தவிர பயண வழி உணவகங்கள் மூலமாக **4** கோடியே **67** இலட்சம் ரூபாய் வருமானத்தை அரசுப் போக்குவரத்துக் கழகங்கள் ஈட்டியுள்ளன.

அதே சமயத்தில் டீசல் விலையை மத்திய அரசு அடிக்கடி உயர்த்திக் கொண்டே செல்வதன் காரணமாக அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு ஏற்பட்டுள்ள நிதிச் சுமையை மக்கள் மீது சுமத்தாமல் இருக்கும் வகையில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு கடந்த ஆண்டு **200** கோடி ரூபாய் வழங்கப்பட்டது. நடப்பாண்டிலும் **500** கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டும், அரசுப் போக்குவரத்துக் கழகங்களை

பலவகைப்படுத்தும் நோக்கிலும்,‘‘அம்மா குடிநீர்’’ திட்டம் என்னால் அறிமுகப்படுத்தப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கும்மிடிப்பூண்டியில் உள்ள சாலைப் போக்குவரத்து நிறுவன வளாகத்தில் நாளொன்றுக்கு மூன்று இலட்சம் லிட்டர் குடிநீர் உற்பத்தி செய்யும் “அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம்” 15.9.2013 அன்று என்னால் துவக்கி வைக்கப்பட்டது. இங்கு பெறப்படும் அதிக அளவு நீரினைக் கருத்தில் கொண்டு மேலும் ஒரு “அம்மா குடிநீர் உற்பத்தி நிலையம்” அமைக்கப்படும் என்பதையும் இதன் மூலம், நாளொன்றுக்கு மூன்று இலட்சம் லிட்டர் குடிநீர் கூடுதலாகக் கிடைக்கும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக செப்டம்பர் 2010 முதல் மார்ச் 2011 வரை ஓய்வு பெற்ற, 2,316 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையாக 47 கோடியே 71 இலட்சம் ரூபாயும் ஏப்ரல் 2011 முதல் செப்டம்பர் 2011 வரையிலான காலத்தில் ஓய்வு பெற்ற 2,337 தொழிலாளர்களுக்கு ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகையாக 52 கோடியே 48 இலட்சம் ரூபாயும் என மொத்தம் 4,653 ஓய்வூதியதாரர்களுக்கு 100 கோடியே 19 இலட்சம் ரூபாய்க்கான ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமல்லாமல் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்காமல் விட்டுச் சென்ற 30 கோடியே 33 இலட்சம் ரூபாய் பணிக்கொடை மற்றும் 14 கோடியே 45 இலட்சம் ரூபாய் விடுப்பு ஒப்படைப்புத் தொகை என மொத்தம் 44 கோடியே 78 இலட்சம் ரூபாயையும் சேர்த்து இதுவரை, 153 கோடியே 47 இலட்சம் ரூபாய் பணிக்கொடை 32 கோடியே 38 இலட்சம் ரூபாய் விடுப்பு ஒப்படைப்புத் தொகை என மொத்தம் 185 கோடியே 85 இலட்சம் ரூபாய் ஓய்வூதியதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்ச்சியாக இன்று 2011 அக்டோபர் முதல் 2013 செப்டம்பர் வரை ஓய்வு பெற்ற 9,189 தொழிலாளர்களுக்கு 187 கோடியே 23 இலட்சம் ரூபாய் ஓய்வூதிய ஒப்படைப்புத் தொகை, 47,649 ஓய்வூதியதாரர்களுக்கு 45 கோடியே 77 இலட்சம் ரூபாய் அகவிலைப்படி, 4,908 ஓய்வூதியதாரர்களுக்கு 24 கோடி ரூபாய் ஓய்வூதியத் தொகை என மொத்தம், 257 கோடி ரூபாய் ஓய்வூதியதாரர்களுக்கு இன்று வழங்கப்பட இருக்கிறது. இவர்களில் 25 பேர்களுக்கு இந்த மேடையில் நான் வழங்க உள்ளேன். மற்றவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் இன்றே வழங்குவார்கள்.

இதேபோன்று பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொண்டு 610 புதிய பேருந்துகள் மற்றும் சென்னை மாநகர மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில் போக்குவரத்து இணைப்பில்லாப் பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம் மற்றும் இரயில் நிலையத்தை இணைக்கும் வகையில் 50 சிற்றுந்துகள் ஆகியவற்றை நான் இங்கே துவக்கி வைக்க உள்ளேன்.

மக்கள் சேவையை மேலும் மேம்படுத்திடும் வகையிலும், ‘‘செய்யும் தொழிலே தெய்வம்’’ என்பதற்கேற்ப உழைத்து ஓய்வு பெற்ற உங்கள் வாழ்வினை உயர்த்திடும் வகையிலும், இந்த விழா அமைந்துள்ளது எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியை அளித்துள்ளது.

உங்கள் நலனே எங்கள் இலட்சியம் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, அண்ணா நாமம் வாழ்க! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நாமம் வாழ்க! என்று கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
24.10.2013 அன்று அரசின் தீர்மானத்தை
முன்மொழிந்து ஆற்றிய உரை.




## இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டை இந்தியா புறக்கணிக்க வேண்டும்!

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

2009 ஆம் ஆண்டு, இலங்கை உள்நாட்டுப் போர் உச்சக் கட்டத்தில் இருந்த நிலையில் சர்வதேச சட்டம் மற்றும் ஜெனிவா ஒப்பந்தத்தில் உள்ள போர் விதிமுறைகளை முற்றிலும் மீறி,

இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்களைக் கொன்று குவித்து ஒரு இனப் படுகொலையை இலங்கை அரசாங்கம் நடத்தியது.

இலங்கை அரசின் இந்த இனப் படுகொலையை ஈவு இரக்கமற்ற இழி செயலை மனிதாபிமானமற்ற தன்மையை, மனிதநேயமற்ற நடவடிக்கையையும், இலங்கைத் தமிழர்களை அழிக்க இந்திய அரசு ஆயுதங்கள் வழங்கியது மற்றும் பயிற்சிகள் அளித்த நடவடிக்கையையும் நான் ஆரம்பத்தில் இருந்து எதிர்த்து வந்திருக்கிறேன். இலங்கை அரசின், அராஜகச் செயலைக் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள், மாணவ–மாணவியர், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், கலைத் துறையினர் என அனைத்துத் தரப்பினரும் தங்கள் உணர்வுகளை வெளிப்படுத்தும் வகையில், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள், உண்ணாவிரதம் எனப் பல்வேறு போராட்டங்களை நடத்தினர். இலங்கை நாட்டிற்கு எதிராக உலகம் முழுவதிலிருந்தும் கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளரால் நியமனம் செய்யப்பட்ட குழு தனது ஆய்வில், பரவலாகக் குண்டுமழை பொழிந்து அப்பாவி மக்களைக் கொன்றுக் குவித்தது; மனிதர்கள் வாழும் இடங்களின் மீதும், மருத்துவமனைகள் மீதும் குண்டுகளை வீசியது; மனிதாபிமான முறையில், செய்ய வேண்டிய உதவிகளைச் செய்ய மறுத்தது; உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகப்படக் கூடியவர்கள் உட்பட இந்தச் சண்டையில் பலியானவர்கள் மற்றும் எஞ்சியுள்ளவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது; இலங்கை அரசை விமர்சிப்பவர்கள் மற்றும் ஊடகங்கள் உட்பட போர்ப் பகுதிக்கு

வெளியே இருப்பவர்கள் மீது மனித உரிமை மீறல்களை நிகழ்த்தியது உள்பட பல்வேறு கடுமையான குற்றங்களை இலங்கை அரசு நிகழ்த்தியுள்ளதாகத் தெரிவித்தது.

இந்தச் சூழ்நிலையில் 2011 ஆம் ஆண்டு மூன்றாவது முறையாக தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற நான், அப்பாவி இலங்கைத் தமிழர்கள் மீது ஈவு இரக்கமற்ற முறையில் தாக்குதல் நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டும் எனவும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தீர்மானத்தினை 8.6.2011 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் முன்மொழிந்தேன். இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம் இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது. ஆனால், இந்தத் தீர்மானத்தின் மீது இது நாள் வரை இந்திய அரசு எவ்வித நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இதனைத் தொடர்ந்து இலங்கை ராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிக்கவும், சிங்களர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் போட்டிகளில் கலந்து கொள்ளவும், மத்திய அரசு அனுமதி வழங்கியது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு இலங்கை ராணுவ வீரர்களுக்கு, இந்தியாவில் எங்கும் பயிற்சி அளிக்கக் கூடாது என்று நான் பாரதப் பிரதமருக்குக் கடிதங்கள்

எழுதினேன். இதன் விளைவாக, தமிழ்நாட்டில் இலங்கை ராணுவ வீரர்கள் பயிற்சி பெறுவது ரத்து செய்யப்பட்டது.

இருப்பினும், இலங்கை அரசு அங்கு வாழும் தமிழர்களுக்குத் தேவையான மறு வாழ்வுப் பணிகளைச் சரிவர மேற்கொள்ளவில்லை என்றும், தமிழர்கள் இரண்டாம் தரக் குடிமக்களாகக் கருதப்படுவது தொடர்கிறது என்றும் தகவல்கள் வரப் பெற்றன. இது மட்டுமல்லாமல் தமிழர்கள் மீது நிகழ்த்தப்பட்ட கொடுமைகள் குறித்து புதிய ஆதாரங்களை ஊடகங்கள் வெளியிட்டன. இதன் காரணமாக ஒட்டுமொத்தத் தமிழ்நாடே கொதித்தது.

இதனைத் தொடர்ந்து, 2013 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெறும் இந்த மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து 25.3.2013 அன்றே கடிதம் வாயிலாக, மாண்புமிகு பாரதப் பிரதமரை நான் கேட்டுக் கொண்டேன்.

இது மட்டுமல்லாமல் 27.3.2013 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், இலங்கை நாட்டை ‘‘நட்பு நாடு’’ என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும், இலங்கை இனப் போரின் போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்துச் சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இந்தச் சர்வதேச விசாரணையின் அடிப்படையில் போர்க் குற்றம் நிகழ்த்தியவர்கள் சர்வதேச நீதிமன்றம் முன்பு நிறுத்தப்பட்டு, அவர்களுக்கு உரிய தண்டனை பெற்றுத்தந்திடவும், தமிழர்கள் மீதான அடக்குமுறையை இலங்கை

அரசு நிறுத்தும் வரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ஈழத் தமிழர்களின் எதிர்கால நலனைக் கருத்தில் கொண்டு ‘‘தனி ஈழம்’’ குறித்து இலங்கை வாழ் தமிழர்களிடமும், இலங்கையிலிருந்து இடம்பெயர்ந்து பிற நாடுகளில் வாழும் தமிழர்களிடமும் பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் அரசின் தீர்மானத்தினை நான் முன்மொழிந்தேன். அது இந்த மாமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதன் மீதும் மத்திய அரசு எவ்விதமான நடவடிக்கையையும் எடுக்கவில்லை.

இந்தச் சூழ்நிலையில், தமிழக மக்களின் உணர்வுகள் உட்பட, அனைத்துக் காரணிகளையும் பரிசீலித்து, இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்து கொள்வது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும் என்று பாரதப் பிரதமர் தெரிவித்துள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வந்துள்ளன. இந்த காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக் கூடாது என்று தமிழக மக்கள் வலியுறுத்தி வரும் சூழ்நிலையில், மாண்புமிகு பாரதப் பிரதமர் தன்னுடைய பங்கேற்பு பற்றி மட்டும் கருத்துத் தெரிவித்துள்ளது தமிழக மக்களுக்குப் பெருத்த ஏமாற்றத்தை அளித்துள்ளது.

காமன்வெல்த் நாடுகளின் தலைவரான இரண்டாம் Queen Elizabeth அவர்களால் காமன்வெல்த் நாளான **11.3.2013** அன்று கையெழுத்திடப்பட்ட காமன்வெல்த் சாசனத்தில், மனித உரிமைகள் என்ற தலைப்பின் கீழ், “We are committed to the Universal Declaration of Human Rights and other relevant human rights covenants and international instruments. We are committed to equality and respect for the protection

and promotion of civil, political, economic, social and cultural rights including the right to development for all without discrimination on any grounds as the foundation of peaceful, just and stable societies. We note that these rights are universal, indivisible, interdependent and interrelated and cannot be implemented selectively."

"We are implacably opposed to all forms of discrimination whether rooted in gender, race, colour, creed, political belief or other grounds." என்று கூறியுள்ளார்.

அதாவது, மனித உரிமைகள் குறித்த பொதுவான பிரகடனம், இதர தொடர்புடைய மனித உரிமைகள் குறித்த உடன்பாடுகள் மற்றும் இதர சர்வதேச ஆவணங்கள் ஆகியவற்றைப் பின்பற்றுவதில் உறுதியாக இருக்கிறோம் என்றும், அமைதி, நியாயம் மற்றும் நிலையான சமூகங்கள் ஆகியவற்றின் அடிப்படையாக விளங்கும் வளர்ச்சி உரிமை உள்பட சமூக, அரசியல், பொருளாதார மற்றும் கலாச்சார சம உரிமைகளைப் பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வழிவகுக்கும் சம உரிமை மற்றும், கண்ணியத்தை எவ்விதப் பாகுபாடுமின்றி அனைவருக்கும் வழங்கவும் உறுதி பூணுகிறோம் என்றும், இந்த உரிமைகள் அனைத்தும் பொதுவானவை, பிரிக்க முடியாதவை, ஒன்றுக்கொன்று சார்புடையவை, ஒன்றுக்கொன்று தொடர்புடையவை என்றும், இதில் சிலவற்றை மட்டும் தெரிந்தெடுத்துச் செயல்படுத்த முடியாது என்றும், காமன்வெல்த் சாசனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், பாலினம், இனம், நிறம், மதம், அரசியல் நம்பிக்கை, அல்லது வேறு காரணங்களுக்காக ஏற்படுத்தப்படும்

வேறுபாடுகளைக் கடுமையாக எதிர்க்கிறோம் என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால், இந்தக் கொள்கைகளுக்கும் கோட்பாடுகளுக்கும் முற்றிலும் முரணாக இலங்கை அரசு செயல்பட்டு வருகிறது.

காமன்வெல்த் நாடுகளின் முக்கியமான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் நிலைநிறுத்த முன்வராத இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனடா நாட்டு பிரதமர் அறிக்கை விடுத்துள்ளார். அந்த அறிக்கையில் காமன்வெல்த் கூட்டமைப்பு தொடர்ந்து உகந்த வகையில் திகழ வேண்டுமென்றால் சுதந்திரம், ஜனநாயகம் மற்றும் மனித கண்ணியத்தை மதித்தல் போன்ற அடிப்படைக் கொள்கைகளின் அஸ்திவாரத்தில் அமைக்கப்பட்ட காமன்வெல்த் அமைப்பு அவற்றை நிலைநிறுத்த வேண்டும் என்று கனடா நம்புகிறது. கனடா நாட்டு மக்களால் பெரிதும் போற்றப்படும் காமன்வெல்த் நாடுகளின் இந்த முக்கியக் கொள்கைகளை நிலைநிறுத்த இலங்கை அரசு தவறிவிட்டதால், கனடா நாட்டுப் பிரதமர் என்ற முறையில் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் தான் கலந்து கொள்ளப் போவதில்லை என்று அறிவித்து இருக்கிறார். அதாவது, “Canada believes that if the Commonwealth is to remain relevant it must stand in defence of the basic principles of freedom, democracy and respect for human dignity, which are the very foundation upon which the Commonwealth was built. It is clear that the Sri Lankan Government has failed to uphold the Commonwealth’s core values which are cherished by Canadians. As such, as the Prime Minister of Canada, I will not attend the 2013 Commonwealth

Heads of Government Meeting in Colombo, Sri Lanka" என்று கனடா நாட்டுப் பிரதமர் அறிக்கை விடுத்திருக்கிறார்.

அவருக்குப் பதிலாக வெளியுறவுத் துறைஅமைச்சரின் நாடாளுமன்றச் செயலர் பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. தமிழர்கள் மிகக் குறைவாக வசிக்கும் கனடா நாடே இது போன்றதொரு முடிவை எடுத்து பெயரளவில் ஒருவரை அனுப்பவுள்ள சூழ்நிலையில், எட்டுக் கோடி தமிழர்கள் வசிக்கும் இந்தியா இந்த மாநாட்டில் பெயரளவிலும் கலந்து கொள்ளாது என்னும் தீர்க்கமான முடிவை இன்னமும் எடுக்காதது துரதிர்ஷ்டவசமானது. தமிழர்களின் உணர்வுகளுக்கு மத்திய அரசு சிறிதும் மதிப்பளிக்கவில்லை என்பதையே இது காட்டுகிறது.

இவற்றை எல்லாம் சுட்டிக்காட்டி நவம்பர் மாதம் இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவிற்குக் கூட ஒருவரும் அந்த மாநாட்டில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் தெரிவித்து, இது போன்ற நடவடிக்கை இலங்கைத் தமிழர்கள் மீது நியாயமான அணுகுமுறையை இலங்கை அரசு எடுக்க வழிவகுக்கும் என்றும் கோடிட்டுக்காட்டி ஒரு விரிவான கடிதத்தினை நான் பாரதப் பிரதமருக்கு 17.10.2013 அன்று எழுதியுள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள அனைத்துக் கட்சிகளும் இதே கோரிக்கையினை வலியுறுத்தி வருகின்றன. எனினும், மத்திய அரசு இந்தப் பிரச்சினை தொடர்பாக ஒரு திடமான, தீர்க்கமான முடிவை இன்னமும் எடுக்கவில்லை.

ஒட்டுமொத்தத் தமிழக மக்களின் கோரிக்கைக்கு மேலும் வலு சேர்க்கும் வகையிலும், தமிழக மக்களின் உணர்வுகளைத்

தெரிவிக்கும் வகையிலும், கீழ்க்காணும் தீர்மானத்தினை நான் முன்மொழிகிறேன்.

**தீர்மானம்**

**“தமிழக மக்களின் ஒருமித்த கருத்திற்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து இந்த ஆண்டு நவம்பர் மாதம் இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும்; பெயரளவிற்குக் கூட இந்திய நாட்டின் சார்பாகப் பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும்; இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும்;**

**இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது”**

என்னும் தீர்மானத்தினை நான் முன்மொழிகிறேன்.

என்னால் முன்மொழியப்பட்ட இந்தத் தீர்மானத்தினை ஒரு மனதாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
25.10.2013 அன்று மின் நிலைமை குறித்து
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் கொண்டு வரப்பட்ட
சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்
மீதான விவாதத்திற்கு பதில் அளித்து ஆற்றிய உரை



## மின்மிகை மாநிலம் ஆக்குவோம் தமிழ்நாட்டை ! சாதித்தே தீருவோம், இது உறுதி !

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும், தமிழ்நாட்டில் நிலவும் மின்வெட்டு நிலைமை பற்றி இங்கே குறிப்பிட்டார்கள். இதனால், சிறு, குறு தொழில்கள் நடத்துபவர்கள் பாதிக்கப்படுவதாகத் தற்போது குறிப்பிட்டார்கள். இன்றைய

நிலைமையில் மின்வெட்டுக் குறித்து கவலைப்படக் கூடிய எந்தச் சூழ்நிலையும் இல்லை என்பதை ஆரம்பத்திலேயே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**சீரான மின்விநியோகம்**

இயற்கை நமக்குப் பல சக்திகளை வாரி வழங்கி இருந்தாலும், அவற்றில் மிகப் பெரிய அளவில் மக்களுக்குப் பயன்படுவதாகவும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு இன்றியமையாததாகவும் விளங்குவது மின் சக்தி என்று சொன்னால் அது மிகையாகாது. கண்ணால் பார்க்க முடியாத மின்சாரத்தை அதன் செயல்பாடுகளில் இருந்து உணருவது போல், மின் உற்பத்தியைப் பெருக்க, தமிழகத்தை மின் மிகை மாநிலமாக்க நான் எடுத்து வரும் துரித நடவடிக்கைகளைக் கண்ணால் காண முடியாவிட்டாலும், தற்போதைய சீரான மின் விநியோகத்தின் மூலம் தமிழக மக்கள் எளிதில் உணர்ந்து இருப்பார்கள் என்று நான் நம்புகிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் அக்கறையின்மை, தொலைநோக்கற்ற பார்வை, நிருவாகத் திறமையின்மை காரணமாக, ஒளிமயமாக இருந்த தமிழகம் இருளில் மூழ்கியது.

நான் 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, தமிழகத்தின் மின் பற்றாக்குறை 4,000 மெகாவாட் அளவுக்கு இருந்தது. இதற்குக் காரணம், ஆண்டுக்காண்டு உயர்ந்து கொண்டே வரும் மின் தேவைக்கு ஏற்பப் புதிய மின் திட்டங்களை உரிய காலத்தில் தீட்டாதது, ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டத் திட்டங்களை சரிவர நிறைவேற்றாதது, மின் விநியோகக் கட்டமைப்புகளை மேம்படுத்தாதது, நீண்டகால அடிப்படையில் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொள்முதல் செய்யாதது எனப் பல குற்றச்சாட்டுக்களை அடுக்கிக் கொண்டே போகலாம்.

1991 முதல் 1996 வரை நான் முதலமைச்சராக இருந்தபோது, 1,302 மெகாவாட் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், 1996 முதல் 2001 வரையிலான தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வெறும் 561 மெகாவாட் மின் நிறுவு திறன் மட்டுமே ஏற்படுத்தப்பட்டது.

பின்னர், 2001 முதல் 2006 வரை நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்த போது, 2,518 மெகாவாட் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது. தமிழ்நாட்டில் உள்ள அனல் மின் நிலையங்களின் சிறப்பான செயல்பாட்டிற்காக மத்திய அரசின் விருதுகள் நமக்குக் கிடைத்தன. காற்றாலை மின் உற்பத்தியில் தமிழகம் முன்னிலை மாநிலங்களில் ஒன்றாக விளங்கியது. மொத்தத்தில் தமிழகம் மின் மிகை மாநிலமாக விளங்கியது. ஆனால், 2006 முதல் 2011 வரையிலான முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் வெறும் 206 மெகாவாட் அளவுக்கே கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டது.

2001 முதல் 2006 வரையிலான எனது ஆட்சிக் காலத்தில் கூடுதல் மின் நிறுவு திறன் ஏற்படுத்தப்பட்டதன் காரணமாக, தமிழ்நாட்டில் மின் தேவை அதிகரித்த போதும், மைனாரிட்டி தி.மு.க. அரசு பொறுப்பேற்று ஓராண்டு வரை மின் பற்றாக்குறை இல்லாத நிலைமை நிலவியது. இந்தியாவிலேயே மின்சார உற்பத்தியில் உபரி மாநிலமாக இருப்பது தமிழ்நாடு மட்டும் தான் என்று அப்போதைய மின்சாரத் துறை அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமியே 3.4.2007 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் பேசி இருப்பதை இந்தத் தருணத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த நிலைமை சிறிது காலம் தான் நீடித்தது. 2007 ஆம் ஆண்டு இறுதியிலிருந்தே நிலைமை தலைகீழாக மாற ஆரம்பித்து, 2008 ஆம் ஆண்டிலிருந்து மின் பற்றாக்குறை தமிழகம் முழுவதும் தலைவிரித்து ஆட ஆரம்பித்தது.

**மின் பற்றாக்குறை நீங்கும்**

இந்த அளவுக்கு நிலைமை மோசமானதற்கு அனல் மின் நிலையங்கள் சரியாகப் பராமரிக்கப்படாதது, மின் உற்பத்தித் திட்டங்களை விரைவுபடுத்தாதது, மத்தியத் தொகுப்பிலிருந்து தமிழகத்திற்குரிய மின்சாரத்தைப் பெற முடியாதது எனப் பல்வேறு காரணங்கள் உள்ளன. இருப்பினும், நீண்ட கால அடிப்படையில், அதாவது Case I என்கிற அடிப்படையில் மின்சாரத்தைக் கொள்முதல் செய்திருந்தாலே இந்த மின் பற்றாக்குறையைச் சமாளித்து இருக்கலாம். இதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்திருந்தால், நமக்குக் குறைந்த விலையில் மின்சாரம் கிடைத்திருக்கும். ஆனால், இதை முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசு செய்யவில்லை. மாறாக, அதிக விலை கொடுத்துக் குறுகிய கால அடிப்படையில் மின்சாரம் வாங்குவதை வாடிக்கையாகக் கொண்டிருந்தது. இந்தச் சூழ்நிலையில், மின்சாரத்தைக் கொண்டு செல்லும் வழித் தடத்தில் நெருக்கடி ஏற்பட்டதால், நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்களைச் செய்து கொண்ட மாநிலங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டது. இதன் விளைவாக, விலை கொடுத்தாலும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது.

நான் மூன்றாவது முறையாகத் தமிழகத்தின் முதலமைச்சராக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், தமிழகத்தின் மின் பற்றாக்குறையைச் சமாளிக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்தேன். மின் பற்றாக்குறையை நீக்க எனது தலைமையிலான அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்தும், எதிர்காலத் திட்டங்கள் குறித்தும் நான் இந்த மாமன்றத்தில் பல முறை விரிவாக எடுத்துரைத்து இருக்கிறேன். இந்த ஆண்டு இறுதிக்குள் மின் பற்றாக்குறை போக்கப்படும் என்றும் நான் தெரிவித்து இருந்தேன்.

600 மெகாவாட் திறன் கொண்ட மேட்டூர் அனல் மின் திட்டப் பணிகளைப் பொறுத்த வரையில், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலமான ஐந்து ஆண்டு காலத்தில் 55 விழுக்காடு பணிகளே முடிக்கப்பட்டிருந்தது. நான் ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் இந்தத் திட்டத்தினை விரைவுபடுத்தியதன் காரணமாக, தற்போது இந்தத் திட்டப் பணிகள் முடிக்கப்பட்டு, இதிலிருந்து தற்போது நமக்குத் தொடர்ந்து 500 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது.

**600 மெகா வாட் கிடைக்கும்**

வடசென்னை அனல்மின் நிலையத்திட்டத்தின் நிலை–IIஇன் முதல் அலகை எடுத்துக் கொண்டால், 50 விழுக்காட்டிற்கும் குறைவான பணிகளே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் நிறைவேற்றப்பட்டன. நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, இந்தத் திட்டத்தின் பணிகள் முடுக்கி விடப்பட்டதன் காரணமாக, தற்போது இந்தத் திட்டத்திலிருந்து நமக்கு 300 மெகாவாட் மின்சாரம் கிடைத்து வருகிறது. வரும் டிசம்பர் மாதம் முதல் 600 மெகாவாட் மின்சாரம் இதிலிருந்து நமக்கு கிடைக்கும்.

600 மெகாவாட் திறன் கொண்ட வடசென்னை அனல் மின் நிலையம் நிலை IIஇன் இரண்டாவது அலகுப் பணிகள் 40 விழுக்காடு மட்டுமே முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் முடிக்கப்பட்டு இருந்தன. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு மீதமுள்ள 60 விழுக்காடு பணிகள் முடிக்கப்பட்டு தற்போது சோதனை ஓட்டம் செய்யப்பட்டுள்ளது. இதிலிருந்து 350 முதல் 450 மெகாவாட் மின் உற்பத்தி நமக்குக் கிடைக்கிறது. நவம்பர் மாத இறுதியிலிருந்து இந்தத் திட்டத்தின் மூலம் 600 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

எனது முந்தைய ஆட்சிக் காலத்தில் தேசிய அனல் மின் கழகத்துடன் கூட்டு முயற்சியில் ஏற்படுத்தப்பட்ட வட சென்னை வல்லூரில் அமைந்துள்ள, 3x500 மெகாவாட் திறன் கொண்ட திட்டப்பணிகள் முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆமை வேகத்தில் சென்று கொண்டிருந்தன. இந்தப் பணிகளை நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு துரிதப்படுத்தியதன் காரணமாக, தற்போது இரண்டு அலகுகள் வணிக ரீதியாக மின் உற்பத்தியை முறையே 29.11.2012 அன்றும், 25.08.2013 அன்றும் துவங்கியுள்ளன. மூன்றாவது அலகு அடுத்த ஆண்டு மே மாதம் முதல் உற்பத்தியைத் தொடங்கும்.

**உச்ச நீதி மன்றத்தில் வழக்கு**

மேற்கண்ட புதிய அனல் மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு உற்பத்தியைத் தொடங்கியுள்ளதால் தற்போது கூடுதலாக 1,700 மெகாவாட் மின்சாரம் நமக்குக் கிடைத்து வருகிறது.

தமிழ்நாடு மின்சார வாரியமும், நெய்வேலி பழுப்பு நிலக்கரி நிறுவனமும் இணைந்து தூத்துக்குடியில் அமைத்துவரும் 2x500 மெகாவாட் அனல் மின் திட்டப் பணிகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காகவ.உ.சி. துறைமுகத்திடமிருந்து பெறப்பட்டுள்ள நிலம் 'காடுகள்' என வருவாய்த் துறை ஆவணங்களில் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் அதனை மறுவகைப்படுத்த உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.அதாவது இதற்கு என்ன அர்த்தம் என்று புரிந்து கொள்ளவேண்டும். நியாயமாக, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய ஒரு மின்சாரத் திட்டத்திற்கு நிலத்தை வகைப்படுத்திக் கொடுங்கள், அனுமதி கொடுங்கள் என்று மத்திய அரசைக்கேட்டால்,தற்போதுகாங்கிரஸ்தலைமையில்செயல்படும் மத்திய அரசு, அனுமதியைத் தரவில்லை. அதனால்தான், உச்ச நீதிமன்றத்தில் வழக்கைத் தொடுத்துள்ளோம் என்பதை நான் தெளிவுபடுத்த விரும்புகிறேன். இது தொடர்பாக உச்ச

நீதிமன்றத்தின் அனுமதியை பெறுவதற்குத் தேவையான நடவடிக்கைகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தின் மூலம் வரும் ஆண்டு மே மாதம் முதல் மின் உற்பத்தியைத் தொடங்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இதுதவிர மத்தியகால அடிப்படையில் மூன்று ஆண்டுகளுக்கு 500 மெகாவாட் மின்சாரம் இந்த ஆண்டு ஜுன் மாதம் முதல் பிற மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்யப்பட்டு பெறப்பட்டு வருகின்றது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நீண்டகால அடிப்படையில் 15 ஆண்டுகள் பெறத்தக்க வகையில் 1,000 மெகாவாட்+20% பெற வேண்டி விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன. இதில் மொத்தம் 3,430 மெகாவாட் அளவிற்கு ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டன. இதில் 1,208 மெகாவாட் பெறுவதற்குரிய ஒப்பந்தங்கள் 4 உற்பத்தியாளர்களுடன் ஆகஸ்டு மாதத்தில் செய்யப்பட்டுள்ளன. மேலும், இந்த ஒப்பந்தப் புள்ளியிலிருந்தே கூடுதலாக 2,122 மெகாவாட் மின்சாரம் பெற அனுமதி கோரி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த அரசு எடுத்த இந்தச் சீரிய முயற்சியால் மொத்தம் 3,330 மெகாவாட் மின்சாரம் 15 ஆண்டுகளுக்குக் கிடைப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. இதில் பெருமளவு மின்சாரம் சட்டீஸ்கர், ஒடிசா மாநிலங்களிலிருந்து பெறப்படும்.

பிற மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் மின்சாரத்தை எடுத்துவரத்தக்க மின் வழித் தடங்கள் இல்லாதது குறித்து நான் இந்த அவையிலே பல முறைப் பேசியிருக்கிறேன். இதனையடுத்து, தற்போது மகாராஷ்டிரா மாநிலம் சோலாப்பூரிலிருந்து கருநாடக மாநிலம் ரெய்ச்சூர் வரை

765 கிலோ வோல்ட் திறன் கொண்ட மின் வழித் தடங்கள், அமைக்கப்பட்டு வருகின்றன. இது வரும் 2014 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் செயல்பாட்டிற்கு வரும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த மின் வழித் தடமும் இதனைச் சார்ந்த துணை மின் வழித் தடங்களும் இயக்கி வைக்கப்படும் போது, நாம் கொள்முதல் செய்துள்ள மின்சாரத்தை முழுமையாகப் பெறமுடியும்.

இந்த ஆண்டு தென்மேற்குப் பருவ மழை சிறப்பாகப் பெய்த காரணத்தால் நீர்மின் உற்பத்தி நிலையங்களைச் சார்ந்த நீர்த் தேக்கங்கள் ஏறத்தாழ முழுக் கொள்ளளவு நிலையை எட்டியுள்ளன. வருகின்ற வட கிழக்குப் பருவ மழையும் நன்றாகவே அமையும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தக் காரணங்களாலும் தமிழ்நாட்டின் மின் உற்பத்தி அதிகரித்துள்ளது.

சென்ற ஆண்டு அக்டோபர் மாதத்தில் 180 மில்லியன் யூனிட்டுகளாக இருந்து வந்த தினசரி மின் வினியோகம், இந்த ஆண்டு அதிகபட்சமாக 270 மில்லியன் யூனிட்டுகளை எட்டியுள்ளது. இந்த ஆண்டு அக்டோபர் முதல் நாள் அன்று இதுவரை இல்லாத உச்சத் தேவையான 12,118 மெகாவாட் மின்சாரத்தைத் தமிழ்நாடு மின்சார வாரியம் நிறைவு செய்தது என்பதை இந்தத் தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

**மின் வெட்டே இல்லை**

டெல்டா மாவட்ட விவசாயிகளுக்கு 15.6.2013 முதல் தினசரி 12 மணி நேரம் மும்முனை மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் நிகழும் மின்வெட்டு படிப்படியாகத் தளர்த்தப்படும் என்று நான் ஏற்கெனவே அறிவித்திருந்ததற்கு ஏற்ப, 1.10.2013 முதல் உயரழுத்தத் தொழிற்சாலைகள் மற்றும்

வணிக நிறுவனங்களுக்கான மின்வெட்டு, உச்சத் தேவையான மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையுள்ள நேரம் நீங்கலாக, இதர நேரங்களில் 40 விழுக்காட்டிலிருந்து 20 விழுக்காடாகக் குறைக்கப்பட்டுள்ளது.

வீட்டு உபயோகத்திற்கான மின்வெட்டு சென்னையில் இரண்டு மணி நேரம் என்றும், இதர பகுதிகளில் மூன்று மணி நேரம் என்றும் இருந்தாலும், பெரும்பாலான நாட்களில் மின்வெட்டே இல்லை என்பதுதான் யதார்த்த நிலை. அதாவது, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் அறிவிக்கப்படாத மின்வெட்டு என்றிருந்த நிலை மாறி, தற்போது அறிவிக்கப்பட்ட மின்வெட்டும் நடைமுறைப்படுத்தாத நிலை ஏற்பட்டுள்ளது.

தி.மு.க. ஆட்சிக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கும் உள்ள மிகப்பெரிய வேறுபாடு இதுதான். தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மக்களை ஏமாற்றிக் கொண்டே இருந்தார்கள். மின்வெட்டு என்று அறிவிக்கவே இல்லை. ஆனால் மின்வெட்டு இருந்தது. அது நாளாக ஆக, அதிகரித்துக் கொண்டே போனதால் மறைக்க முடியவில்லை. எல்லோருக்கும் தெரிந்துவிட்டது. எங்களைப் பொறுத்த வரையில், மோசமான நிலையைச் சீர்செய்து இருக்கிறோம். இப்போது ஒரு எச்சரிக்கை உணர்வுடன், நாம் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். வாக்குறுதி கொடுத்துவிட்டு தவறிவிடக்கூடாது என்பதற்காக, மின்வெட்டு இருக்கும் என்று சொல்கிறோம். ஆனால், மின்வெட்டே இல்லாமல் மின்சாரத்தை கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.

நான் ஏற்கெனவே அறிவித்ததற்கேற்ப, தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு விரைவில் முழுமையாக நீங்கி, தங்கு தடையின்றி அனைத்துத் தரப்பு நுகர்வோர்களுக்கும் மின்சாரம் கிடைக்கப் பெறும்.

**புதிய மின் திட்டங்கள்**

தமிழகத்தின் எதிர்கால மின் தேவையைக் கருத்தில் கொண்டு, பல்வேறு புதிய மின் திட்டங்களை நான் இந்த மாமன்றத்தில் அறிவித்துஇருந்தேன். அவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை இந்த மாமன்றத்திலே நான் சுட்டிக் காட்ட விழைகிறேன்.

4,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமையவிருக்கும் 660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் அனல் மின் திட்ட விரிவாக்க அலகிற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வுகள் இறுதி நிலையில் உள்ளன. விரைவில் இத்திட்டம் அமைப்பதற்கான ஆணைகள் வழங்கப்பட்டுப் பணிகள் துவங்கும்.

2x660 மெகாவாட் திறன் கொண்ட எண்ணூர் சிறப்புப் பொருளாதார மண்டல அனல் மின் திட்டம் 8,000 கோடி ரூபாயில் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு ஆய்வில் உள்ளன. இதற்கான ஆணைகளும் விரைவில் வழங்கப்படும்.

இதேபோன்று 2x660 மெகாவாட் திறன் கொண்ட உடன்குடி அனல் மின் திட்டமும், நிலக்கரி இறக்கு தளத்துடன் அதாவது Coal Jetty-யுடன், 9,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் பெறப்பட்டு பரிசீலனையில் உள்ளன. இவையும் விரைவில் இறுதி செய்யப்பட்டு, ஆணைகள் வழங்கி, பணிகள் துவக்க ஆவன செய்யப்படும்.

மேலும் 2x800 மெகாவாட் திறன் கொண்ட இராமநாதபுரம் மாவட்டம் உப்பூர் புதிய அனல் மின் திட்டத்திற்கான ஆயத்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்ற சட்டமன்றத் தொடரில் நீலகிரி மாவட்டத்தில் 7,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2,000 மெகாவாட் திறன் கொண்ட

‘சில்லஹல்லா நீரேற்றுப் புனல் மின் திட்டம்’ உருவாக்கப்படும் என நான் அறிவித்து இருந்தேன். இதற்கான ஆய்வுப் பணிகள் 22.8.2013 அன்று தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன.

இது மட்டுமல்லாமல், உற்பத்தி செய்யப்படுகின்ற மின்சாரத்தைக் கொண்டு சென்று மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கத் தக்க வகையில் பல புதிய துணை மின் நிலையங்கள் மற்றும் மின் வழித் தடங்கள் அமைக்கப்படும் என்றும் நான் அறிவித்திருந்தேன்.

5,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 3,572 கோடி ரூபாய் ஜப்பானிய நிதியுதவியுடன் தமிழ்நாட்டின் குறிப்பாக சென்னையின் கட்டமைப்பையும், தொடரமைப்பையும் வலுப்படுத்த ஒரு திட்டம் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்தின்படி ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும், பதினான்கு 230 கிலோ வோல்ட் துணைமின் நிலையங்களும் அவற்றைச் சார்ந்த மின் தட வழிகளும் அமைக்கப்பட வேண்டும். இவற்றில் ஐந்து 230 கிலோ வோல்ட் துணைமின் நிலையங்களுக்கான ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டு இறுதி செய்யப்பட்டு விட்டன. இரண்டு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும், ஏழு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்குமான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மீதமுள்ள மூன்று 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும், இரண்டு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களுக்கும் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன.

**புதிய துணை மின் நிலையங்கள்**

இதே போன்று, 8,000 கோடி ரூபாய் செலவில் 56 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என நான் அறிவித்திருந்தேன். இவற்றுள் 5 துணை மின் நிலையங்கள் சோதனை மின்னோட்டம் செய்யப்பட்டுள்ளன. 24 துணை மின் நிலையங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. 7 துணை

மின் நிலையங்களில் பணிகள் துவங்கப்பட உள்ளன. 13 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன. 7 துணை மின் நிலையங்களுக்கு ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன.

மேலும் பிற மாநிலங்களிலிருந்து மின்சாரம் பெறத்தக்க வகையில் வேலூர் மாவட்டம் திருவலத்தில் 400 கிலோ வோல்ட் துணைமின் நிலையம் அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. இந்த 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் மற்றும் அதனைச் சார்ந்த 400 கிலோ வோல்ட் மின் வழித் தடங்களுக்குமான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்பட்டு, பணிகள் துவங்கியுள்ளன.

**சூரிய எரிசக்திக் கொள்கை–2012**

மரபு சாரா எரிசக்தி ஆதாரங்களை மையமாகக் கொண்டு மின்னுற்பத்தியைப் பெருக்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் 'சூரிய எரிசக்தி கொள்கை 2012'ஐ நான் வெளியிட்டிருந்தேன். இதன்படி மூன்று ஆண்டுகளில் சூரிய சக்தி மூலம் 3,000 மெகாவாட் அளவிற்கு மின்னுற்பத்தி செய்யப்பட வேண்டும். இதனடிப்படையில் முதல் கட்டமாக 1,000 மெகாவாட் அளவிற்கான சூரிய சக்தி மின்னுற்பத்தித் திட்டங்களை நிறுவி அதன் மூலம் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொள்முதல் செய்யும் வகையில் ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு, 698 மெகாவாட் அளவிற்கான ஒப்பந்தங்கள் இறுதி செய்யப்பட்டுள்ளன.

''சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும்'' என்ற பழமொழிக்கேற்ப, நமக்கெல்லாம் மின் உற்பத்தியை, மின் விநியோகத்தை அளித்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு மின் வாரியத்தின் நிதி நிலைமையைச் சீர்படுத்துவதற்காக எனது தலைமையிலான அரசு பெரு முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. 31.3.2011 நிலவரப்படி தமிழ்நாடு மின்வாரியத்தின்

மொத்த இழப்பு சுமார் 40,375 கோடி ரூபாயாகும். இந்த இழப்பை ஈடு செய்து தமிழ்நாடு மின்வாரியத்தை மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டு வரும் வகையில் நிதி சீரமைப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி, தமிழ்நாடு மின் வாரியத்தின் குறுகிய காலக் கடன் சுமையில் 50 சதவிகிதத்தை அரசே ஏற்றுக் கொள்ளும். இந்த சீரமைப்புத் திட்டத்தின்படி 6,353.49 கோடி ரூபாய்க்கான மின் வாரியத்தின் நிலுவைக் கடன் தொகைக்கு ஈடான நிதிப் பத்திரங்கள் வங்கிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இதன் மீதான அசல் மற்றும் வட்டியினைத் தமிழக அரசே ஏற்றுக்கொள்ளும். மேலும் 5,951.43 கோடி ரூபாய் வங்கிக் கடனை மறு சீரமைப்பு செய்வதற்காக அரசு உத்தரவாதம் வழங்கியுள்ளது. இது தவிர, தமிழ்நாடு மின் வாரியம் கடன் பெற ஏதுவாக 22,700 கோடி ரூபாய் அளவிற்கு அரசு உத்தரவாதத்தை அளித்துள்ளது.

எனது தலைமையிலான தமிழக அரசு கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 7,913.35 கோடி ரூபாயும், 2012–2013 ஆம் ஆண்டில் 11,242 கோடி ரூபாயும் நிதியுதவியாக வழங்கியுள்ளது. 2013–2014 ஆம் ஆண்டிற்கு இதுவரை இருந்திராத அளவாக 12,197 கோடி ரூபாயை நிதியுதவியாக தமிழ்நாடு அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இதில் மானியத் தொகை 4,749.90 கோடி ரூபாயை அரசு முன்னதாகவே வழங்கியுள்ளது. மேலும், பங்கு மூலதனமாக 500 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

அதாவது, தி.மு.க. ஆட்சிக் காலத்தில் மின்சாரத் துறையையே பாழ்படுத்தி, சீர்குலைத்து, அது திவாலாகும் அளவிற்கு, இழுத்து மூடவேண்டிய அளவிற்கு ஆக்கிவிட்டு, 45,000 கோடி ரூபாய்க்கும் மேற்பட்ட கடனையும் வைத்து விட்டுச் சென்றார்கள். இப்பொழுதுதான் நான் அந்தத் தொகையை சொன்னேன். 40,375 கோடி ரூபாய் கடன் வைத்துவிட்டுச் சென்றார்கள். நாங்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபோது, இருந்த

நிலைமையை நீங்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும். இந்தக் கடனை எப்படி திருப்பி செலுத்த முடியும்? தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிலைமையை எப்படி மீண்டும் சீர்படுத்த முடியும்? என்று மலைத்துவிட்டார்கள், திகைத்துவிட்டார்கள். நானும் மிகவும் கவலை கொண்டேன். அன்றைய நிலைமையில் ரிசர்வ் வங்கி, ரிசர்வ் பாங்க் ஆப் இந்தியா, இந்தியாவில் உள்ள அனைத்து வங்கிகளுக்கும் உத்தரவு போட்டுவிட்டது, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு கடன் கொடுக்கக்கூடாது என்று அவர்கள் முடிவே கட்டிவிட்டார்கள். தமிழ்நாடு மின்சார வாரியம் இனி தேறவே தேறாது என்று சொல்லி கடன்கூட கொடுக்கக்கூடாது என்று உத்தரவு போட்டார்கள். ஆனால், அதை ஒரு சவாலாக எடுத்துக்கொண்டு இன்றைக்குப் படிப்படியாக இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்குக் கிட்டத்தட்ட அந்தக் கடன் முழுவதையும் அடைக்கும் அளவிற்கு, தமிழக அரசே பொறுப்பேற்றுக்கொண்டு, அந்தப் பணத்தை மின்சார வாரியத்திற்கு வழங்கி, இன்று மின்சார வாரியத்தைப் பழைய நிலைமைக்குக் கொண்டு வந்து இருக்கிறோம். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எந்தவகையிலும் கவலைகொள்ளத் தேவையில்லை. வெகு விரைவில், மிக விரைவில் தமிழ்நாடு மின் மிகை மாநிலமாக ஆக்கப்படும் என்பதைத் திட்டவட்டமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். அதை சாதித்தே தீருவோம். இதையே கடந்த ஆண்டு சாதித்தே தீருவோம் என்று நான் பேசியபோது, எப்படிச் செய்யப் போகிறார்கள் என்று எல்லோரும் நகைத்தார்கள். இப்போது சாதித்தே தீருவோம் என்றால் எல்லோரும் நம்புகிறார்கள் என்றால் கிட்டத்தட்ட 99 சதவிகிதம் சாதித்து விட்டோம். இன்னும் ஒரு சதவிகிதம்தான். இந்த ஆண்டு இறுதிக்குள் அதையும் சாதித்துவிடுவோம். ஆகவே, நான் எடுத்துள்ள இந்த நடவடிக்கைகள் நமக்குத் தேவையான மின்சாரம் விரைந்து கிடைக்கவும், தமிழ்நாடு

மின்சார வாரியத்தின் நிதி நிலைமை மேம்படவும் வழிவகுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு,

மாண்புமிகு உறுப்பினர்கள் செல்வி பாலபாரதி அவர்களும், திரு. ஆறுமுகம் அவர்களும், மற்ற உறுப்பினர்களும் சிறு, குறு தொழிலாளர்களின் நிலைமை என்னவாகும், சிறு, குறு தொழில்கள் நடத்துவோரின் நிலைமை என்னவாகும் என்று கவலை கொள்ளத் தேவையில்லை. எல்லோருக்கும் 24 மணி நேரமும் சீரான மின்சாரம் கிடைக்கும்படியான ஒரு சூழ்நிலையை வெகு விரைவில் உருவாக்கிக் காட்டுவோம் என்று தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் செல்வி பாலபாரதி பேசும்போது, சிறு, குறு தொழில்களுக்கு மின்வெட்டு இருப்பதாகக் குறிப்பிட்டார். ஆனால், சிறு, குறு தொழில்களுக்கு மின்வெட்டுக் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உயர் மின் அழுத்த பெரிய தொழிற்சாலைகளுக்கு இருந்த 40 விழுக்காடு மின்வெட்டும் 1.10.2013லிருந்து 20 விழுக்காடாக குறைக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம் அவர்கள் பேசும்போது, விவசாயத்திற்கு அளிக்கப்படும் மின்சாரம் குறித்து குறிப்பிட்டார். டெல்டா மாவட்டங்களில் 12 மணி நேர மும்முனை மின்சாரம் அளிக்கப்படுவதுடன், தமிழகத்தின் பிற மாவட்டங்களில் சராசரியாக 9 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

* * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
29.10.2013 அன்று சட்டமன்றப் பேரவையில்
நடைபெற்ற விவாதத்தில் தாது மணல் குறித்து
எழுப்பிய கேள்விக்கு பதில் அளித்து ஆற்றிய உரை.



## சிறப்புக்குழு ஆய்வறிக்கை அடிப்படையில் பெருங்கனிமக் குவாரிகள் குறித்த கொள்கை முடிவு!

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தாது மணல் எடுக்கப்படுவது குறித்துச் சில புகார்கள் எழுந்ததால் ஒட்டுமொத்தமாகத் தமிழ்நாட்டில் தாது மணல் எடுக்கப்படுவதே இந்த அரசால் நிறுத்தப்பட்டுள்ளது. இதற்காக

ஒரு விசாரணைக் குழுவை அமைத்து இருக்கிறோம். அந்த விசாரணைக் குழு தாது மணல் எடுக்கப்படும் இடங்களில் எல்லாம் ஆய்வு மேற்கொண்டு அதன் பிறகு அரசுக்கு அறிக்கை அளித்த பின்னர் இந்த அரசு மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்று திட்டமிட்டுள்ளது.

ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சி என்பது இயற்கை வளங்களான கனிம வளம், நீர் வளம், நில வளம், எரிபொருள் வளம், வன வளம் ஆகியவற்றை முறைப்படி பயன்படுத்திக் கொள்வதைப் பொருத்து அமையும். இப்படிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்த இயற்கை வளங்கள் அரசின் முன் அனுமதியின்றியோ அல்லது அரசு அனுமதித்த அளவுக்கு மேல் வரம்பு மீறியோ சுரண்டப்படுவது முற்றிலும் தடுக்கப்பட வேண்டும் என்பதில் நான் உறுதியாக உள்ளேன்.

சட்ட விரோதமாகத் தாது மணல், அதாவது Beach Minerals எனப்படும் கார்னெட், இல்மனைட் மற்றும் ரூட்டைல் போன்றவை அள்ளப்படுகிறது என்பது குறித்த விவரங்களை, உண்மை நிலையை இந்த மாமன்றத்தில் எடுத்துரைப்பது எனது கடமையெனக் கருதுகிறேன்.

கடற்கரை கனிம மணல் மற்றும் ஆற்றுப் படுகைகளில் கிடைக்கக்கூடிய தாது மணல் கனிமங்களான கார்னெட், சிலிமனைட், இலுமனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுக்கு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (அபிவிருத்தி மற்றும் முறைப்படுத்துதல்) சட்டம், **1957** மற்றும் கனிமச்சலுகைகள் விதிகள், **1960** ஆகியவைகளின் கீழ் சுரங்க குத்தகைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குத்தகை ஒப்பந்தம் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஏற்படுத்தப்படுகிறது.

இச்சட்டத்தின் அட்டவணை–I இல் பகுதி ‘பி’–இன் கீழ்வரும் அணுசக்திக் கனிமங்களான இலுமனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களுடன் கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களும் கலந்து இருக்கும் பட்சத்தில், அணுசக்தி ஆணையத்தின் தடையில்லாச் சான்றிதழ் பெற்ற பிறகு, மேற்படிச் சட்டத்தின் பிரிவு 5 உட்பிரிவு (i)இன் கீழ் மைய அரசின் ஒப்புதலைப் பெற்ற பின்னரே மாநில அரசால் கனிம குத்தகை உரிமம் வழங்க இயலும்.

**சுற்றுச்சூழல் சான்றிதழ்**

இந்தத் தாது மணல் கனிமங்கள் அடங்கிய பெருங் கனிமங்களுக்கான, Major Minerals–க்கான குத்தகைப் பகுதி 5 ஹெக்டேர் முதல் 50 ஹெக்டேர் வரை இருந்தால், மாநிலச் சுற்றுச்சூழல் அமைப்பிடமிருந்து சுற்றுச்சூழல் சான்றிதழ் பெற்றால் போதும். குத்தகைப் பகுதி 50 ஹெக்டேருக்கும் மிகைப்பட்டிருந்தால் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அமைச்சகத்திடமிருந்து சுற்றுச்சூழல் சான்றிதழைப் பெற வேண்டும்.

கடலோரப் பகுதிகளில் கடற்கரை உயர் அலை மட்டத்திலிருந்து 500 மீட்டர் அளவு வரை கடல் முறைப்படுத்தப்பட்ட பகுதி, Coastal Regulatory Zone என வகைப்படுத்தப்பட்டுள்ளது.இப்பகுதியில் கனிமச் சுரங்கங்களுக்கு, 1991 ஆம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிவிக்கையின்படி, மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறையிடமிருந்து தடையில்லாச் சான்றிதழ் பெற வேண்டும்.

குத்தகைக்கு விண்ணப்பிக்கப்பட்ட பரப்பு 5 ஹெக்டேருக்கும் கீழ் இருக்குமாயினும், வரையறுக்கப்பட்ட

கடற்கரை முறைப்படுத்துதல் மண்டலத்திற்குள் வரும் பட்சத்தில், 1991 ஆம் ஆண்டு கடற்கரை முறைப்படுத்துதல் மண்டல அறிவிக்கையின்படி மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தின் தடையில்லாச் சான்று பெற வேண்டும்.

கார்னெட் மற்றும் சிலிமனைட் ஆகிய கனிமங்களுக்கான சுரங்கத் திட்ட, அதாவது Mining Plan ஒப்புதலை அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் இந்திய சுரங்கக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. ஏனைய கனிமங்களான ரூட்டைல், இல்மனைட், சிர்கான் போன்ற கனிமங்களுக்கான சுரங்கத் திட்ட ஒப்புதல் அளிக்கும் அதிகாரம் மத்திய அரசின் அணு சக்திக் கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்ட சுரங்கத் திட்டத்தின்படி, அதாவது Approved Mining Planஇன்படி, கனிம அகழ்வு மேற்கொள்ளப்படாவிடின், கனிமச்சலுகை மற்றும் மேம்படுத்துதல் விதிகள், 1988இன் விதி உட்பிரிவு 13(2)இன் படி மைய அரசைச் சேர்ந்த இந்தியக் கனிமக் குழுமத்தின் மண்டல கனிமக் கட்டுப்பாட்டுத் தலைமை அலுவலருக்கு, அதாவது, Regional Controller of Mines, Indian Bureau of Mines மேற்படி கனிமக் குத்தகையைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்க அதிகாரமுள்ளது. இத்தவறுகள் சரிசெய்யப்படும் பட்சத்தில், அதே விதிகளின் கீழ், கனிமக் குத்தகையைத் தொடர ஆணையிடவும் அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

மைய அரசு நிர்ணயித்தவாறு கார்னெட் கனிமத்திற்கு ராயல்டி தொகையாக இந்தியக் கனிமக் குழுமம் மாதந்தோறும் வெளியிடும் விற்பனை மதிப்பில் 3 சதவிகிதம் என்ற கணக்கில் வசூலிக்கப்படுகிறது. இலுமனைட், ரூட்டைல் போன்ற கனிமங்களுக்கு விற்பனை விலையில் அட்வேலரம் (Ad valorum)

அடிப்படையில் 2 சதவிகிதம் ராயல்டி நிர்ணயிக்கப்படுகிறது. இந்நேர்வுகளில் மைய அரசு மட்டுமே ராயல்டி தொகையை நிர்ணயம் செய்ய முடியும்.

### சிறப்புக்குழுவின் ஆய்வு

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் தன்னுடைய 6.8.2013 நாளிட்ட கடிதத்தில் கார்னெட், இலுமனைட், ரூட்டைல் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களை எடுப்பதற்காக வழங்கப்பட்ட குத்தகை இடங்களில் முறைகேடாக இவை எடுக்கப்பட்டுள்ளது. எனவே, இது தொடர்பாக முழுமையான விசாரணை மேற்கொள்ளலாம் எனத் தெரிவித்திருந்தார்.

தூத்துக்குடி மாவட்ட ஆட்சியரின் அறிக்கையின்படி, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் 8.8.2013 அன்று அரசுக்குத் தனது பரிந்துரையை அனுப்பி வைத்தார். இவற்றைப் பரிசீலித்த எனது அரசு, வருவாய்த் துறை செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, I.A.S., அவர்கள் தலைமையின் கீழ் ஒரு சிறப்புக்குழுவை அமைத்துத் தூத்துக்குடி மாவட்டத்தில் அமைந்துள்ள 6 சுரங்கக் குத்தகைகளையும் ஆய்வு செய்து அறிக்கை அளிக்க வேண்டுமென 8.8.2013இல் ஆணையிட்டது. மேலும், தூத்துக்குடி மாவட்டத்தின் தாது மணல் சுரங்க நடவடிக்கைகளை முழுவதுமாக நிறுத்தி வைக்கவும், மேற்படி சிறப்புக்குழு ஒரு மாதத்திற்குள் அறிக்கையை அரசுக்கு அளிக்க வேண்டும் எனவும் எனது அரசு ஆணையிட்டது. அதன்படி சிறப்புக்குழு தனது ஆய்வறிக்கையை 17.09.2013 அன்று என்னிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது. என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டார். என்னென்ன நடவடிக்கைகள் எடுத்துள்ளோம் என்பதை விவரித்துக் கொண்டிருக்கிறேன்.

புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் தனது 17.09.2013 நாளிட்ட கடிதத்தில், திருநெல்வேலி மாவட்டத்தில் 52 தாது மணல் கனிமக் குத்தகைகள், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 11 தாது மணல் கனிமக் குத்தகைகள், கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 தாது மணல் கனிமக் குத்தகைகள் மற்றும் மதுரை மாவட்டத்தில் 2 தாது மணல் கனிமக் குத்தகைகள், என மொத்தம் 71 தாது மணல் கனிமக் குத்தகைகள் தனியாருக்கு வழங்கப்பட்டுள்ளன என்றும், இந்தக் குத்தகைகள் மூலம் கார்னெட், சிலிமனைட், இலுமனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற கனிமங்களை அகழ்ந்தெடுக்கத் தனியார்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்திருந்தார்.

மேலும், புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆணையர் தூத்துக்குடி மாவட்டத்தில் ஆய்வு செய்ய அமைக்கப்பட்ட சிறப்புக் குழுவே, திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் தனியாருக்கு வழங்கப்பட்ட கார்னெட், சிலிமனைட், இலுமனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற தாது மணல் கனிமங்களுக்கு வழங்கப்பட்ட குத்தகைப் பகுதிகளை ஆய்வு செய்து ஒருமித்த ஆய்வறிக்கையை அளிக்க ஆணையிடலாம் என அரசுக்குப் பரிந்துரை செய்திருந்தார்.

இதன் அடிப்படையில், திருநெல்வேலி, திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி மற்றும் மதுரை மாவட்டங்களில் கார்னெட், சிலிமனைட், இலுமனைட், ரூட்டைல், சிர்கான், லியோகாக்சின் மற்றும் மோனோசைட் போன்ற தாது மணல் கனிமங்களை அகழ்வு செய்யத் தனியாருக்கு வழங்கப்பட்ட 71 சுரங்கக் குத்தகைப் பகுதிகளிலும் ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அளிக்க வருவாய்த் துறைச் செயலர் தலைமையின் கீழ் சிறப்புக்

குழு அமைத்திடவும், மேற்படி மாவட்டங்களில் இயங்கி வரும் தாது மணல் குவாரிகளின் செயல்பாட்டினை நிறுத்தி வைக்கவும் நான் ஆணையிட்டேன். என்னுடைய உத்தரவிற்கிணங்க 17.9.2013 நாளிட்ட தொழில் துறை அரசாணை வெளியிடப்பட்டது. இவ்வாறு அமைக்கப்பட்ட சிறப்புக்குழு ஆய்வினை முடித்து அது தொடர்பான அறிக்கையை அரசுக்கு விரைவாக அளிக்க வேண்டுமெனவும் ஆணையிட்டுள்ளேன்.

வருவாய்த்துறை செயலரின் கீழ் அமைக்கப்பட்ட சிறப்புக் குழு, தனது புலத் தணிக்கையை 17.10.2013 அன்று திருநெல்வேலியில் உள்ள தாது மணல் குவாரிகளில் தொடங்கியுள்ளது.

திரு. R. அப்பு நடேசன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் தனது 21.12.2008 நாளிட்ட மனுவில் திரு. டி. தயாதேவதாஸ் அவர்களுக்குச் சொந்தமான நிறுவனங்களான திருவாளர்கள் சதர்ன் என்டர்பிரைசஸ் மற்றும் இந்தியன் கார்னெட் சாண்ட் கம்பெனி (பிரைவேட்) லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு, திருச்சி மாவட்டத்தில் அரசுப் புறம்போக்கு நிலங்களில் வழங்கப்பட்ட கனிமக் குத்தகைகளில் சுற்றுச்சூழல் விதி மீறல்கள் உள்ளதாகக் கூறி அதன்மீது நடவடிக்கை எடுக்கும்படி அரசைக் கேட்டுக் கொண்டார். மேலும், 9.2.2010 அன்று தொடர்ந்த ரிட் மனுவின்படி மேற்கூறிய நிறுவனங்களுக்கு வழங்கிய கனிமக் குத்தகைகளில் அரசு தணிக்கை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டுமென்று சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையின் ஆணையையும் பெற்றார்.

**இடைக்கால ஆணை**

இதன் தொடர்ச்சியாக திருச்சி மாவட்ட ஆட்சியர் ஒரு குழுவினை அமைத்துப் புலத்தணிக்கை செய்து மேற்கூறப்பட்ட நிறுவனங்கள் அனுமதியின்றி பல கோடி ரூபாய் மதிப்புள்ள

கார்னெட் மணல் வெட்டி எடுக்கப்பட்டதை அரசுக்குத் தெரிவித்திருந்தார். இம்முறைகேடுகள் குறித்து **14.11.2011** அன்று அரசு கடிதம் மூலம் சென்னை உயர் நீதிமன்ற மதுரை கிளைக்குத் தெரியப்படுத்தப்பட்டது. இவ்வறிக்கையை அடிப்படையாகக் கொண்டு நீதிப்பேராணை மனு மீது **18.11.2011** அன்று இறுதி ஆணை வழங்கிய உயர் நீதிமன்றம் இவ்வழக்கில் தொடர்புடையவர்களுக்கு உரிய வாய்ப்பு அளித்து சட்டத்திற்கு உட்பட்டு திரு. R. அப்பு நடேசன் அவர்களின் **21.12.2008** நாளிட்ட மனுவின் மீது உரிய நடவடிக்கை எடுக்கலாம் எனத் தீர்ப்பளித்தது.

இந்தச் சூழ்நிலையில், திரு. தயாதேவதாஸ், மேற்கண்ட உயர் நீதிமன்ற ஆணையை எதிர்த்து மறு பரிசீலனை வழக்கினைத் தொடுத்துள்ளார்.

இருப்பினும், திருச்சி மாவட்ட ஆட்சியர் அறிக்கையின் மீது அரசு நடவடிக்கை எடுத்து மேற்கண்ட நிறுவனங்களுக்கு திருச்சி மாவட்டத்தில் அரசுப் புறம்போக்கு நிலத்தில் வழங்கப்பட்ட ஐந்து சுரங்கக் குத்தகைகளை **1.2.2013** தேதியிட்ட அரசாணைகள் மூலம் ரத்து செய்து ஆணையிட்டது.

இந்த ஆணைகளை எதிர்த்து **5** உயர்நீதிமன்ற வழக்குகள் இந்நிறுவனங்களால் உயர் நீதிமன்றத்தில் தொடரப்பட்டுள்ளன. இந்த வழக்குகளில் எதிர் வாதுரை, அரசால் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எனினும், சென்னை உயர்நீதி மன்ற மதுரைக் கிளை **6.2.2013** அன்று வழங்கிய இடைக்கால ஆணையில், மேற்படி சுரங்கங்களில் முறைகேடாக வெட்டியெடுக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள கார்னெட் மணலை அப்புறப்படுத்தக் கூடாது

என்றும், மனுதாரரும் அம்மணலுக்கு இடையூறு செய்யக் கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. இந்த இடைக்கால ஆணை தற்போது நடைமுறையில் உள்ளது.

சென்னை உயர் நீதிமன்ற மதுரைக் கிளையில் நிலுவையில் இருந்த மறுபரிசீலனை மனு மற்றும் அனைத்து வழக்குகளும் ஒரே தொகுப்பு வழக்காக, Batch Case ஆக மாற்றப்பட்டு சென்னை உயர்நீதி மன்ற அமர்வு நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டது.

இந்தச் சூழ்நிலையில், முறைகேடுகள் குறித்து அனைத்து குவாரிகளையும் ஆய்வுசெய்து அறிக்கை அளிக்க வருவாய்த் துறை செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி, I.A.S. தலைமையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்புக் குழுவின் ஆய்வறிக்கையின் அடிப்படையில் பெருங்கனிமக் குவாரிகள் குறித்து ஒரு கொள்கை முடிவு எனது அரசால் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமைகிறேன்.

❖ ❖ ❖

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்

30.10.2013 அன்று சட்டமன்றப் பேரவையில்

ஆற்றிய உரை.



## சிவகங்கை மாவட்டம் பாப்பான்குளத்தில் பாதிக்கப்பட்ட ஆதிதிராவிடர்களுக்கு நிவாரண உதவிகள்!

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். குணசேகரன் அவர்கள், 28.10.2013 அன்று முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு, 15.8.2013 அன்று சிவகங்கை மாவட்டத்தில் ஆதி

திராவிடர்கள் வீடுகள் இடிக்கப்பட்டது குறித்துப் பேசியபோது, அந்த வீடுகளைக் கட்டவும், புனரமைக்கவும் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக் கொண்டார்.

இது குறித்த என்னுடைய விளக்கத்தினை இங்கே நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

கடந்த 8.8.2013 அன்று, சித்திரைவள்ளி (ஆதிதிராவிடர்) என்பவர், சீனிவாசன் (அகமுடையார்) தனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளரிடம் அளித்த புகாரின் பேரில் 12.8.2013 அன்று காவல் துணைக் கண்காணிப்பாளர் பாப்பான்குளம் சென்று புகார் குறித்து விசாரணை மேற்கொண்டுள்ளார். அப்போது, சந்நாசி என்பவரது தலைமையில் ஆதிதிராவிட வகுப்பைச் சார்ந்த சிலர், மானாமதுரை துணைக் கண்காணிப்பாளரிடம், மயானத்திற்குச் செல்லும் வழியில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக்கோரி வாய்மொழியாகப் புகார் கூறியுள்ளனர். இது குறித்து அப்போது உடனிருந்த பஞ்சாயத்துத் தலைவரிடம் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் கூறியுள்ளார்.

14.8.2013 அன்று, பஞ்சாயத்துத் தலைவர் உத்தரவின் பேரில், கிராம நிருவாக அலுவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் ஓய்வு பெற்ற நில அளவையாளர் சிவசுப்பிரமணியன் ஆகியோர் முன்னிலையில் நில அளவை செய்யப்பட்டு, 15.8.2013 அன்று, ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் என்று அறிவிக்கப்பட்டு, 15.08.2013 அன்று, தங்கராஜ் (சிறுகுடி பஞ்சாயத்துத் தலைவர் திருமதி அம்சவள்ளியின் கணவர்), கிராம நிருவாக அதிகாரி, மானாமதுரை காவல் துணைக் கண்காணிப்பாளர் மற்றும் சிப்காட் காவல் நிலைய உதவி ஆய்வாளர் ஆகியோர் முன்னிலையில் ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்டன. ஆக்கிரமிப்புகள் அகற்றப்பட்ட போது எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. மீண்டும் நில அளவை செய்யப்பட்டு, 18.8.2013 அன்று மீதமுள்ள அனைத்து

ஆக்கிரமிப்புகளும் கிராம நிருவாக அதிகாரி மற்றும் காவல் துறையினர் சிலர் முன்னிலையில் அகற்றப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, கடந்த **21.8.2013** அன்று, பாப்பான்குளம் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணி என்பவர் சிவகங்கை மாவட்டக் காவல் காண்காணிப்பாளரைச் சந்தித்து, தங்கராஜ், பாப்பான்குளம் கிராம நிருவாக அதிகாரி மற்றும் காவல் துறையினர், ஆதிதிராவிட சமுதாயத்தினரின் வீடுகளை ஆக்கிரமிப்பு அகற்றம் என்ற பெயரில் இடித்துவிட்டதாகவும், இது குறித்து நடவடிக்கை எடுக்குமாறும் கோரி புகார் அளித்துள்ளார். இப்புகார் குறித்து சிப்காட் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுக் காரைக்குடி துணைக் கண்காணிப்பாளரால் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இது தொடர்பாக, சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று ஆய்வு மேற்கொண்டார். இச்சம்பவம் தொடர்பாக அம்சவள்ளி மற்றும் ஆண்டிஅம்பலம் ஆகியோர் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். ஆக்கிரமிப்புப் பணிகளை மேற்கொண்ட ஜேசிபி இயந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது. கிராம நிருவாக அதிகாரி பாலசுப்பிரமணியன் **23.8.2013** அன்றும், சிவகங்கை வட்டாட்சியர் குருசுமுத்து மற்றும் பெரியகோட்டை வருவாய் ஆய்வாளர் சரவணன் ஆகியோர் **26.8.2013** அன்றும் மாவட்ட ஆட்சியரால் தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டனர்.

ஆக்கிரமிப்பு அகற்றும் பணியின்போது, பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த ஓர் உதவி ஆய்வாளர், இரண்டு சிறப்பு உதவி ஆய்வாளர்கள், ஒரு தலைமைக் காவலர் ஆகியோர் பணியிடை மாற்றம் செய்யப்பட்டதுடன், அவர்கள் மீது துறை ரீதியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், பாதிக்கப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு கீழ்க்கண்ட நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

- ❖ பாதிக்கப்பட்ட 26 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்குத் தலா 60,000 ரூபாய் வீதம் மொத்தமாக 15,60,000 ரூபாய் வழங்கப்பட்டது.

- ❖ பாதிக்கப்பட்ட மக்கள் பாதுகாப்பிற்காக அருகில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக் கட்டடத்தில் 21.8.2013 அன்று தங்க வைக்கப்பட்டனர்.

- ❖ பாதிக்கப்பட்ட பகுதியில் படித்து வந்த 13 ஆதிதிராவிட மாணவர்கள் இனம் கண்டு உடனடியாக அருகில் உள்ள இடைக்காட்டூர் அரசு ஆதிதிராவிட நலப் பள்ளி மாணவர் விடுதியில் 21.8.2013 அன்று சேர்க்கப்பட்டனர். இதே போன்று ஒரு கல்லூரி ஆதிதிராவிட மாணவியும் சிவகங்கை அரசு ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியில் உடனடியாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

- ❖ 13 நபர்களுக்கு முதியோர் ஓய்வூதிய உத்தரவுகள் 31.8.2013 அன்று வழங்கப்பட்டன.

- ❖ பாதிக்கப்பட்ட 26 ஆதிதிராவிடக் குடும்பங்களுக்கும் தலா 20 கிலோ அரிசி, 2 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ உளுத்தம் பருப்பு, ஒரு லிட்டர் பாமாயில், ஒரு லிட்டர் மண்ணெண்ணெய் ஆகியவை வழங்கப்பட்டன.

- ❖ மேற்படி பாதிக்கப்பட்ட கிராமத்தில் 3.10.2013 அன்று முதல் பகுதி நேர நியாய விலைக்கடை துவங்கப்பட்டுச் செயல்பட்டு வருகிறது.

- ❖ முழுவதும் இடிந்த வீடுகளில் வசித்து வந்த 7 குடும்பத்தினர் தங்குவதற்கு ஏதுவாக ஒரு இலட்சத்து 50 ஆயிரத்து 595 ரூபாய் மதிப்பீட்டில் மின் வசதியுடன் கூடிய தற்காலிகக் கூடாரங்கள் அமைக்கப்பட்டு 25.9.2013 முதல் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

- ❖ மேற்படி பாதிக்கப்பட்ட பகுதிகளில் வசித்து வந்த 27 ஆதிதிராவிடப் பெண்களுக்கு 3,500 ரூபாய் மதிப்புள்ள விலையில்லா தையல் இயந்திரங்கள் முறையே 21.8.2013 மற்றும் 31.8.2013 ஆகிய நாட்களில் வழங்கப்பட்டன. அதன் மொத்த மதிப்பு 91,500 ரூபாய் ஆகும்.
- ❖ பாதிக்கப்பட்ட பகுதியில் வசித்துவந்த ஆதிதிராவிட இனத்தைச் சேர்ந்த +2 தேர்ச்சி பெற்ற மாணவி 8.10.2013 அன்று சிவகங்கை அரசு மகளிர் கலைக் கல்லூரியில் முதலாமாண்டு இளங்கலைப் பொருளியல், தமிழ் வழிக் கல்விப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேலும், அவர் சிவகங்கை அரசு ஆதிதிராவிடர் நலக் கல்லூரி மாணவியர் விடுதியிலும் சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

பாப்பான்குளம் கிராமத்தில் இடிக்கப்பட்ட வீடுகளில் 2 கான்கிரீட் வீடுகள் முழுமையாகவும், ஒரு கான்கிரீட் வீடு அதிகம் சேதம் அடைந்ததும், 5 கான்கிரீட் வீடுகள் பகுதி சேதம் அடைந்ததும், 5 ஓட்டுக்கூரை வேய்ந்த வீடுகள் முழுமையாக சேதம் அடைந்ததும், 2 ஓட்டுக்கூரை வேய்ந்த வீடுகள் பகுதி சேதம் அடைந்ததும், 7 வீடுகளில் ஓட்டுக்கூரை வேய்ந்த தாழ்வாரங்கள் அதிக சேதம் அடைந்ததும், 4 வீடுகளில் பகுதி சேதம் அடைந்ததும் கண்டறியப்பட்டது. மேற்கண்ட சேதமடைந்த 26 வீடுகளில், 19 வீடுகள் புனரமைக்கப்பட வேண்டும். மீதமுள்ள 7வீடுகள்புதிதாகக்கட்டித்தரப்படவேண்டும்.குடியிருக்கஇயலாத நிலையில் உள்ள 7 வீடுகளின் குடும்பத்தினர் தங்குவதற்குத் தற்காலிகக் கூடாரங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

பாதிக்கப்பட்ட மக்களின் நலன் கருதி, முழுமையாகச் சேதம் அடைந்த7வீடுகளுக்குப்பதிலாக,கான்கிரீட்வீடுகள்கட்டுவதற்கு 15 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய், மீதமுள்ள 19 வீடுகளைப் புனரமைக்க 9 இலட்சத்து 8 ஆயிரத்து 500 ரூபாய் என மொத்தம் 24 இலட்சத்து 43 ஆயிரத்து 500 ரூபாயினை அனுமதித்து நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
30.10.2013 அன்று ஆற்றிய உரை.



## விலைவாசி உயர்வு மக்களை கடும் பாதிப்புக்கு உள்ளாக்கும் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள்!

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விலைவாசி ஏற்றத்திற்குக் காரணம் மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள். ஆனால், விலைவாசி ஏற்றத்தைச் சமாளிக்க மாநில அரசு தன்னால் முடிந்த அளவு முயற்சிகளை

மேற்கொண்டு வருகிறது. பிற மாநில அரசுகளைப் பற்றி நான் பேச வரவில்லை. தமிழ்நாடு அரசைப் பொறுத்தவரையில், மத்திய அரசினால் ஏற்பட்ட வெங்காய விலை ஏற்றத்தினைச் சமாளிக்க மாநில அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமென்றால், கோயம்பேடு மார்க்கெட்டில் பெரிய வெங்காயத்தின் விலை கிலோ ஒன்றுக்கு 60 ரூபாய். சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 75 முதல் 80 ரூபாய் விலையில் விற்கப்படுகிறது. பழமுதிர் நிலையங்கள் போன்ற நவீனமயமாக்கப்பட்ட கடைகளில் பெரிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 70 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது. சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 95 ரூபாய் என்ற விலையில் விற்கப்படுகிறது. ஆனால், தமிழ்நாடு அரசின் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தற்போது சென்னையில் 30 கடைகள் இயங்கி வருகின்றன. தரமான பெரிய வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 50 ரூபாய் என்ற விலைக்கு விற்கப்படுகிறது. சாம்பார் வெங்காயம் கிலோ ஒன்றுக்கு 60 ரூபாய் என்ற விலைக்கு விற்கப்படுகிறது. ஆக, இந்த அரசைப் பொறுத்த வரையில், மக்களுக்கு ஏற்பட்டுள்ள சுமையைக் குறைப்பதற்கு தன்னால் இயன்ற நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பிற மாநிலங்களில் பெரிய வெங்காயத்தின் விலை என்னவென்றால் பெங்களூரில் 58 ரூபாய், ஐதராபாத்தில் 60 ரூபாய், கேரளாவில் 70 ரூபாய், டெல்லியில் 65 ரூபாய், மும்பையில் 70 ரூபாய், கல்கத்தாவில் 70 ரூபாய், பீகாரில் 80 ரூபாய், அசாமில் 78 ரூபாய். தமிழ்நாட்டிற்கு பெரிய வெங்காயம் மகாராஷ்டிர மாநிலத்தில் உள்ள நாசிக், லாசல்கான், அகமது நகர், பிம்பல்கான் மற்றும் ஷோலாப்பூர் ஆகிய பகுதிகளிலிருந்தும், கருநாடக மாநிலத்தில் உள்ள ஹாசன், ஹுப்ளி, தேவகரே மற்றும் பெங்களூரில் இருந்தும், ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்நூல், ஆதோனி ஆகிய பகுதிகளிலிருந்து வரவழைக்கப்படுகிறது.

**கூடுதலாக 10 கடைகள்**

ஆந்திர மாநிலத்தில் உள்ள கர்நூலில் போராட்டம் நடைபெறுவதால், அங்கிருந்து வெங்காயம் கொண்டு வர இயலாத நிலை உள்ளது. கோயம்பேட்டிற்கு நாளொன்றிற்குச் சுமாராக 70 லாரிகளில் வெங்காயம் வந்து கொண்டிருந்தது. 24.10.2013 அன்று 55 லாரிகளும், 25.10.2013 மற்றும் 26.10.2013 ஆகிய தேதிகளில் 50 லாரிகள் மட்டுமே வந்துள்ளன. இருப்பினும், தமிழகத்தில் வெங்காயத்தின் விலை மற்ற மாநிலங்களில் உள்ள வெங்காயத்தின் விலைக்கு ஒத்ததாகவே உள்ளது. நுகர்வோருக்கு நியாயமான விலையில் வெங்காயம் கிடைப்பதை உறுதி செய்யும் நடவடிக்கையாக, சென்னை பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளில் தற்போது நாளொன்றுக்கு 6 டன் பெரிய வெங்காயமும், 1 டன் சாம்பார் வெங்காயமும் விற்பனை செய்யப்படுகிறது. 26.10.2013 முதல் எனது உத்தரவின்படி, பெரிய வெங்காயம் மற்றும் சாம்பார் வெங்காயம் கொள்முதல் இரட்டிப்பாக்கப்பட்டு உள்ளது. காய்கறிகளின் விலையைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக, உடனடியாக கூடுதலாக 10 பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளைத் துவக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**அம்மா உணவகம்**

அம்மா உணவகம் பற்றி எல்லோருக்கும் தெரியும். சாதாரணமாக ஓட்டல்களில் இட்லி சாம்பார் சாப்பிடுவது என்றால் என்ன விலை என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனால், அம்மா உணவகங்களில் ஒரு இட்லி ஒரு ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. சாம்பார் சாதம் 5ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. தயிர் சாதம் 3 ரூபாய்க்கு வழங்கப்படுகிறது. இப்படி அதிகமான அம்மா உணவகங்களை எங்கெல்லாம் துவங்க முடியுமோ துவங்கி

மக்களுடைய சுமையைக் குறைப்பதற்கு இந்த அரசு மேலும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**பொறுப்பேற்ற மத்திய அரசு**

சாதாரணமாக ஒரு பாட்டில் மினரல் வாட்டரை வாங்கிக் குடிக்க வேண்டுமென்றால் 20 ரூபாய் ஆகும். 20 ரூபாய்க்கு குறைந்து வெளிச்சந்தையில் கிடைக்காது. ஆனால், போக்குவரத்துத் துறை மூலமாக அதே தரமான குடிநீரை, மினரல் வாட்டரை 10 ரூபாய்க்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம். இப்படி மாநில அரசின் சக்திக்கு உட்பட்டு மாநில அரசின் அதிகார வரம்பிற்கு உட்பட்டு என்னென்ன நடவடிக்கைகளை, விலைவாசியை குறைக்க என்னென்ன நடவடிக்கைகளை எடுக்க முடியுமோ எடுத்து வருகிறோம். அதே சமயத்தில், மத்திய அரசு பொறுப்புடன் நடந்து கொள்ளவில்லை. நிதிநிலையைப் பற்றி மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய நிதிகளைப் பற்றி மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார். மத்திய அரசுக்கு ஒரு நம்பகத்தன்மை இருக்க வேண்டும். அதாவது ஒரு credibility இருக்க வேண்டும். ஒரு ஆண்டுக்கான பட்ஜெட்டை வெளியிட்டு, நிதிநிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிறகு, ஒவ்வொரு மாநிலத்திற்கு இவ்வளவு நிதி ஒதுக்கப்படும் என்று அதில் ஒரு திட்டம் போட்ட பிறகு அதை மாற்றக்கூடாது. ஏனென்றால், வெவ்வேறு இனங்களில் மத்திய அரசிடமிருந்து மாநில அரசுக்கு வரவேண்டிய நிதி உள்ளது. அப்போது அந்தத் திட்டத்தின்கீழ் என்னென்ன பணிகளை இங்கு மேற்கொள்ளலாம் என்று மாநில அரசும் திட்டம் தீட்டுகிறது.

மத்திய அரசு குறிப்பிட்ட ஒரு திட்டத்தின்கீழ் இத்தனை கோடி ரூபாய் மாநில அரசுக்கு ஒதுக்கப்படும் என்று

அவர்களுடைய மத்திய அரசின் நிதிநிலை அறிக்கையில் அறிவித்த பின்னர் மாநில அரசு அதற்கேற்ப தனது திட்டங்களை வகுத்துச் செயல்பட ஆரம்பிக்கிறது. ஒவ்வொரு திட்டத்தின் கீழும் சில பணிகளை மேற்கொண்டு செலவும் செய்து விடுகிறது. பல கோடி ரூபாய்களை எந்த நம்பிக்கையில் செலவு செய்கிறோம். பின்னர் மத்திய அரசு இந்தப் பணத்தை நமக்கு அளிக்கும், நமக்கு reimburse செய்யும், நமக்கு வரவேண்டிய நிதி மத்திய அரசிடமிருந்து கிடைக்கும் என்ற நம்பிக்கையில் தான் செலவு செய்கிறோம். ஆனால், அண்மையில், துரதிர்ஷ்டவசமாக, இதுவரை வரலாற்றில் இல்லாததாக, ஒரு முன்மாதிரி இல்லாத வகையில் மத்திய அரசு தன்னுடைய நம்பகத் தன்மையையே கெடுத்துக் கொண்டுள்ளது. அதாவது, ஏற்கெனவே, பட்ஜெட்டில் தமிழ்நாட்டிற்கு ஒவ்வொரு திட்டத்தின் கீழ் இத்தனை கோடி ரூபாய் ஒதுக்கப்படும் என்று தெரிவித்த பிறகு அதில் நாங்கள் அதை நம்பி செலவு செய்ய ஆரம்பித்த பிறகு, 20 சதவிகிதம் அளவு வரை வெட்டு செய்திருக்கிறார்கள். 20 சதவிகிதம் குறைத்து இருக்கிறார்கள். அப்படியானால், குறிப்பிட்டு மத்திய அரசிடம் கிடைக்கும் என்ற நம்பிக்கையை ஏற்கெனவே மாநில அரசு பல பணிகளைத் துவங்கிவிட்டதே, பல கோடி ரூபாய்களைச் செலவு செய்து விட்டதே, அவையெல்லாம் எங்கிருந்து வரும், அந்தப் பணத்தை யார் மீண்டும் ஈடு செய்வார்கள். ஆகவே, இப்படிப் பல பிரச்சினைகளுடன் போராடிக் கொண்டு அதே நேரத்தில் மத்திய அரசு எடுக்கின்ற தவறான நடவடிக்கைகள் காரணமாக, மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கைகள் காரணமாக, சாமான்ய மக்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டு இருக்கிறார்கள், துன்பப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து இந்த அரசு, தமிழக அரசு, தன்னால் இயன்ற அளவு மக்களின் துன்பங்களைக் குறைத்து, விலைவாசியைக் குறைக்க பல நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**மத்தியில் அரசு மாறும் : எல்லாமே மாறும்**

GST பற்றி குறிப்பிட்டார்கள் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள். இப்போது மாநில அரசுக்கு என்று இருக்கின்ற ஒரே வருவாய் Commercial Taxes மூலமாக வருகின்ற வருவாய்தான். வேறு எந்த வருமானமும் கிடையாது. அதிலேயும் கை வைக்க வேண்டும் என்று மத்திய அரசு விரும்புகிறது. அதற்காகத்தான், இந்த Goodwill Services Tax Bill-ஐ அவர்கள் கொண்டு வருகிறார்கள். அதற்காகத்தான் அதை கடுமையாக எதிர்த்திருக்கிறோம். சாதாரண எதிர்ப்பல்ல, ஒரு முறையல்ல, இரு முறையல்ல, 2011 முதல் இந்த GST Bill–ஐப்பற்றி அவர்கள் குறிப்பிடும் போதெல்லாம், கொண்டு வரவேண்டும் என்று சொல்லும் போதெல்லாம், மாநில அரசு, இந்த அரசு, எனது தலைமையிலான அரசு தொடர்ந்து எதிர்த்துக் கொண்டே வந்திருக்கிறது. அண்மையிலும், மாநில நிதி அமைச்சர்களின் கூட்டம் டெல்லியில் நடைபெற்றது. அதில் நம்முடைய மாநிலத்தின் சார்பில் Commercial Taxes அமைச்சர் அங்கே கலந்து கொண்டார். முழுவதுமாக எதிர்த்து இருக்கிறோம். அதாவது, ஒரு ஷரத்து, இரண்டு ஷரத்து என்றல்ல. ஒரு பிரிவு, இரண்டு பிரிவு என்றல்ல. ஒட்டுமொத்தமாக அந்த சட்டத்தையே எதிர்த்து இருக்கிறோம். அதையும் மீறி, அவர்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்தால், பாதிப்பு அதிக நாட்கள் வரை இருக்காது. அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் முடிந்தவுடன், மத்தியிலே அரசு மாறும், ஆட்சி மாறும், எல்லாமே மாறும், அப்போது இந்தச் சட்டத்தையே தூக்கி எறிவோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
30.10.2013 அன்று ஆற்றிய உரை.



## திருச்சியில் எட்டாம் வகுப்பு மாணவி மரணம் குறித்து புலன் விசாரணை!

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

முதல் துணை நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் நேற்று கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவஹிருல்லா அவர்கள், திருச்சியில் எட்டாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்த மாணவி தவுபிக் சுல்தானா என்ற மாணவி பாலியல் பலாத்காரத்திற்கு இலக்காகி அந்தப் பெண்

கொலை செய்யப்பட்டு, அவரது உடல் ரயில்வே இருப்புப் பாதை அருகே கண்டெடுக்கப்பட்டது என்றும், அந்த வழக்கை தமிழ்நாடு அரசு சி.பி.சி.ஐ.டி.யிடம் ஒப்படைத்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன என்றும், விரைவிலே குற்றவாளிகளை கண்டுபிடிக்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தார். இது குறித்த எனது விளக்கத்தினை இங்கே நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

திருச்சி, காஜாமலை பகுதியைச் சேர்ந்த அக்பர் பாட்சா என்பவரின் மகள் தவுபிக் சுல்தானா மேலப்புதூரில் உள்ள ஒரு தனியார் பள்ளியில் 8ஆம் வகுப்பு படித்து வந்தார். கடந்த 13.08.2013 அன்று பள்ளிக்கு சென்ற சுல்தானா, மாலையில் வீடு திரும்பவில்லையென, அவரது உறவினர் ஜமாலுதீன் என்பவர் 14.08.2013 அன்று அளித்த புகாரின் பேரில், பாலக்கரை காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்து, விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

இந்நிலையில் காணாமல் போன தவுபிக் சுல்தானா ரெட்டைமடை ரயில்வே தண்டவாளத்திற்கு அருகில் இறந்து கிடப்பதாகத் தகவல் தெரியவந்ததையடுத்து, காவல் துறையினர், உடனடியாக சம்பவ இடத்திற்குச் சென்று சடலத்தைக் கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காகத் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இது தொடர்பாக திருச்சி ரயில்வே காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, பின்னர் அவ்வழக்கு எடைமலைபட்டிபுதூர் காவல் நிலையத்திற்கு மாற்றம் செய்யப்பட்டது.

சுல்தானாவின் இறப்பில் சந்தேகம் இருப்பதாகவும், எதிரிகளை கைது செய்ய வேண்டுமெனவும் கோரி, த.மு.மு.க. உள்ளிட்ட

முஸ்லீம் அமைப்பினர் கோரிக்கை விடுத்து **15.08.2013** மற்றும் **16.08.2013** ஆகிய தேதிகளில் போராட்டங்களில் ஈடுபட்டு அரசு சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தனர். இது தொடர்பாக மூன்று வழக்குகள் பதிவு செய்யப்பட்டன.

பின்னர், சுல்தானா குறித்து பதிவு செய்யப்பட்ட இரண்டு வழக்குகளும் **30.08.2013** அன்று மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறைக்கு மாற்றம் செய்யப்பட்டு, மாநில குற்றப்பிரிவு குற்றப் புலனாய்வுத் துறையினர் தீவிர புலன் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பள்ளியில் இருந்து திரும்பிய மாணவி வழக்கப்படி வீட்டிற்குச் செல்லாமல் ரயில் பாதையில் நடந்து செல்வதைப் பல சாட்சிகள் கண்டுள்ளனர். புகைவண்டியில் இப்பெண் அடிபட்டதற்கான அறிகுறிகள் பிரேதப் பரிசோதனையில் காணப்பட்டுள்ளன. இது விபத்து காரணமாக ஏற்பட்டதா அல்லது தற்கொலையா அல்லது வன்முறையினால் நடைபெற்ற மரணமா என்பது புலன் விசாரணையில் இருந்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொண்டு அமர்கிறேன்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள், 30.10.2013 அன்று
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நடைபெற்ற
2013 ஆம் ஆண்டு தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்)
சட்டமுன்வடிவின் மீதான விவாதத்திற்குப்
பதில் அளித்து ஆற்றிய உரை.



# நவீனமயமாக்கப்பட்டு தனித்தன்மை வாய்ந்த துறையாக விளங்கும் தமிழ்நாடு காவல்துறை

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

பொது அமைதியை நிலைநாட்டுவதிலும், குற்றங்களைத் தடுப்பதிலும், குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனைப் பெற்றுத் தருவதிலும் காவல் துறையின் பங்கு

மகத்தானது. இப்படிப்பட்ட உன்னதத் தன்மை வாய்ந்த காவல் துறையில் சீர்திருத்தத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில், **1991** ஆம் ஆண்டே அதிநவீன ஆயுதங்களையும், வாகனங்களையும், காவல் துறையினருக்குத் தேவையான கருவிகளையும் அளித்தேன். இவற்றைப் பயன்படுத்துவதற்கான பயிற்சிகளும் அளிக்கப்பட்டன. இதுமட்டுமல்லாமல், காவல் நிலையங்களுக்கான கட்டடங்களைக் கட்டித் தருதல், அனைத்து மாவட்டங்களையும் Digital Microwave Network மூலம் இணைத்தல் உட்பட பல்வேறு வசதிகள் செய்து கொடுக்கப்பட்டன. காவல் துறை தொடர்ந்து நவீனப்படுத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, இந்தியாவிலேயே தொழில்நுட்பத் திறனுடன் வெகுசிறப்பாகச் செயல்படக்கூடிய தனித்தன்மை வாய்ந்த துறையாகத் தமிழ்நாடு காவல் துறை விளங்குகிறது.

**சட்ட முன்வடிவு அறிமுகம்**

காவல் சீர்திருத்தம் என்பது காவல் துறையின் ஒட்டுமொத்தச் செயல்கள், காவல் துறையை நவீனப்படுத்துதல், மாறிவரும் சூழ்நிலைக்கேற்ப காவல் துறையினரின் செயலாக்கத்தை மேம்படுத்துதல், காவல் துறையினர் சுதந்திரமாகவும், எவ்வித விருப்பு வெறுப்பிற்கும் ஆளாகாமல் நேர்மையாகவும், சட்டத்திற்கு உட்பட்டு தங்கள் பணிகளை ஆற்றவும் வழிவகுத்தல் எனப் பல்வேறு பரிமாணங்களைக் கொண்டது. இவற்றைச் செயல்படுத்தும் வகையில், தற்போது உள்ள பல்வேறு சட்டங்களை நீக்கறவு செய்யாமல் அதே சமயத்தில் சீர்திருத்தங்களை நிறைவு செய்யும் வகையில் இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**1977**இல் அமைக்கப்பட்ட தேசிய காவல் ஆணையம் செய்த பரிந்துரைகளை அமல்படுத்த வேண்டுமென்று உச்ச நீதிமன்றத்தில் பிரகாஷ் சிங் தொடர்ந்த வழக்கில் **2006** ஆம் ஆண்டு தீர்ப்பு வழங்கப்பட்டது. இந்தத் தீர்ப்பில்,

1. ஒவ்வொரு மாநிலமும் புதிய காவல் சட்டம் ஒன்றினை இயற்ற வேண்டும் என்றும்,

2. புதிய காவல் சட்டம் ஒன்றினை இயற்றும் வரை, ஒவ்வொரு மாநிலமும் மாநிலப் பாதுகாப்பு ஆணையம், காவல் தலைமை இயக்குநரின் நியமனம் மற்றும் குறைந்தபட்சப் பதவிக் காலம், காவல் துறையில் பிற முக்கியப் பதவிகளில் உள்ள அலுவலர்களின் குறைந்தபட்சப்பதவிக்காலம், புலன்விசாரணைப் பிரிவைப் பிரித்தல், காவல் பணியாளர் வாரியம் மற்றும் காவல் புகார்கள் அதிகார அமைப்பு ஆகியவை குறித்து உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டுதல்களை மாநில அரசுகள் கடைப்பிடிக்க வேண்டும் என்றும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

இந்த உச்சநீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், 2008 ஆம் ஆண்டில், தமிழ்நாடு காவல் சட்டம் 2008 என்ற சட்டமுன்வடிவு 14.5.2008 அன்று தமிழக சட்டமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், 2011 ஆம் ஆண்டு மே மாதம் நான் ஆட்சிப் பொறுப்பை ஏற்கும் வரை இந்தச் சட்டம் நிறைவேற்றப்படவில்லை.

உச்சநீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை நடைமுறைப்படுத்தும் வகையில், காவல் சீர்திருத்தம் குறித்து ஒரு சட்டம் இயற்ற எனது தலைமையிலான அரசு முடிவு செய்தது.

**அவசரச் சட்டம்**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் கூட்டம் நடைபெறாததால், 10.9.2013 அன்று தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அது 11.9.2013 அன்று தமிழ்நாடு சிறப்பு அரசிதழிலும் வெளியிடப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டம் 2013, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 25.10.2013 அன்று என்னால் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது கொண்டு வரப்பட்டுள்ள தமிழ்நாடு காவல் (சீர்திருத்தம்) சட்டமுன்வடிவு, தமிழ்நாடு மாவட்ட காவல்துறை சட்டம் 1859 மற்றும் சென்னை மாநகரக் காவல் சட்டம் 1888 போன்ற சட்டங்களை ரத்து செய்யாமல், அவற்றில் குறிப்பிடப்படாததும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பில் வரையறுக்கப்பட்ட வழிகாட்டுதல்களை மட்டும் அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது.

காவல் தலைமை இயக்குநர் பதவியைப் பொறுத்த வரையில், தற்போதைய சட்டமுன்வடிவில், உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, காவல் தலைமை இயக்குனர் மத்திய அரசின் பணியாளர் தேர்வாணையத்தால், அதாவது Union Public Service Commission–ஆல் பட்டியலிடப்பட்ட துறையின் ஐந்து மிகவும் முதுநிலையிலுள்ள காவல் அலுவலர்களுக்குள் இருந்து பணியமர்த்தப்பட வேண்டுமென்றும், அவ்வாறு பணியமர்த்தப்படுபவர் அவருடைய ஓய்வு பெறும் தேதியைப் பொருட்படுத்தாமல் குறைந்த பட்சம் இரண்டு ஆண்டுக் காலம் பதவியில் இருப்பார் என்றும் வகை செய்யப்பட்டுள்ளது.

**மாநிலப் பாதுகாப்பு ஆணையம்**

காவல் நிலையம், காவல் மாவட்டம் மற்றும் காவல் ஆணையரகம் ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பில் உள்ள பதவிகள் முக்கியமானவை. எனவே, இந்த மூன்று பொறுப்புகளுக்கு மட்டும் குறைந்தபட்சப் பதவிக் காலம் இரண்டு ஆண்டுகள் என வரையறை செய்யப்பட்டுள்ளது. மற்ற பதவிகள் பெரும்பாலும் கண்காணிப்பு அல்லது மேற்பார்வையிடும் பதவிகளே ஆகும். எனவே, அவற்றுக்கு இந்தக் கட்டுப்பாடு விதிக்கப்படவில்லை.

காவல் துறையின் பொதுவான கொள்கை குறித்த பணிப்புரைகள் வழங்குவதற்கு மாநிலப் பாதுகாப்பு ஆணையம் அமைக்கப்பட வேண்டுமென்று உச்ச நீதிமன்றம்

அறிவுறுத்தியிருந்தது. இந்தச் சட்டமுன்வடிவில், உச்ச நீதிமன்றம் கூறியுள்ளவாறு, மாநிலப் பாதுகாப்பு ஆணையம் அமைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. காவல் துறைக்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் இந்த ஆணையத்தின் தலைவராக இருப்பார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர், தமிழ்நாடு மனித உரிமை ஆணையத்தின் தலைவர், மாநில மகளிர் ஆணையத்தின் தலைவர், மாநில சிறுபான்மை ஆணையத்தின் தலைவர், தலைமைச் செயலாளர், உள் துறைச் செயலாளர் ஆகியோர் உறுப்பினர்களாகச் செயல்படுவர். காவல் தலைமை இயக்குநர் இதன் உறுப்பினர் செயலராக செயல்படுவார்.

**காவல் பணியமைப்பு வாரியம்**

உச்ச நீதிமன்ற உத்தரவில் காவல் துறையில் அதிகாரிகளை மாற்றுவதற்கும் பதவி உயர்வு கொடுப்பதற்கும் காவல் பணியமைப்பு வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டிருந்தது. இந்தச் சட்டமுன்வடிவில் காவல் பணியமைப்பு வாரியம் என்ற பெயரில் காவல் தலைமை இயக்குநர் தலைமையில் காவல் கூடுதல் தலைமை இயக்குநர்கள் – நிருவாகம், சட்டம் ஒழுங்கு, தலைமையிடம் மற்றும் நுண்ணறிவுப் பிரிவு ஆகியோர் அடங்கிய வாரியம் அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

சட்டம் ஒழுங்கு மற்றும் புலன் விசாரணைப் பிரிவுகள் பிரிக்கப்பட வேண்டும் என்பதும் உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரைகளில் ஒன்றாகும். இதற்கேற்ப தற்போதைய சட்டமுன்வடிவில் பிரிவு 9 இல் புலன் விசாரணைப் பணிக்காக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் தனிப் பிரிவு இயங்கும் என்றும், அனைத்து வழக்குகளிலும் புலன் விசாரணை மற்றும் நீதிமன்ற விசாரணைக்கான நடவடிக்கைகளை இப்பிரிவினர் எடுப்பார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது.

உச்ச நீதிமன்றம், மாநில மற்றும் மாவட்ட அளவில் காவல் துறைப் புகார்கள் அமைப்பு உருவாக்கப்பட வேண்டுமென்று கூறி உள்ளது. இந்தச் சட்டமுன்வடிவில் மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பும், மாவட்ட காவல் புகார்கள் அமைப்புக்களும் இயங்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இந்த அமைப்புக்களின் அதிகாரங்கள், மேல் நடவடிக்கை ஆகியவை குறித்து விளக்கமாக இந்தச் சட்டமுன்வடிவில் அத்தியாயம் 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலும், காவலர்கள் மீதான புகார்களை விசாரணை செய்ய காவல் புகார்கள் பிரிவு அமைக்கப்பட்டு அது காவல் தலைமை இயக்குநரின் கட்டுப்பாட்டில் கூடுதல் காவல் தலைமை இயக்குனர் ஒருவரின் நிருவாக மேற்பார்வையின் கீழ் பணிபுரியும் என்று கூறப்பட்டுள்ளது. மேலும், பணியில் இருக்கும் காவல் அலுவலர்கள் தவிர ஓய்வு பெற்ற காவல் அலுவலர்கள் அல்லது விழிப்புணர்வுப் பணி, நுண்ணறிவுப் பிரிவு, குற்றவியல் பிரிவு அலுவலர்கள் அல்லது பிற துறைகளில் பணிபுரியும் அல்லது ஓய்வு பெற்ற அலுவலர்களையும் கொண்டிருக்கும் வகையில் இந்த காவல் புகார்கள் பிரிவு அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது,

இந்தச் சட்டமுன்வடிவின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கருத்துகளைத் தெரிவித்து இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலும், இந்தச் சட்டமுன்வடிவிற்கு கொடுக்கப்பட்டு உள்ள திருத்தங்களின் அடிப்படையிலும் சில விளக்கங்களை நான் அளிக்க விரும்புகிறேன்.

இந்தச் சட்டமுன்வடிவு தீவிரப் பரிசீலனைக்குப் பின், சட்ட வல்லுநர்களின் கருத்துகள் கேட்கப்பட்டு, அவற்றின் அடிப்படையில் இது தயார் செய்யப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு மாநிலங்களில் இயற்றப்பட்ட சட்டங்களும், உச்ச நீதிமன்றத் தீர்ப்பும் கவனமாகப் பரிசீலிக்கப்பட்ட பின்புதான் அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அதன் அடிப்படையில் சட்ட முன்வடிவு இங்கே ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

காவல் தலைமை இயக்குநரைப் பதவி நீக்கம் செய்ய பிரிவு 3(3)(e) இல் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘எழுத்துப் பூர்வமாகப் பதிவு செய்யப்பட வேண்டிய பிற நிருவாக அடிப்படைகளின் பேரில்’’ என்பது நீக்கப்பட வேண்டும் என்ற திருத்தமும், இதே போன்று பிரிவு 4(2)(1)(i) இல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தமும் ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில், பதவியிலிருந்து நீக்குவதற்கான எல்லாக் காரணங்களையும் முன்கூட்டியே எதிர்பார்த்துப் பட்டியலிட முடியாது. ஏதாவது முக்கிய அல்லது அத்தியாவசிய நிருவாகக் காரணங்களுக்காகப் பதவி நீக்கம் செய்யும் நிலைமை ஏற்பட்டால், அப்போது பயன்படுத்துவதற்காக இந்த வழிமுறை சேர்க்கப்பட்டுள்ளது. எழுத்து மூலமாகக் காரணத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்ற கட்டுப்பாடு இருப்பதால், இதனைத் தவறாகவோ, சரியான காரணம் இல்லாமலோ பயன்படுத்தும் வாய்ப்பில்லை.

இதே போன்று, பிரிவு (3) இல் சேர்க்கப்பட வேண்டிய உட் பிரிவுகள் எனக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் தேவையற்றதாகும். ஏனெனில், சட்டப்படி அமைச்சர் தலையிட இயலாத செயல்பாடுகளில் அமைச்சர் தலையிடுவதற்கு இடமில்லை. குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின்படி, காவல்நிலையப்பொறுப்பு அலுவலர் அல்லதுவிசாரணை அலுவலர் நிறைவேற்றும் பணிகளில் வேறு எவரும் தலையிட இயலாது. காவல்துறை உயர் அதிகாரிகள் கூட ஒருவர் மீது குற்றச்சாட்டு தாக்கல் செய்ய வேண்டுமென்றோ அவ்வாறு தாக்கல் செய்யக் கூடாது என்றோ உத்தரவிட இயலாது. வேண்டுமென்றால் உயர் அதிகாரி தானே விசாரணையை மேற்கொண்டு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 36 இன் கீழ் தங்களுக்குள்ள அதிகாரத்தின்படி செயல்படலாம். இவ்வாறு சட்டத்தில் இருக்கும் பொழுது, அமைச்சரோ வேறு அரசு அலுவலர்களோ தலையிட வாய்ப்பில்லை. எனவே மேற்கூறியவாறு புதிய உட்பிரிவுகள் சேர்க்கப்பட அவசியமில்லை.

காவல் துறை ஆணையம் அமைக்கப்படுவதற்கான காரணத்தைத் தெரிவிக்கும் வகையில், பிரிவு 5 (1) இல் திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்க இயலாது. ஏனெனில், மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் பணிகளும், பொறுப்புக்களும், அதிகாரங்களும் பிரிவு 6 இல் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. மேலும் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களாக சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், மாநில மனித உரிமை ஆணையம், மாநில மகளிர் ஆணையம் மற்றும் மாநில சிறுபான்மை ஆணையம் ஆகியவற்றின் தலைவர்களே இருப்பார்கள். எனவே, மேற்கூறப்பட்ட திருத்தம் தேவையற்றது.

காவல் துறை ஆணையத்தின் உறுப்பினர்களைப் பொறுத்த வரையில், உச்ச நீதிமன்றத்தின் பரிந்துரைப்படி, சொரப்ஜி குழுவின் பரிந்துரையையொட்டி சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. எனவே, பிரிவு 5(2) இல் எந்த மாற்றமும் தேவையில்லை.

நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, சட்டப்படி தலையிட இயலாத விஷயங்களில் அமைச்சரோ, அரசு அதிகாரிகளோ தலையிடுவதற்கு வாய்ப்புக் கிடையாது. மேலும், காவல் துறையினரின் செயல்பாடுகள் சுயேச்சையான மாநிலப் பாதுகாப்பு ஆணையத்தின் பரிசீலனைக்கும், மறுஆய்விற்கும் வரும் என்பதால் மேற்குறிப்பிட்ட பிரிவு 6 இல் சேர்க்கப்பட வேண்டும் என கோரியுள்ள உட்பிரிவுகளுக்கு அவசியம் இல்லை.

பிரிவு 8(6) நீக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் ஏற்பதற்கில்லை. ஏனெனில், மாநிலம், மண்டலம், சரகம், மாநகரம் மற்றும் மாவட்ட அளவிலான பணியாளர் குழுக்களின் பொறுப்புகள், செயல்பாடுகள் மற்றும் அதிகாரங்கள் வரையறுத்துக் கூற வேண்டிய அவசியம் உள்ளது. இதன்

விவரங்கள், இச்சட்டத்தின் அடிப்படையில் கொண்டு வரப்படும் விதிகளில் விரிவாகக் கூறப்படும். துணைநிலைப் பதவிகளில் உள்ளவர்களின் பணி சார்ந்த விஷயங்கள் துறையின் உள்விவகாரங்களாகவே இருக்கும். இதில் அரசியல் அல்லது அரசின் தலையீடு இல்லாதவாறு விதிகள் கொண்டு வரப்படும்.

பிரிவு 10 இன் படி அமைக்கப்பட உள்ள மாநிலக் காவல் புகார்கள் அதிகார அமைப்பின் தலைவராக உயர் நீதிமன்ற / உச்ச நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி இருக்க வேண்டும் என்ற திருத்தம் தேவையற்றது. தற்போது காவல் பொறுப்பில் இருக்கும் ஒரு நபர் மரணம் அடைந்தாலோ அல்லது காவல் பொறுப்பில் இருக்கும் ஒரு பெண் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டாலோ, உடனடியாகக் குற்றவியல் நடைமுறைச் சட்டம் 176 (1–A) இன் படி நீதிமன்ற நடுவர் விசாரணைக்கு அனுப்பப்படுகிறது. இந்த நீதிமன்ற விசாரணை அடிப்படையிலும், அதன் பரிந்துரையின் அடிப்படையிலும் மேல் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மேலும், காவல் கட்டுப்பாட்டில் இருக்கும் போது, கொடுங்காயம் விளைவித்தல் அல்லது ஒரு எதிரியை அல்லது குற்றவாளியை சித்ரவதை செய்தல் போன்ற குற்றசாட்டுக்கள் எழும்போது அவை காவல் நிலையாணைகளின்படி வருவாய்க் கோட்டாட்சியர் விசாரணைக்கு அனுப்பப்படுகின்றன. இவ்வாறு பெரிய குற்றச்சாட்டுகள் குறித்து நடுநிலையான விசாரணைக்கு ஏற்கெனவேவழிமுறைஇருப்பதால்,ஒருநீதிபதியின்தலைமையில் புகார்கள் அதிகார அமைப்பு இருக்கத் தேவையில்லை. இதே விளக்கம் பிரிவு 14(2) திருத்தப்பட வேண்டும் என்பதற்கும் பொருந்தும்.

காவல் துறையினர் மீது புகார்கள் தெரிவிக்கும்போது, அங்கீகாரம் பெற்ற சான்று அலுவலர் ஒப்பமிட்ட பிரமாணப் பத்திரம் வடிவில் கொடுக்க வழிவகை செய்யும் பிரிவு 12(1)–ஐ

திருத்த வேண்டியதில்லை. ஏனெனில் இது பொய்யான புகார்கள் அளிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில் செய்யப்பட்டுள்ள ஏற்பாடாகும். காவல் துறை அலுவலர் ஒருவரின் எந்த நடவடிக்கையாலும், மனுதாரர் அல்லது எதிர்மனுதாரர், புகார்தாரர் அல்லது எதிரி ஆகியவர்களில் யாராவது ஒருவர் மனக்குறை அடைய வாய்ப்புள்ளது. தான் எதிர்பார்த்ததைச் செய்யவில்லை என்ற எண்ணத்தில் பொய்யான புகார் கொடுத்து அலுவலர்களுக்கு சிரமத்தை உருவாக்கும் நிலை எழக்கூடும் என்பதால், இவ்வாறு பிரமாணப் பத்திரம் வடிவில் புகார்கள் அளிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. இந்த விளக்கம் பிரிவு 15 (a)–க்கும் பொருந்தும்.

பிரிவு 13(1) இல் கொடுக்கப்பட்டுள்ள திருத்தம் தேவையற்றதாகும். மாநில அல்லது மாவட்ட புகார்கள் அதிகார அமைப்புகளுக்கு உள்ள ஒரே அதிகாரம், புகார்களைக் காவல் துறைப் புகார்கள் பிரிவில் விசாரிக்க அனுப்புவது மட்டுமே என்பது சரியில்லாத கூற்று. பிரிவு 13(2) இன் கீழ், மாநில காவல் புகார்கள் அதிகார அமைப்பு தன்னுடைய பரிந்துரைகளை அரசுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது. எனவே, பெறப்பட்ட விசாரணை அறிக்கை அடிப்படையில் பரிந்துரை செய்ய இந்த அமைப்புக்கு அதிகாரம் உள்ளது. அதே போல், பிரிவு 16 (b) உட்பிரிவின் கீழ் மாவட்ட காவல் அதிகார அமைப்பும், தன்னுடைய பரிந்துரைகளை உரிய நடவடிக்கைக்காக அரசுக்குச் சமர்ப்பிக்க அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது. அனைத்துப் புகார்களும், புகார் அமைப்பினால் விசாரிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றால், தற்போது உயர் அதிகாரிகள் எடுக்கும் உடனடி நடவடிக்கைக்குத் தடை விதிப்பது போலாகும். அவ்வாறு காவல் துறை நடவடிக்கை எடுத்தால், புகார் அமைப்பு மூலமாகத்தான் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நீதிமன்றங்களை அணுகி குற்றச்சாட்டிற்கு உள்ளான

அலுவலர்கள், தடங்கல்கள் ஏற்படுத்த இயலும். தற்போது சிறப்பாக இயங்கி வரும் ஒழுங்கு நடவடிக்கைக்குக் குந்தகம் விளைவிக்காமல், இவற்றை மேற்பார்வை செய்யும் வகையில் சட்டமுன்வடிவில் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதே விளக்கம் பிரிவு 16(a)–க்கு கொடுக்கப்பட்ட திருத்தத்திற்கும் பொருந்தும்.

13(2) பிரிவின் கீழ் மாநிலக் காவல் புகார்கள் அதிகார அமைப்பு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கும், துறை சார்ந்த நடவடிக்கை எடுப்பதற்கும் பரிந்துரை செய்ய தடையில்லை. எனவே, இந்தப் பிரிவிற்குக் கொடுக்கப்பட்டுள்ள திருத்தங்கள் அவசியமற்றதாகும். இதே விளக்கம் பிரிவு 16 (b)க்கு கொடுக்கப்பட்ட திருத்தத்திற்கும் பொருந்தும். என்னுடைய விளக்கங்கள் ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன்.

* * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கில் 7.11.2013 அன்று
உலக சதுரங்க வாகையர் போட்டியைத் தொடங்கி வைத்து
ஆற்றிய உரையின் தமிழாக்கம்.




## தமிழ்நாட்டில் உலகத்தரம் வாய்ந்த விளையாட்டு உள்கட்டமைப்புகளை மேம்படுத்த முன்னுரிமை!

**உ**ங்களுடன் பெருமை வாய்ந்த இந்த நிகழ்ச்சியில் பங்கேற்பதில், நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தக் காலகட்டத்தில், இப்போட்டிகள் நடைபெறுவது சதுரங்கப் போட்டிகளின் பொற்காலமாகும். மிகப் பழமையான அறிவுசார் போட்டியின் தாயகமான இந்தியாவில், முதல்முறையாக இப்போட்டி நடைபெறுகிறது.

உலக சதுரங்க வாகையர் போட்டியின் ஒரு பகுதி, முழுமையாக சென்னையில் நடைபெறவுள்ளது. சதுரங்க விளையாட்டில், இந்தியாவுக்கு உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் வகையில், இந்த விழா நடைபெறுகிறது. சதுரங்கப் போட்டி, மூளைக்குப்பயிற்சி அளிக்கக்கூடியதாகும். சதுரங்கப்போட்டிக்கு ஊக்கம் அளிப்பவர் மற்றும் போட்டியாளர் என்ற வகையில், இப்போட்டிக்கு, எனது இதயத்தில் நெருங்கிய இடம் உண்டு. இந்த விளையாட்டிற்கு உயரிய வகையில் மதிப்பளிக்கிறேன்.

கடந்த 2011இல் உலக சதுரங்கக் கூட்டமைப்புத் தலைவர் கிர்சான் இல்யூம் ஷினோவ், என்னைச் சந்தித்து, உலக சதுரங்க வாகையர் போட்டியை சென்னையில் நடத்துமாறு கேட்டுக்கொண்டார். 20 கோடி ரூபாய் மதிப்பில், போட்டியை நடத்துவதற்கு நான் உடனடியாக ஒப்புக்கொண்டேன் என்றாலும், வாகையர் போட்டிக்கான ஏலத்தில், அதிகத் தொகையை ரஷ்யா அளித்ததால், அந்த முயற்சி வெற்றிபெறவில்லை. இந்தப் போட்டியை நடத்துவதற்குத் தமிழக அரசு ஆர்வம் தெரிவித்ததைத் தொடர்ந்து, நல்லெண்ண அடிப்படையில் ஏலம் ஏதுமின்றி, உலக சதுரங்க வாகையர் போட்டி 2013–ஐ, சென்னையில் நடத்துவதற்கு உலக சதுரங்கக் கூட்டமைப்பு சம்மதித்தது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தப் போட்டிக்காக 29 கோடி ரூபாய் நிதியை நான் ஒதுக்கீடு செய்தேன்.

**இந்தியாவுக்குப் பெருமை**

சதுரங்கப் போட்டிகளுக்கு 1500 ஆண்டுக்கால வரலாறு உள்ளது. கி.மு. 6ஆம் நூற்றாண்டிற்கு முன்பாகவே இந்தியாவில் சதுரங்கப் போட்டி தொடங்கியிருப்பதற்கான முன்னுதாரணங்கள் உண்டு. சில நூற்றாண்டுகளில் அனைத்துக் கண்டங்களுக்கும் பரவியுள்ள மிகச்சிறப்பான சதுரங்க விளையாட்டின் தாயகம் இந்தியா என நாங்கள் பெருமையுடன் கூறிக்கொள்ள முடியும்.

இந்தியப் பாரம்பரியப் போர் நிகழ்வுகளில் 2 ராணுவத்தினர் நேருக்கு நேர் மோதிக்கொள்வதைப் போன்று சதுரங்கப் போட்டிகளை நாம் அறியமுடிகிறது.

காளிதாசரின் ரகுவம்சத்தில் 2 பிரிவினருக்கு இடையே ஏற்பட்ட போர் போன்ற தகவல்கள் சதுரங்கப் போட்டியில் உள்ளன. சம அளவிலான சக்தி கொண்ட இரண்டு பிரிவினருக்கிடையே நடைபெறும் போராட்டம் தரைப்படையுடன் மோதுவது, ரதத்தில் வருவோர், ரதத்தில் வருவோருடன் போரிடுவது, குதிரைப்படை வீரர், குதிரைப்படை வீரருடன் போரிடுவது, யானைப்படையினர், யானைப்படையினருடன் மோதுவது, சதுரங்கப் போட்டியில் உள்ளது. 12ஆவது மற்றும் 15ஆவது நூற்றாண்டுக்கு இடைப்பட்ட காலத்தில் மேற்கத்திய நாடுகளில் சதுரங்கப் போட்டிகள் பிரபலமடைந்தன. கி.பி. 1200 மற்றும் 1400க்கு இடையே சதுரங்கப் போட்டி, ஐரோப்பிய நாடுகளில் நிலையாக உருவெடுத்து 17ஆவது நூற்றாண்டில், இத்தாலியில் பிரபலமடைந்த சதுரங்கப் போட்டி, வலுவான வீரர்களை உருவாக்கியது.

**விஸ்வநாதன் ஆனந்த்**

18ஆவது நூற்றாண்டின் தொடக்க காலத்தில் ஃபிரான்ஸ், இங்கிலாந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளில் சதுரங்கப் போட்டி வளர்ச்சியடைந்தது. இந்தக் காலத்தில் கோலோச்சிய ஃபிரான்ஸ் வீரர் ஆன்ட்ரே ஃபிலிடோர் 40 ஆண்டுகளுக்கும் மேலாக சதுரங்கப் போட்டியில் ஆதிக்கம் செலுத்தினார். 1800களில் சதுரங்க விளையாட்டு, போட்டி நிறைந்ததாக உருவெடுத்து நவீன சதுரங்க விளையாட்டுப் போட்டிகள் 1851ஆம் ஆண்டில் லண்டனில்நடத்தப்பட்டது.ஜெர்மன்வீரர் அடால்ஃப் ஆன்டர்சென் சதுரங்கப் போட்டியில் வெற்றிபெற்று உலகின் முன்னணி செஸ் மாஸ்டராக விளங்கினார். 1857ஆம் ஆண்டு அமெரிக்காவின் பால் மார்ஃபி சதுரங்க வாகையராக ஆகும் வரை ஆன்டர்சென்

தொடர்ந்து முன்னிலை வகித்தார். 1886இல் வில்ஹெலம் ஸ்டெய்ன்ஸ் முதலாவது உலக சாம்பியன் ஆனார். இமானுவல் லஸ்கர், செஸ் வரலாற்றில், 27 ஆண்டுகள் வலுவான நிலையில் உலகச் சாம்பியனாகத் திகழ்ந்தார். ஜோஸ் ரவுல் கேபப்பிளாங்கா, அலெக்ஸாண்டர் அலக்கைன், டிக்ரன் பெடரோஸியன் போரில் ஸ்பாஸ்கி, பாபி ஃபிஷர், அனடோலி கார்ப்போவ், கேரி கேஸ்பரேவ், விளாடிமிர் கிராம்னிக் மற்றும் நம்முடைய விஸ்வநாதன் ஆனந்த் ஆகியோர் சதுரங்க விளையாட்டில், புகழ்பெற்ற முன்னணி வீரர்களாகத் திகழ்கின்றனர். நாட்டின் இதர பகுதிகளில், குறிப்பாக சென்னையில் சதுரங்கப் போட்டி வலுவாகத் திகழ்வதற்கு முக்கியக் காரணம் விஸ்வநாதன் ஆனந்தின் பங்கேற்புதான்.

கடந்த நூற்றாண்டுகளில் உலகின் அனைத்து மக்களும் சதுரங்கப் போட்டியைத் தீவிரமாக விளையாடி வரும் நிலையில் இந்தியாவில் எண்ணற்ற கிராண்ட் மாஸ்டர்கள் உருவாகியுள்ளனர்.

27 கிராண்ட் மாஸ்டர்கள் தற்போது மும்மடங்காக அதிகரித்துள்ளனர். நாட்டில் சர்வதேச சதுரங்க மாஸ்டர்களின் எண்ணிக்கை 3 மடங்காக அதிகரித்து, 76ஆக உள்ளது. உலக அளவில், சதுரங்கப் போட்டிகளில் முதல் 10 இடங்களில் இந்தியா விளங்குகிறது.

தமிழகத்தில் முதலமைச்சராக நான் பதவி வகித்த 3 முறையும், விளையாட்டுத் துறையில் தமிழகத்தை முதன்மை நிலைக்குக் கொண்டுவர முயற்சி மேற்கொண்டுள்ளேன். இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறைக்கு நடப்பாண்டு பட்ஜெட்டில் இரட்டிப்பு நிதி, அதாவது 111 கோடியே 53 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நல்ல உட்கட்டமைப்புகள், விளையாட்டுக்கு உகந்த சூழலை

உருவாக்க முக்கியப் பங்கு வகிப்பதாக நான் நம்புகிறேன். இதைக் கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உலகத் தரம்வாய்ந்த விளையாட்டு உட்கட்டமைப்புகளை மேம்படுத்துவதற்கு நான் மிக உயர்ந்த முன்னுரிமை அளித்து வருகிறேன். சென்னையின் மையப்பகுதியில் உள்ள ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கம், நேரு உள்விளையாட்டு அரங்கம், ஹாக்கி அரங்கம், டென்னிஸ் அரங்கம் மற்றும் நீர்விளையாட்டு வளாகம் ஆகியவை தமிழகத்தில் உள்ள அனைத்து விளையாட்டு அமைப்பினரின் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

1995ஆம் ஆண்டு இந்த விளையாட்டுகளில் தமிழ்நாடு அரசின் ஆதரவுடன் நடத்தப்பட்ட 7ஆவது தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் பல்வேறு பிரிவுகளில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் வகையில், சென்னையை விளையாட்டுக் குழுமமாக மாற்றியது. ஜவஹர்லால் நேரு விளையாட்டு அரங்கில் மைதான வசதிகளை உருவாக்கவும், தற்போதுள்ள வசதிகளை சர்வதேசத் தரத்திற்கு உயர்த்தவும், 33 கோடியே 60 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. நுங்கம்பாக்கத்தில் உள்ள டென்னிஸ் அரங்கைச் சீரமைத்து புதிய வசதிகளை ஏற்படுத்த 4 கோடியே 50 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. சென்னையில் விளையாட்டுகளுக்கான அதிநவீனப் பயிற்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. இதில், 10 முதல் 14 வயது வரையிலான 50 குழந்தைகள் கண்டறியப்பட்டு அவர்களுக்குப் பல்வேறு விளையாட்டுகளில் உள்ளுறைப் பயிற்சி வழங்கப்படுகிறது. இதன்மூலம் அவர்கள் வருங்காலத்தில் தேசிய மற்றும் சர்வதேச விளையாட்டுகளில் பதக்கங்களைப் பெற வாய்ப்பு ஏற்படும்.

எனது 2ஆவது ஆட்சிக்காலத்தில் 2004ஆம் ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டம் மேலக்கோட்டையூர் கிராமத்தில் 125 ஏக்கர் பரப்பளவில் தமிழ்நாடு உடற்பயிற்சி மற்றும்

விளையாட்டுப் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது. இப்பல்கலைக்கழகத்தில் 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் செலவில் விளையாட்டு அறிவியல் மையம் உருவாக்கப்பட்டது இப்பல்கலைக்கழகத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ஒருமுறை மானியமாக 9 கோடியே 98 இலட்சம் ரூபாய் அனுமதிக்கப்பட்டது. இந்தப் பல்கலைக்கழகம் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுகளில் தொழில்நுட்பத் திறமையை வளர்க்கப் பாடுபடுகிறது. சதுரங்கப் போட்டியை பிரபலப்படுத்தவும், அதன் பயன்களைப் பள்ளிக் குழந்தைகள் பெறவும் வசதியாகப் பள்ளிகளில் சதுரங்கம் என்ற திட்டத்தை நான் அறிமுகம் செய்தேன். இதன்மூலம் மாணவர்களின் கவனிக்கும் ஆற்றல் மேம்படுகிறது. மாணவர்களின் குறிப்பாக கிராமப்புர குழந்தைகளுக்குச் சதுரங்கப் போட்டியின் அடிப்படை அம்சங்களைக் கற்றுக்கொடுப்பதே இத்திட்டத்தின் நோக்கம்.

**பள்ளிகளில் சதுரங்கம்**

சதுரங்க விளையாட்டைப் பிரபலப்படுத்தும் நடவடிக்கை யாகவும், இந்த விளையாட்டின் நன்மைகளை விளக்கும் வகையிலும், ‘‘பள்ளிகளில் சதுரங்கம்’’ என்ற திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கிறேன். இது மாணவர்களின் அறியும் திறனை மேம்படுத்த உதவும். இந்தத் திட்டமானது மாணவர்களிடையே, குறிப்பாக கிராமப்புர மாணவர்களிடையே, சதுரங்க விளையாட்டின் அடிப்படைத் திறனை வெளிக் கொணர்வதை நோக்கமாகக் கொண்டதாகும். அனைத்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சதுரங்க அமைப்புகளை ஏற்படுத்த உத்தரவிட்டுள்ளேன். இதற்காக, 39.47 இலட்சம் ரூபாயை ஒதுக்கியுள்ளேன். சதுரங்க விளையாட்டு குழந்தைகளை புத்திசாலிகளாக உருவாக்குகிறது.

## நிதி ஒதுக்கீடு உயர்வு

இது ஒருமுகத்தன்மை, அமைதி, விடாமுயற்சி ஆகியவற்றை அதிகரிக்கச் செய்வதுடன், ஆக்கத்திறன், மன எழுச்சி மற்றும் ஞாபகத்திறன் ஆகியவற்றை மேம்படுத்துகிறது. நுட்பமான சிந்தனைகளையும், விரைவாகப் புரிந்து கொள்ளுதலையும், உடனடி வெளிப்படுத்தும் திறனையும், ஞாபக சக்தியையும் அதிகரிக்கச் செய்வது இந்த விளையாட்டின் சிறப்பு அம்சங்களாகும்.

தமிழகத்தில் உள்ள குழந்தைகள் எதிர்கால நம்பிக்கையுடனும், முதிர்ச்சியுடனும், அறிவுடனும் ஒளிர வேண்டும். வெற்றியை ஆரவாரம் இல்லாமலும், அமைதியாகவும் தோல்வியை மகிழ்ச்சியுடனும் ஏற்றுக் கொள்ளும் பக்குவத்தைப் பெறவேண்டும் என்பதே குறிக்கோளாகும்.

சதுரங்க விளையாட்டில் ஆர்வமுள்ளவர்கள் தொடர்ச்சியாகப் பயிற்சி எடுத்துக் கொள்ளும் வகையில், சென்னை நேரு உள்விளையாட்டு அரங்கில் ஒரு சதுரங்கக் கூடம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குப் பெருமை தேடித்தந்த 12 சதுரங்க விளையாட்டு வீரர்களுக்கு 74 இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசு வழங்கப்பட்டுள்ளது.

தேசிய சதுரங்க வாகையர் போட்டியை நடத்துவதற்கு எனது அரசு நிதியுதவியை  வழங்கி வருகிறது. சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்கும் தகுதிவாய்ந்த சதுரங்க வீரர்களுக்கு விமானக் கட்டணத்தையும் அளித்து வருகிறது. சென்னையில், மாநில விளையாட்டுச் சங்கங்களால், நடத்தப்பட உள்ள தேசிய வாகையர் போட்டிக்கான நிதி ஒதுக்கீட்டின் அளவை 65 இலட்சம் ரூபாயிலிருந்து, 1.30 கோடி ரூபாயாக உயர்த்தியுள்ளேன்.

தமிழகத்தில் விளையாட்டுக் கலாச்சாரத்தை மேம்படுத்தவும், விளையாட்டையும், வீரர்களையும் ஊக்கப்படுத்தும் வகையில் மாநிலத்தில் முதல்முறையாக “முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள்” பத்துப்பிரிவுகளில் எனது தலைமையிலான அரசால் நடத்தப்பட்டன. இதற்காக 8.09 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது.

போட்டிகளில் தங்கப்பதக்கம் வென்றவர்களுக்குப் பரிசுக்கோப்பையுடன் ஒரு இலட்சம் ரூபாய் ரொக்கப்பரிசும், வெள்ளிப் பதக்கம் வென்றவர்களுக்கு 75 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பரிசும், வெண்கலப் பதக்கம் வென்றவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் ரொக்கப்பரிசும் அண்மையில் நடந்த நிகழ்ச்சியில் என்னால் வழங்கப்பட்டது.

அனைத்து மாவட்டங்களிலும் படிப்படியாக விளையாட்டு விடுதிகளை அமைப்பதற்காக 6.33 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. நாமக்கல், தேனி, திருவள்ளூர் மற்றும் விருதுநகரில் நீச்சல் குளங்களை அமைப்பதற்காக மொத்தம் 3.52 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளேன். கிராமங்களில் விளையாட்டுகளை ஊக்கப்படுத்தும் வகையில் 2013–2014 ஆம் ஆண்டில் 3 ஆயிரத்து 119 கிராமப் பஞ்சாயத்துகளில் விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்காக 6.26 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்துள்ளேன்.

தமிழகத்தில் விளையாட்டு நட்சத்திரங்களை உருவாக்கும் முயற்சியாக ஆண்டு ஒன்றுக்கு, 1.25 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும். இந்தத் தொகையிலிருந்து சிறந்த 5 விளையாட்டு வீரர்களுக்குத் தேவையின் அடிப்படையில் ஆண்டுக்கு 25 இலட்சம் ரூபாய் வீதம் உதவி அளிக்கப்படும்.

ஒலிம்பிக் போட்டிகள், ஆசிய விளையாட்டுப் போட்டிகள், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டிகள், தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் உள்ளிட்ட போட்டிகளில் சாதனை படைக்கும் வீரர்களை மேலும் ஊக்கப்படுத்தும் வகையில் அவர்களுக்கு வழங்கப்படும் ஊக்கப் பரிசுத் தொகை இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது.

ஒலிம்பிக் போட்டிகளில் தங்கப்பதக்கம் வெல்லும் தமிழக வீரர்களுக்கு, முன்பு வழங்கப்பட்டு வந்த ஒரு கோடி ரூபாய் ரொக்கப்பரிசு, இனி அதற்குப் பதிலாக 2 கோடி ரூபாயாக வழங்கப்படும். இந்த முயற்சியானது தேசிய மற்றும் சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் தமிழக வீரர்கள் தங்களது திறமைகளை மேலும் வளர்த்துக் கொள்ள வழிவகை செய்யும்.

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்,
தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 12.11.2013 அன்று
முன்மொழிந்த அரசினர் தனித் தீர்மானம்



## இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியாவின் சார்பில் பெயரளவிற்கு கூட யாரும் கலந்துகொள்ளக் கூடாது!

**ச**ட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த தீர்மானம் ஒரு மனதாக நிறைவேற்றம்!

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நெஞ்சு கொதிக்கும் அளவிலும், உள்ளம் எரிமலையாகும் விதத்திலும், ஓராயிரம் செய்திகள் வருகின்றன இலங்கைத் தமிழர் படும் அவதிகள் பற்றி" என்று 1958 ஆம் ஆண்டே குறிப்பிட்ட

பேரறிஞர் அண்ணா அவர்கள், உலகில் தமிழர்கள் எங்கு பாதிப்புக்கு உள்ளானாலும் அதை எதிர்த்துக் குரல் கொடுக்க வேண்டிய கடமை தமிழக அரசுக்கு உண்டு என்ற கருத்தையும் நமக்கு வழிகாட்டியாக விட்டுச் சென்றுள்ளார்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கருத்திற்கேற்ப, இலங்கைத் தமிழர்களின் நலன் காக்கத் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டிருக்கும் அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு.

**2011** ஆம் ஆண்டு மே மாதம் நான் மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன், போர்க் குற்றங்களை, இனப் படுகொலையை நடத்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்துவதோடு, இலங்கை அரசின் மீது பொருளாதாரத் தடையை விதிக்கவும், மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்னும் தீர்மானம் என்னால் **8.6.2011** அன்று இந்த மாமன்றத்தில் முன்மொழியப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**தனி ஈழம் குறித்து பொது வாக்கெடுப்பு**

இதனைத் தொடர்ந்து, இலங்கை நாட்டை ‘நட்பு நாடு’ என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்; இலங்கையில் நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள் மற்றும் இனப் படுகொலை குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும், இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடையை விதித்திடவும், ‘தனி ஈழம்’ குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தினைக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மத்திய பேரரசை வலியுறுத்தி இந்த மாமன்றத்தில்

என்னால் **27.3.2013** அன்று முன்மொழியப்பட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, இந்த ஆண்டு நவம்பர் மாதம், இலங்கை நாட்டில் நடைபெறவிருக்கும், காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவிற்குக் கூட இந்திய நாட்டின் சார்பாக பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும், இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும் வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும் இந்தியப் பேரரசை வலியுறுத்தி இந்த மாமன்றத்தில் என்னால் **24.10.2013** அன்று முன்மொழியப்பட்ட தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**பிரதமருக்குக் கடிதங்கள்**

இது தவிர, இலங்கை நாட்டில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டினை வேறு நாட்டிற்கு மாற்றுவதற்கான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டும் என்றும், இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக் கூடாது என்றும் **25.3.2013** அன்று பாரதப் பிரதமரை கடிதம் வாயிலாகக் கேட்டுக் கொண்டேன். இதனைத் தொடர்ந்து **17.10.2013** அன்று மீண்டும் ஒரு கடிதத்தினைப் பாரதப் பிரதமருக்கு எழுதினேன்.

ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வினை இந்தியப் பேரரசுக்குத் தெரிவிக்கும் வகையில், கடந்த 2½ ஆண்டுகளில், இலங்கை அரசின் இனப் படுகொலை குறித்து

மூன்று தீர்மானங்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டன. உணர்வுப் பூர்வமான இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையை, அறிவுப் பூர்வமாக சிந்தித்து இந்தத் தீர்மானங்கள் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்டன. இவை உணர்ச்சிவயப்பட்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அல்ல. ஆனால், இதுநாள் வரை தமிழர்களுக்கு சாதகமான எந்தவொரு முடிவையும் மத்திய அரசு எடுக்கவில்லை.

மாறாக, தமிழினப் படுகொலையை நிகழ்த்திய சிங்கள இனவாத அரசு கொழும்புவில் நடத்தும் காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டில் பாரதப் பிரதமருக்குப் பதிலாக இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் பங்கேற்பார் என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. 1993 ஆம் ஆண்டு முதல் இதுவரை நடைபெற்ற 10 காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாடுகளில், ஐந்து மாநாடுகளில் இந்தியாவின் சார்பில் பாரதப் பிரதமர் கலந்து கொள்ளாததை வைத்துப் பார்க்கும் போது, தற்போதைய மத்திய அரசின் முடிவு வழக்கமான ஒன்றாக இருக்கிறதே தவிர, தமிழர்களுக்கு ஆறுதல் தரக் கூடியதாகவோ, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கக் கூடியதாகவோ இல்லை. மத்திய அரசின் இந்த முடிவு மிகுந்த மனவேதனை அளிக்கும் செயலாகும். இவ்வாறு, கலந்து கொள்வதன் மூலம், இலங்கை அரசின் மனிதாபிமானம் அற்ற செயலை மனிதநேயம் அற்ற செயலை இந்தியா ஏற்றுக் கொள்கிறது, அங்கீகரிக்கிறது, என்ற நிலை தான் உருவாகும்.

**இந்தியாவுக்கு அவப்பெயர்**

உச்சகட்டப் போர் முடிந்து, நான்கு ஆண்டுகள் கடந்துள்ள சூழ்நிலையில் இலங்கை வாழ் தமிழர்களுக்கு எந்த உரிமையும் தரப்படவில்லை. இன்னமும், இலங்கை ராணுவம் அவர்களைக் கண்காணித்துக் கொண்டு இருக்கிறது. தமிழர்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்களர்கள் வசிக்கின்றனர். இடம் பெயர்ந்த

தமிழர்கள், இன்னமும் இடம் பெயர்ந்த தமிழர்களாகவே இருக்கக் கூடிய அவல நிலை அங்கு நிலவுகிறது. தொடர்ந்து பல்வேறு இன்னல்களை இலங்கைத் தமிழர்கள் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட மாகாண அரசுக்குத் தேவையான அதிகாரங்கள் வழங்கப்படவில்லை. போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்கள், இனப் படுகொலையை நிகழ்த்தியவர்கள் இன்னமும் தண்டிக்கப்படவில்லை. அதற்காக, எந்த ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்துகொள்வது போர்க் குற்றம் நிகழ்த்தியவர்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்கு சமம் ஆகும். இது மட்டுமல்லாமல், இந்தப் பங்கேற்பின் மூலம், காமன்வெல்த் கூட்டமைப்பின் தலைவர் பதவியை, அதாவது Chair-in-Office பதவியை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு இலங்கை அதிபர் வகிக்கக் கூடிய நிலைக்கு ஆதரவு அளித்த அவப்பெயரையும் இந்தியா அடைந்துவிடும்.

காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டில், இந்தியாவின் சார்பில் வெளியுறவுத் துறை அமைச்சர் பங்கேற்க வழி வகுத்துள்ள மத்திய அரசின் முடிவு தமிழர்களின் உணர்வுகளைக் காலில் போட்டு மிதிப்பதற்கு சமம் ஆகும். மத்திய அரசின் இந்த முடிவை தமிழக மக்கள் ஒரு போதும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது உறுதி.

தமிழினத்தை அழிப்பதற்காக சிங்கள இனவாத அரசுக்கு ஆயுதம் அளித்து, பயிற்சி அளித்து பல துரோகங்களை இந்தியப் பேரரசு இது நாள் வரை செய்திருந்தாலும், இவற்றிற்கெல்லாம் பரிகாரம் தேடும் வகையில், போர்க் குற்றம் நிகழ்த்தியவர்களை, இனப் படுகொலை செய்தவர்களை, தண்டிக்க வழிவகுக்கும் வகையில், இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டில் இந்தியா சார்பில் ஒருவர் கூடக் கலந்து கொள்ளப்

போவதில்லை என்ற திடமான, உறுதியான முடிவை இந்தியப் பேரரசு எடுக்கும் என்று உலகத் தமிழர்களும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர் இந்த மாமன்றமும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தது. ஆனால், மத்திய அரசு மீண்டும் தமிழர்களை வஞ்சித்துவிட்டது.

எனவே, ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் வகையில், கீழ்க்காணும் தீர்மானத்தினை நான் முன்மொழிகிறேன்.

''இலங்கை நாட்டில், நடைபெறவிருக்கும் காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும், பெயரளவிற்குக் கூட இந்திய நாட்டின் சார்பாக பிரதிநிதிகள் அந்த மாநாட்டில் கலந்து கொள்ளக் கூடாது என்றும், இது குறித்த இந்தியாவின் முடிவை உடனடியாக இலங்கை நாட்டிற்குத் தெரியப்படுத்த வேண்டும் என்றும், இலங்கைத் தமிழர்கள் சுதந்திரமாகவும், சிங்களர்களுக்கு இணையாகவும், வாழ இலங்கை அரசு நடவடிக்கை எடுக்கும் வரை காமன்வெல்த் கூட்டமைப்பில் இருந்து இலங்கை நாட்டைத் தற்காலிகமாக நீக்கி வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும் என்றும், இந்தியப் பேரரசை வலியுறுத்தும் தீர்மானம் இந்த மாமன்றத்தில் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு, மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கு முற்றிலும் முரணான வகையில், இலங்கையில் நடைபெறும் காமன்வெல்த் கூட்டமைப்பு மாநாட்டிற்கு இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் தலைமையில் ஒரு குழு செல்கிறது என்று மத்திய அரசு அறிவித்துள்ளது. மத்திய அரசின் இந்த முடிவிற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கிறது.

தமிழர்களுக்கு ஆறுதல் அளிக்காத, தமிழர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்காத மத்திய அரசின் இந்த முடிவு மிகுந்த மனவேதனை அளிக்கும் செயலாகும்.

காமன்வெல்த் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதன் மூலம் இலங்கை அரசின் மனிதாபிமானம் அற்ற செயலை, மனிதநேயம் அற்ற செயலை, இந்தியா ஏற்றுக் கொள்கிறது, அங்கீகரிக்கிறது, என்ற நிலை தான் உருவாகும். இது மட்டுமல்லாமல், காமன்வெல்த் கூட்டமைப்பின் தலைவராக, அதாவது Chair-in-Office ஆக இலங்கை அதிபர் இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பதற்கு உறுதுணையாக இருந்தது என்ற தீராப் பழிச் சொல் இந்தியாவிற்கு ஏற்படும். இப்படிப்பட்ட, தீராப் பழிச்சொல் இந்திய நாட்டிற்கு ஏற்படுவதைத் தமிழர்களால் ஏற்றுக்கொள்ளவோ, சகித்துக் கொள்ளவோ இயலாது.

எனவே, தமிழக மக்களின் ஒருமித்த கருத்திற்கும், உணர்வுகளுக்கும் மதிப்பளித்து, இலங்கை நாட்டில் **13.11.2013** அன்று நடைபெறவிருக்கும் வெளியுறவுத் துறை அமைச்சர்களுக்கான கூட்டத்திலோ, **15.11.2013** முதல் **17.11.2013** வரை நடைபெறவுள்ள காமன்வெல்த் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டிலோ பெயரளவிற்குக் கூட இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என்றும், இந்த காமன்வெல்த் மாநாட்டினை இந்தியா முற்றிலுமாகப் புறக்கணிக்க வேண்டும் என்றும், இந்தியப் பேரரசை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.''

வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்தத் தீர்மானத்தை, இம்மாமன்றம் ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டும் என்று அனைத்து மாண்புமிகு உறுப்பினர்களையும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகக் கேட்டுக் கொண்டு அமைகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா அரங்கில்
**22.11.2013** அன்று நடைபெற்ற சென்னை, அண்ணா பல்கலைக்கழக
**34**ஆவது பட்டமளிப்பு விழாவில் ஆற்றிய
பட்டமளிப்பு விழா உரையின் தமிழாக்கம்.



## புதுமையின் மையமாக அறிவுசார் தலைநகரமாக உருவாகும் தமிழ்நாடு!

**மி**கச்சிறந்த முதன்மையான கல்வி நிறுவனமான அண்ணா பல்கலைக்கழகத்தின் **34**ஆவது பட்டமளிப்பு விழாவில் உரை நிகழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன். ஆற்றல்மிகு இளம்

பட்டதாரிகள் பட்டம் பெறும் உடையுடன் மகிழ்ச்சி பொங்க இருப்பதைக் காண பெருமகிழ்ச்சியாக உள்ளது.

பல்கலைக்கழகத்தின் மிக முக்கியமான இந்த நாள் நம் அனைவரிடமும் உற்சாகத்தையும், உத்வேகத்தையும் ஏற்படுத்தியுள்ளது. உங்களின் கல்விபயிலும் காலத்தில் முழு நம்பிக்கையோடு மேற்கொண்ட முன்முயற்சிகள், கடும் உழைப்பு, இடையறாத படிப்பு ஆகியவை இன்று முழுப் பலனை அளித்துள்ளதால், இந்தத் தருணம் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தத் தருணம் உங்கள் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் மிக முக்கியமான நாளாகும். நீங்கள் இன்று கல்லூரி நாட்களிலிருந்து விடைபெற்று, ஒளிமயமான எதிர்காலத்தை அமைத்துக் கொள்ளத் தயாராக இருக்கிறீர்கள். இந்த நாள் உங்களுடைய நாள். உங்கள் உறுதிமிக்க கடும் உழைப்பு, அதற்கான பலனை உங்களுக்கு அளித்துள்ளது.

இன்று நடைபெறும் இந்தப் பட்டமளிப்பு விழா, உங்களிடையே பெரும் குதூகலத்தை ஏற்படுத்தியுள்ள போதிலும், கல்லூரி வாழ்க்கையை இழக்கும் வருத்தமும் சேர்ந்துள்ளது. மிகக்கடுமையான பாடத்திட்டங்களை வெற்றிகரமாக முடித்த வெற்றி உற்சாகமும், மிகச் சிறந்த தொழிலை மேற்கொள்ளப் போகும் உத்வேகமும் உங்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வருத்தம் என்பது இந்தக் கல்லூரி வளாகத்தில் கழித்த மறக்க முடியாத நாட்களும், மிக உயர்ந்த எண்ணங்களும் பின்னி வளர்ந்த நட்பும், எந்தவிதப் பொறுப்பும் இல்லாமல் அனுபவித்த எல்லையில்லாச் சுதந்திரமும் இன்றோடு முடிவதாகும்.

## பெற்றோரின் தியாகம்

உலகத்தின் பல்வேறு பகுதிகளில் இந்தத் தருணம் ஒரு தொடக்கம் என்று கூறப்படுகிறது. ஏனெனில், நீங்கள் அனைவரும் உங்கள் கல்வி வாழ்க்கையை சமூகத்தின் நன்மைக்காக மாற்றியமைத்துக் கொள்ளப்போகிறீர்கள்.

இத்தருணம், உங்கள் வாழ்க்கையின் நெருக்கடிகளிலிருந்து பாதுகாக்கப்பட்டு வளர்ந்து வந்த சூழலிலிருந்து வெளி உலகைக் காணப் புறப்படும் தருணம். உங்கள் கனவுகளை நனவாக்க முற்படுவதற்கு காலம் உங்களை வாழ்த்துகிறது. உங்களுக்குள் இருந்த உலகத்திலிருந்து, வெளி உலகத்திற்கு உங்கள் பங்களிப்பை அளிக்க வேண்டிய நேரம் தொடங்கிவிட்டது.

உங்களுக்குக் கிடைத்த இந்தக் கல்வி உங்கள் பெற்றோரின் மிகப்பெரிய தியாகத்தால் கிடைத்தது என்பதை நீங்கள் உணரவேண்டும். உங்களுக்கு சிறந்த கல்வியை அளிப்பதற்காக அவர்களின் அடிப்படை தேவைகளைக் கூட அவர்கள் தியாகம் செய்துள்ளார்கள்.

பல்கலைக்கழகங்கள் என்பது புதிய கண்டுபிடிப்புகளின் புகலிடம். இங்கு புதிய சிந்தனைகள் தொழில் ரீதியான கண்டுபிடிப்புகளாக மாறி வணிக ரீதியாக வெற்றிபெற்று அந்தப் பகுதி வளர்ச்சியடைய உதவுகிறது. பல்கலைக்கழகங்கள் ஒரு நாட்டின் சிறந்த திறமையை வளர்க்கும் மையமாகவும், அறிவு சார்ந்த வளர்ச்சிக்கு அடிப்படையாகவும் விளங்குகிறது. கடந்த காலங்களின் மாற்றங்களுக்குப் பல்கலைக்கழகங்கள் ஆற்றிய பங்களிப்பை, மறுபரிசீலனை செய்து எதிர்கால வளர்ச்சியை நோக்கி புதிய கருத்துகளுடன் முன்னேறிச் செல்ல வேண்டும். இந்தப் புனிதமான கடமையில், ஒட்டுமொத்தக் கல்வி வளர்ச்சிக்கு ஆசிரியர்கள் தூண்டுகோலாகவும், பாதுகாவலர்களாகவும் இருக்க வேண்டும்.

விஞ்ஞான உலகில் மனித இனம் இயற்கையை முழுமையாக அறிந்து கொள்ளும் பேரார்வத்தை நிறைவேற்றவேண்டிய கடமை பல்கலைக்கழகங்களுக்கு உள்ளது. மிகச்சிறிய அணுத் துகள் முதல், பிரபஞ்சத்தின் முடிவுவரை அனைத்தையும் சரியான வழியில் புரிந்து கொள்ள, சரியான திசையில் வழி நடத்திச் செல்வது, அதற்கான புதிய தொழில்நுட்பங்களையும், அறிவுசார்ந்த கருத்துகளையும் வளர்த்தெடுப்பதும் பல்கலைக்கழகங்களின் கடமையாகும்.

பல்கலைக்கழகங்களின் கட்டாயக் கடமையான கல்வி வழங்குதல், அதன் மூலம் சிறந்த சிந்தனையை மாணவர்களிடம் வளர்த்தல், மாணவர்களின் திறனை மேம்படுத்துதல், அவர்களை வல்லுநர்களாக்குதல் ஆகியவை இப்போதும் மாறவில்லை. அதேவேளையில், மாணவர்களை பண்பாட்டு அடையாளங்களாக உருவாக்கி, அவர்கள் பெற்ற பல்கலைக்கழகக் கல்வியை சமூகத்துக்குப் பயன்படுத்தவும், சமூகத்தின் அறிவுசார்ந்த நிலையை உயர்த்தவும், பல்கலைக்கழகங்கள் தவறக்கூடாது. வெறும் கல்வி என்பது தேடலுக்கு மட்டும் விடையளிக்கும். ஆனால், பண்பாடு மனிதத்துவத்தை மேலும் வளர்த்தெடுக்கும்.

**அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கம்**

அண்ணா பல்கலைக்கழகம் தமிழ்நாட்டின் பெருமைமிகு நிறுவனமாக விளங்கி வருகிறது. இந்தத் தலைசிறந்த நிறுவனத்திலிருந்து நீங்கள் பட்டம் பெற்றிருப்பது மாபெரும் சாதனை ஆகும்.

1794 ஆம் ஆண்டு மே மாதம், ‘‘அளவைப்பள்ளி’’ (Survey School) யாக தொடங்கப்பட்ட இந்தப் பொறியியல் கல்லூரி, பிரிட்டிஷ் இந்திய கல்வி நிறுவனங்களில் மிகச் சிறந்தவற்றில் ஒன்றாக இன்று திகழ்கிறது. மேலும், இந்தியாவில் உள்ள பாரம்பரியமிக்க தொழில் பயிற்சிப் பள்ளிகளில் ஒன்றாகவும் விளங்குகிறது.

புனித ஜார்ஜ் கோட்டை தலைமையகத்தில், வான ஆராய்ச்சியாளராகவும், புவியியல் மற்றும் கடல் சார்ந்த அளவராகவும் இருந்த மைக்கேல் டாப்பிங் என்பவர் இந்நிறுவனத்தைத் தொடங்கினார். இந்நிறுவனத்தின் பெயர் “கட்டடப் பொறியியல் பள்ளி” (Civil Engineering School) என 1858ஆம் ஆண்டில் மாற்றப்பட்டது.

நாட்டிலேயே இந்தக் கல்லூரி தான் முதன்முறையாக இயந்திரவியல் பொறியியல் துறையில் பட்டம் வழங்கியது. 1920ஆம் ஆண்டு இந்தக் கல்லூரி தற்போது உள்ள கிண்டி பொறியியல் கல்லூரி வளாகத்துக்கு மாற்றப்பட்டது. இந்தக் கல்லூரிதான் இந்தியாவில் முதன் முதலாக 1932ஆம் ஆண்டு மின்பொறியியல் பட்டப்படிப்பைத் தொடங்கியது. மேலும், தொலைத்தொடர்பு மற்றும் நெடுஞ்சாலைப் பொறியியல் துறையிலும் 1945ஆம் ஆண்டு இந்தக் கல்லூரிதான் பட்டப்படிப்புகளைத் தொடங்கியது.

1978 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 4ஆம் தேதி கிண்டி பொறியியல் கல்லூரி, அழகப்பச் செட்டியார் தொழில்நுட்பக் கல்லூரி, மெட்ராஸ் தொழில்நுட்பக் கல்லூரி, கட்டடவியல் பள்ளி ஆகியவற்றை இணைத்து அண்ணா பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டது.

**சிறந்த கல்விச் சேவை**

2001ஆம் ஆண்டில் அண்ணா பல்கலைக்கழகம் இணைப்பு வகைப் பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டது. தமிழகத்தில் உள்ள சுமார் 250 பொறியியல் கல்லூரிகள் இந்தப் பல்கலைக்கழகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டன. 2010 ஆம் ஆண்டு, ஜூன் 18ஆம் தேதி அண்ணா பல்கலைக்கழகம் மீண்டும் ஒருமை வகைப் பல்கலைக்கழகமாக மாற்றம் செய்யப்பட்டது. அடுத்து, 2012, ஆகஸ்ட் 1ஆம் தேதியிலிருந்து இப்பல்கலைக்கழகம் மீண்டும் இணைப்பு வகை பல்கலைக்கழகமாக மாற்றப்பட்டு ஆசியாவிலேயே மிகப்பெரிய தொழில்நுட்ப பல்கலைக்கழகமாக

மாறியது. மாநிலம் முழுவதும் தொழில்நுட்பக் கல்வியில், ஒரே மாதிரியான, தரமான கல்வி அளிப்பதை உறுதிப்படுத்தும் வகையில், 637 கல்வி நிறுவனங்கள் ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்பட்டன. அண்ணா பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் நிருவாகச் செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதற்காக 4 மண்டல கல்வி மையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

சிறந்த கல்விச் சேவையால், இந்தப் பல்கலைக்கழகத்தின் செயல்பாடுகள் இன்று பரந்து விரிந்துள்ளன. இப்பல்கலைக் கழகத்தின், மின்னணுவியல் மற்றும் தகவல்தொடர்பியல், கணினி அறிவியல், தகவல்தொழில்நுட்பம், வானூர்திப் பொறியியல், உயிரித் தொழில்நுட்பம், படிக வளர்ப்பு, தொலையுணர்வு, சுற்றுச்சூழல் படிப்பு, நீர்வள ஆதாரங்கள், பருவநிலை மாற்றம், மாற்று அறிதல் மற்றும் தொழில்நுட்ப ஆராய்ச்சி, நானோ அறிவியல் மற்றும் நானோ தொழில்நுட்பம் போன்ற துறைகள் போற்றத்தக்க வகையில், கல்வி மற்றும் ஆராய்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன.

அண்ணா பல்கலைக்கழகத்தில் 34 துறைகளும், 48 தன்னாட்சி மையங்களும் உள்ளன. இப்பல்கலைக் கழகம் தனது 4 முக்கிய வளாகங்கள் மூலம், 28 பட்டப்படிப்புகளையும், 86 பட்ட மேற்படிப்புகளையும் தற்போது வழங்கி வருகிறது. மேலும், இதன் இணைப்புக் கல்லூரிகள் மூலம் 37 பட்டப்படிப்புகளையும், 56 பட்ட மேற்படிப்புகளையும் அளித்து வருகிறது. மொத்தம் 7 இலட்சத்துக்கும் அதிகமான மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். 5 ஆயிரத்து 500 மாணவர்கள் ஆராய்ச்சியில் தங்களின் பெயர்களைப் பதிவு செய்துள்ளனர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா பல்கலைக்கழகம் ஒவ்வொரு ஆண்டும் பட்டம் மற்றும் பட்ட மேற்படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கைக்கு ஒற்றைச் சாளரக் கலந்தாய்வை வெற்றிகரமாக நடத்தி வருகிறது.

இதன்மூலம், சுமார் 1.85 இலட்சம் மாணவர்கள் தொழிற்கல்வியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

**அறிவுசார் சக்திகளின் களஞ்சியம்**

உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள இந்தப் பட்டப்படிப்புச் சான்றிதழ் நாட்டிலேயே நீங்கள்தான் மிகச்சிறந்த பொறியாளர்கள் எனப் பறைசாற்றுகிறது. ஏனெனில் நீங்கள் உங்கள் பட்டத்துடன் அண்ணா பல்கலைக்கழகப் பெயரை ஏந்திச் செல்கிறீர்கள்.

அண்ணா பல்கலைக்கழகம் அர்ப்பணிப்புடன் இயங்கும் பல்கலைக்கழகமாகும். கல்வித்துறையில் உச்சத்தைப் பிடிக்க உறுதுணை செய்வதாக, கேள்வி ஞானத்தின் மையமாகத் திகழ்ந்து வரும் அண்ணா பல்கலைக்கழகமானது நமது தேசத்தின் அறிவுசார் சக்திகளின் களஞ்சியமாகவும், அறிவார்ந்த கருத்துகளின் மையமாகவும் திகழ்கிறது. இந்தச் சூழ்நிலையில்தான் அனுபவமும், அறிவும் மலர முடியும். வேறு எப்போதும் இல்லாத வகையில் திறமையையும், அறிவையும், புதியவற்றை கண்டுபிடிக்கும் ஆற்றலையும் வழங்கும் பல்கலைக்கழகமாக அண்ணா பல்கலைக்கழகம் தற்போது திகழ்கிறது. இது தொடர்பாக தியோடர் வான்கார்மன் அவர்களின் கூற்றை நினைவுபடுத்த விரும்புகிறேன். ‘‘அறிவியல் என்பது உலகை அப்படியே ஆய்வு செய்து படிப்பது. பொறியியல் என்பது எதிர்காலத்திற்கான உலகத்தை உருவாக்குவது.’’ எனவே, பொறியியல் என்பது மனிதத் தேவைக்காக இயற்கை வளங்களைத் தேவையான அளவுக்குத் தொழில்நுட்ப ரீதியாகப் பயன்படுத்தும் அறிவியல் கலை. இதுதான், அனைத்து தொழில்நுட்பங்களுக்கும் ஆணிவேராகும்.

தொழில்நுட்பம் மனித முன்முயற்சியின் எல்லாப் பகுதிகளிலும் பரவியுள்ளது. பொறியாளர்கள், புதிய கருத்துகளுடன், புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்கி மனித குலத்திற்கு

எண்ணற்ற வகையில் சேவை செய்கின்றனர். பொறியாளர்கள் தான் எதிர்காலத்திற்கான முன்னோடிகள், தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகள் மூலம் வளர்ச்சியின் மையமாகத் திகழ்பவர்கள், விதிவிலக்கான பொறியாளர்கள், பொறியியல் செயல்பாடுகளை பாரம்பரியப் பிரச்சினைகளை சமாளிக்க மட்டுமே பயன்படுத்துவதில்லை; விரிவான சவால்களை எதிர்கொண்டு சரிப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர்.

உங்கள் அனைவரிடமும் உற்சாகத்தையும், ஊக்கத்தையும் நான் காண்கிறேன். நீங்கள் நமது மக்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பவர்களாகத் திகழவேண்டும். அர்த்தமுள்ள வாழ்க்கையையும், தொழிலையும் நீங்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். மற்றவர்களின் வாழ்க்கையில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவர முயற்சிக்க வேண்டும். உங்களிடமிருந்து தோன்றும் கருத்துகள் சமூகத்தில் பிரச்சினைகளைச் சந்தித்து வருபவர்களுக்கு புரட்சிகரமான தீர்வுகளாக அமைய வேண்டும். கணினி பொறியியல், மின்னணுவியல், உயிரிப் பொறியியல், உயிரித் தொழில்நுட்பம் மற்றும் பிற துறைகளின் அனைத்துத் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளும் நமது மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு பங்களிப்பாக அமைய வேண்டும்.

இன்று நீங்கள் உங்கள் வாழ்க்கையின் புதிய பயணத்தைத் தொடங்குகிறீர்கள். இந்தப் பயணம் உங்களின் எதிர்கால இலட்சியத்தை அடைய வழிவகுக்கும். அத்துடன், உங்களின் அர்ப்பணிப்புடன் கூடிய முயற்சிகள் உங்களைக் குறிப்பிடத்தக்க வகையில் மாநிலத்தின் வளர்ச்சிக்கும் பங்களிக்க வகை செய்யும். உண்மை என்னவென்றால், தமிழகத்திற்கு நீங்கள் தேவை. உங்கள் இலட்சியத்துடன் கூடிய ஈடுபாடு, புதியவற்றை உருவாக்கும் திறன் ஆகியவையும் தமிழகத்துக்குத் தேவை. இந்த மிகச்சிறந்த கல்வி நிறுவனத்தில் நீங்கள் வளர்த்துக்

கொண்ட, புதியவற்றை நோக்கிய தேடல், அறிவுக்கான தாகம் ஆகியவையும் தமிழகத்திற்குத் தேவை.

**பாதுகாவலர்கள்**

மாணவர்களாகிய உங்களுக்கு சமூக பொறுப்பும் உள்ளது. அந்தப் பொறுப்பை நீங்கள் தட்டிக்கழிக்க முடியாது. உங்களைச் சுற்றியுள்ள சமூகத்திற்கும், உங்களை ஆளாக்கிய நிறுவனங்களுக்கும், தமிழகத்திற்கும், நாட்டுக்கும் நீங்கள் கணிசமாகச் சேவையாற்ற வேண்டும். நாட்டை வலுப்படுத்தும் பணி உங்களுக்கு இன்று தொடங்குகிறது. மாற்றத்தின் முன்னோடிகளாக நீங்கள் மாறுவதை நான் கவனித்து வருவேன். தமிழ்நாடு, நாட்டிலேயே முதன்மை மாநிலமாக ஆகும் பாதையில் சென்றுகொண்டிருக்கிறது. உங்கள் அனைவருக்கும் இதில் பங்கு உண்டு.

இந்தப் பட்டமளிப்பு விழா நீங்கள் மிகச்சிறந்த கல்வியைப் பெற்றதற்கான முக்கிய அடையாளம். இந்தக் கல்வி உங்களுக்குள் பரந்த பார்வையை உருவாக்கியுள்ளது. இதன்மூலம் சுயநலம் என்ற குறுகிய கண்ணோட்டம், பிராந்திய கண்ணோட்டம், ஆதிக்க மனோபாவம் ஆகியவற்றிலிருந்து நீங்கள் விடுபட்டுள்ளீர்கள். உங்கள் அறிவும், பயிற்சியும் ஒரு குடிமகனுக்குரிய பெரும் பொறுப்புகளை உருவாக்கியுள்ளது. இந்தப் பல்கலைக்கழக அனுபவத்தை உங்கள் மனதிலும் அறிவிலும், நிறுத்தி வைத்திருங்கள். தொடர்ச்சியான படிப்பு, மீண்டும் மீண்டும் படிப்பு, சிறந்த ஆளுமைக்கான தொடர்ந்த முயற்சி ஆகியவை உலகளவில் இன்றையத் தேவையாக மாறியுள்ளது. உங்களுக்குத் தற்போது கிடைத்துள்ள இந்தக் கல்வி மற்றும் பயிற்சி வேறு எந்தக் கல்வி நிலையத்திலும், எந்த வேலையிலும், எந்தப் பயிற்சியிலும் கிடைக்காது. நீங்கள் தான் அண்ணா பல்கலைக்கழகத்தின் பாரம்பரியத்தை உயர்த்திப் பிடிக்கும் பாதுகாவலர்கள் என்பதை எப்போதும் மறக்க வேண்டாம்.

தமிழ்நாடு புதுமையின் மையமாகவும், நாட்டின் அறிவுசார் தலைநகரமாகவும் உருவாகி வருகிறது. இதற்காக எனது தலைமையிலான அரசு பல்வேறு புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியுள்ளது. அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகிறேன்.

பல்கலைக்கழக வர்த்தக ஒத்துழைப்பு மையத்தை அமைத்தது, தொழில்நுட்பங்களைக் கண்டறிந்து அவற்றைப் பகிர்ந்து கொள்ளும் மையங்களை ஏற்படுத்தியது, உயர்ரக சோதனைக் கூடங்களுடன் பல்கலைக்கழகங்களில் பட்டமேற்படிப்பு உயர்கல்விக்கான இணையதள நூலக மையங்களை அமைத்தது,

மாணவர்களுக்கு நிருவாகத் திறனையும், வேலைவாய்ப்புக்கான தகுதிகளையும் அளிக்கும் வகையில், திறன் பயிற்சி மையங்களை அமைத்தது,

மாற்றுத் திறனாளிகளுக்கான பயிற்சி மையங்களை உருவாக்கியது,

மகளிருக்கான சுய வேலைவாய்ப்பு மையங்களைத் தொடங்கியது,

சுற்றுலா மற்றும் உணவக நிருவாக மையத்தை ஏற்படுத்தியது,

தமிழ் வழியில் கணினி மையங்களை உருவாக்கியது,

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் புதிய பாடத் திட்டங்களை அறிமுகம் செய்தது,

பாலிடெக்னிக் கல்லூரிகள் மூலம் சமுதாய வளர்ச்சிக்கு வழி கண்டது,

என எனது அரசு உயர்கல்விக்கு மிகுந்த முன்னுரிமை அளித்துள்ளது.

மாணவர்கள் தங்கள் படிப்பைப் பூர்த்தி செய்யத் தேவையான அனைத்து ஊக்குவிப்புகளும் அளிக்கப்பட்டு வருகின்றன. மாணவர்களுக்கு ரொக்கப்பரிசுகள் வழங்குவது, மடிக்கணினி உள்ளிட்ட கல்வி சார்ந்த சாதனங்களை வழங்குவது ஆகியவை இதில் அடங்கும்.

2013ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அண்ணா பல்கலைக்கழகத்தின் மண்டல மையங்கள் மற்றும் உறுப்புக் கல்லூரிகளின் உட்கட்டமைப்பு மேம்பாட்டிற்காக 150 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டது. கிராமப்புற மாணவர்களின் தேவையை நிறைவேற்றும் வகையில், 4 புதிய அரசுப் பொறியியல் கல்லூரிகளைத் தொடங்க நான் உத்தரவிட்டுள்ளேன். அவை தற்போது செயல்படத் தொடங்கியுள்ளன.

சமூகத்தில் மாற்றத்தையும், முன்னேற்றத்தையும் கொண்டுவர உயர்கல்வி முக்கியப் பங்காற்றுகிறது. தற்போதுள்ள சவால்களையும், எதிர்காலத்தில் எழக்கூடிய பிரச்சினைகளையும் சமாளிக்க கல்வி அறிவு மட்டுமே நமக்கு உதவி செய்யும். இந்தச் சவால்கள் சுற்றுச்சூழலாக இருக்கலாம். சுகாதாரமாக இருக்கலாம் அல்லது உணவுப் பாதுகாப்புத்துறை சம்பந்தப்பட்டதாக இருக்கலாம்.

உயர்கல்வி மேம்பாடு என்பது எனது அரசின் செயல் திட்டங்களில் முதன்மையானதாக உள்ளது. இதன்படி, கல்விப் பணியை விரிவாக்குவது, புதிதாக மாணவர்களை சேர்ப்பது, திறமையை அதிகரிப்பது ஆகியவற்றுக்கு மிகுந்த முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

மனித வளத்தை மேம்பாடு அடையச் செய்ய எனது அரசு சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளது. இனிமேலும் தொடர்ந்து மேற்கொள்ளும்.

## நிமிர்ந்த நன்னடை – நேர்கொண்ட பார்வை

தமிழகத்தின் எதிர்காலத்தை வடிவமைப்பவர்கள் இங்கே கூடியுள்ளீர்கள். உயர்ந்த சிந்தனைகள் பெரும் இலட்சியங்கள், பரந்த மனப்பான்மை கொண்ட தொழில்நுட்ப வல்லுநர்கள் இங்கே இருக்கிறீர்கள். உங்களுடைய சிந்தனைகளும், செயல்பாடுகளும் தொடர்ந்து மேம்பட வேண்டும். சமூக சேவைக்கான உங்களது உறுதியும், உங்களின் தொழில் வளர்ச்சியுடன் இணைந்து வளர வேண்டும், வலுப்பெற வேண்டும். எல்லா நிலையிலும், உங்கள் இலட்சியங்களைத் தளரவிடக்கூடாது.

இந்த மிகச்சிறந்த பல்கலைக் கழகத்தில் உங்களுக்குக் கிடைத்துள்ள கல்வி சார்ந்த அடித்தளம், உங்கள் எதிர்கால வாழ்க்கை முழுவதற்கும் பெரிய உந்து சக்தியாக இருக்கும். இங்கு கடுமையான உழைப்பாலும், ஒழுக்கத்தாலும் சிறந்த மதிப்பெண்களையும், பரிசுகளையும் பெற்றவர்களை மனதாரப் பாராட்டுகிறேன். மிகப்பெரிய அளவில் மதிப்பெண் பெறாதவர்களுக்கும் ஏராளமான வாய்ப்புகள் காத்திருக்கின்றன. உங்களுக்குத் தேவையான எதையும் உங்களால் பெற முடியும். எனது அரசு எந்த எல்லைக்கும் செல்ல தயங்கியது கிடையாது.

நீங்கள் ஒவ்வொருவரும் எனக்கு மிக முக்கியமானவர்கள். உங்கள் ஒவ்வொருவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் அருள்புரிய வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். நிமிர்ந்த நடையுடன் நேர்கொண்ட பாதையில் நீங்கள் பயணிக்க இறைவன் உங்களுக்கு உதவ வேண்டும் என்றும் வேண்டிக்கொள்கிறேன்.

இப்பல்கலைக்கழகத்தின் ஆசிரியர்களையும், ஆசிரியர்கள் அல்லாத பணியாளர்களையும் வளர்ச்சிக்குத் துணையாக நிற்கின்ற பெருந்தகையாளர்களையும் நான் வாழ்த்துகிறேன். சமூகத்தில் குழந்தைகளின் கனவுகளை நிறைவேற்ற சுமைகளைத் தாங்கிக் கொண்டு, உறுதுணையாக நிற்கின்ற

பெற்றோர்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த பாராட்டுகளை பகிர்ந்துக் கொள்கிறேன்.

லார்டு ஆக்ஸ்ஃபோர்டின்நினைவுகூறத்தக்கவார்த்தைகளை நீங்கள் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். ‘‘உங்களுடைய செயல்பாடுகள் எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். நீங்கள் மேலான சிந்தனைகளின் துணையோடும் சிறந்த கருத்துகளைப் பின்பற்றியும், பெரிய தோல்விகளை ஆறுதலால் எதிர்கொண்டும் உங்கள் வாழ்க்கையில் வெற்றி தோல்விகளால் ஏற்படும் மாறுதல்களைக் கடந்து வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.’’ உங்களுடைய பெருமைக்குரிய மற்றும் வெற்றிகரமான முன்னேற்றத்திற்கு என்னுடைய வாழ்த்துக்கள், நன்றி.

* * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகத்தில் **11.12.2013** அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய தொடக்கவுரையின் தமிழாக்கம்.




## மக்களின் விருப்பங்களை எதிரொலிக்கின்றது தமிழக அரசு!

### அரசின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் செயல்பாடுகளை மேம்படுத்திக் கொள்ள வேண்டும்!

**மா**ண்புமிகு அமைச்சர் பெருமக்களே, தலைமைச் செயலாளர் அவர்களே, காவல்துறைத் தலைவர் அவர்களே,

அரசுச் செயலாளர்களே, காவல்துறை அதிகாரிகளே, காவல் ஆணையர்களே, அரசுத் துறைகளின் தலைவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவர்களே, மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களே மற்றும் அரசு அலுவலர்களே!

நான் ஆட்சிப்பொறுப்பேற்ற 2011 ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பின்னர் 3ஆவது முறையாக நடைபெறும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் கலந்து கொள்வதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்த ஆட்சிக்காலத்தின் மத்தியில் நாம் உள்ளோம். நம்முடைய மகத்தான வளர்ச்சியைக் கணக்கீடு செய்வதற்கும், வருங்காலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கும் இந்த மாநாடு ஒரு நல்ல வாய்ப்பாக அமையும்.

நாம் புரிந்த சாதனைகளையும், உயரிய செயல்திறன்களையும் சீரான நிலையில் கொண்டு செல்வதற்கும், நம்மை நாமே ஊக்கப்படுத்திக் கொள்வதற்கும், தமிழ்நாட்டை இந்தியாவிலே முதன்மை மாநிலமாக ஆக்க வேண்டும் என்ற நம்முடைய இலட்சியத்தை அடைவதற்கான ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளிப்பதற்கு இம்மாநாடு உறுதுணையாக அமையும்.

கடந்த இரண்டரையாண்டுக் காலமாகத் தமிழ்நாடு புரிந்த சாதனைகளைப் பார்க்கும் போது நிருவாகத்தின் ஒவ்வொரு துறையிலும் நாம் அடைந்த சாதனைகள் நமக்கு திருப்தி அளிப்பதாக உள்ளன.

இந்த அரசு ஏழை, எளிய மக்களுக்கு நல்வாழ்வு அளித்திட எண்ணற்ற நலத்திட்டங்களைச் செயல்படுத்துகிறது. குறிப்பாக அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடங்களை அமைத்துத் தருதல், மகளிர், குழந்தைகள் மற்றும் நலிந்தோரை மேம்படச்செய்திடும் திட்டங்கள், நாட்டின் முதலீட்டை அதிகரிக்கச் செய்தல், மாநிலத்தின் வளர்ச்சியை அதிகரித்திட

அடிப்படைக் கட்டமைப்பை ஏற்படுத்துதல், கல்வியின் தரத்தை உயர்த்துதல், மக்கள் நல்வாழ்வுக்கான சுகாதாரத் திட்டங்களை மேம்படுத்துதல்,வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கானதிறன்களை மேம்படுத்துதல் போன்ற எண்ணற்றத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது. பல துறைகளின் மூலம் செயல்படுத்தும் பல திட்டங்களிலும் நம்முடைய சிறந்த செயல்பாட்டிற்காகத் தமிழ்நாடு தேசிய அளவில் பல சிறந்த பரிசுகளைத் தொடர்ந்து பெற்று வருகிறது. தொலைநோக்குப் பார்வையுள்ள சிறந்த தலைமை, மிகச்சிறந்த சட்டம் ஒழுங்கு நிலைமை, பலநிலைகளில் அரசு அதிகாரிகளின் அர்ப்பணிப்போடு கூடிய முயற்சிகள் ஆகிய மூன்று காரணங்களால் இது சாத்தியமாயிற்று.

இருந்தபோதிலும் நாம் மெத்தனமாக இருக்கக்கூடாது. நம்முடைய செயல்பாடு இதே நிலையில் தொடரவும், மேலும் முன்னேற்ற நிலையை அடையவும் நாம் முயற்சிக்க வேண்டும். நான் வெளியிட்ட, தமிழ்நாடு தொலைநோக்குத்திட்டம் 2023 இன் இலக்கை இன்னும் பத்து ஆண்டுகளுக்குள் நாம் அடைய வேண்டும். இத்தொலைநோக்குத் திட்டத்தில் உள்ள குறிக்கோள்களை அடைவது என்பது எளிதானதல்ல. ஏனோதானோ என்ற நிலையால் அதனை அடைய முடியாது. கடுமையான இலக்கு மற்றும் குறிக்கோள்கள் மட்டுமே நமக்கு தூண்டுகோலாக அமையும் என்பது எனது மேலான நம்பிக்கை. இந்தக் குறிக்கோள்களை அடைவதற்கு எனது அரசு ஏற்கெனவே பலதிட்டங்களைநிறைவேற்ற ஆரம்பித்துவிட்டது.இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்குக் களப்பணியாளர்களுடைய பங்களிப்பு மிகவும் இன்றியமையாததாக உள்ளது.

**இணக்கமான செயல்பாடு**

சட்டம் – ஒழுங்கை நிலைநிறுத்துவதும், மக்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதும் ஒரு அரசின் தலையாய கடமை ஆகும். மக்களின் முக்கியப் பிரச்சினைகளையும், அவர்களின்

உணர்வுகளையும், நியாயமான எதிர்பார்ப்புகளையும் புரிந்து கொள்ளும் தன்மையே நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைக்கச் செய்கிறது. இதற்குத் தேவை உள்மட்ட நிருவாகம் அன்றாட நிகழ்வுகளை விழிப்புணர்வுடன் அறிந்து கொள்வது. மாவட்ட நிருவாகம் எப்பொழுதும் அவ்வாறே செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. மேலிருந்து கண்காணிப்பும், அடிமட்டத்திலிருக்கும் மக்களின் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்ய என்னுடைய இணக்கமான செயல்பாடு, இவைகளே மாவட்ட ஆட்சி சிறப்பாக இயங்கத் துணை நிற்கின்றது.

சட்டம்–ஒழுங்கைப் பொறுத்தவரை அனைவரும் பெருமையும், திருப்தியும் கொள்ளும் நிலையில் உள்ளது. வகுப்புவாத, தீவிரவாத, மத அடிப்படையிலான மோதல்கள் இல்லாத மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. காவல்துறைக்கும், மாவட்ட நிருவாகத்திற்கும் எந்தத் தடைகளையும் விதிக்காமல் சுதந்திரமாகச் செயல்பட நான் அனுமதி அளித்ததால் மட்டுமே இது சாத்தியமானது. வகுப்பு மோதல்களை ஏற்படுத்திப் பதற்றத்தை உருவாக்க முயற்சிப்பவர்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் நான் அனுமதிக்கமாட்டேன் என்பதை வலியுறுத்தித் தெரிவித்துக் கொள்கிறேன். காவல்துறையும், மாவட்ட நிருவாகமும் சமூக விரோத சக்திகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்க முழுச் சுதந்திரம் அளிக்கப்பட்டிருக்கிறது.

**காவல் துறையின் நடவடிக்கை**

தமிழகம், கருநாடகா மற்றும் கேரள எல்லைகளில் மாவோயிஸ்ட்டுகள் மாநிலத்தில் வேரூன்ற எடுத்த தொடர் முயற்சிகள் தீவிரக் கண்காணிப்புக் காரணமாக முறியடிக்கப்பட்டன. நக்சலைட்டுகள் மாநிலத்திற்குள் ஊடுருவ உள்ளதாக உளவுத்துறையின் செய்திகள் வந்தன. மாநிலத்தில் இடதுசாரித் தீவிரவாதம் ஒரு தளத்தை உருவாக்குவதற்கு நடத்தப்பட்ட முயற்சிகள், கடுமையான நடவடிக்கைகள் மூலம்

தடுத்து நிறுத்தப்பட்டன. பொதுமக்களைக் காப்பதற்காக மாநில நிருவாகம் எடுத்து வந்த பொறுப்பான நடவடிக்கைகள் காரணமாக, இடதுசாரித் தீவிரவாதம் விரக்தியடைந்து தங்கள் நோக்கத்தில் வெற்றி பெற முடியாமல் செய்து விட்டன. அரசியல் மற்றும் நிருவாக இயந்திரம் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்கும்போது, மக்கள் சட்டவிரோதமான எந்தவொரு அமைப்பையும் கண்டு கொள்ள மாட்டார்கள். இடதுசாரித் தீவிரவாதத்தின் ஆபத்தைச் சமாளித்து, புரிதலும், பொறுப்புள்ள மற்றும் மேம்பாட்டு நடவடிக்கைகளை ஏற்படுத்துவதற்குக் காவல்துறையின் நடவடிக்கை மிகப்பெரும் பங்கு வகிக்கிறது.

இனச் சண்டைக்குப் பிறகும் இலங்கைத் தமிழர்களை இரண்டாம் தரக் குடிமக்களாக இலங்கை அரசு நடத்துவதும், உள்நாட்டுச் சண்டையின் கடைசிக் கட்டத்தில் தமிழ் இனத்தை அழிப்பதற்கு இலங்கை அரசு செய்த முயற்சிகளும், அந்த அரசைப் பொறுப்பாக்காமல் இருப்பதும், தமிழ்நாட்டின் மிகப் பெரிய உணர்வுப்பூர்வமான பிரச்சினையாகிவிட்டது. இந்தியா இந்தப் பிரச்சினையைக் கையாண்ட விதம் இதை மேலும் சிக்கலாக்கியது. இருந்தபோதிலும், இந்தப் பிரச்சினைகளை நமது அரசு மிகவும் சாதுரியமாகக் கையாண்டது.

**கச்சத்தீவு மீட்கப்படவேண்டும்**

தங்கள் வாழ்வாதாரத்திற்காகப் பாரம்பரியமான பாக் நீரிணைப் பகுதியில், தமிழகத்தைச் சேர்ந்த அப்பாவி மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருக்கும் போது, இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து கொடூரமாகக் கொலைவெறியுடன் தாக்கப்படுவதும், கண் மூடித்தனமாகக் கைது செய்யப்படுவதும் தமிழகத்தில் உள்ள ஒட்டுமொத்த மீனவ சமுதாயத்தைக் கொந்தளிப்படையச் செய்துள்ளது. இந்தத் தாக்குதல்களுக்குக் கண்டனம்

தெரிவித்தும், நேரடியாகத் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் பிரதமருக்குப் பலமுறை நான் கடிதங்கள் எழுதினேன். 1974ஆம் ஆண்டு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறாமல் இலங்கைக்குத் தாரைவார்க்கப்பட்ட இந்தியாவுக்குச் சொந்தமான கச்சத்தீவை மீட்பது ஒன்றே நிரந்தரத் தீர்வு என வலியுறுத்திப் பிரதமருக்கு பலமுறை நான் கடிதங்கள் எழுதியுள்ளேன்.

கடந்த 2008ஆம் ஆண்டு உச்சநீதிமன்றத்தில் இதுதொடர்பாக மனு ஒன்றை நான் தாக்கல் செய்தேன். கடந்த 2011ஆம் ஆண்டு இது தொடர்பாக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதோடு, வருவாய்த்துறையின் மூலமாகத் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பூகோள, கலாச்சார, வரலாற்று ரீதியாகக் கச்சத்தீவு இந்தியாவின் ஒரு பகுதி என்பதும், இதனை மீட்க இலட்சக்கணக்கான மீனவர்களின் வாழ்வாதாரத்தையும், பாதுகாப்பையும் மனதில் கொண்டு, கச்சத்தீவு மீட்கப்பட வேண்டும் என்பதே எனது அரசின் நிலைப்பாடு. உச்சநீதிமன்றத்தில் சாதகமான தீர்ப்பு வரும் என்று நான் நம்புகிறேன்.

தமிழகத்தில் பாலின சமத்துவத்தை ஏற்படுத்துவதை ஒரு கொள்கையாகக் கொண்டுள்ளோம். அதற்காக நான் மேற்கொண்ட முயற்சியால், தமிழகத்தில் பெண்கள் பாதுகாப்பான சூழ்நிலையில் வாழ்வதற்கு வழி வகை செய்யப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு எதிரான பாலின வன்கொடுமைகளைத் தடுப்பதற்காக 13 அம்சத் திட்டத்தை நான் அறிவித்துள்ளதால், மற்ற மாநிலங்களில் பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் அதிக அளவில் நடைபெற்று வரும்போது, பெண்களுக்கு எந்தவிதக் கொடுமையும் நிகழாத மாநிலமாகத் தமிழகம் திகழ்கிறது. நீங்கள் தொடர்ந்து விழிப்புணர்வுடன் இருந்து இது போன்ற வன்கொடுமைகள் நிகழாவண்ணம் தடுப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்**

இந்த ஆண்டு துவக்கத்தில் தமிழ்நாட்டில் பருவமழை பொய்த்து வறட்சி நிலைமை நிலவியது. அதோடு கருநாடக அரசு, நமக்குரிய தண்ணீரைத் தராமல் கை விரித்தது. இந்நிலையில் டெல்டா மற்றும் டெல்டா அல்லாத பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு சிறப்பு நிவாரணத் தொகைத் தொகுப்பை அறிவித்துச் செயல்படுத்தி உள்ளேன். வறட்சியில் இருந்து விடுபடுவதற்கு வறட்சி பாதித்த பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளுக்கு ரூ.1,614 கோடி வழங்கப்பட்டுள்ளது. இது விஷயத்தில் உரிய நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியாளர்கள் எடுத்திருப்பதற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

இடர்பட்டிருக்கும் மக்களுக்கு உதவிக்கரம் நீட்டுவதில் எனது அரசு எப்போதுமே தீவிரமாக இருந்திருக்கிறது. இதற்கு ஓர் உதாரணம்– உத்தரகாண்டுக்கு ஆன்மீகப் பயணம் போன தமிழக பக்தர்கள் அங்கு திடீர் என்று ஏற்பட்ட மழை–வெள்ளம் நிலச்சரிவில் சிக்கித் தவித்தபோது எனது அரசு மீட்பு நடவடிக்கைகளை மின்னல் வேகத்தில் செயல்படுத்தி உள்ளது.

இன்னும் எதிர்பாராத தட்பவெப்ப நிலை நிலவுவதால் நாம் பாதிக்கப்படுகிறோம். எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் மிகக் குறைந்த அளவே நமக்கு வடகிழக்குப் பருவ மழை பெய்துள்ளது. இருந்தும் எதிர்பாராத விதத்தில் ஏற்படக்கூடிய இடர்பாடுகளைக் களைய நீங்கள் மின்னல் வேகத்தில் செயல்பட வேண்டும். அதற்கான பணிகளை முடுக்கி விட வேண்டும்.

விவசாயத் துறையில் வளர்ச்சி மேம்பாட்டுக்காகத் திட்ட ஒதுக்கீட்டில் ரூ.3,340 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. விவசாய உள்கட்டமைப்பை மேம்படுத்துதல், குறித்த நேரத்தில் போதுமான இடுபொருட்களை வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதே நமது அரசின் கொள்கை.

நடைமுறையில் இருக்கும் திட்டங்களுடன் புதிய திட்டங்களைச் செயல்படுத்தவும் நாம் முயற்சி எடுத்துள்ளோம். 2015 –2016இல் உணவு உற்பத்தியை இரண்டு மடங்காக ஆக்கும் உணவு உற்பத்தித் திட்டம், 70,000 பண்ணைக் குட்டைகளை ஏற்படுத்துவதன் மூலம் உள்ளூரிலேயே பாசன வசதியை ஏற்படுத்தும் திட்டம், தெளிப்பானுடனும் ஓர் இடத்தில் இருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லக் கூடியதுமான தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களை வாடகை முறையில் அளிக்கும் திட்டம், சூரிய சக்தியில் இயங்கக்கூடிய பம்ப்செட்களை அளிக்கும் திட்டம், பெரிய அளவில் விவசாயத்தை இயந்திரமயமாக்கும் திட்டம், அறுவடைக்குப்பின் தோட்ட விளைப்பொருட்களை அழுகாமல் பாதுகாப்பதற்கும், மேலும், அவற்றின் தரத்தை மேம்படுத்துவதற்கும் ‘ஹப்’ மற்றும் ஸ்போக் மாடலில் வசதிகளை ஏற்படுத்துதல் ஆகியவை மேற்கண்ட புதிய திட்டங்களில் அடங்கும். மாவட்ட ஆட்சியர்கள் இந்தப் புதிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு எடுத்த நடவடிக்கைகளைப் பற்றி அரசுக்குத் தெரிவிக்க வேண்டும்.

பண்ணை வருமானத்தை அதிகரிக்கும் வகையில், அது தொடர்பான நடவடிக்கைகளில் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறேன். கால்நடைப் பராமரிப்புத்துறையில், விலையில்லாக் கறவைமாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள் வழங்குதல் போன்ற எண்ணற்ற முக்கியமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளேன். நான் விலையில்லாக் கறவை மாடுகள் வழங்கியுள்ளதையடுத்து, கூட்டுறவுச் சங்கங்களின் மூலம், அதிகமான அளவுக்குப் பால் கொள்முதல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கிறேன். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்த அம்சத்தைக் கண்காணிப்பதோடு, கறவைமாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகளுக்குத் தீவனப் பற்றாக்குறை ஏற்படாமலும் விலங்குகளுக்கு நோய்ப் பாதிப்பு ஏற்படாமலும் கண்காணித்து வரவேண்டும்.

**ஸ்மார்ட் கார்டுகள் வழங்கல்**

தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வரும் பொது விநியோகத் திட்டம் ஒரு முன்மாதிரித் திட்டம் என இந்தியாவிலும், வெளியிலும் பரவலாகப் பாராட்டப்படுகிறது. இது ஒரு சிக்கலானத் திட்டம். இதைத் திறம்பட நிருவகிக்கத் தீவிரமான கண்காணிப்புத் தேவை. இதன் பயன்கள் உரியவர்களைச் சென்றடைகிறதா என்பதையும், இதில் ஏதேனும் குறைபாடுகள் தென்படுகிறதா என்பதையும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கவனித்து வரவேண்டும். தேசிய மக்கள்தொகைக் கணக்கெடுப்புப் பதிவேட்டின் அடிப்படையிலான உடற்கூறுகள் உள்ளடக்கியத் தகவல்கள் அடங்கிய ஸ்மார்ட் கார்டுகள் அனைத்துக் குடும்பங்களுக்கும் மாநில அரசால் விரைவில் வழங்கப்படும்.

விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த மாநில அரசு மேற்கொண்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக, சென்னை மாநகரில் 40 பண்ணைப் பசுமை நுகர்வோர்க் கடைகள் தொடங்கப்பட்டுள்ளன. இவற்றின் மூலம் நுகர்வோர் நியாயமான விலையில் காய்கறிகளை வாங்க முடிகிறது. அதே நேரத்தில் விவசாயிகளுக்கும் தங்கள் விளைபொருட்களை விற்க உத்தரவாதமான சந்தையும் கிடைக்கிறது; ஆதாயமான விலையும் கிடைக்கிறது. இந்த பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் மூலம் இதுவரை 2,482 மெட்ரிக் டன் காய்கறிகள், 7.38 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன. விவசாயிகள் தொடர்ந்து காய்கறிகளை வழங்கும் வகையில் காய்கறிகள் உற்பத்திக்கென 55.22 கோடி ரூபாய் பயிர்க்கடன் வழங்கப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குப் பயன்படும் வகையில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் பகுதிகளில் தக்க இடங்களில் பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகளைப் புதிதாகத் தொடங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள 21,027 கூட்டுறவுச் சங்கங்களுக்கு அமைதியான முறையில் 5 கட்டங்களாகத் தேர்தல் நடத்தி, 2,04,889 பேரைத் தேர்வு செய்வதில் இங்குள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆற்றிய பணிகளுக்காக எனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இது ஒரு சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சாதனை. இது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு அமைப்புகளின் செயல்பாடுகளை ஜனநாயகப்படுத்தும் இலட்சியத்தை அடைய உதவும்.

இந்த அரசினால் உருவாக்கப்பட்டு செயல்படுத்தப்படும் கிராமப்புர வளர்ச்சித் திட்டங்கள் இந்தியாவிலேயே வேறு எங்கும் காணாத அளவில் உயர்தரமான கட்டமைப்பு வசதிகளை கொண்டதாகவும், மேம்படுத்தப்பட்ட சேவையை அளிக்கக்கூடியதாகவும் இருக்கின்றன. சூரிய சக்தியுடன் கூடிய ‘முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம்’ இந்தியாவிலேயே முன்னோடித் திட்டமாக விளங்குகின்றது. இந்தத் திட்டம் கிராமப்புர ஏழை மக்களுக்கு உயர்தரமான வீட்டு வசதியை அளிப்பதுடன், மாசுபடுதல் இல்லாத எரிசக்தியையும் அளிக்கிறது.

கிராமப்புர வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய ‘தாய்’ திட்டம் சிறப்பானத் திட்டமாகும். நுணுக்கமான வகையில் திட்டமிடல் மூலமாக அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் அனைத்தையும் கிராமப்புர மக்களுக்கு வழங்கும் நோக்கத்துடன் ‘தாய்’ திட்டம் சிறப்பாகத் திட்டமிடப்பட்டுள்ளது.

பொருத்தமான தகுதி வாய்ந்த பயனாளிகளைப் போய்ச் சேரும் விதத்தில் இத்திட்டங்களை சிறப்பாக நடைமுறைப்படுத்திட வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

வளர்ச்சியின் இயந்திரங்களாக நகரங்கள் விளங்குகின்றன. இந்திய மாநிலங்களிலேயே மிகவும் நகர்மயமான மாநிலம் தமிழ்நாடு. உயரிய வாழ்நிலைகளை உடைய நகரங்களாக உருவாக்கிட எனது அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்துக்காக ஓர் ஆண்டுக்கு ரூ.500 கோடியை என்னுடைய அரசு ஒதுக்கி இருக்கிறது. நகர்ப்புர அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்திட ஒருங்கிணைந்த நகர்ப்புர வளர்ச்சித் திட்ட நிதிக்காக ஓர் ஆண்டுக்கு ரூ. 750 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. நகர்ப்புர வளர்ச்சி உறுதியான வேலைகளை உருவாக்கும்; செல்வச் செழிப்பை அதிகரிக்கச் செய்யும். எனது அரசு மனித நேய அரசு. நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழை, எளிய மக்களும் இந்த வளர்ச்சியின் பயனை அடைவதற்காக நகர்ப்புர வாழ்வாதாரத் திட்டம் என்ற பெரிய திட்டத்தை எனது அரசு செயல்படுத்தி வருகின்றது.

**அம்மா உணவகங்கள்**

நகர்ப்புரங்களில் வசிக்கும் ஏழைகளும் நலிந்த பிரிவினருமே என்னுடைய திட்டங்களில் பிரதான இலக்கு ஆவார்கள்.

‘அம்மா உணவகங்கள்’ எனும் திட்டம் புரட்சிகரமான ஒரு திட்டம் ஆகும். 30 ஆண்டுகளுக்கு முன்னால் 1982ஆம் ஆண்டில் புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் அறிமுகப்படுத்தி அமல்படுத்திய சத்துணவுத் திட்டத்தைபோல, அம்மா உணவகம் திட்டம் ஏழைகளுக்கான சத்துணவுத் திட்டம் ஆகும். இத்திட்டம் ஏழைகளின் வாழ்க்கையை மாற்றி இருக்கிறது.

வெட்டவெளியைப் பொதுக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவதைத் தடுப்பதற்கு அரசு முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. இதற்காக விரிவான 3 ஆண்டுத் திட்டத்தை 2011–2012 ஆம் ஆண்டில் நகர்ப்புரங்களில் செயல்படுத்தி வெட்ட வெளியைப் பொதுக் கழிப்பிடமாகப் பயன்படுத்துவதைத்

தடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டம் தற்போது தொடர்ந்து செயல்படுத்தப்பட்டு 2013–2014ஆம் ஆண்டில் ரூ. 72.60 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ் பொதுக்கழிப்பறை வசதியை அதிகரிப்பதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கிராமப்புரப் பகுதிகளைப் பொருத்தவரை தனிநபர் கழிப்பறைகளுக்கு அலகு ஒன்றுக்கு நிதி 11,100 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 2001–2004ஆம் ஆண்டுக் காலக் கட்டத்தில் பெண்களுக்காக, ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்களைத் துவங்கினோம். ஆனால், 2006–2011ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் அவை பராமரிக்கப்படாமல் மூடிக் கிடந்தன. 2011–2012ஆம் ஆண்டுக் காலக்கட்டத்தில் அவை ரூ. 170 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டன. பெண்களுக்கான, ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகத் திட்டம் வெற்றி பெற்றதையடுத்து தற்போது அரசு, ஆண்களுக்கான ஒருங்கிணைந்த சுகாதார வளாகத்தை அமைத்துள்ளது. வெட்ட வெளியைக் கழிப்பிடமாகப் பயன்படுத்தாத மாநிலம் என்ற இலக்கை 2015ஆம் ஆண்டுக்குள் அடைய மாவட்ட ஆட்சித்தலைவர்கள் முக்கியப் பங்கு ஆற்றுவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

ஏழைகளுக்குக் குறைந்த கட்டணத்தில் பொதுச் சுகாதாரப் பாதுகாப்பு வழங்குவதில் தமிழகம் முன்னணியில் உள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை ரூ.750 கோடி செலவில் அரசு துவக்கியது. அந்தத் திட்டம் மாபெரும் வெற்றி பெற்றுள்ளது. அதே போல் மகளிருக்கான விலையில்லா நாப்கின்கள் வழங்கும் திட்டம் ரூ.55 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது.

டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வழங்கப்படும்

உதவித்தொகை ரூ.12 ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. இந்த முன்னோடித் திட்டங்களுடன் முக்கிய விஷயங்களில் கவனம் செலுத்தப்படுகிறது. வளர்ச்சி இலக்கை அடையும் வகையில் தமிழ்நாட்டில் கர்ப்பக் கால இறப்பு மற்றும் குழந்தை இறப்பு சதவீதம் குறைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க சாதனை ஆகும். இந்த சாதனையைத் தொடரும் வகையில் மாவட்ட ஆட்சியர்கள் இதில் மேலும் கவனம் செலுத்த வேண்டும். தொலைதூரம் மற்றும் பழங்குடிப் பகுதிகளில் உள்ள சவால்களைக் கண்டறிந்து நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும். தமிழகத்தில் ஆரம்ப சுகாதார நிலையங்கள், 2ஆம் நிலை சுகாதார மையங்கள், மண்டல சூப்பர் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனைகள், மருத்துவக் கல்லூரிகள் என விரிந்து பரந்த கட்டமைப்பை பெற்றுள்ளோம். இவற்றின் மூலம் மக்களுக்கு சிறந்த மருத்துவச் சேவைகள் வழங்கப்படுவதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதிப்படுத்திட வேண்டும்.

தொற்றா நோய்கள் தொடர்பான சவால்களை எதிர்கொள்ளும் அதே நேரத்தில் டெங்கு போன்ற தொற்று நோய்களைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும், அவசர சூழ்நிலைகளை எதிர்கொள்ளவும் அரசு வழிகாட்டு முறைகளை வழங்கி உள்ளது. நோய்கள் பரவுவதைத் தடுக்கவும், கட்டுப்படுத்தவும் உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் பல்வேறு துறைகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் உறுதிப்படுத்த வேண்டும்.

**கல்வி மேம்பாடு**

பள்ளிகளில் சிறப்பான கட்டமைப்பு வசதிகளை உருவாக்கி மிகச் சிறந்த சேவையைத் தமிழகம் வழங்கி வருகிறது. இதன் காரணமாக கல்வி மேம்பாட்டு அட்டவணையில் தமிழகம் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர், மாணவர் விகிதாச்சாரம் என்பது 1:27 என்ற சிறந்த அளவில் உள்ளது. இது நாட்டிலேயே

சிறப்பான நிலை ஆகும். அதேபோல் பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், கற்றல் உபகரணங்கள், சீருடைகள், போக்குவரத்து வசதி, சத்துமிக்க மதிய உணவு போன்றவற்றை அரசு அளித்து வருகிறது. அடுத்ததாகப் பள்ளிகளில் கல்வித் தரத்தை மேம்படுத்த, அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது. தனியார் பள்ளிகளிடம் பின்தங்கி விடாமல் இருக்க அரசுப் பள்ளிகளுக்குக் கற்கும், கற்பிக்கும் உபகரணங்கள், தொழில்நுட்ப வசதிகள் செய்து தரப்படுகின்றன.

சமூகத்தில் நலிந்த பிரிவினர் மற்றும் பெண் குழந்தைகளின் கல்வியில் சிறந்த கவனம் செலுத்தப்படுகிறது. கல்வி அறிவு பெறுவதில் பாலியல் ரீதியான பாகுபாட்டைக் குறைக்கவும் 10 ஆண்டுகளில் கல்லாமையை இல்லாமல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆதிதிராவிடர்கள், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் ஆகியோரின் கல்விக்காக அரசு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மாணவ, மாணவியர்க்குக் கல்வி உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது;

அதேபோல் புதிய விடுதிகள் கட்டப்படுவதுடன், விடுதிகளைப் பராமரித்திடும் பணிகளும் மேற்கொள்ளப் படுகின்றன. மாவட்ட ஆட்சியர்கள் இதனைக் கண்காணித்து உரிய பயனாளிகள் பயன்பெறுவதை உறுதி செய்திட வேண்டும். மாநிலத்தின் முன்னோடித் திட்டமாக அனைத்து மேல் நிலைப்பள்ளி மற்றும் கல்லூரி மாணவ மாணவியர்க்கு விலையில்லா மடிக்கணினிகள் வழங்கப்பட்டு வருகின்றன. கணினி அறிவை மேம்படுத்துவதற்கும், டிஜிட்டல் இடைவெளியைக் குறைப்பதற்கு இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதேபோல் விலையில்லா மின்விசிறி, மிக்சி, கிரைண்டர்கள் அனைத்து ஏழை மக்களுக்கும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இவற்றின் விநியோகத்தை மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கவனத்துடன் கண்காணிக்க வேண்டும்.

**தொழிற்பூங்காக்கள்**

வரும் ஆண்டுகளில் 9 தென்மாவட்டங்களில், 20ஆயிரத்து 650 ஏக்கர் நிலப்பரப்பில் 9 புதிய தொழில் பூங்காக்கள் உருவாக்கப்படும். இந்த மாவட்டங்களில் பொருளாதார மேம்பாடு மற்றும் வேலைவாய்ப்புக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில், இத்தொழில் பூங்காக்களில் தொடங்கப்படும் தொழில் நிறுவனங்களுக்கு சிறப்புச் சலுகை நீட்டிக்கப்படுகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு அண்மையில் சலுகைகளை நான் அறிவித்தேன். தொழிற்சாலை மற்றும் எந்திரங்களுக்கான மூலதன மானியம் 25 சதவீதம் அதிகரிக்கப்பட்டுள்ளது. குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக 2 ஆயிரம் ஏக்கரில் நில வங்கி ஒன்றை சிறுதொழில் வளர்ச்சிக்கழகம் உருவாக்கும். வர்த்தகம் தொடங்குவதற்கான நடைமுறைகளை எளிதாக்க ஒற்றைச் சாளர முறை ஏற்படுத்தப்பட்டுள்ளது. சிதறிக் கிடக்கும் இத்தகையத் தொழில் நிறுவனங்களைத் தன்னிறைவான தொழில் வளாகங்களில் ஒருங்கிணைக்க நடவடிக்கை எடுக்கப்படும். மாவட்ட ஆட்சியர்கள் தங்கள் மாவட்டங்களில் தொழில் வளர்ச்சிக்கு முக்கியப் பங்காற்ற வேண்டும். தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், தேவையான நிலம் உள்ளிட்ட ஒப்புதல்கள் கிடைப்பதை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் உறுதி செய்யவேண்டும்.

கடந்த இரண்டு மாநாடுகளில் உங்களுடைய மாவட்டங்களில் செயல்படுத்துவதற்காக உங்களில் பலர் திட்டங்களையும், வேண்டுகோள்களையும் விடுத்திருந்தீர்கள். அவற்றைப் பரிசீலித்தப்பின் 2011ஆம் ஆண்டு நான் 81 முக்கிய

அறிவிப்புகளையும், 2012ஆம் ஆண்டு 346 அறிவிப்புகளையும் வெளியிட்டேன். உங்களுடைய மாவட்டங்களில் திறமையான நல்ல நிருவாகம் வழங்கவும், வளர்ச்சித் திட்டங்கள் மற்றும் மக்களின் நல்வாழ்வுக்கான எனது அரசின் நிகழ்ச்சி பணிகளை நிறைவேற்றவும் தேவையான ஆதரவு மற்றும் சிறந்த சாத்தியமான வாய்ப்பை உங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது என்னுடைய விருப்பமாகும். 2011ஆம் ஆண்டின் 81 அறிவிப்புகள் குறித்து தேவையான அரசு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்பதை உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன். 2012ஆம் ஆண்டின் 346 அறிவிப்புகளில் 332 அறிவிப்புகளுக்கு அரசு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்கள் அனைத்தும் அடிமட்ட மக்களுக்கு போய் சேர்ந்துள்ளதா என்பதை நீங்கள் அனைவரும் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

சட்டம் – ஒழுங்குப் பராமரிப்பு மற்றும் பல்வேறு விதமான வளர்ச்சித் திட்டங்களை உள்ளடக்கிய விரிவான பணிகள் நம் முன்னே இருக்கின்றன. இதன் மீது உங்களுடைய ஆக்கப்பூர்வமான விவாதங்களை நான் எதிர்பார்க்கிறேன். சுருக்கமாகவும், பொருளையொட்டியும், கருத்தாழமிக்கதுமான உங்களுடைய உரைகளை நான் கேட்க விரும்புகிறேன். மக்களின் விருப்பங்களை எதிரொலிக்கும் இந்த அரசின் எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் நீங்கள் உங்கள் செயல்பாடுகளை மேம்படுத்திக்கொள்ள வேண்டும்.

* * *

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகத்தில் 12.12.2013 அன்று
நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மாநாட்டில்
ஆற்றிய உரையின் தமிழாக்கம்.




## அரசின் நலத்திட்டங்கள் ஏழை மக்களை முழுமையாகச் சென்று சேரவேண்டும்!

**மா**ண்புமிகு அமைச்சர்களே,

தலைமைச் செயலாளர் அவர்களே,

அரசுத் துறைகளின் செயலாளர்களே,

அரசுத் துறைகளின் தலைவர்களே,

மாவட்ட ஆட்சித்தலைவர்களே மற்றும் அரசு அலுவலர்களே,

**த**மிழ்நாட்டில் சட்டம், ஒழுங்கைப் பராமரிப்பது குறித்து நேற்று நாம் ஆக்கப்பூர்வமான விவாதத்தை நடத்தினோம். இன்று நாம் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்ய உள்ளோம்.

எனது தலைமையிலான அரசு கொண்டு வந்துள்ள மக்கள் நலத் திட்டங்கள் மற்றும் புதிய முயற்சிகளை நடைமுறைப்படுத்தப்படுவது பற்றி ஆய்வு செய்வதற்கு இந்நிகழ்வு ஒரு நல்ல வாய்ப்பாக அமைந்துள்ளது. எனது அரசின் திட்டங்கள் சாதாரண ஏழை மக்களின் வாழ்வில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் மற்றும் வளர்ச்சி பற்றி பார்க்கலாம்.

தேசியப் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள மந்தநிலை மாநிலப் பொருளாதார வளர்ச்சியிலும் கடும் பாதிப்பை ஏற்படுத்தி உள்ளது. 2012இல் ஏற்பட்ட கடும் வறட்சி, நமது மாநிலத்தின் வளர்ச்சியைக் குறிப்பாக வேளாண்மை மற்றும் அது சார்ந்த தொழில்களைக் கடுமையாகப் பாதித்துள்ளது. பொருளாதார வளர்ச்சியைச் சீரமைத்திடச் செய்ய எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும். நமது பொருளாதார வளர்ச்சியை மீண்டும் உயர் அளவுக்குக் கொண்டு செல்ல வேண்டியது அவசியமாகும். மாநிலத்தின் அனைத்துத் துறைகளிலும் நாம் எடுத்து வரும் அயராத நடவடிக்கைகள் காரணமாக 2013–2014ஆம் ஆண்டுக்கான வளர்ச்சி இலக்கை எட்டி சாதனைப் படைக்க முடியும் என்று நான் மிக உறுதியாக நம்புகிறேன்.

தமிழ்நாட்டில் நான் கடைப்பிடித்து வரும் வளர்ச்சி மாதிரியானது, உட்படுத்தப்பட்ட, ஒருங்கிணைந்த வளர்ச்சியாகும். இதன் மூலம் சமமான மேம்பாட்டைப் பெற்று சாதனை படைத்துள்ளது. ஒருங்கிணைந்த, உட்படுத்தப்பட்ட வளர்ச்சி என்பது முக்கியமானது. இந்த வளர்ச்சிப் பணியில் எவர் ஒருவரும் தங்களை உட்படுத்தாமல் இருக்கக்கூடாது என்பதை உறுதி செய்வது மாநில அரசின் கடமையாகும். அதாவது

அரசின் நலத்திட்டங்கள், ஒவ்வொன்றும் சமுதாயத்தில் மிகவும் நலிந்த நிலையில் இருக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட மக்கள், மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்கள், பெண்கள், குழந்தைகள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்குச் சென்று சேர்ப்பதில் உங்கள் ஒவ்வொருக்கும் சிறப்புப் பொறுப்பு உள்ளது. எனவே, அரசின் நலத்திட்டங்கள் ஏழை மக்களை முழுமையாகச் சென்று சேர வேண்டும். அதற்கு நீங்கள் ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித்தலைவர்கள் கண்டிப்பான அதிகாரிகள் என்பதை விட, மக்களுக்கு ஆதரவுக்கரம் நீட்டுபவர்களாக இருப்பவர்கள் என்ற பரந்த உள்ளத்துடனும், மனிதாபிமானத்துடனும் செயலாற்றுபவராக இருக்க வேண்டும். இயற்கைப் பேரழிவு மற்றும் உள்ளூர்ப் பிரச்சினைகள் ஏற்படும்போது பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தருபவராக இருக்க வேண்டும் என்று ஒரு அறிஞர் சொன்னதை இன்று நினைவுபடுத்த விரும்புகிறேன். எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களும் இத்தகைய எண்ணத்துடன் பணியாற்ற வேண்டும் என்பதையே நான் எதிர்பார்க்கிறேன்.

இன்று விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படும் முக்கிய அம்சங்கள் மீது நீங்கள் அர்த்தமுள்ள, ஆக்கப்பூர்வமான விவாதத்தை மேற்கொள்வீர்கள் என்று கருதுகிறேன். எனது தலைமையிலான அரசு கொண்டு வந்துள்ள ஏராளமான மக்கள் நலத்திட்டங்கள் உரிய பயனாளிகளுக்கு எப்படிச் சென்று சேர்ந்தது என்பதையும் உங்கள் மூலம் தெரிந்து கொள்ள உள்ளேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் சென்னை, தலைமைச் செயலகத்தில் **13.12.2013** அன்று நடைபெற்ற காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில் ஆற்றிய உரையின் தமிழாக்கம்




## காவல்துறைக்கு எனது அரசு பணிச் சுதந்திரம் அளித்துள்ளது!

**மா**ண்புமிகு அமைச்சர்களே,
தலைமைச் செயலாளர் அவர்களே,
உள்துறை முதன்மைச் செயலாளர் அவர்களே,
காவல் துறைத் தலைவர் அவர்களே,

காவல்துறை உயர் அதிகாரிகளே
மாவட்டக் காவல் கண்காணிப்பாளர்களே மற்றும்

இம்மாநாட்டில் பங்கேற்றுள்ள பேராளர்களே.......

**மா**வட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் கூட்டுக் கூட்டத்தில், சட்டம்—ஒழுங்கைப் பராமரிக்க மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பயனுள்ள ஆலோசனைகள் விரிவாக விவாதிக்கப்பட்டன.

சட்டம்—ஒழுங்கு என்பது முக்கியமான விஷயம் என்ற போதிலும், இந்த அம்சம் காவல்துறையினரின் கடமைகளில் ஒரு பகுதிதான். குற்றங்கள் நடைபெறாமல் தடுத்தல், குற்றங்களைக் கண்டுபிடித்தல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல், முக்கியப் பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு அளித்தல், முக்கியமான அமைப்புகளுக்குப் பாதுகாப்பு வழங்குதல், இயற்கைச் சீற்றங்களைச் சமாளித்தல், பல்வேறு சமூக சட்ட விதிகளைச் செயல்படுத்துதல் போன்ற விரிவான பணிகள் காவல்துறையினருக்கு இருக்கிறது.

காவலர், பெண் காவலர் ஆகியோருக்கு 3 முக்கியப் பணிகள் இருக்கின்றன. முதலாவதாக, சமூகத்தின் பாதுகாவலர் என்ற வகையில், பயங்கர குற்றவாளிகளிடமிருந்து சமூகத்தைப் பாதுகாக்கும் அரணாக அவர்கள் விளங்க வேண்டும். இரண்டாவதாக, சட்டத்தின் அங்கம் என்ற வகையில், சமுதாயச் செயல்பாடுகளில் ஒழுங்கை ஏற்படுத்த காவலர்கள் சட்ட விதிகளை நடுநிலையோடு செயல்படுத்தும் நடுவராகவும் செயலாற்ற வேண்டும். மூன்றாவதாக, ஒரு அரசு ஊழியர் என்ற முறையில் சட்டத்திற்கு அப்பாற்பட்டும் கூட காணாமல்போன குழந்தைகளைக் கண்டுபிடிப்பது, நடுவழியில் நின்றுபோன காரைத்தள்ளிவிடுவது போன்றநட்பு முறையிலான பணிகளையும் அவர்கள் மேற்கொள்ள வேண்டும். இதனால்தான், காவல்துறை அதிகாரிகள் ''சாலமனைப்'' போன்ற அறிவுக்கூர்மையுடனும், ''சாம்சனைப்'' போன்ற வலிமையுடனும், ''ஜாப்'' போன்ற பொறுமையுடனும், ''மோசஸ்'' போன்ற தலைமைப் பண்புடனும்,

நல்ல சமாரிடன் போன்ற இரக்க உணர்வோடும் விளங்க வேண்டும் என ஓர் அறிஞர் கூறியுள்ளார்.

இதுபோன்ற உயரிய இலட்சியங்கள் மற்றும் சில சந்தர்ப்பங்களில் அதிகப்படியான எதிர்பார்ப்புகள் காவல்துறை மீது பெரும் சுமையை ஏற்றிவிடுகின்றன. ஆனால், தமிழகக் காவல்துறையினருக்கு எனது அரசுப் பணிச் சுதந்திரம் அளித்துள்ளதால், அவர்கள் எந்த வகையான சவால்களையும் திறம்படச் சமாளித்து வருகின்றனர். அண்மையில், பக்ருதீன் கைது செய்யப்பட்டதும், அதனைத் தொடர்ந்து ஆந்திர மாநிலம் புத்தூரில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது அவரது 2 கூட்டாளிகள் உயிருடன் கைது செய்யப்பட்டதும் குறிப்பிடத்தக்க சாதனையாகும். இதற்காகக் காவல்துறையைச் சேர்ந்த 260 பேருக்கு நான் நேரடியாகப் பாராட்டுத் தெரிவித்ததுடன், ஒரு இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரை ரொக்கப்பரிசு வழங்கியுள்ளேன். மேலும், 20 காவல்துறையினருக்குப் பதவி உயர்வும் அளித்துள்ளேன்.

இதுபோன்ற பரபரப்பான நடவடிக்கைகள் பெரிய செய்திகளாக ஆகிவிடுகின்றன. அதே சமயம், காவல்துறையினரின் கடும் உழைப்பு பொதுமக்களால் பல்வேறு சந்தர்ப்பங்களில் கவனிக்கப்படுவதே இல்லை. உதாரணமாக, அச்சுறுத்தல் உள்ள முக்கியப் பிரமுகர்களின் வருகையின்போதும், குறிப்பிட்ட சமுதாயத் தலைவர்களின் ஆண்டு விழாக்கள் அல்லது பெரிய கோவில் விழாக்கள் போன்றவற்றில் காவல்துறையினர் பெரும் உழைப்பைச் செலவிடுகின்றனர். இந்த நிகழ்வுகள் அமைதியாக நடப்பதற்கு, விரிவான ஏற்பாடுகள் செய்யப்படுவதோடு, கடும் முயற்சியும் காவல்துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது. காவல் துறையினர் சந்திக்கும் பல்வேறு சிரமங்களை நான் அறிவேன். இதனால்தான் தனிப்பட்ட காவலர்களின் நலன், முழுக் காவல்துறையின் நலன் மற்றும் காவல்துறை ரீதியான நலன் ஆகியவை குறித்து, எனது அரசு மிகுந்த கவனம் செலுத்தி வருகிறது.

இத்தருணத்தில் எனது சில முன்னுரிமைகள் குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். நீங்கள் (காவல்துறையினர்) 9 இலட்சம் பேரைக் கைது செய்தால், அவர்களில் ஒருவர் போலீஸ் காவலில் உயிரிழந்தால் கூட அது புள்ளிவிவர அடிப்படையில் முக்கியத்துவமற்றதாகவே தோன்றலாம். ஆனால், இறந்த அந்த மனிதன், அவனை நேசித்தவர்களுக்கு வெறும் புள்ளி விவரம் அல்ல. சந்தேகத்தின் பேரில் பிடித்துச் செல்லப்பட்டவர்கள் திடீரென உடல்நலம் குன்றிக் காவல் நிலையத்தில் உயிரிழக்கும் சம்பவங்கள் பற்றிய செய்திகள் வருகின்றன; அல்லது காவலில் இருக்கும்போது தற்கொலை செய்து கொள்கின்றனர்.

வீடுகளிலும், பணியிடங்களிலும் பொது இடங்களிலும் உள்ள குடிமக்களைப் பாதுகாக்க வேண்டிய நிலையில் உள்ள காவல்துறையினர் இருக்கும்போது காவல் நிலைய வளாகத்திற்குள்ளேயே ஒரு குடிமகன் உயிரிழந்தால், அது நீதியை கேலிக்குரியதாக்கிவிடும்.

தகவல் தொடர்பு சாதனங்கள் பெருகிவிட்டதாலும், புழக்கம் எளிதாகிவிட்டதாலும் குற்றங்களின் தன்மை மாறிவிட்டன. ஒரு காலத்தில் மாவட்டங்களுக்கு இடையே செயல்படும் குற்றவாளிகளைப் பற்றிக் காவல்துறையினர் கவனம் செலுத்தி வந்தனர். இன்று மாநிலங்களுக்கு இடையே, நாடுகளுக்கு இடையே செயல்படும் குற்றவாளிகளைக் கண்காணிக்க வேண்டியுள்ளது. புது வகையான குற்றங்கள் தலைதூக்கி வருகின்றன. மிகவும் வெறுக்கத்தக்க குற்றங்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வது மட்டும் போதாது. அவர்களின் ஜாமீன் மனுக்களைக் கடுமையாக எதிர்ப்பதுடன், குற்றப்பத்திரிகையை விரைவில் தாக்கல் செய்து விசாரணையை விரைந்து முடிக்க ஆவன செய்ய வேண்டும்.

காவல்துறை அதிகாரிகளின் இன்றைய மாநாட்டின்போது, பிரச்சினைகளை அலசுவதுடன், அவற்றிற்குப் பயனுள்ள தீர்வுகளும் காணப்படும் என நம்புகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகத்தில் 13.12.2013 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாட்டில் ஆற்றிய நிறைவுரை மற்றும் அறிவிப்புகளின் தமிழாக்கம்!




## தமிழகத்தில் அமைதி நிலவுகிறது

**த**மிழக அரசின் இந்த ஆண்டுக்கான நிருவாக நடைமுறைகளில் தற்போது நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளின் மாநாடு ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. அரசால் அறிவிக்கப்பட்ட

திட்டங்கள் மற்றும் பல்வேறு கொள்கைகளை நடைமுறைப் படுத்துவதற்கு மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கும், காவல்துறை அதிகாரிகளுக்கும் இந்த மாநாடு வாய்ப்பாக அமைந்துள்ளது. தமிழக அரசின் கொள்கைகளையும், நலத்திட்டங்களையும், செயல்படுத்துவதற்கு, மாநாட்டில் கலந்து கொண்ட அதிகாரிகள் இம்மாநாட்டை ஒரு வாய்ப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். மாநாட்டில் கலந்து கொண்ட அதிகாரிகள் திட்டங்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சியை, ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்வதற்கு இக்கூட்டம் வழிவகுத்துள்ளது.

மாவட்டங்களின் தேவைகள் மற்றும் பிரச்சினைகளைத் தெளிவாகத் தெரிந்துகொண்டு, ஆட்சி மேலிடத்துக்குத் தெரியப்படுத்தும்போது தான் அவை காலதாமதமின்றி உடனடியாக நிறைவேற்றி வைக்கப்படும். மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகளுக்கான இந்த மாநாடு, அவர்களின் தேவைகளை எடுத்துச் சொல்வதற்கும், வலிமையாக வழிநடத்திச் செல்வதற்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது.

இந்த மாநாட்டில் நடைபெற்ற விவாதங்கள், பல்வேறு மட்டங்களில் போதிய அளவு தீவிரமான, வலிமையான ஒரு நிருவாகத்தைத் தரும் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை.

தமிழக முதலமைச்சர் என்ற முறையில், என்னுடைய கண்ணோட்டத்தில், மாநிலத்தை முன்னேற்றுவதில் உங்களுடைய பணி எனக்கு மிகுந்த மனநிறைவை அளிக்கிறது. தமது அரசின் தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், மாவட்ட நிருவாகமும், காவல்துறையும் ஒருங்கிணைந்து பணியாற்றுவது பாராட்டுக்குரியது.

இதன்மூலம் பொது அமைதி சிறப்பாக நிலைநாட்டப்பட்டுள்ளது. காவல்துறையினர் சுதந்திரமாகச் செயல்பட நான் அனுமதித்திருப்பதால், சட்டம் ஒழுங்கு சிறப்பாகப் பராமரிக்கப்பட்டு, தமிழகத்தில் அமைதி நிலவுகிறது.

இம்மாநாட்டிற்காக மாவட்ட ஆட்சியாளர்கள் எடுத்த கடுமையான முயற்சிகளை நான் பெரிதும் பாராட்டுகிறேன். இதற்கு உதாரணம் ஒலி–ஒளி காட்சிகள் மூலம் தங்கள் கருத்துகளைத் தெரிவித்திருப்பது. என்னுடைய அரசால் அறிவிக்கப்பட்ட பல நலத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்தித் திட்டங்களின் பயன்களும் மக்களைச் சென்றடைந்திருப்பதை இக்காட்சிகள் துல்லியமாக எடுத்துக்காட்டுகின்றன. உங்கள் ஒவ்வொருவருடைய பணிகளிலும் நீங்கள் காட்டிய அர்ப்பணிப்பு, கடும் உழைப்பு, விசுவாசம் ஆகியவைதான் என்னுடைய அரசாங்கத்தின் கொள்கைத் திட்டங்களையும், மற்ற திட்டங்களையும் செயல்படுத்துவதில் மிக முக்கியப் பங்காற்றுகிறது.

தங்களுடைய மாவட்டங்களுக்காக மாவட்ட ஆட்சித்தலைவர்கள் சில கருத்துருக்களை என்னிடம் கூறியிருக்கின்றனர். அந்தக் கருத்துருக்களின் எண்ணிக்கையையும் தன்மையையும் பார்க்கும்போது தங்களுடைய மாவட்டத் தேவைகளையும், மக்களின் நாடித்துடிப்பையும் அவர்கள் எவ்வளவு துல்லியமாக கணித்திருக்கிறார்கள் என்பது புரிகிறது. இந்தக் கருத்துருக்களை உருவாக்குவதில், அவர்கள் கணிசமான கடும் உழைப்பையும், கவனத்தையும் செலுத்தியிருக்கிறார்கள் என்பது புரிகிறது. மக்களின் துன்பங்களைத் தீர்ப்பதற்கு நீங்கள் காட்டும் ஈடுபாட்டை இவை எடுத்துக்காட்டுகின்றன.

காவல்துறை அதிகாரிகள் அர்ப்பணிப்புடனும், முழு ஒப்படைப்புடனும் தங்கள் பணிகளை மேற்கொள்கின்றனர். இவைதான் தமிழ்நாட்டுக் காவல்துறையை நாட்டிலேயே சிறந்த காவல் படையாக உயர்த்தி இருக்கிறது. தலைமை என்பது பல தனிப் பண்புகளைக் கொண்டது. நாம் யாரை வழிநடத்திச் செல்கிறோமோ அவர்கள் நலனில் அக்கறை காட்டுவது இதில் முக்கியக் கூறாகும். காவல்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சியர்களும் இணைந்திருந்த கூட்டத்தில் சில இளம் அதிகாரிகள், காவலர்களுக்கும் அவர்களின் குடும்பங்களுக்கும் குடிநீர் வசதி உட்பட பல அடிப்படைத் தேவைகளையும் செய்து தருமாறு கேட்டபோது நான் நெகிழ்ந்து போனேன். தங்களின் கீழ் பணிபுரியும் காவலர்களின் நலனில் அவர்கள் காட்டும் அக்கறையை இந்நிகழ்வு நன்றாக வெளிப்படுத்துகிறது. இந்த அதிகாரிகளின் தலைமைத் தன்மையை நான் உண்மையாகப் பாராட்டுகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளில் உங்களது கோரிக்கைகளுக்கு ஏற்ப நான் எண்ணற்ற வளர்ச்சித் திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறேன். இம்மாநாட்டில் நான் ஆற்றிய எனது தொடக்க உரையில் குறிப்பிட்டதுபோல், மாவட்டங்களில் சிறந்த நிருவாகத்தைத் தருவதிலும், அரசின் நலத்திட்டங்களையும், வளர்ச்சியையும் ஏற்படுத்துவதில் சிறந்த வாய்ப்புகளை ஏற்படுத்தித் தருவதிலும், அரசு ரீதியாக தேவையான உதவிகளைச் செய்து கொடுப்பதும் என்னுடைய விருப்பமாகும். இந்த ஆண்டும், உங்களது கோரிக்கைகளின் அடிப்படையில், எனது அரசால் பல்வேறு புதிய வளர்ச்சித் திட்டங்கள் தொடங்கி வைக்கப்படும்.

அரசின் நிதி ஆதாரங்கள் எல்லையற்றதாக இல்லை என்பதை நீங்கள் மறக்கக் கூடாது. இருக்கும் ஆதாரங்களை முன்னுரிமை கொடுக்கும் திட்டங்களுக்குச் செலவிடவேண்டிய

நிலையில் நாம் இருக்கிறோம். களப்பணியாளர்களாக நீங்கள் இருப்பதால் உங்களுக்கு அனுமதிக்கப்பட்ட தொகைகளைப் பயனளிக்கக் கூடிய வகையில் செலவிட வேண்டும். நிரந்தரப் பயன்தரக்கூடியவற்றை நீங்கள் விரைவாக ஏற்படுத்த வேண்டும். நீங்கள் விரைந்தும், சிறந்த முறையிலும் சேவையாற்ற வேண்டும். எவற்றை நோக்கி இந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகிறதோ அவற்றை அடையச் செய்ய வேண்டியது உங்கள் கடமையாகும். நமது ஜனநாயகத்தில் இந்த வகையில் மக்களுக்காக நாம் கடமைப்பட்டிருக்கிறோம்.

இந்த ஆண்டுநீங்கள் செய்த சிறப்புப் பணிகளுக்காக உங்கள் ஒவ்வொருவருக்கும் மீண்டும் என்னுடைய பாராட்டுதல்களையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். உங்களுடைய கவனத்தைச் சிதறவிடாதீர்கள்; உங்கள் முயற்சிகளைத் தளர்த்திவிடாதீர்கள். முதல்நாள் நான் கூறியபடி நம்முடைய சாதனைகளை நினைத்து மெத்தனமாக இருந்து விடக்கூடாது. நம்முடைய ஜனநாயகத்திலே மக்கள்தான் தலைவர்கள். அவர்களுக்கு அரசின் திட்டங்களை வழங்குவதற்கு நம்மை மறு அர்ப்பணிப்பு செய்வதற்கு இந்தத் தருணத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். வரும் ஆண்டில் உங்கள் பணி மேலும் சிறப்பாக அமைய வேண்டும் என்று நான் மீண்டும் வலியுறுத்துகிறேன்.

இந்த மூன்று நாள் மாநாட்டின் விளைவாக ஆழ்ந்த பரிசீலனைக்குப்பின் பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

**312 அறிவிப்புகள்**

1. கோயம்புத்தூர் மாவட்டம் வடவள்ளி, அன்னூர் மற்றும் மதுக்கரை காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும்.

2. கோயம்புத்தூர் மாவட்டம் பேரூரில் துணைக் காவல் கண்காணிப்பாளர் முகாம் அலுவலகத்துடன் குடியிருப்புக் கட்ட அனுமதி வழங்கப்படும்.

3. கோயம்புத்தூர் மாவட்டம் கருமாதம்பட்டியில் புதிய காவல் துணைக் கோட்டம் உருவாக்கப்படும்.

4. 40 வயது பூர்த்தி அடைந்த காவலர்களுக்கு ஆண்டுக்கு ஒருமுறை அரசு மருத்துவமனைகளில் கட்டணமின்றி முழு உடல் பரிசோதனை செய்து கொள்ள அனுமதிக்கப்படும்.

5. கோயம்புத்தூர்மாநகரத்தில்ஆயுதப்படைகாவல்பிரிவிற்குப் புதிய முகாம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

6. கடலூர் மாவட்டம் புவனகிரி காவல்நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

7. கடலூர் மாவட்டம் திட்டக்குடி துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் குடியிருப்பு கட்ட அனுமதி வழங்கப்படும்.

8. அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் போக்குவரத்துக் காவல்நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

9. அரியலூர் மாவட்டத்திற்குச் சிறப்புப் பிரிவு ஆய்வாளர் பணியிடம் ஒன்று சீரமைப்பு மூலம் உருவாக்கப்படும்.

10. திருவண்ணாமலை, வேலூர் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் உள்ள மதுவிலக்கு காவல் பிரிவில் காவலர்களின் எண்ணிக்கையை மறுசீரமைத்து அதிகப்படுத்தப்படும்.

11. திண்டுக்கல் ஊரகக் காவல் துணைக்கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

12. திண்டுக்கல் காவல் பணிப் பயிற்சி மையம் அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

13. மதுரை மாவட்டம் சிலைமான் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

14. மதுரை மாவட்டம் ஊமச்சிக்குளம் துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் குடியிருப்புக் கட்ட அனுமதி வழங்கப்படும்.

15. காவலர்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் மதுரை மாநகரத்தில் உள்ள காவல் குடியிருப்புகளில் 6 புதிய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்கப்படும்.

16. சென்னை மாநகரைப் போல அனைத்து மாநகரக் காவல்துறைத் துணை ஆணையர்களுக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 107,108 மற்றும் 110 பிரிவுகளின் கீழ் அதிகாரங்கள் வழங்கப்படும்.

17. மதுரை மாநகரக் காவல் குடியிருப்புக்குக் குடிநீர் வாகனம் ஒன்று வழங்க அனுமதி வழங்கப்படும்.

18. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவெறும்பூரில் புதிய வட்டார மருத்துவமனை அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

19. திருச்சி மாநகரத்தில் ஸ்ரீரங்கம் சட்டம் ஒழுங்கு, குற்றப்பிரிவு மற்றும் போக்குவரத்துக் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

20. திருச்சி மாநகரத்தில் ஸ்ரீரங்கம் பகுதிக்குப் போக்குவரத்து ஆய்வாளர் பணியிடம் ஒன்று உருவாக்கிட அனுமதி வழங்கப்படும்.

21. திருச்சி மாநகரத்தில் ஆயுதப்படைக் காவல் பிரிவிற்குப் புதிய முகாம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

22. நாகப்பட்டினம் மற்றும் திருவாரூர் மாவட்டங்களில் பணியிடங்களை மறுசீரமைத்து மதுவிலக்குத் தடுப்புப் பிரிவு உருவாக்க அனுமதி வழங்கப்படும்.

23. மேல்மலையனூரில் 150 ஆண்காவலர்கள் மற்றும் 50 பெண்காவலர்கள் தங்கும் வகையில் விடுதிக் கட்டப்படும்.

24. விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தேசிய மற்றும் மாநில நெடுஞ்சாலைகளில் 35 விபத்து நிகழக்கூடிய பகுதிகளில் உயர் கோபுர மின்விளக்குகள் அமைக்கப்படும்.

25. திருப்பூர் மாவட்டம் செவ்வூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

26. திருப்பூர் மாவட்டம் அவினாசி துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்ட அனுமதி வழங்கப்படும்.

27. திருப்பூரில் மோப்பநாய்ப் பிரிவிற்கு ஒரு கென்னல் (நாய் தங்குமிடம்) அமைக்க அனுமதி வழங்கப்படும்.

28. தற்போது உதவி காவல் ஆய்வாளர்கள் நிலையில் உள்ள, திருப்பூர் மாவட்டம் தளி, மூலனூர் மற்றும் குடிமங்கலம் காவல் நிலையங்கள் ஆய்வாளர் நிலையில் தரம் உயர்த்தப்படும்.

29. திருப்பூர் மாநகரக் காவல் ஆணையரகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

30. திருப்பூர் வடக்குக் காவல் நிலையம், போக்குவரத்துக் காவல் நிலையம் மற்றும் அனைத்து மகளிர் காவல்

நிலையம் ஆகியவற்றிற்குப் புதியக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

31. திருப்பூர் மாநகரக் காவல் ஆணையரகத்தில் பணியாற்றும் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட அனுமதி வழங்கப்படும்.

32. கரூரில் சுண்ணாம்புக் குறும்புதூர் –NHAI புறவழிச்சாலை (NH 67) (18/2 கி.மீ) மற்றும் ஈமூர் மற்றும் புதூர் 208/8கி.மீ. (NH 67) வட்டச்சாலைகளை இணைக்கும் வகையில் ஒரு இணைப்புச்சாலை அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

33. கரூர் தேசிய நெடுஞ்சாலை 7இல் (299/6 கி.மீ.இல்) உள்ள சுக்களியூரையும் தேசிய நெடுஞ்சாலை 67இல் (224/2 கி.மீ.இல்) தண்ணீர் பந்தலையும் இணைக்கும் சாலை அமைக்கப்படும்.

34. திருச்சிராப்பள்ளி மாவட்டம் உன்னியூரையும், கரூர் மாவட்டம் நெரூரையும் இணைக்கும் வகையில் காவேரி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

35. வெள்ளியனி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

36. கரூர் ஊரகக் காவல் துணைக் கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

37. சேலம் ஊரகக் காவல் உதவிக் கோட்டம் மற்றும் வாழப்பாடி காவல் துணைக் கோட்டங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும்.

38. சேலம் மாவட்டம் ஏற்காடு மற்றும் கருமாந்துறை காவல் ஆய்வாளர்களுக்குப் புதிதாக நான்குச் சக்கர வாகனங்கள் வழங்கப்படும்.

39. தஞ்சாவூர் மாவட்டம் மெலட்டூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

40. தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் தஞ்சாவூர் மாவட்டம் கபிஸ்தலம் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

41. ஈரோடு மாவட்டம் கருங்கல்பாளையம் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் வழங்கப்படும்.

42. ஈரோடு மாவட்டம் பெருந்துறை துணைக் காவல் கண்காணிப்பாளர் அலுவலகம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

43. கன்னியாகுமரி மாவட்டம் மண்டைக்காடு புதூரில் கடல் அரிப்பைத் தடுக்கும் வகையில் தடுப்பு அரண் அமைத்திட நடவடிக்கை எடுக்கப்படும்.

44. செங்கல்பட்டு உதவிக் காவல் கோட்டத்தை இரண்டாகப் பிரித்து வண்டலூர் துணைக் காவல் கோட்டம் புதிதாக உருவாக்கப்படும்.

45. காஞ்சிபுரம் மாவட்டத்தில் போக்குவரத்துக் காவல் உதவி ஆய்வாளர் பணியிடம் போக்குவரத்துக் காவல் ஆய்வாளர் பணியிடமாகத் தரம் உயர்த்தப்படும்.

46. காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலை நகரில் காவல் படைக்குடியிருப்பு அமைக்கப்படும்.

47. தற்போது நடைமுறையிலுள்ள காவல் விதிகளில் திருத்தம் செய்யப்பட்டு ரூ. 2 இலட்சத்திற்கு மேற்பட்ட வீடு புகுந்து செய்யும் திருட்டு, ரூ. 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட திருட்டுகள் கடுங்குற்றங்களாக கருதப்படும்.

48. மேற்குப் புறவழிச் சாலையுடன் என்.எச் 7 திருநெல்வேலி – அம்பாசமுத்திரம் சாலை, திருநெல்வேலி – தென்காசி

சாலை மற்றும் திருநெல்வேலி – சங்கரன் கோயில் சாலைகளை இணைத்திட அனுமதி வழங்கப்படும்.

49. திருநெல்வேலி மற்றும் பாளையங்கோட்டையை இணைக்கும் வகையில் மதுரை கன்னியாகுமரி சாலையில் (150/2 கி.மீ.இல்) தாமிரபரணி ஆற்றின் குறுக்கே ஏற்கெனவே உள்ள பழைய பாலத்திற்குப் பக்கவாட்டில் உயர்மட்டபாலம் அமைக்கப்படும்.

50. திருநெல்வேலி மாவட்டம் நம்பித்தலைவன் என்னும் ஊரில் எரிவாயு தகன மேடை அமைக்க அனுமதி வழங்கப்படும்.

51. திருவண்ணாமலையில் மையப் பேருந்து நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

52. வேட்டவலம் பேரூராட்சியில் புறவழிச் சாலை அமைக்க அனுமதி வழங்கப்படும்.

53. திருவண்ணாமலை மாவட்டம் படவேடு ஊராட்சியில் கமண்டல் நகநதியின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

54. திருவண்ணாமலையில் உள்ள 9 பெரிய சாலைகளிலும் வாகனம் நிறுத்துமிடங்கள் உருவாக்கப்படும்.

55. நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் மற்றும் குமாரப்பாளையம் காவல் நிலையங்களில் காவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டப்படும்.

56. புதுக்கோட்டை ஆயுதப்படை வளாகத்தில் சுற்றுச்சுவர் அமைக்கப்படும்.

57. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி காவல் நிலையத்திற்குப் புதியக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

58. புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

59. கோட்டைப்பட்டினம் உதவிக் காவல் கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

60. ஜீயபுரம் அனைத்து மகளிர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

61. திருவெறும்பூர் போக்குவரத்துக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

62. திருவாரூர் மாவட்டம் எடையூர் மற்றும் தேவன்குடி காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

63. நாகப்பட்டினம் மாவட்டம் வேதாரண்யம் மற்றும் வேட்டைக்காரனிருப்புக் காவல் நிலையங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

64. அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஊராட்சித் தலைவர்களிடமும் மற்றும் கிராமங்களிலும் சட்டம் ஒழுங்கு குறித்த தகவல்களைப் பெறுவதற்கு ஏதுவாக ஒவ்வொரு காவல் நிலையத்திலும் உள்ள ஒரு காவல் அலுவலர் பொறுப்பு அலுவலராக நியமிக்கப்படுவார்.

65. இராமநாதபுரம் மாவட்டம் திருவாடானை காவல்துறைக் கண்காணிப்பாளர் அலுவலகத்துடன் இணைந்த குடியிருப்புக் கட்ட அனுமதி வழங்கப்படும்.

66. இராமநாதபுரம் ஆயுதப்படைக் காவல் வளாகத்தில், தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகத்தின் வாயிலாகக், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நிறுவப்படும்.

67. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் காவல்படைக் குடியிருப்பு அமைக்கப்படும்.

68. கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை உதவிக் காவல் கோட்ட அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

69. கிருஷ்ணகிரி மாவட்டம் சூலகிரி காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

70. பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டையில் கலை அறிவியல் கல்லூரி நிறுவப்படும்.

71. பெரம்பலூர் மாவட்டம் மங்கலமேடு உதவி காவல் கோட்ட அலுவலகத்திற்குக் குடியிருப்புடன் கூடிய முகாம் அலுவலகம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

72. பெரம்பலூர் வி. களத்தூர் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

73. சென்னைப் பெருநகரக் காவல் நிலையங்களை வலுப்படுத்தும் வகையில் கூடுதல் பணியிடங்களுக்கு அனுமதி வழங்கப்படும்.

74. ஹிட் மற்றும் ரன் (மோதி விபத்து ஏற்படுத்திவிட்டு, நிற்காமல் செல்லும் நிகழ்வுகள்) இதற்கான இழப்பீட்டுத் தொகையாக உயிரிழப்பவர்களுக்கு ரூ.50,000மும் கொடுங்காயம் அடைந்தவர்களுக்கு ரூ.10,000மும் வழங்கப்படுகிறது. இது முறையே 2 இலட்சம் மற்றும் 1 இலட்சமாக உயர்த்தப்படும்.

75. நீலகிரி மாவட்டத்தில் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு முழுக்கால் சட்டை மற்றும் முழுக் கை சட்டையும், மாணவிகளுக்கு மேல்சட்டையுடன் கூடிய சல்வார் கமீஸ் சீருடைகள் வழங்கப்படும்.

76. எமரால்டு அணையிலிருந்து குன்னூர் நகராட்சிக்குக் குடிநீர் வழங்கிட குடிநீர் விநியோகத் திட்டம் உருவாக்கப்படும்.

77. 50 குடியிருப்புகளுக்கும் அதிகமுள்ள சிற்றூராட்சிகளுக்குத் "தாய் திட்டத்தின்" கீழ் மானியம் வழங்கப்படும்.

78. நீலகிரி மாவட்டத்திற்குக் கூடுதலாக 2 நடமாடும் மருத்துவமனை வசதி அளித்திட அனுமதி வழங்கப்படும்.

79. அரசுப் பணியாளர்களுக்கு மலைப் பகுதிக்கான சிறப்புப் படி ரூ. 1,500 ஆக உயர்த்தப்படும்.

80. அரசுப் பணியாளர்களுக்குக் குளிர்காலப் படி மாதம் ஒன்றுக்கு ரூ. 500 ஆக உயர்த்தப்படும்.

81. நீலகிரி மாவட்டத்திலுள்ள குரூப் A மற்றும் குரூப் B அலுவலர்களுக்கு 25 குடியிருப்புகள் கட்டப்படும்.

82. தேனி மாவட்டம் போடி வட்டம் Top Station பகுதியில் சுற்றுலா வளர்ச்சிப் பணிகளை மேம்படுத்திட அடிப்படை வசதிகள் செய்துத்தரப்படும்.

83. தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அருகில் உள்ள கண்டமனூர் விலக்கில் 110/22 கி.வோ துணை மின் நிலையம் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

84. வாலிப்பாறை மற்றும் கோவிந்த நகரம் ஆகிய இடங்களில் வைகையாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்டப்படும்.

85. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அம்மா உணவகம் தொடங்கப்படும்.

86. சிவகங்கை மாவட்டம் திருப்புவனம் சமுதாய மருந்துக் கூடம் வட்டாரத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

87. சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.

88. சிவகங்கை மாவட்டம் காளையார் கோயிலில் அரசுப் பள்ளி மாணவியர் விடுதி நிறுவப்படும்.

89. சிவகங்கை மாவட்டம் கண்ணங்குடி கூகுடி சாலையில் (2/8 கி.மீ.இல்) விறுசுழி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும்.

90. சிவகங்கை மாவட்டம் காரைக்குடி வட்டம் அமராவதி புதூரில் 110/22 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

91. சிவகங்கை மாவட்டம் கண்ணங்குடி வட்டாரம் பூசலாக்குடியில் 110/22 கி.வோ. துணை மின்நிலையம் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

92. சிவகங்கை மாவட்டத்தில் 15 குதிரைத்திறன் சக்தியுள்ள மின்மோட்டார் பம்ப் செட்களுடன் 150 சமுதாய ஆழ்துளைக் கிணறுகள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

93. சிவகங்கை மாவட்டம் காளையார் கோயில் வட்டாரம் நட்டார்கல் குறுக்கே வேளாரேந்தல்–கோடிக்கரை சாலையில் (2/4 கி.மீ.இல்) புதிய பாலம் கட்டப்படும்.

94. சிவகங்கை மாவட்டம் குறுந்தம்பட்டு ஊராட்சி, குறுந்தம்பட்டு – ஊகம்பட்டி சாலையில் மணிமுத்தாறு ஆற்றின் குறுக்கே புதிய பாலம் கட்டப்படும்.

95. சிவகங்கை நகராட்சியில் நிலத் தீர்வை முறை அறிமுகப்படுத்தப்படும்.

96. தூத்துக்குடியிலிருந்து வாஞ்சி மணியாச்சி இரயில் சந்திப்புக்குச் சாலை அமைக்கப்படும்.

97. மதுரை தூத்துக்குடி சாலையில் 130/4 கி.மீ.இல் இருந்து 133/2 கி.மீ வரை அகலப்படுத்தப்படும்.

98. தூத்துக்குடி கொல்லம் சாலையில் 5/4 கி.மீ.இல் உள்ள இரயில் கடவு மேம்பாலம் அகலப்படுத்தப்படும்.

99. தூத்துக்குடி மாவட்டத்தில் தொழில் ரீதியாக ஏற்படுகின்ற நுரையீரல் நோய்க்கு சிகிச்சை அளிப்பதற்காக மருத்துவப் பிரிவு (A Respiratory medical Unit for occupational lung disease) ஏற்படுத்தப்படும்.

100. தூத்துக்குடி மாவட்ட கடலோரப் பகுதிகளில் அதிக குழந்தைப் பிறப்பைக் குறைத்திட புதிய திட்டம் தொடங்கிட அனுமதி வழங்கப்படும்.

101. தூத்துக்குடி மாவட்டத்தின் கடலோரக் கிராமங்களில் பரவும் மலேரியா மற்றும் வெக்டர் போன் தொடர்பான நோய்களைக் கட்டுப்படுத்த புதிய திட்டம் தொடங்க அனுமதி வழங்கப்படும்.

102. முக்கனி அருகே தாமிரபரணி ஆற்றில் தடுப்பணை கட்டப்படும்.

103. திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி நகராட்சிப் பகுதிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

104. திருவள்ளூரில் நவீன ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் நிறுவப்படும்.

105. கொசஸ்தலை ஆற்றின் குறுக்கே தடுப்பணை கட்டப்படும். திருவள்ளூர் வீரராகவப் பெருமாள் குளத்திற்குத் தண்ணீர் வழங்கக் கால்வாய் வசதி ஏற்படுத்தித் தரப்படும்.

106. திருவள்ளூர் மாவட்டம் திருச்சினா குப்பத்தில் குடியிருப்புகள் கட்டப்படும்.

107. திருவள்ளூர் மற்றும் திருத்தணி புனித மையங்களில் வடிகால் வசதியுடன் நடைபாதை அமைக்கப்படும்.

108. பழவேற்காடு முகத்துவாரப் பகுதிகளில் நிரந்தரத் தடுப்புச் சுவர் அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

109. புதிதாக உருவாக்கப்பட்ட திருவொற்றியூர் மற்றும் மதுரவாயல் வட்டங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டப்படும்.

110. வேலூர் அம்மூர் ஒருங்கிணைந்த சந்தைக் குழுவிற்கு 4 கொட்டகைகள் அமைத்திட வசதி செய்து தரப்படும்.

111. வேலூர் மாவட்டத்தில் கிராமப்புர இளைஞர் குழுக்கள் பண்ணை இயந்திரமாக்கல் பணிகளில் ஈடுபடுத்தப்படுவார்கள்.

112. வேலூர் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட நாற்றாம்பள்ளி மற்றும் அணைக்கட்டு வட்டங்களுக்குப் புதிய அலுவலகங்கள் கட்டப்படும்.

113. அருப்புக்கோட்டை நகரத்தின் மேற்குப் பகுதியை நான்கு வழி தேசிய நெடுஞ்சாலை 45B உடன் இணைக்கப் புறவழிச் சாலை அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

114. திருத்தங்கல் ஆரம்ப சுகாதார நிலையம் வட்டாரத் தலைமை மருத்துவமனையாகத் தரம் உயர்த்தப்படும்.

115. விருதுநகர் மாவட்டம் சிவகாசி நகரம் ஆணையூர் ஊராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள சிவகாசி–தென்காசி மற்றும் சிவகாசி–ஸ்ரீவில்லிபுத்தூர்

மாநில நெடுஞ்சாலையின் குறுக்கே புதிதாக இரயில்வே கடவு மேம்பாலம் கட்டப்படும்.

116. இராஜபாளையம் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் உள்ள இராஜபாளையம்–ஆலங்குளம் மாநில நெடுஞ்சாலையில் இராஜபாளையம்–தென்காசி அகல இரயில் பாதையின் குறுக்கே புதிதாக இரயில்வே கடவு மேம்பாலம் கட்டப்படும்.

117. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாற்றின் குறுக்கே தண்டரை – எரையூர் சாலையில் (0/8 கி.மீ. இல்) உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

118. திருவண்ணாமலை மாவட்டம் போளூர் வட்டம் ஒத்தலவாடி ஊராட்சியில் (1/8 கி.மீ.இல்) உயர்நடைபாதை அமைக்கப்படும்.

119. திருவண்ணாமலை மாவட்டம் அகரம் சிப்பந்தியில் குப்பைக் கொட்டுவதற்கு அடிப்படை வசதிகள் செய்துத் தரப்படும்.

120. திருவாரூர் மாவட்டத்தில் 8 குளங்கள் புதுப்பிக்கப்படும்.

121. திருவாரூர் நகரத்தில் உள்ள கமலாலயக் குளம் தூர்வாரப்படும்.

122. திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலம் வட்டம் மூணாறு தலைப்புப் பகுதி சுற்றுலாத் தலமாக மேம்படுத்தப்படும்.

123. வேடசந்தூர் வட்டம் ஆர்.கொம்பி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படும்.

124. பழனி ஒன்றியத்தில் 124 கிராமங்கள், தொப்பம்பட்டி ஒன்றியத்தில் 218 கிராமங்கள் பழனி நகராட்சி கீரனூர் மற்றும் நெய்க்காரப்பட்டி பேரூராட்சிகள் ஆகியவற்றில்

கூட்டுக் குடிநீர் திட்டங்கள் நிறைவேற்ற அனுமதி வழங்கப்படும்.

125. வத்தலகுண்டு பேரூராட்சிக்கு வைகை அணையிலிருந்து குடிநீர் வசதி செய்துத் தரப்படும்.

126. திண்டுக்கல் மாவட்டம் கொடகனாறு ஆற்றில் இரண்டு பெரிய தடுப்பணைகள் கட்டப்படும்.

127. திண்டுக்கல் மாவட்டம் சந்தனவர்த்தணி ஆற்றில் மூன்று பெரிய தடுப்பணைகள் கட்டப்படும்.

128. பழனி நகராட்சிப் பகுதிகளிலும் அதனைச் சுற்றியுள்ள ஆயக்குடி மற்றும் பாலசமுத்திரம் ஊராட்சிப் பகுதிகளிலும் உள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டுத் தரம் உயர்த்தப்படும்.

129. திண்டுக்கல் நகராட்சிப் பகுதிகளில் உள்ள சாலைகள் அகலப்படுத்தப்பட்டுத் தரம் உயர்த்தப்படும்.

130. பழனிக்குப் பாதயாத்திரை செல்லும் பக்தர்களின் வசதிக்காக, நத்தம் வட்டம் பூதக்குடியிலிருந்து திண்டுக்கல் வரை உள்ள சாலை அகலப்படுத்தப்பட்டுத் தரம் உயர்த்தப்படும்.

131. புதிதாகப் பிரிக்கப்பட்ட திண்டுக்கல் கிழக்கு வட்டத்திற்குத் திண்டுக்கல்லில் கட்டடம் கட்டப்படும்.

132. கிருஷ்ணகிரி வட்ட அலுவலகத்திற்குப் புதிய அலுவலகம் கட்டப்படும்.

133. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் பதக்கோட்டாவில் உயர்மட்டப் பாலம் அமைக்கப்படும்.

134. ஓசூர் வட்டத்தில் உள்ள வட்டார வழங்கல் அலுவலர் பணியிடம் வட்டாட்சியர் நிலைக்குத் தரம் உயர்த்தப்படும்.

135. கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூரில் புதிதாக பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவியர் விடுதி கட்ட அனுமதி வழங்கப்படும்.

136. கிருஷ்ணகிரி மாவட்டம் ஆதிதிராவிட கல்லூரி மாணவியர்க்குப் புதிதாக விடுதி கட்ட அனுமதி வழங்கப்படும்.

137. கிருஷ்ணகிரி மாவட்டம் தளியில் ஆதிதிராவிடர் மாணவியர் விடுதி அமைக்கப்படும்.

138. வாழை உற்பத்தியை உயர்த்தும் வகையில் திருவையாறில் எத்திலைன் வாயுவின் மூலம் வாழைக்காயைப் பழுக்க வைக்கும் கலன் நிறுவப்படும்.

139. மகாமகம் விழாவை முன்னிட்டு கும்பகோணம் நகராட்சியில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மற்றும் வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

140. தஞ்சாவூர் மாநகராட்சியில் குடிமை நலன்களைப் பேணும் வகையில் வசதிகள் மேம்படுத்தப்படும்.

141. கொள்ளிடம் ஆற்றின் கல்லணையின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

142. தஞ்சாவூர் மாவட்டம் ஒரத்தநாட்டில் கல்லூரி மாணவியர் விடுதி நிறுவப்படும்.

143. தஞ்சாவூர் மாவட்டத்தில் பயோ மெதோனேஷன் கருவிகள் நிறுவப்படும்.

144. தஞ்சாவூர் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட பூதலூர் வட்டத்திற்குப் புதிய அலுவலகம் கட்டப்படும்.

145. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள பாரம்பரியக் கட்டடங்களைப் பாதுகாக்கும் வகையில் புதுப்பிக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

146. புதுக்கோட்டை மாவட்ட வருவாய் துணைக்கோட்ட அலுவலகம் மற்றும் குடியிருப்புகள் கட்டப்படும்.

147. திருமயம்–விராச்சிலை –பனையப்பட்டி சாலை 12 கி.மீ. நீளத்திற்கு மறுகட்டுமானம் செய்யப்படும்.

148. அறந்தாங்கி–கம்மங்காடு சாலை 9.2 கி.மீ. நீளத்திற்கு மறுகட்டுமானம் செய்யப்படும்.

149. புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள புலிவலம் – செங்கீரை மற்றும் புலிவலம்–விராச்சிலை சாலைகள் அகலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

150. அரியலூர் மாவட்டத்தில் 5 முந்திரி பதப்படுத்தும் நிலையங்கள் நிறுவப்படும்.

151. அரியலூர் மாவட்டத்தில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட நான்கு குளிர் பதன நிலையங்கள் நிறுவப்படும்.

152. அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் நகராட்சியில் குப்பைக் கொட்டும் வசதிகள் உருவாக்கித் தரப்படும்.

153. அரியலூர் வட்டம் கொப்பிளியான் குடிக்காடு தொடக்கப்பள்ளிக்குக் கட்டடம் கட்டப்படும்.

154. அரியலூர் வட்டம் குடிசல் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிக்குக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

155. அரியலூர் வட்டம் கல்லக்குடி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

156. அரியலூர் மாவட்டம் கோட்டைக்காட்டில் வெள்ளாற்றின் குறுக்கே பாலம் கட்டப்படும்.

157. விருதாச்சலம்–தொழுதூர் சாலையை இணைக்கும் செந்துறையிலிருந்து கோட்டைக்காடு செல்லும் 22 கி.மீ. நீளச்சாலை மறு கட்டுமானம் செய்யப்படும்.

158. அரியலூர் மாவட்டம் திருமானூர் வட்டம் கரைவெட்டி கிராமத்தில் உள்ள பறவைகள் சரணாலயத்தில் வசதிகள் மேம்படுத்தப்படும்.

159. நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறையில் 50,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட கிடங்கு கட்டப்படும்.

160. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிட நல விடுதிகளுக்கு இணையாக உணவுப்படி வழங்கும் வகையில், ஆதரவற்றோர் இல்லங்களில் உள்ளவர்களுக்கும் மாதாந்திர உணவுப்படி ரூ. 450 லிருந்து ரூ. 750 ஆக உயர்த்தப்படும்.

161. நாகப்பட்டினத்தில் குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் வகையில் சவ்வூடு பரவல் முறையில் நீரைச் சுத்திகரித்துக் குடிநீராகத் தரும் 44 குடிநீர் சுத்திகரிப்பு அலகுகள் நிறுவப்படும்.

162. இராமநாதபுரம் மாவட்டத்தில் 1,200 குடிநீர் ஊருணிகள் புதுப்பிக்கப்படும்.

163. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள செவிலியர் கல்லூரி மற்றும் விடுதிக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

164. இராமேஸ்வரம் நகரம், சீனியப்பா தர்கா, முள்ளிமுனை மற்றும் காரங்காடு கிராமங்களில் கடல் அரிப்புத் தடுப்புப் பணிகளை நிறைவேற்றுவதற்காகத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

165. இராமேஸ்வரத்தில் சுற்றுலா மாளிகை கட்ட அனுமதி வழங்கப்படும்.

166. இராமேஸ்வரத்தில் மீன்பிடித் துறைமுகம் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

167. தனுஷ்கோடி, டி.மாரியூர், பாம்பன், முகுந்தராயர் சத்திரம், தங்கச்சிமடம் மற்றும் வேதாளை ஆகிய ஊர்களில் மீன் இறங்கு தளங்கள் கட்டப்படும்.

168. இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 755 ஊராட்சி ஒன்றியக் குளங்களும், 437 முன்னாள் ஜமீன் குளங்களும் பொதுப்பணித்துறைக் குளங்களின் தரத்திற்கு இணையாகப் புதுப்பிக்கப்படும்.

169. இராமநாதபுரம் மாவட்டத்தில் மிளகாய் விற்பனைக்கான ஒருங்கிணைந்த சந்தை வளாகம் கட்டப்படும்.

170. இராமநாதபுரம் மாவட்டம் கமுதி நகரத்தில் புறவழிச் சாலை அமைக்க அனுமதி வழங்கப்படும்.

171. கோயம்புத்தூர் மாவட்டம் காந்திபுரத்தில் ஒருங்கிணைந்த பேருந்து நிலையம் அமைத்திட செயலாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

172. கோயம்புத்தூர் மாநகரத்தில் மோனோ இரயில் திட்டம் செயல்படுத்துவது குறித்து செயலாக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்.

173. செயற்கையான நீர்ப்பிடிப்பு ஏற்படுத்துவதற்கு வசதியாக கோயம்புத்தூர் மாவட்டத்தில் 6 இடங்களில் தடுப்பணைகள்

கட்டப்படும்.

174. பொள்ளாச்சி நகராட்சியில் சாலை மேம்பாலம் கட்டப்படும்.

175. புதிதாக உருவாக்கப்பட்ட பேரூர் மற்றும் மதுக்கரை வட்டங்களுக்கு வட்டாட்சியர் அலுவலகங்கள் கட்ட அனுமதி வழங்கப்படும்.

176. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேரூரில் 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் கிடங்கு கூடுதலாக ஒன்று அமைக்கப்படும்.

177. கன்னியாகுமரி மாவட்டம் மணவாளக்குறிச்சியில் 500 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட நெல் கிடங்கு ஒன்று கூடுதலாக அமைக்கப்படும்.

178. கன்னியாகுமரியில் உள்ள முதன்மை சுற்றுலா மாளிகை மற்றும் பாரதி விருந்தினர் இல்லம் ஆகியவை தரம் உயர்த்திப் புதுப்பிக்கப்படும்.

179. கன்னியாகுமரி மாவட்டத்தில் சுசீந்திரம் நகருக்குப் பெரிய பாலத்துடன் புறவழிச் சாலை, 19 சிறுபாலங்கள் 3.55 கி.மீ நீளத்திற்கு இருவழிச் சாலை ஆகியவை அமைக்கப்படும்.

180. தோவாளை வட்டத்தில் சுவையூட்டுப் பொருட்கள் (மசாலா பொருட்கள்) வளாகம் அமைக்கப்படும்.

181. பரளியாற்றின் குறுக்கே அணைக்கரை – அருவிக்கவை பாலம் கட்டப்படும்.

182. தாமிரபரணி ஆற்றின் குறுக்கே சக்கரபாணி தொட்டிப்பாலத்தில் கடையல்–பேச்சிப்பாறை பாலம் கட்டப்படும்.

183. சிதம்பரம் துணை ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர்

அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்டப்படும்.

184. புதிதாக உருவாக்கப்பட்ட வேப்பூர் வட்டத்திற்குப் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்படும்.

185. திட்டக்குடி – சிறுப்பாக்கம் சாலை 3/8 கி.மீஇல் உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

186. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 10 இடங்களில் செயற்கை நீர்பிடிப்புக் கட்டமைப்புகள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

187. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 4 இடங்களில் குளங்கள், அணைக்கட்டுகள் மற்றும் வழங்கு கால்வாய்கள் புதுப்பிக்கப்படும்.

188. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 6 இடங்களில் உள்ள குளங்களில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல் மற்றும் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

189. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள துறையூர் சிறுகுளத்தில் நீர்வாழ் சூழல் அமைப்பு பாதுகாப்புத் திட்டம் நிறைவேற்றப்படும்.

190. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள திருச்சிராப்பள்ளி நாமக்கல் சாலை, துறையூர் பெரம்பலூர் சாலை மற்றும் முசிறி–துறையூர்–ஆத்தூர் சாலை மேம்படுத்தப்படும்.

191. துறையூர், தாத்தையங்கார்பேட்டை மற்றும் உப்புளிப்பாளையம் பகுதிகளைச் சார்ந்த 293 குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு மேற்கொள்ளப்படும்.

192. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மருங்காபுரி மற்றும் வையம்பட்டி பகுதிகளைச் சார்ந்த 135 குடியிருப்புகளுக்குக் கூட்டுக் குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த ஆய்வு

மேற்கொள்ளப்படும்.

193. சென்னையில் உள்ள 5 வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

194. சென்னையில் உள்ள சமூகப் பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர்கள் 10 பேருக்கு வாகன வசதிகள் அளித்திட அனுமதி வழங்கப்படும்.

195. செங்கல்பட்டு வட்டம் பாலூர் கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே மேற்பரப்பில் துணைத் தடுப்பணைகள் அமைக்கப்படும்.

196. காஞ்சிபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் அவசர விபத்து சிகிச்சைப் பிரிவு உருவாக்கப்படும்.

197. காஞ்சிபுரம் மாவட்ட கடலோரப் பகுதிகளில் கடல் அரிப்பைக் கட்டுப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்படும்.

198. தருமபுரி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்திட அனுமதி வழங்கப்படும்.

199. சின்னாறு ஆற்றின் வெள்ள உபரி நீரை, பாலக்கோடு வட்டத்தில் உள்ள 10 குளங்களுக்கு செங்கன்பசுவன்தலவ் குளத்தின் வழியாகக் கொண்டு செல்ல வாய்க்கால் அமைக்கப்படும்.

200. பாலக்கோடு வட்டத்தில் உள்ள பெட்ட முகிலாளம் பாலத்தில் வெள்ள நீரை கேசர்குலிஹல்லா அணைக்குத் திருப்பி விடுவதற்கு ஏதுவாக வாய்க்கால் அமைக்கப்படும்.

201. வாளவந்தி, மல்லியக்கரை, வடுகபதி மற்றும் சித்தூர் ஆகிய ஊர்களில் உள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம்

உயர்த்தப்படும்.

202. சேலம் மாவட்டத்தில் உள்ள அயோத்தியாப் பட்டினம் வட்டாரம் கூடாதுப்பட்டி, தாமங்கலம் வட்டாரம் மாட்டியம்பட்டி, ஓமலூர் வட்டாரம் பச்சம்பட்டி, நங்கவள்ளி வட்டாரம் சவுரியூர் மற்றும் பெத்தநாயக்கம்பாளையம் வட்டாரம் சூளங்குறிச்சி ஆகிய ஊர்களில் புதிதாக ஆரம்ப சுகாதார நிலையங்கள் நிறுவப்படும்.

203. சேலம் மற்றும் மேட்டூர் வட்டாட்சியர் அலுவலகங்களுக்குப் புதிய அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

204. சேலம் மாவட்டம் வடுகப்பட்டி, வெள்ளாறு, காரிப்பட்டி மற்றும் வேப்பம்பூண்டி ஆகிய ஊர்களில் உள்ள பள்ளிகளுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்துத் தரப்படும்.

205. சேலம் மாவட்டம் பனமரத்துப்பட்டி மற்றும் தலைவாசல் ஆகிய ஊர்களில் விதைக் கிடங்குகள் கட்டப்படும்.

206. சேலம் மாவட்டம் சீலநாயக்கன்பட்டியில் உரக்கட்டுப்பாடு ஆய்வகம் கட்டப்படும்.

207. ஏற்காட்டிலிருந்து டேனிஸ்பேட்டை வரையிலான சாலைப்பணி முடிக்கப்படும்.

208. வாழப்பாடி வட்டத்தில் குளிர்ப்பதனக் கிடங்கு அமைக்க அனுமதி வழங்கப்படும்.

209. செந்தாரப்பட்டி குளம் குடிநீர் வழங்கும் வகையில் மேம்படுத்தப்படும்.

210. ஏற்காட்டையும் கொண்டையனூரையும் இணைக்கும் வகையில் இணைப்புச் சாலை அமைக்கப்படும்.

211. ஏற்காடு வட்டம் ஆவாரை கிராமம் முழுவதுமாக மின்மயம் ஆக்கப்படும்.

212. புதிதாக உருவாக்கப்பட்ட சேலம் தெற்கு மற்றும் சேலம் மேற்கு வட்டங்களுக்குப் புதிய அலுவலகங்கள்

கட்டப்படும்.

213. புதிதாக அமைக்கப்பட்ட திருப்பூர் தெற்கு வட்டத்திற்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்படும்.

214. புதிதாக அமைக்கப்பட்ட ஊத்துக்குளி வட்டத்திற்கு வட்டாட்சியர் அலுவலகம் கட்டப்படும்.

215. திருப்பூர் பழைய பேருந்து நிலையத்திற்கு எதிரே ஏற்படும் போக்குவரத்து நெரிசலைக் குறைத்திட உயர்மட்டப்பாலம் அமைக்கப்படும்.

216. விழுப்புரம் மாவட்டத்தில் புதுப்பாலப்பட்டு–வடபாலப்பட்டு பகுதியில் மணியாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

217. விழுப்புரம் மாவட்டத்தில் மட்டப்பாறை சாலையில் முத்தாறு மற்றும் மணியாறு ஆகியவற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

218. விழுப்புரம் மாவட்டம் மஞ்சப்புதூர் – பெரியநாயகி அம்மன் கோயில் சாலையில் மணி முக்தா ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

219. விழுப்புரம் மாவட்டம் கனியமூர் – கும்பகோட்டையிலிருந்து வி.பி அகரம் சாலையில் உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

220. விழுப்புரம் மாவட்டம் எடுத்தவாய்நத்தம் – அம்பேத்கர் காலனி – கொசப்பாடி சாலையில் முத்தாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

221. விழுப்புரம் மாவட்டம் புதூர்–குமுளம் சாலையில் பாம்பாற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

222. விழுப்புரம் மாவட்டம் முகையூர் வட்டாரம் இரண்டாகப் பிரிக்கப்பட்டு மானாம்பூண்டி வட்டாரம் உருவாக்கப்படும்.

223. விழுப்புரம் மாவட்டம் வானூர் வட்டாரம் இரண்டாகப்

பிரிக்கப்பட்டு கிளியனூர் வட்டாரம் உருவாக்கப்படும்.

**224.** விழுப்புரம் நகர்ப்பகுதிக்குட்பட்ட பழைய தேசிய நெடுஞ்சாலை முழுதும் (160/0 கி.மீ–162/6 கி.மீ) அகலப்படுத்தப்பட்டு மேம்படுத்தப்படும்.

**225.** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள தாதிக்குளம் – மேல்மலையனூர் சாலை (4/0 கி.மீ. இலிருந்து 8/2 கி.மீ. வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத் தரம் உயர்த்தப்படும்.

**226.** விழுப்புரம் மாவட்டம் வளத்தி–அவலூர்பேட்டை (6/4 கி.மீ. இலிருந்து 16/4 கி.மீ. வரை) இடைநிலை வழிப்பாதை சாலை அகலப்படுத்தப்பட்டு இருவழிச்சாலையாக அமைக்கப்படும்.

**227.** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள சாத்தம்பாடி – கப்பலம்பாடி சாலை (2/2 கி.மீ.இலிருந்து 9/7 கி.மீ. வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத் தரம் உயர்த்தப்படும்.

**228.** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள செஞ்சி – வடபாலை சாலை (8/0 கி.மீ.இலிருந்து 12/8 கி.மீ. வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத் தரம் உயர்த்தப்படும்.

**229.** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள வடபாலை – துரைப்பாடி சாலை (0/0 கி.மீ. யிலிருந்து 2/4 கி.மீ. வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத் தரம் உயர்த்தப்படும்.

**230.** விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள துரைப்பாடி – மேல்மலையனூர் சாலை (0/0 கி.மீ.இலிருந்து 2/0 கி.மீ. வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத்

தரம் உயர்த்தப்படும்.

231. பெரும்பாக்கம் – திருவக்கரை – கொடுக்கூர் சாலை (0/0 கி.மீ. இலிருந்து 7/0 கி.மீ. வரை) இடைநிலை வழிப்பாதை சாலை அகலப்படுத்தப்பட்டு இருவழிச்சாலையாக அமைக்கப்படும்.

232. திருவக்கரை – செனிப்பட்டு சாலை (0/0 கி.மீ.இலிருந்து 0/7 கி.மீ.வரை) அகலப்படுத்தப்பட்டு இடைநிலை வழிப்பாதையாகத் தரம் உயர்த்தப்படும்.

233. விழுப்புரம் மாவட்டம் ரெட்டனை–மரூர் சாலையில் சக்கரபாணி ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

234. விழுப்புரம் மாவட்டம் தென்புதூர் வெள்ளிமேடுப்பேட்டை மயிலம் சாலையில் தொண்டியாறு ஆற்றின் குறுக்கே உயர்மட்டப் பாலம் கட்டப்படும்.

235. விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சி – திருவண்ணாமலை சாலை (6/6 கி.மீ.இலிருந்து 8/0 கி.மீ., 13/0 கி.மீ. லிருந்து 13/4 கி.மீ மற்றும் 14/4 கி.மீ.இலிருந்து 24/0 கி.மீ. வரை) வலுப்படுத்தப்படும்.

236. விழுப்புரம் மாவட்டம் காஞ்சிராப்பாளையம் வெள்ளிமலை சாலை0/0சாலைகி.மீயிலிருந்து8/2கி.மீவரை அகலப்படுத்தி வலுப்படுத்தப்பட்டு இடைநிலைப் பாதையிலிருந்து இருவழிச்சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

237. விழுப்புரம் மாவட்டம் கடலூர்–திருக்கோவிலூர்–சங்கராபுரம் சாலை 33/157 கி.மீ.இலிருந்து 40/0 கி.மீ வரை வலுப்படுத்தப்படும்.

238. விழுப்புரம் மாவட்டம் விருதாச்சலம்–உளுந்தூர்பேட்டை விழுப்புரம் சாலை 21/6 கி.மீ இலிருந்து 27/850 வரை

வலுப்படுத்தப்படும்.

239. விழுப்புரம் மாவட்டம் மங்கலம்பேட்டை – இளவனசூர் கோட்டை சாலை 15/8 கி.மீ.இலிருந்து 28/4 கி.மீ.வரை அகலப்படுத்தி வலுப்படுத்தப்பட்டு இடைவழிப்பாதை சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

240. விழுப்புரம் மாவட்டம் சின்னசேலம் – கூகையூர் சாலை 2/8 கி.மீ.இலிருந்து 12/4 கி.மீ.வரை அகலப்படுத்தி வலுப்படுத்தப்பட்டு இடைவழிப்பாதை சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

241. விழுப்புரம் மாவட்டம் திருக்கோவிலூர் – வேட்டவலம் சாலை 0/0 கி.மீ. இலிருந்து 9/6 கி.மீ வரை வலுப்படுத்தப்படும்.

242. விழுப்புரம் மாவட்டம் அரகண்டநல்லூர் – அயந்தூர் சாலை 0/0கி.மீ.இலிருந்து 17/6 கி.மீ. வரை அகலப்படுத்தி வலுப்படுத்தப்பட்டு இடைவழிப்பாதை சாலையாகத் தரம் உயர்த்தப்படும்.

243. விழுப்புரம் மாவட்டம் கண்டச்சிபுரம்–அரகண்டநல்லூர் சாலை 0/0 கி.மீ. இலிருந்து 9/2 கி.மீ. வரை வலுப்படுத்தப்படும்.

244. விழுப்புரம் மாவட்டம் அருங்குறுக்கி சாலையில் கெடிலம் ஆற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

245. ஈரோடு மாவட்டம் ஹொங்கல்வாடி, செங்குளம் மற்றும் கடம்பூர் ஆகிய ஊர்களில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் அமைக்கப்படும்.

246. பெரம்பலூர் மாவட்டத்தில் உப்பார் – நந்தையாறு மற்றும் மருதையாறு வடிநிலப்பகுதியில் 14 குளங்கள் மற்றும் 2 அணைக்கட்டுகளை நவீனப்படுத்திச் சீரமைக்கும் பணி

மேற்கொள்ளப்படும்.

247. திருச்சி ஒழுங்குமுறை விற்பனைக் குழு இரண்டாகப் பிரிக்கப்பட்டு பெரம்பலூர் ஒழுங்குமுறை குழு உருவாக்கப்படும்.

248. பெரம்பலூர் மாவட்டம் தேசிய நெடுஞ்சாலை (4/8 கி.மீ.) இலிருந்து கைப்பாடி சாலையில் மருதையாறு ஆற்றின் குறுக்கே பாலம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

249. மாவட்ட சாலையான ஆலத்தூர்–அரியலூர் சாலை மாநில நெடுஞ்சாலைக்கு இணையாகத் தரம் உயர்த்தப்படும்.

250. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இதர சாலைகளான கிருஷ்ணாபுரம் – வெண்பாவூர், பெரிய வடகரை கைகளத்தூர் – பில்லங்குளம், பில்லங்குளத்திலிருந்து கூகையூர் சாலைகள் மாவட்டச் சாலைகளுக்கு இணையாகத் தரம் உயர்த்தப்படும்.

251. பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள இதர சாலைகளான செந்துரை–அங்கனூர்–நக்கம்பாடி–புதுவேட்டக்குடி–நன்னை–எரையூர் ஆகிய சாலைகள் மாநில நெடுஞ்சாலைகளுக்கு இணையாகத் தரம் உயர்த்தப்படும்.

252. மதுரை மாவட்டம் உசிலம்பட்டி அரசு மருத்துவமனையில் புறநோயாளிகள் பிரிவு, நீரிழிவு நோயாளிகள் பிரிவு, கண்சிகிச்சைப் பிரிவு ஆகியவை நிறுவப்படும்.

253. மதுரை மாவட்டம் மேலூர் அரசு மருத்துவமனையில் நீரிழிவு சிகிச்சைப் பிரிவு நிறுவப்படும்.

254. திருமங்கலம் வட்டம், சாத்தங்குடி அணைக்கட்டிலிருந்து மேலக்கோட்டை வரை உள்ள தெற்காறு பகுதி மேம்படுத்தப்படும்.

255. திருமங்கலம் நகரத்திலுள்ள ஆனைப்பாப்பான்குளத்தின்

உபரி நீரை சேமித்து நிரந்தர நீராதாரமாக உருவாக்கும் பணிகளும் வெள்ளத் தடுப்புப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

**256.** மதுரை மாவட்டம் சுற்றுச்சாலை மற்றும் சிவகங்கை சாலை சந்திப்பில் கீழ்சாலை வசதி செய்யப்படும்.

**257.** பரவை மற்றும் துவரைமானை இணைக்கும் வகையில் வைகையாற்றின் குறுக்கே உயர்மட்டப்பாலம் கட்டப்படும்.

**258.** சிலைமான் இரயில்வே நிலையம் மற்றும் மதுரை சிந்தாமணியை (0/7 கி.மீ.இல்) இணைத்திட மதுரையில் இரயில்வே கடவு மேம்பாலம் அமைக்கப்படும்.

**259.** மதுரை மாவட்டம் குருவிக்காரன் சாலை பாலம் மற்றும் பி.டி.ஆர். பாலத்தை இணைக்கும் வகையில் வைகையாற்றின் இடதுகரையில் சாலை அமைக்கப்படும்.

**260.** மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் அம்மா உணவகம் திறக்கப்படும்.

**261.** புதிதாக உருவாக்கப்பட்ட மதுரை மேற்கு, மதுரை கிழக்கு மற்றும் திருப்பரங்குன்றம் வட்டங்களுக்குப் புதிய வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள் கட்டப்படும்.

**262.** நாமக்கல் மாவட்டம் பள்ளிப்பாளையம் எஸ்.பி.பி. மில் அருகில் இரயில்வே கீழ்பாலம் கட்டப்படும்.

**263.** நாமக்கல் நகராட்சியில் புதிய குடிநீர் விநியோக மேம்பாட்டுத் திட்டம் உருவாக்கப்படும்.

**264.** நாமக்கல் நகரத்தில் புதிய பேருந்து நிலையம் நிறுவப்படும்.

**265.** கரூர் மாவட்டத்தில் 53 துணைச் சுகாதார மையங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டப்படும்.

**266.** கரூர் மாவட்டத்தில் உயர்நிலைப்பள்ளி

மேல்நிலைப்பள்ளிகளுக்கு 14 கூடுதல் கட்டடங்கள் கட்டப்படும்.

267. கரூர் மாவட்டம் சந்தபாடி குளத்திற்கு நீர் வழங்கும் வகையில் கத்திரிக்காபாளையம் ஓடையிலிருந்து உப்புக்கரை வரை புதிய வழங்கு கால்வாய் அமைக்கப்படும்.

268. கரூர் மாவட்டத்தில் மாதம் ஒன்றுக்கு 10க்கு அதிகமான மகப்பேறு நிகழும் ஆரம்ப சுகாதார மையங்களுக்கு செவிலியர் குடியிருப்புகள் கட்டப்படும்.

269. கரூர் மாவட்டத்தில் 534 ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட மையங்கள் கட்டப்படும்.

270. கரூர் அரசுக் கலைக்கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் மற்றும் கழிப்பறைகள் கட்டப்படும்.

271. கரூர் மாவட்டத்தில் உள்ள 14 ஊராட்சிகளில் இருக்கும் 267 ஊரகக் குடியிருப்புகளுக்குப் பயனளிக்கும் வகையில் கூட்டுக் குடிநீர் விநியோகத் திட்டத்தை தாந்தோனி ஊராட்சி ஒன்றியத்தில் செயல்படுத்திட ஆய்வு மேற்கொள்ளப்படும்.

272. கரூர் மாவட்டத்தில் புதிதாக உருவாக்கப்பட்ட மண்மங்கலம் வட்டத்திற்கு வட்டாட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டப்படும்.

273. சிவகங்கை மாவட்ட ஆயுதக் காவல் படைக் குடியிருப்புகளுக்குப் புதிய தண்ணீர் தொட்டி கட்டப்படும்.

274. சிவகங்கை மாவட்டக் காவல் அலுவலகத்தில் மின்னாக்கி வசதி செய்துத் தரப்படும்.

275. சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஆயுதப்படைக் காவல்

வளாகத்திற்குத் தேவையான சாலை வசதிகள் செய்து த்தரப்படும்.

276. நீலகிரி மாவட்டக் காவலர்களுக்கு நீலநிற மேற்சட்டைகளுக்குப் பதிலாக நீலநிற கம்பளிச் சட்டைகள் வழங்கப்படும்.

277. நீலகிரி மாவட்டக் காவலர்களுக்குத் தற்போது 10 ஆண்டுகளுக்கு ஒருமுறை நீலநிற மேற்சட்டைகள் வழங்கப்படுகின்றன. இம்முறை மாற்றப்பட்டு, இனி 3 ஆண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படும்.

278. தேனிமாவட்டம் தேனி துணைக்காவல் கோட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கும் அல்லிநகரம் காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

279. தேனிமாவட்டம் பெரியகுளம் துணைக்காவல் கோட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கும் தென்கரை காவல் நிலையத்திற்குக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

280. தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் வட்ட காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

281. வேலூர் மாவட்ட ஆயுதக் காவல்படை வளாகம் பழுது நீக்கப்பட்டு, வெள்ளத் தடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுவதுடன் பயிற்சி ஓடுதளம் அமைக்கப்படும்.

282. வேலூர் மாவட்டத்தில் உள்ள 5 எல்லையோர சோதனைச் சாவடிகளுக்குக் கண்காணிப்புக் காமிரா மற்றும் நவீனத் தளவாடங்களுடன் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்துத்தரப்படும்.

283. அடிப்படை வாதக் குழுக்கள் தொடர்பான வழக்குகளைப் புலனாய்வு செய்யும் குற்றப்புலனாய்வுப் பிரிவு மற்றும் சிறப்புப் புலனாய்வு பிரிவை வலுப்படுத்தும் நோக்கில் மறு சீரமைப்பு மூலம் 776 காவலர்கள் சிறப்பு புலனாய்வுக் குழுவாகக் கட்டமைக்கப்படுவார்கள்.

284. குற்றப்புலனாய்வுத் துறையில் உள்ள கணினிவழிக் குற்றத்தடுப்புப் பிரிவுக்கு நவீன வன்பொருள் மற்றும் மென்பொருட்கள் வழங்கப்பட்டு வலுப்படுத்தப்படும்.

285. உள்பணிப் பயிற்சி மைய துணைக் காவல் கண்காணிப்பாளர்களுக்கு வழங்கப்பட்டு வரும் பயிற்சிப்படி , அதே துறையில் இது வரை பயிற்சிப் படி பெறாத காவலர்களுக்கும் வழங்கப்படும்.

286. கடலோரப் பாதுகாப்புக் குழுவின் பணியை விரைவுப்படுத்தும் வகையில் ஒரு கமாண்டன்ட் பணியிடம் உருவாக்கப்படும். இந்தப் பணியிடம் இந்தியக் கடற்படை அல்லது கடலோரக் காவல் படை ஆகியவற்றிலிருந்து மாற்றுப்பணியிடமாக நிரப்பப்படும்.

287. குற்றப்புலனாய்வுப் பிரிவின் சிறப்புப் பிரிவிற்கு எளிதில் தகவல்களை மீளப்பெறும் வகையில் எண்மியக் கோப்பு மேலாண்மை முறை வசதி வழங்கப்படும்.

288. மிகமிக முக்கியப் பிரமுகர்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அவர்களின் தேவைக்குப் பயன்படுத்தும் வகையில் குண்டு துளைக்காத நவீனரக கார்கள் வழங்கப்படும்.

289. பாதுகாப்புப் பிரிவின் தளவாடங்களைப் பழுதுநீக்க சிறப்பு ஒதுக்கீடாக ரூ. 50 இலட்சம் வழங்கப்படும்.

290. சென்னை தியாகராயர் நகரில் உள்ள தீயணைப்பு மற்றும்

மீட்புப் பணி நிலையக் கட்டடத்திற்குத் தேவையான அளவு நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்.

291. தீயணைப்பு மற்றும் மீட்புப் பணித்துறையின் இயக்குநர், இணை இயக்குநர் மற்றும் துணை இயக்குநர் ஆகியோரின் நிதி ஒதுக்கீட்டு அதிகாரம் வாகனப் பழுதுநீக்குவதற்குத் தேவையின் அடிப்படையில் நீட்டித்து வழங்கப்படும்.

292. சைதாப்பேட்டை மற்றும் பூவிருந்தவல்லி துணைச் சிறைகளில் தலா 100 பேர்களை கூடுதலாக வைத்திருக்கும் அளவுக்குக் கூடுதல் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

293. வேலூர் சிறைக்கு காவல் துறை துணை இயக்குநர் (சிறைச்சாலைகள்) பணியிடத்திற்கு அனுமதி வழங்கப்படும்.

294. மேலக்கோட்டையூரில் உங்கள் சொந்த இல்லம் திட்டத்தின் கீழ் கட்டப்படும் வீடுகளுக்காக 35 சிறைத்துறைப் பணியாளர்களுக்கு வீட்டுக்கடன் வழங்கப்படும்.

295. சென்னை, மருதம் வளாகத்தில் பாதாளச் சாக்கடை பழுதுநீக்கம் செய்யப்படும்.

296. சென்னை, மருதம் வளாகத்தில் பாதுகாப்புச்சுவர் மற்றும் துப்பாக்கிச்சுடும் சுவர் வசதி செய்துத் தரப்படும்.

297. தமிழ்நாடு கமாண்டோ படையினரின் பயிற்சிக்காகப் பயிற்சித் துப்பாக்கிகள் வாங்க அனுமதி வழங்கப்படும்.

298. அனைத்துக் காவலர்களுக்கும் நவீனப் பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய சிறப்பு அடையாள அட்டை வழங்கப்படும்.

299. குடிமைப்பொருள்கள் வழங்கல் துறையின்

குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு அலுவலகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

**300.** மாநிலக் குற்ற ஆவணப்பிரிவு காவலர்களுக்கு இடர்ப்படி வழங்கப்படும்.

**301.** மாநிலக் குற்ற ஆவணப்பிரிவு மற்றும் தொழில்நுட்பப் பணிப்பிரிவிற்குப் புதிய கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

**302.** 110 உயர்ரக கைரேகைப் பதிவு உபகரணப் பெட்டிகள் கைரேகைப் பதிவு புலனாய்வுப் பிரிவிற்கு வழங்கப்படும்.

**303.** 27 காவலர் ஆய்வாளர் பணியிடங்களை ஒப்படைப்புச் செய்து சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவிற்கு 27 துணைக்காவல் கண்காணிப்பாளர் பணியிடங்கள் உருவாக்கப்படும்.

**304.** சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவிற்கு ஒரு கூடுதல் காவல் துறை உதவி இயக்குநர் பணியிடம் உருவாக்கப்படும்.

**305.** சிறப்பு அதிரடிப்படை காவலர்களுக்கு மாதந்தோறும் ரூ. 900 இன்னல் படியாக வழங்கப்படும்.

**306.** தமிழ்நாடு சிறப்புக் காவல் படையின் இரண்டு படைப்பிரிவிற்குத் தளவாடங்களைப் பாதுகாப்புடன் வைப்பதற்கு ஏதுவான சிறப்பு வகைப் பெட்டிகள் வழங்கப்படும்.

**307.** தமிழ்நாடு சிறப்புக்காவல் படையின் இரண்டு படைப்பிரிவிற்கு நிருவாகக் கட்டடம் கட்ட அனுமதி வழங்கப்படும்.

**308.** காவல் துறைக்கணினித் தொடர்பு மையத்தின் மூலம்

வழங்கப்படும் பயிற்சிக்கு ஆண்டுதோறும் சுழல் நிதியாக ரூ. 5 இலட்சம் வழங்கப்படும்.

309. காவல்துறையின் தகவல் தொடர்பை மேலும் தரம் உயர்த்தும் வகையில் உயர் அலை தரவு வலைப்பின்னல் வசதி வழங்க அனுமதி வழங்கப்படும்.

310. காவல் துறைக்கு 300 வி.எச்.எஃப். ஸ்டேடிக் கருவிகள் 600 வி.எச்.எஃப். மொபைல் செட்ஸ், 1,200 கையடக்க கருவிகள் மற்றும் 128 வி.எச்.எஃப் ரிபீடர்ஸ் வழங்க அனுமதிக்கப்படும்.

311. ஆயுதக் காவல் படையினருக்கு ரூ.16 இலட்சம் மதிப்பில் பெரிய அளவில் சமையல் குக்கர்கள் வழங்கப்படும்.

312. காவல்துறைக்கு இணையவழி குறுஞ்செய்தி முறைமை மென்பொருள் வசதி வழங்கப்படும்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, தலைமைச் செயலகத்தில் 16.12.2013 அன்று நடைபெற்ற
14ஆவது நிதி ஆணையக் கூட்டத்தில்
ஆற்றிய உரையின் தமிழாக்கம்!




## தமிழகத்திற்கு ரூ. 41,409 கோடி நிதி ஒதுக்க வேண்டும்

**ப**தினான்காவது நிதி ஆணையத்தின் தலைவர் மாண்புமிகு டாக்டர். ஒய். வி. ரெட்டி அவர்களே, பதினான்காவது நிதி ஆணையத்தின் மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி. சுஷாமாநாத் அவர்களே, டாக்டர். கோவிந்தராவ் அவர்களே, டாக்டர். சுதிப்டோ மண்டல் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, நிதி ஆணையத்தின்

செயலாளர் திரு.ஏ.என்.ஜா அவர்களே, தலைமைச் செயலாளர் திருமதி.ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, பதினான்காவது நிதி ஆணையத்தின் மூத்த அதிகாரிகளே, தமிழக அரசு அலுவலர்களே, அனைவருக்கும் வணக்கம்!

நமது அரசியல் சாசனத்தை உருவாக்கியவர்கள், நிருவாகத் திறமை மற்றும் வரிவிதிப்புக்கான அதிக அதிகாரங்கள் மத்திய அரசிடம் இருப்பதை அங்கீகரித்துள்ளனர். ஆனால், பொதுமக்களுக்கு சேவைகளை வழங்குவது தொடர்பான சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு, பொதுச் சுகாதாரம், விவசாயம், கல்வி போன்ற சில சேவைகள் மாநில அரசிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்தத் துறைகள் பொதுமக்களிடம் நெருங்கிய தொடர்பு கொண்டவை. இதுபோன்ற ஏற்பாடுகள், பல்வேறு பரிசீலனைகள் மூலம் உருவாக்கப்பட்டன. நாடு விடுதலையான போது இவை மிகவும் சரியானதாக இருந்தன. நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதார வளர்ச்சி, நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள நிருவாக அமைப்புகளில் காணப்பட்ட வேறுபாடுகள், எல்லாவற்றுக்கும் மேலாக அப்போது நிலவிய அரசியல் நிலைமை ஆகிய இவற்றை உள்ளடக்கி இருந்தது. பிரிவினையால் நாடு சந்தித்த பாதிப்புகள் இன்னும் அப்படியே உள்ளன. அப்போதைய மன்னர் ஆட்சிக்கு உட்பட்ட மாநிலங்களை இந்தியாவுடன் சேர்த்து நாட்டினை வலிமையாகத் திகழச் செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட இமாலய முயற்சிகள் பற்றிய நினைவுகள் அண்மையில் நிகழ்ந்ததுபோல் உள்ளன. நாட்டின் ஜனநாயகமும் அப்போது முழுமையாகாமல் இருந்தது.

அரசியல் சாசனத்தை நாம் இயற்றிய பிறகு, கடந்த 63 ஆண்டுகளுக்கு மேலாக நாட்டின் நிலைமை குறிப்பிடத்தக்க மாற்றம் அடைந்தது. இந்தியா தற்போது மிகுந்த நம்பிக்கை உள்ள நாடாகத் திகழ்கிறது, மிகவும் பண்பட்ட ஜனநாயகம் இங்கு

நிலவுகிறது. ஐயத்திற்கு இடமின்றி பொருளாதாரம் தொடர்பான சவால் தொடர்ந்து நீடிக்கிறது. இது வெவ்வேறு வகையில் உள்ளது. வறுமை மற்றும் உணவுப் பற்றாக்குறையைச் சமாளிப்பது மட்டுமின்றி கடந்த சில நூற்றாண்டுகளாக ஆங்கிலேயர் ஆட்சியின் கீழ் நாடு இருந்ததால், நவீனத் தொழிலக அமைப்பு இல்லாமல் போனது உள்ளிட்டவற்றால் ஏற்பட்டுள்ள பாதிப்புகளில் இருந்தும் மீண்டுவர வேண்டியுள்ளது.

தாராளமயமாக்கல், பொருளாதாரச் சக்திகளை கட்டவிழ்த்து விட்டுள்ளது. இதன் காரணமாக நேரடி உற்பத்திச் செயல்பாடுகளில் பொதுத்துறை நிறுவனங்களின் பங்கு மிகவும் குறைந்துள்ளது. பொருளாதாரக் கொள்கைகளை உருவாக்குவதில் மத்திய அரசின் பங்கு தற்போது மிகவும் அதிகமாக உள்ளது. அதேவேளையில் சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு மற்றும் சமூக மற்றும் பொருளாதார உட்கட்டமைப்புகளை வழங்குதல் ஆகிய பொதுமக்கள் சேவைகளை மேற்கொள்வதில் மாநில அரசுகளின் பங்கு அதிகரித்து வருகிறது. சமூகப் பாதுகாப்பினை, குறிப்பாக ஏழை எளியோருக்கு வழங்குவதற்காக மாநில அரசுகள் அதிக நிதியினைச் செலவிட வேண்டியுள்ளது.

**முன்னிலையில் தமிழ்நாடு**

முதலீடுகளைச் செய்பவர்கள், மத்திய அமைச்சரவை வழங்கிய உரிமத்தின் அடிப்படையில் தங்களது தொழிற்சாலைக்கான இடங்கள் பற்றி முடிவு செய்வதில்லை. மாறாகத் தொழிற்சாலைக்கான இடத்தில் பொதுச்சேவைகளின் தரம், சிறப்பான சட்டம் ஒழுங்குப் பராமரிப்பு, நன்கு படித்த ஆரோக்கியமுள்ள தொழிலாளர்கள், தரமான சாலைகள், மின்வசதி மற்றும் இதர சேவைகளின் அடிப்படையில் முதலீட்டாளர்கள் தொழிற்சாலைக்கான இடங்கள் பற்றி முடிவு செய்கிறார்கள்.

மாநில அரசுகளின் நிதி ஆதாரத்திற்கான தேவைகள் குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து வருகின்றன. மிக முக்கியமாக, பொதுமக்களுக்குப் பல சேவைகள் வழங்குவதில் மாநில அரசுகள் நேரடியாக ஈடுபட்டுள்ளன. இந்தச் சேவைகளை வழங்குவதற்காக மாநில அரசுகள் மிகத் திறமையுடன் செயல்பட வேண்டியுள்ளது. அரசியல் மற்றும் பொருளாதார சக்தியில் ஏற்பட்டுவரும் துரித மாற்றத்தை நாம் பார்த்து வருகிறோம். மாநில அளவிலான கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்கள் தற்போது மிகவும் முக்கியப் பங்காற்றும் வகையில் திகழ்கின்றனர். இவற்றை, கட்டுப்படுத்த வேண்டிய பிரிவினைப் போக்காகப் பார்க்கக்கூடாது. இந்தியா ஒரு பண்பட்ட நாடாக விளங்குவதை இது எடுத்துக்காட்டுவதாகப் பார்க்க வேண்டும். இந்தியா பன்முகத் தன்மைக் கொண்ட ஜனநாயக நாடாகும். எல்லாவற்றுக்கும் மேலாக இத்தகையப் போக்கு, மாநில அரசுகளையும், நாட்டினையும் வலிமைப்படுத்துகிறது.

மாநிலத்தின் நிருவாக மற்றும் பொருளாதாரம் தொடர்பான செயல்பாடுகள் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ந்துள்ளன. ஆனால், மத்திய மாநில நிதி தொடர்பான உறவுகள், உரிய முறையில் அமையவில்லை. அரசியல் சாசனத்தில் கண்டுள்ளபடி, மாநில அரசுகள் மத்திய அரசிடமிருந்து எதிர்பார்க்கும் நிதியுதவியைப் பெறுவதில்லை. மாநில அரசுகளுக்கு நிதி ஆணையம் மூலமாக 54 சதவீத நிதி ஆதாரங்கள் மட்டுமே வழங்கப்படுகிறது.

**அதிக நிதிக்கான ஆற்றல்**

மாநில அரசுத் திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்குவதற்கான அணுகுமுறை மிகவும் சரியான வகையில் இல்லை. மத்திய அரசிடமிருந்து வழக்கமாகக் கிடைக்க வேண்டிய நிதியளவு குறைந்து வருகிறது. திட்டத்திற்கான நிதியுதவியைப்

பெறுவதற்காக மத்திய அரசின் பல்வேறு துறைகளின் தயவினை நாடும் நிலைக்கு மாநில அரசுகள் தள்ளப்பட்டுள்ளன. பல்வேறு துறைகளில் உள்ள சாதாரணத் திட்டங்களுக்குக் கூட, மத்திய அரசின் அமைச்சகங்களுக்கு விளக்கங்களை அனுப்பி, அனுமதியை நாடவேண்டிய நிலை உள்ளது. தமிழ்நாடு, தனது சில திட்டங்களுக்காக இதுபோன்ற வழிமுறையின்படி அதிக நிதி பெறுவதற்கான ஆற்றலைப் பெற்றிருந்த போதிலும், இது சரியான தீர்வு அல்ல;மாநில அரசுகளை மிகவும் அவமானப்படுத்துவதாகும். வளர்ச்சிக்கான நடைமுறைகளை மேற்கொள்வதில், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளை சமமான அளவில் மத்திய அரசு நடத்துவதில்லை.

மத்திய அரசிடமிருந்து தமிழகத்திற்கு உரிய மத்திய திட்ட நிதி கிடைப்பதில்லை. இது, நிலைமையை மேலும் கடுமையாக்கியுள்ளது. 12ஆவது திட்ட ஆவணத்தின்படி, தமிழ்நாட்டுக்கு 4.328 சதவீத நிதி மட்டுமே கிடைத்துள்ளது. 2011 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, 5.96 சதவீத மக்கள் தொகை கொண்ட மாநிலத்திற்கு இந்த அளவுதான் வழங்கப்பட்டுள்ளது. இத்தகைய நிதி வழங்கும் முறை, சிறப்பாகச் செயல்படும் மாநிலங்களைத் தண்டிப்பதாகும். மத்திய நிதியினை ஒதுக்கீடு செய்வதில் சில மாநிலங்களுக்கு எதிராக சதித்திட்டம் மேற்கொள்ளப்படுகிறதோ என்ற ஐயப்பாட்டினையும் இது ஏற்படுத்துகிறது. உறுதி மொழிக்கு ஏற்ப, நிதி ஒதுக்கப்படாமல் இருப்பதை ஒவ்வொரு ஆண்டும் பார்த்து வருகிறோம். மாநில அரசுகளின் பல திட்டங்களுக்கு, வருடாந்திரப் பணித்திட்டங்களுக்கான அனுமதி கிடைத்தவுடன் மாநில அரசுகள் தங்களது நிதியினைக் கொண்டு செலவு செய்கிறது. ஆனால், ஆண்டின் பிற்பகுதியில் மத்திய அரசு தனது ஒதுக்கீட்டுக்கான நிதியைக் குறைத்துவிடுகிறது. இதனால், மாநில அரசுகளுக்கு மிகவும் நிதி நெருக்கடி ஏற்படுகிறது.

இத்தகைய போக்கு மாநில அரசுகளின் நிதி நிலைமையைப் பாதிக்கச் செய்வதுடன், மாநில அரசுகளுக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதிலும் பாதிப்பு ஏற்படுத்துகிறது.

எனவே தான் மாநிலங்களுக்கு நிதிஆணையத்தின் பரிந்துரைகளின்அடிப்படையில் மாநில அரசுகளுக்கு மத்திய அரசு நிதி ஒதுக்கீடு அமைய வேண்டுமே தவிர வேறு எந்த வழிமுறைகளிலும் நிதி ஒதுக்கீடு இருக்கக்கூடாது என்ற கருத்தினை தமிழ்நாடு அரசு உறுதியாகக் கொண்டுள்ளது. மாநில அரசு தனது பல்வேறு பிரச்சினைகளுக்கு உச்சநீதிமன்றம் உள்ளிட்ட அரசியல் சாசன அமைப்புகளிடமிருந்துதான் உரிய தீர்வுகளைப் பெற்றுள்ளது. எனவேதான் நிதி ஆணையத்தை நாடியுள்ளது.

14ஆவது நிதி ஆணையத்துக்கு, மத்திய – மாநில அரசுகளுக்கு இடையேயான நிதி சம்பந்தமான உறவுகளை மறுசீரமைப்பதற்கு இதுதான் சரியான வாய்ப்பு. அரசியல் பொருளாதாரத்தை உண்மை நிலையைப் பிரதிபலிக்க வைக்க வேண்டும். தன் அளவிலான கட்டுப்பாட்டு அணுகுமுறையை நிதி ஆணையம் மேற்கொள்ளக்கூடாது. இப்போதைய சூழ்நிலையில் தேவையான மாற்றத்திற்கு உரிய அணுகுமுறையை நிதி ஆணையம் துணிச்சலுடன் மேற்கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

மத்திய அரசின் நிதி ஆதாரங்களையும், இவற்றை மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிப்பது குறித்தும் நிதி ஆணையம் மதிப்பீடு செய்ய வேண்டும். அரசியல் சாசனத்தின் 270ஆவது பிரிவின் கீழ் மாநில அரசுகளுக்குச் சேர வேண்டிய பங்கினைத் தவிர்க்கும் வகையில் மத்திய அரசு அளவற்ற வரி மற்றும் துணை வரிகளை விதிக்கிறது. தற்போது, 8 சதவீதத்தை நெருங்கும் அளவுக்கு மத்திய அரசின் வரிவருவாய் உள்ளது. எனவே, வரி

மற்றும் துணை வரிகள் மூலம் கிடைக்கும் வருவாய், மாநில அரசுகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்படும் வகையில் அமைய வேண்டும். குறைந்தது 50 சதவீத வருவாய் பகிர்ந்து அளிக்கப்பட வேண்டும். அநேகமாக இது, மத்திய – மாநில அரசுகளுக்கு இடையே செலவினத் தேவையில் ஒரு சமநிலையை ஏற்படுத்தும். மாநில அரசுகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்வதில் காணப்படும் மத்திய அரசின் பாரபட்சப் போக்கினை இது பெருமளவு குறைக்கும்.

**தமிழக அரசுக்கு நிதிச்சுமை**

நிதி ஆணையத்தால் பரிந்துரைக்கப்பட்ட மாநில அரசுகளுக்கான நிதியின் அளவும் மாறியுள்ளது. அரசியல் சாசன விதி 275இன் படி, 13ஆவது நிதி ஆணையக் காலத்தில் இது 18.1 சதவீதமாக உயர்ந்தது. ஆனால், 7ஆவது நிதி ஆணையத்தால் வழங்கப்பட்டதை விட இது 7.2 சதவீதம் தான் உயர்ந்துள்ளது. இதுவரவேற்புக்கு உரியதல்ல. இந்த நிதிஒதுக்கீடு ஏராளமான நிபந்தனைகளை விதித்திருப்பதுடன், மத்திய அரசின் விருப்பத்திற்கேற்ப நடந்துகொள்ள வேண்டிய சூழ்நிலையையும் உருவாக்கியுள்ளது. சில நேரங்களில் இந்த நிதி ஒதுக்கீட்டை மாநிலங்கள் குறிப்பிட்ட காலத்திற்குள் பெற முடியாமலும் போய்விடுகிறது. எனவே, இந்த முறையை நிதி ஆணையம் மாற்றியமைக்க வேண்டும் என நான் கேட்டுக் கொள்கிறேன். 270ஆவது விதியின்படி பெரும்பான்மையான வரி வருவாய் மாநிலங்களையே சென்றடைகிறது. இதேபோன்று 275ஆவது விதியின்படி ஒதுக்கப்படும் நிதி மாநிலங்களின் ஒரு சில தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுகிறது.

மானியங்களின் சுமையை மத்திய – மாநில அரசுகள் சமமாகப் பிரித்துக் கொள்ள வேண்டும் என நிதிஆணையம் பரிந்துரை செய்துள்ளது. இதுதொடர்பான ஷரத்துப்படி, ஒருசிலவற்றை

மாநில அரசு கையாள முடியாத நிலை உள்ளது. முக்கியமாக உணவு, உரம் மற்றும் எரிபொருள் தொடர்பான மானியங்களை மத்திய அரசு வழங்கி வருகிறது. இவை ஒவ்வொன்றிலும், பல மாநில அரசுகளும், குறிப்பாகத் தமிழ்நாடும் ஏற்கெனவே அதிக அளவில் மானியம் வழங்கி வருகிறது. இவற்றில் சில மானிய வகைகள் மக்கள் நலத்திட்டங்களை மனதில் கொண்டு வழங்கப்பட்டு வருகின்றன. ஆனால், எவ்வித நிதி ஒதுக்கீடும் செய்யாமல் மத்திய அரசின் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வது, தமிழக அரசுக்கு மிகுந்த சுமையை ஏற்படுத்துவதாக உள்ளது.

இந்தச் சூழ்நிலையில், ஒவ்வொரு மாநிலமும் நிதி ஒதுக்கீட்டைப் பொறுத்தவரையில் எவ்வாறு நடத்தப்படுகிறது என்பது குறித்து, நான் வருத்தத்தோடு தெரிவிப்பது என்ன வென்றால், நிதிஆணையம் என்ற அமைப்பின் மீது தமிழகம் எந்த அளவுக்கு உறுதியான நம்பிக்கை வைத்திருந்ததோ, அந்த அளவுக்கு இதுவரை அமைக்கப்பட்ட நிதி ஆணையங்கள் எதுவும் மாநில அரசின் மீது நம்பிக்கை வைக்கவில்லை. நிதி ஆணையத்தின் பரிந்துரைப்படி, தமிழ்நாட்டுக்குச் சேரவேண்டிய நிதி ஆதாரத்தில், 7ஆவது நிதி ஆணையத்தால் ஒதுக்கப்பட்ட 7.68 சதவீத நிதி ஆதாரம், தற்போது 13ஆவது நிதி ஆணையத்தால் 4.98 சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதே நேரத்தில், 10ஆவது மற்றும் 11ஆவது நிதி ஆணையங்களின் பரிந்துரைகளாலும், தமிழக அரசு மிகப்பெரிய அளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

பல துறைகளில் முன்னேறி வரும் மாநிலங்களில் தமிழகமும் ஒன்று என நிதி ஆணையம் சுட்டிக்காட்டியுள்ளது. இது தமிழகத்தின் நிதி ஒதுக்கீட்டைத் தடுத்து நிறுத்தவும், குறைக்கவுமான ஒரு தவறான நடைமுறை என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். தற்போது உள்ள முறைப்படி,

நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்வதிலும், அதற்கான அதிகாரங்களும் மத்திய அரசிடம் மட்டுமே உள்ளன. நிதி ஆதாரங்களை சரி சமமாக மாநில அரசுகளும், மத்திய அரசும் பிரித்துக் கொள்ளும் நிலை இருந்தாலும், பின் தங்கிய மாநிலங்கள் மட்டுமல்லாமல், அனைத்து மாநிலங்களிலும், பெரும்பாலான மக்கள் நலத்திட்டங்கள் மாநில அரசின் நிதியிலிருந்தே நிறைவேற்றப்படுகின்றன. எனவே, அனைத்து மாநிலங்களுக்கும் போதுமான நிதியை ஒதுக்கீடு செய்வதை நிதி ஆணையம் உறுதி செய்ய வேண்டும்.

மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துதல், முறையான வரிவசூல், வளர்ச்சித் திட்டங்களைத் திறமையுடன் செயல்படுத்துதல் உள்ளிட்ட பணிகளை அடுத்தடுத்து வந்த நிதி ஆணையத்தின் உதவியின்றிச் செயல்படுத்தியதில் தான் தமிழக அரசின் வெற்றி அடங்கியுள்ளது. உண்மையில் தமிழகம் நிதி ஆணையத்தின் செயல்பாட்டால் தண்டிக்கப்பட்டுள்ளது என்றே சொல்ல வேண்டும். ஆனாலும், தமிழக அரசு சவால்களை எதிர்கொண்டு, சிறப்புடன் செயல்பட்டு மிகப்பெரிய வளர்ச்சியை அடைந்துள்ளது. பொது அமைதியைப் பாதுகாத்தல், நீதியை நிலைநாட்டுவது, தரமான சாலைகள் அமைப்பது, குடிநீர் வழங்குதல், கல்வி மற்றும் சுகாதார வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது போன்ற அடிப்படை வசதிகளை மாநில அரசுக்குக் கிடைக்கும் வருவாயைக் கொண்டே நிறைவேற்ற வேண்டிய கட்டாயத்தில் தமிழக அரசு உள்ளது. அதேநேரத்தில் மாநிலங்களுக்கு இடையே உள்ள வளர்ச்சி விகிதங்களையும், கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஆதாரம் தேவை**

பொது மற்றும் பொருளாதாரக் கட்டமைப்பில், 15 இலட்சம் கோடி ரூபாயை முதலீடு செய்து இந்த வாய்ப்பிற்கான வழியைப்

பெறும் வகையில் "Tamilnadu vision 2023" என்ற ஒரு மிகப்பெரிய கனவுத்திட்டத்தை நான் உருவாக்கியுள்ளேன். அதன் மூலம் மாணவர்களின் அறிவுத்திறனை உயர்த்தும் வகையில், விலையில்லா மடிக்கணினி வழங்கும் திட்டம், ஏழை, எளிய பெண்கள் தங்களது வேலைச் சுமையிலிருந்து விடுபடும் வகையில் விலையில்லா மின்விசிறி, மிக்சி மற்றும் கிரைண்டர் வழங்கும் திட்டம் ஆகியவை தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டுள்ளன. இதுபோன்ற முக்கிய வளர்ச்சி மேம்பாட்டுத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு இத்தருணத்தில், தமிழகத்திற்கு நிதி ஆதாரம் தேவைப்படுகிறது. இக்கட்டான இச்சூழ்நிலையில், நிதி ஒதுக்கீடு குறைக்கப்படுமானால், நீண்டநாள் வளர்ச்சித் திட்டங்களை அது பாதிக்கும். தமிழகத்திற்கு மத்திய அரசு கூடுதல் நிதி ஒதுக்குவதன் மூலம், ஏற்கெனவே பெற்ற வளர்ச்சியை விட, மேலும் வளர்ச்சியை எட்டும் என்பதற்கு நான் உறுதியளிக்கிறேன். எனவே, தமிழக அரசின் நியாயமான கோரிக்கைகளை நிதி ஆணையம் ஆதரிக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்கிறேன்.

மாநிலங்களிடையே நிதி ஆதாரங்களைப் பிரித்துக் கொள்வதற்கான, எளிமையான வலிமையான, சமத்துவமான விதிமுறையை நான் முன்வைக்கிறேன். முதலாவதாக 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டும், இரண்டாவதாக நிதி நிருவாகத்தையும், வரி வசூலிக்கும் திறனையும் அடிப்படையாகக் கொண்டும், 3ஆவதாக நிதியைக் கையாளும் உச்சக்கட்ட அளவை அடிப்படையாகக் கொண்டும் நிதி ஆதாரத்தைப் பிரித்துக் கொடுக்கலாம். மேற்கூறிய ஒவ்வொரு கணக்கீட்டிற்கும் மூன்றில் ஒரு பங்கு நிதியை ஒதுக்கீடு செய்யலாம். பல மாநிலங்கள் அவர்களின் தேவைகளை மையமாகக் கொண்டு, நிதிப் பகிர்வு தொடர்பாக,

ஆலோசனைகளை வழங்கியிருக்கலாம். ஆனால், நான் முன்வைத்துள்ள இந்த ஆலோசனை நடுநிலைமையானதும், சமத்துவமானதுமாக இருக்கும் என்பதை நீங்கள் பாராட்டுவீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

அந்த வகையில், 1971ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு கணக்கிடுவதுதான் அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும் மிகவும் சரியான, எதார்த்தமான அளவீடாக இருக்கும். அதேவேளையில், 1971ஆம் ஆண்டுக்கு பிந்தைய காலத்தில் ஏற்பட்ட மக்கள்தொகை மாற்றங்களையும் கணக்கீடுகளுக்கான அடிப்படை அளவீடுகளாக எடுத்துக் கொள்ளும் நடைமுறை சரியாக இருக்க வேண்டும் என்பதும் மிக முக்கியமானது. சிறு குடும்பம் திட்டத்தை ஊக்குவித்து தேசியக் கடமையை நிறைவேற்றிய தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் 1971ஆம் ஆண்டுக்குப் பிந்தைய மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்ட கணக்கீட்டினால் பாதிக்கப்படக் கூடாது என நிதி ஆணையத்திடம் வலியுறுத்துகிறேன்.

**தீர்வினை அளிக்கும் ஆலோசனை**

நிதி நிருவாகம் மற்றும் வரி நிருவாகம் ஆகியவற்றை முறையாக நிருவகிக்கும் மாநிலங்களுக்கு ஊக்குவிப்பு அளிக்கப்பட வேண்டும். மேலும், இத்தகைய மாநிலங்கள் இத்துறைகளில் மேலும் திறம்படப் பணியாற்றக் கூடுதல் நிதி ஒதுக்கப்பட வேண்டும். கடந்த நிதி ஆணையம் இந்த அலகுகளை அடிப்படையாகக் கொண்டு அளித்த பரிந்துரைகள் மிகக் குறைவாகவே இருந்தன. தற்போது மாநிலத்தின் நிதியைக் கையாளும் உச்சக்கட்ட அளவுக்கு ஈடுகொடுக்கும் வகையில் இது உயர்த்தப்பட வேண்டும். இதில் மாநிலத்தின் நிதியைக் கையாளும் உச்சக்கட்ட அளவு என்பது சொந்தமாக நிதி ஆதாரங்களைத் திரட்டும் ஆற்றல் குறைந்த

மாநிலங்களின் நலன்களுக்கு உதவி செய்வதாகஅமையும். இதே கோட்பாட்டைக் கொண்டு வரி விதிக்கும் வாய்ப்புகள் இருந்தும் அதனை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்ளாத மாநிலங்களைத் தண்டிக்கவும் வேண்டும். எனவே, நிதியைப் பகிர்ந்து அளிப்பதற்கான விதிமுறைகள் குறித்த என்னுடைய ஆலோசனைகள், நடுநிலையாகவும், சரியானத் தீர்வை அளிக்கக் கூடியதாகவும் இருக்கும் என நம்புகிறேன்.

மத்திய அரசு தற்போது முன்வைத்துள்ள பொருட்கள் மற்றும் சேவைவரி விதிக்கும் முறையால், மாநில மற்றும் மத்திய அரசின் நிதி நிலைமைகளில் ஏற்படும் பாதிப்பு மற்றும் இதனால் இழப்புகள் ஏதும் ஏற்பட்டால் அதனை ஈடுகட்டுவதற்கான விதிமுறைகளை உருவாக்குவது குறித்தும், நிதி ஆணையம் தற்போது கருத்துக் கேட்டு வருகிறது. இந்த விஷயம் மாநில நிதியமைச்சர்களை உள்ளடக்கிய அதிகாரம் கொண்ட குழுவில் ஏற்கெனவே விவாதிக்கப்பட்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட வரைவு அரசியல் சட்டத் திருத்த மசோதாவின் அடிப்படையில், மத்திய அரசு தற்போது முன்வைத்துள்ள பொருட்கள் மற்றும் சேவை வரித் தொடர்பான செயல்முறைத் திட்டம் குறித்து தமிழக அரசு ஏற்கெனவே பல எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளது. தற்போது முன்வைக்கப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவை வரித் திட்டம் மாநிலங்களின் நிதிச் சுதந்திரத்தை அடிப்படையிலேயே கடுமையாகப் பாதிக்கும் என்பது குறித்தும், அதிக ஏற்றுமதி மற்றும் அதிக உற்பத்தியைக் கொண்ட தமிழ்நாடு போன்ற மாநிலங்களுக்கு இந்தத் திட்டம் நிரந்தரமாக, மிகப்பெரிய வருவாய் இழப்பை ஏற்படுத்தும் என்பது குறித்தும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்த அடிப்படையில் ஒரு புதிய புரட்சிகர மாற்றுத் திட்டத்தை நான் முன்வைக்கிறேன். அதாவது, வரி விதிப்பு, வரி வசூல் மற்றும் மதிப்புக் கூட்டு வரிக்கு மாற்றான முறைகளைத் தேர்வு செய்து கொள்வது, மாநிலத்திற்குள்ளான

மத்திய கலால் வரி மற்றும் சேவைவரி ஆகியவற்றை மாநில நிருவாகமே முழுமையாக வசூல் செய்வது, மத்திய நிருவாகம் மாநிலங்களுக்கு இடையிலான வரி விதிப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்பதே அந்தத் திட்டம். இதுபோன்ற அணுகுமுறை, நிதிச் சுதந்திரம் மற்றும் தேவையான இழப்பீடு ஆகிய இரண்டு பிரச்சினைகளுக்கும் சரியானத் தீர்வாக அமையும்.

எல்லா மாநிலங்களும் உள்ளாட்சிகளுக்கு ஒரு குறிப்பிட்ட அளவு வரி வருவாய் பெறுவதற்கோ அல்லது நிதியைச் செலவு செய்யவோ ஒதுக்கீடு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ள நிலையில், தமிழக அரசு தன்னிடம் உள்ள ஒட்டுமொத்த நிதி ஆதாரங்களில் மிகப்பெரிய பங்கை உள்ளாட்சிகளுக்குப் பிரித்தளித்துள்ளது. அகில இந்திய அளவை ஒப்பிடும்போது, இங்கு இரண்டு மடங்கு நிதி ஆதாரங்கள் பிரித்து அளிக்கப்பட்டுள்ளது.பிரித்துக்கொள்ளக்கூடியநிதிஆதாரத்தில், 5 சதவீதம் உள்ளாட்சிகளுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என நான் பரிந்துரைக்கிறேன். நகர உள்ளாட்சிகளுக்கு ஒவ்வொரு மாநிலத்தின் நகர்ப்புர மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்படவேண்டும். பொதுவான அடிப்படை நிதி ஒதுக்கீட்டு முறையில், ஒட்டுமொத்த நிதியில், ஒதுக்கப்படும் நிதி குறைந்த அளவு 80 சதவீதம் இருக்க வேண்டும். பொதுவான செயல் திறமை அடிப்படையில் நிதி ஒதுக்க விதிக்கப்படும் கட்டுப்பாட்டு விதிகள் குறைவாகவும், குறிப்பிடத் தக்கவையாகவும் இருக்க வேண்டும். செயல் திறனைப் பின்னுக்குத் தள்ளும் வகையில், கட்டுப்பாட்டு விதி முறைகள் இருக்கக் கூடாது. பேரழிவுக்கான நிவாரணத்தைப் பொறுத்தவரை, மாநிலப் பேரழிவு நிவாரண நிதியின் அளவு, மிக சமீபத்தில் ஏற்பட்ட பேரழிவை ஈடுகட்ட செலவு செய்யப்பட்டத் தொகையை ஒட்டியதாக இருக்க வேண்டும். மத்திய அரசு இந்தத் தொகை முழுவதையும் அல்லது குறைந்த அளவு 90

சதவீத அதிகப்படுத்தப்பட்ட பேரிடர் நிவாரண நிதியை வழங்க வேண்டும். இந்தத் தொகை உடனடியான மீட்பு மற்றும் நிவாரணச் செலவுகளுக்கு மட்டுமே போதுமானதாக இருக்கும். மாநில அரசுதான் பேரழிவினால் ஏற்பட்ட இழப்பை எதிர்கொண்டு, ஒட்டுமொத்த மறுகட்டமைப்பு மற்றும் மறுவாழ்வுக்குத் தேவையான நிதியை எதிர்கொள்ள வேண்டும்.

குடிநீர், விவசாயப் பாசனம், மின்சாரம், பொதுப் போக்குவரத்து போன்ற மக்கள் சேவைகளுக்கான கட்டணங்கள் அரசின் கொள்கை மாறுபாடுகள் காரணமாக, மாறாமல் இருக்கத் தேவையான சட்ட விதிமுறைகளை உருவாக்குவது குறித்தும் நிதி ஆணையம் கேட்டுள்ளது. இந்தப் பிரச்சினை மிகக் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என அச்சப்படுகிறேன். இந்தப் பிரச்சினைகளை நிதி ஆணையம் ஆராய அரசியல் சட்டரீதியாக அனுமதிக்க முடியுமா என அய்யம் எழுகிறது. ஏனென்றால், இந்தச் சேவைகளுக்கான நிதி பெரும்பாலும் மாநிலங்களின் நிதி ஆதாரங்களுக்கு அப்பாற்பட்டவை. தமிழ்நாடு தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் மாநிலம். எனவே, மக்களுக்கான இந்த அடிப்படைத் தேவையை அளிக்க வேண்டிய கடமை மாநில அரசிடம் உள்ளது. தண்ணீரை எப்போதும் வணிக முறையில் விலை வைத்து விற்க முடியாது. எனவே, நிதிஆணையம் இந்த உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினையை எதார்த்தத்துடன் அணுகும் என எதிர்பார்க்கிறேன். இந்தப் பிரச்சினைகளின் மேல், செயல்படுத்த முடியாத பரிந்துரைகளை நிதி ஆணையம் அளிக்காது என நம்புகிறேன்.

நிறைவாக, பல முக்கியப் பிரச்சினைகளை எதிர் கொள்வதற்கும். மாநில நிருவாகத்தை மேலும் மேம்படுத்துவதற்குமான தேவைகளை முன் வைக்கிறேன். மாநில அரசின் நிருவாக மேம்பாட்டிற்காக, 14 திட்டங்களும், மாநிலத்தின் குறிப்பிட்ட சிறப்புத் தேவைகளுக்காக 10 திட்டங்களும்

முன்வைக்கப்பட்டுள்ளதுடன், இந்தத் திட்டங்களை உள்ளடக்கி மாநிலத் தேவைக்காக, 41 ஆயிரத்து 408 கோடியே 79 இலட்சம் ரூபாய் நிதியாக ஒதுக்க வேண்டும் என கோரியுள்ளோம். இதில், மிக முக்கியமான சிலவற்றை குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழ்நாடு காவல்துறை, நாட்டில் உள்ள ஒட்டுமொத்த காவல்படையில் மிகச் சிறந்த தொழில்முறை காவல்படையாக உள்ளது. மேலும், தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக அமைதியை நிலைநாட்டிச் சாதனைப் படைத்துள்ளது. இத்தகைய காவல்படையின் ஈடில்லாச் சாதனையைத் தக்க வைத்துக் கொண்டு, தற்காலத் தேவைகளை ஈடுகொடுக்க அவர்களுக்கு நவீன தொழில் நுட்பத்துடன் கூடிய கருவிகளையும், ஆதாரங்களையும் வழங்க வேண்டியுள்ளது. காவல்துறை அதிகாரிகள் மற்றும் காவலர்களின் திறனை மேன்மேலும் அதிகரிக்க, அவர்கள் பணியாற்றும் இடத்தின் அருகிலேயே அவர்களுக்கு வீடுகள் வழங்க வேண்டியது அவசியமாகிறது. இத்தகைய கட்டாயத் தேவையை நிறைவேற்ற நிதி ஆணையம் 3 ஆயிரத்து 825 கோடி ரூபாய் ஒதுக்க பரிந்துரைக்க வேண்டும். இதனை நிதிக்குழு ஆணையம் சாதகமாகப் பரிசீலிக்கும் என நம்புகிறேன்.

இந்தியாவிலேயே மிக அதிகமாக நகரமயமாக்கப்பட்ட மாநிலம் தமிழ்நாடு ஆகும். வேகமாக, மிக அதிக அளவில் நகர்ப்புரங்களை நோக்கி மக்கள் இடம் பெயர்வதால் வீடுகளுக்கான செலவு மிக அதிகமாக உயர்ந்துள்ளதுடன், நகர்ப்புரங்களில்குடிசைகளில்வாழும்மக்களின்எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. மாநிலத்தின் 10 நகராட்சிகளில் தற்போது உள்ள திட்டங்களின் கீழ், இந்தப் பிரச்சினை திறம்படக் கையாளப்பட்டு வருகிறது.இதேவேளையில்நகராட்சிகள்மற்றும்பேரூராட்சிகளில் உள்ள குடிசைப் பகுதிகளும் மாற்றப்பட வேண்டும். எனவே, நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் 25 சதவீத குடிசை வாழ்

மக்களின் மறுவாழ்வுக்காகவும், மேம்பாட்டிற்காகவும், 7 ஆயிரத்து 150 கோடி ரூபாய் நிதி ஒதுக்கக் கோரியுள்ளோம்.

காற்றாலை மின்சக்தி உற்பத்தியில் தமிழ்நாடு முன்னணியில் உள்ளது. தற்போது, சூரிய மின் ஆற்றல் உற்பத்தியில் தீவிரமாகக் கவனம் செலுத்தி வருகிறது. அடுத்த 5 ஆண்டுகளில், சூரிய ஆற்றலைக் கொண்டு 3 ஆயிரம் மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யும் சூரிய மின் ஆற்றல் கொள்கையை உருவாக்க உள்ளோம். இந்த மின் ஆற்றல் தற்போது காற்றாலை மூலம் உற்பத்தி செய்யப்படும் 7 ஆயிரத்து 504 மெகாவாட் மின்சாரத்துடன் சேர்ந்து தேசிய அளவில் புதுப்பிக்கத்தக்க மின் ஆற்றல் உற்பத்தியில் தமிழகத்தைத் தலைமை இடத்திற்குக் கொண்டு செல்லும். புதுப்பிக்கத்தக்க மின்சார உற்பத்தி பரவலான இடத்தில் பிரிந்திருப்பதுடன், மின்சாரத்தை ஒருங்கிணைத்து ஆற்றலுடன் வழங்குவதில் பிரச்சினைகள் உள்ளது. எனவே, பரந்துபட்ட இடத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைக் கொண்டு செல்வதற்கான தொழில்நுட்பமும், உள்கட்டமைப்புக்கும் மிக அதிக செலவாகிறது. எனவே, தமிழக அரசின் இந்தத் தீவிர முயற்சிக்கு 2 ஆயிரத்து 250 கோடி ரூபாய் நிதி ஒதுக்கக் கோருகிறோம்.

தமிழ்நாடு, ஆண்டு முழுவதும் தண்ணீர்ப் பற்றாக்குறை நிலவும் மாநிலமாகும். எனவே, மாநிலத்தில் பாரம்பரியமாக உள்ள நீர் ஆதார இடங்களுக்குக் கிடைக்கும் ஒவ்வொரு மழைத்துளியையும் சேமித்து வைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். எனவே, இந்தத் தேவைக்காக மிகப்பெரிய அளவில் நிதி ஒதுக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் மிக முக்கியப் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் குறித்துக் குறிப்பிட்டுள்ளேன். கடந்த காலங்களைப் போல் அல்லாமல், நிதி ஆணையம் மாறுபட்ட அணுகுமுறையைக்

கையாள வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். மாநிலத்திற்குக் கூடுதல் நிதி ஒதுக்கும் அணுகுமுறையுடன் இருக்க வேண்டுகிறேன். கடமைகளை நிறைவேற்றச் செய்ய வேண்டிய செலவு, நிதி ஆதாரத் தேவைகள் ஆகியவற்றைப் பொருத்திப் பார்த்து, அதன்பின்னர் எந்த அளவிற்கான நிதி ஆதாரங்கள் ஒட்டுமொத்தமாக மாநிலங்களுக்குப் பிரித்து அளிக்க வேண்டும் என்பதையும், அதன்பின்னர் ஒவ்வொரு மாநிலத்திற்கும் தேவையான நிதி ஆதாரங்களைப் பிரித்து அளிப்பதற்கும் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். விருப்பு, வெறுப்பு சாராத ஒரு சரியான பகிர்வுத் திட்டம் உருவாக்கப்பட வேண்டும். தமிழ்நாட்டிற்கு வருகை தந்ததற்காக நிதி ஆணையத்திற்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இங்கு நிதி ஆணைய உறுப்பினர்கள் வசதியுடன் மகிழ்ச்சியாகத் தங்கியிருப்பார்கள் என நம்புகிறேன். ஏற்கெனவே, அடுத்தடுத்து வந்த நிதி ஆணையங்கள் தமிழ்நாட்டுக்கு இழைத்த அநீதிகள், உங்களால் சரிசெய்யப்படும் என நம்புகிறேன். உங்கள் அறிக்கைக்காக ஆவலுடன் எதிர்பார்த்திருக்கின்றேன்.

நன்றி!

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை தலைமைச் செயலகத்தில் 16.12.2013 அன்று நடைபெற்ற பதினான்காவது நிதி ஆணையக் கூட்டத்தில் ஆணைய உறுப்பினர் டாக்டர். சுதீப்டோ மண்டல், தமிழக மின் நிலையை குறித்துக் கேட்டதற்குப் பதில் அளித்து ஆற்றிய உரையின் தமிழாக்கம்!




## அடுத்த 6 மாதங்களில் தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருக்கும்!

இந்த அரசு மிகக் கடுமையான மின்பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. அதனைச் சமாளித்து வருகிறது என்பது உண்மைதான். தற்போது தேவைக்கும், மின்சார விநியோகத்திற்கும் இடையே பெரிய இடைவெளி உள்ளது. ஆனால், நான் அறுதியிட்டுக் கூற விரும்புகிறேன்; இந்தச் சூழ்நிலை என்பது இந்த அரசால் ஏற்படுத்தப்பட்டதல்ல. இப்போது மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பணியாற்றி



வருகிறேன். நான் முதல் முறையாக **1991** முதல் **1996** வரை முதலமைச்சராக இருந்தபோது, தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருந்தது. அப்போது மின்சாரத் தடை என்பதே இல்லை.

மீண்டும் நான் **2**ஆவது முறை **2001** முதல் **2006** வரை முதலமைச்சராக இருந்தபோது தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்தது. அப்போது, மின்தடை என்ற கேள்விக்கே இடமில்லை.

நான் **2006**ஆம் ஆண்டு பதவியிலிருந்து விலகியபோது, தமிழ்நாடு மின்மிகை மாநிலமாக இருந்தது மட்டுமல்ல, மற்ற மாநிலங்களுக்கு மின்சாரத்தை வழங்கினோம். அதன்மூலம் வருவாய் ஈட்டவும் செய்தோம்.

நான் 3ஆவது முறையாகப் பதவியேற்றபோது, 2011ஆம் ஆண்டு மிக மோசமான நிலைமையை எதிர்கொள்ள வேண்டி இருந்தது. அப்போது மின்நிலைமை மிக மோசமான நிலைக்கு அதள பாதாளத்திற்குத் தள்ளப்பட்டது.

நான் 2001 முதல் 2006 ஆண்டு வரை பல புதிய மின் உற்பத்தித் திட்டங்களைத் தொடங்கினேன். அந்தத் திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தால், இன்றுகூட தமிழ்நாடு மின்மிகை மாநிலமாகத் திகழ்ந்திருக்க முடியும். ஆனால், முந்தைய அரசு அந்தப் புதிய மின்திட்டங்களைப் புழுதியில் தள்ளிவிட்டதுடன், அவற்றை முற்றிலுமாகப் புறந்தள்ளிவிட்டார்கள். அந்தத் திட்டங்களை முன்னெடுத்துச் செல்லவோ,நிறைவேற்றவோ அவர்கள் அக்கறைக்காட்டவில்லை. 2007ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் ஆண்டு முழுவதும் மின்சாரப் பற்றாக்குறை நிலவியது. குறிப்பாக 2008ஆம் ஆண்டு, 2009, 2010, 2011 மே மாதம் வரை மின்பற்றாக்குறை நிலவியது.

அந்த நேரத்தில், இந்த அரசு மின்பற்றாக் குறையைச் சமாளிக்க மின்சாரத்தை விலைக்கு வாங்க நடவடிக்கை மேற்கொண்டது. பல வழிகளில் மின்சாரத்தை வாங்க முடியும் என்பதை நீங்கள் அறிவீர்கள். இதில் நீண்டகால ஒப்பந்தங்கள் உள்ளன. மற்ற மாநிலங்களுடன் இந்த நீண்டகால ஒப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டால் அந்த முறையில் மின்சாரத்தின் விலை குறைவாக இருக்கும்.

நாம் பல ஆண்டுகளுக்கு உறுதியாக மின்சாரத்தைப் பெற முடியும். மேலும், இதன் மூலம் மற்ற மாநிலங்களிலிருந்து மின்சாரத்தைக் கொண்டுவர சிறப்பு வழி பெற முன்னுரிமை கொடுக்கப்பட்டிருக்கும். ஆனால், முந்தைய அரசு வேண்டுமென்றே மிக நன்றாகத் தெரிந்தே, குறைந்த காலத்திற்கு மின்சாரம் வாங்க ஒப்பந்தம் செய்தார்கள்.

இதனால், இந்த அரசு பொறுப்பேற்ற போது 4 ஆயிரம் மெகாவாட் மின்பற்றாக்குறையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இது எங்களால் உருவாக்கப்பட்டது அல்ல. இது முந்தைய அரசிடமிருந்து நாங்கள் பெற்றது. இதனைச் சமாளிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளானோம்.

**மாநிலங்களுடன் ஒப்பந்தம்**

எனவே, அப்போது நாங்கள் மின்சாரத்தை விலைக்கு வாங்கும் முயற்சியில் ஈடுபட்டோம். புதிய மின்திட்டத்தை உருவாக்கி அதன்மூலம் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நீண்டகாலம் பிடிக்கும் என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, நாங்கள் மின்சாரத்தை விலைக்கு வாங்க முயற்சித்தபோது, மற்ற மாநிலங்களிடம் பேசி ஒப்பந்தத்தை ஏற்படுத்துவதில் வெற்றிகொண்டோம். ஆனாலும், உதாரணத்திற்கு குஜராத்திடமிருந்து 500 மெகாவாட் மின்சாரத்தை வாங்க ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால் அந்த மின்சாரத்தை எடுத்துவர, சிறப்பு வழித்தடம் கிடைக்கவில்லை. ஏற்கெனவே ஒப்பந்தம் போட்டிருந்தவர்களுக்கு அந்தச் சிறப்பு வழித்தடத்தில் முன்னுரிமை அளிக்கப்பட்டது.

அதனால் வாங்கிய மின்சாரத்தில் 100 முதல் 150 மெகாவாட் மின்சாரத்தைத்தான் கொண்டுவர முடிந்தது. இதுதான் அப்போதைய நிலைமை. நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, இது ஒரு அரசியல் அமைப்பு இல்லை. என்றாலும், நான் உண்மையைத்தான் இங்குக் கூறினேன்.

**மத்திய அரசின் அனுமதி மறுப்பு**

நாங்கள் பல மின்சாரத்திட்டங்களைத் தொடங்கினோம். அந்தத் திட்டங்களை நிறைவேற்றியிருந்தால் மின்சார உற்பத்தியும் தொடங்கியிருக்கும். ஆனால், அதற்கான

அனுமதியை மத்திய அரசு வேண்டுமென்றே தாமதப்படுத்தியது. பலதுறைகளில், மாநில அரசுக்கு குறைந்தபட்ச அதிகாரங்களே உள்ளன. தமிழக மின்திட்டங்களுக்கு மத்திய அரசு அனுமதி அளித்திருக்க வேண்டும். ஆனால், அவை நிராகரிக்கப்பட்டன. உதாரணத்திற்கு குந்தா மின்திட்டம் மற்றும் சில்லஹல்லா மின்திட்டம் ஆகியவற்றைத் தொடங்க நாங்கள் தயாராக இருந்தோம். ஆனால், மத்திய அரசு அனுமதி அளிக்கவில்லை.

நான் இரண்டாவது முறையாக முதலமைச்சராக இருந்தபோது, ஏற்கெனவே தொடங்கிய மின்உற்பத்தித் திட்டத்திற்குக் காட்டுப்பாதையில் 14 கிலோமீட்டர் தொலைவிற்கு மட்டும் மின்கம்பிகளை எடுத்துச் செல்ல மத்திய அரசின் அனுமதி தேவைப்பட்டது. இந்த அனுமதியை மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகம் வழங்க வேண்டும். அரசியல் காரணங்களுக்காக வேண்டுமென்றே இந்த அனுமதி மறுக்கப்பட்டது.

நாங்கள் மத்திய அரசைப் பலமுறை வலியுறுத்தினோம். பிரதமருக்குப் பலமுறைக் கடிதம் எழுதினோம். ஆனால், எந்தப் பலனும் கிடைக்கவில்லை. இறுதியாக ஒன்றரை ஆண்டுகள் காத்திருந்த பின்பு, மக்களுக்குத் தேவையான மின்சாரத்தை வழங்கும் திட்டமான இத்திட்டத்திற்காக நாங்கள் உச்சநீதிமன்றத்தை அணுக வேண்டியிருந்தது. உச்சநீதிமன்றத்தை அணுகியபின், மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்ட பின்னர் தான் இந்த அனுமதி வழங்கப்பட்டது. இதுதான் தற்போது நாங்கள் எதிர்கொள்ளும் நிலைமை. எனவே, உங்களுக்கு நான் உறுதியளிக்க விரும்புகிறேன். நாங்கள் மிகவும் விழிப்புடன் உள்ளோம்.

மின்சார நிலைமை குறித்தும், மின்பற்றாக்குறை குறித்தும் மிகக் கவனமாக இருக்கிறோம். ஆனால், தற்போது இந்த நெருக்கடியான நிலைமையை நாங்கள் மிகப்பெரிய அளவில் கடந்து வந்துவிட்டோம். இன்று மின்சாரத் தேவைக்கும் விநியோகத்துக்கும் இடையிலான இடைவெளி மிகப்பெரிய அளவில் குறைக்கப்பட்டுள்ளது. 2013 ஜூலை மாதம் முதல், 2013அக்டோபர் மாதம் வரை தமிழகத்தில் மின்தடை இல்லை.

ஆனால், அதிர்ச்சியளிக்கும் வகையில், இந்த அறிவிப்பு வெளியானவுடனேயே தமிழகத்தில் உள்ள பல மத்திய மின்உற்பத்தி நிலையங்களில் பெரும் கோளாறுகள் ஏற்பட்டு மின் உற்பத்தித் தடைப்பட்டது.

இதன்மூலம், நீங்களே இங்கு நிலவும் சூழல் குறித்து முடிவு செய்ய முடியும். இதுவரை தமிழக அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அனல்மின்நிலையம், மின்உற்பத்தி நிலையங்கள் முழுமையாகத் திறம்படச் செயல்படுகின்றன.

இப்போது திடீரென மின்சாரப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் இந்தக் கோளாறுகள் எல்லாம் ஒரே நேரத்தில் ஏற்பட்டதுதான் வியக்க வைப்பதாக உள்ளது. எனினும், தற்போது வரை நாங்கள் எங்களால் இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறோம். அடுத்த 6 மாதங்களில் தமிழ்நாடு முழுமையாக மின்மிகை மாநிலமாக இருக்கும்; மின்தடை இல்லாத மாநிலமாக இருக்கும்.

நன்றி!

✶ ✶ ✶

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள் 4.1.2014 அன்று
நீலகிரி மாவட்டம், குன்னூரில் நடைபெற்ற அரசு விழாவில்
அரசு நலத் திட்ட உதவிகளை வழங்கி ஆற்றிய உரை!




## மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள்!
## நான் மக்கள் பக்கம் இருக்கிறேன்!

இந்த இனிய விழாவில் கலந்து கொண்டு முன்னிலையுரை ஆற்றிய மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர், திரு. செல்லூர் கே. ராஜு அவர்களே! மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. காமராஜ் அவர்களே! மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் டாக்டர் எஸ். சுந்தரராஜ் அவர்களே! மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு. பி.வி. ரமணா அவர்களே! வரவேற்புரை ஆற்றிய தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே! மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே! நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே! உள்ளாட்சி அமைப்புகளின்

பிரதிநிதிகளே! நன்றியுரை ஆற்றவுள்ள நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பொ.சங்கர் அவர்களே! வணக்கத்திற்குரிய பெரியோர்களே! என்னை வாழ வைக்கும் தெய்வங்களாகிய தாய்மார்களே! இதயதெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரின் ரத்தத்தின் ரத்தமான என் உயிரினும் மேலான எனது அருமை உடன்பிறப்புகளே!

உங்கள் அனைவருக்கும் எனது அன்பு கலந்த வணக்கத்தினை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு, கருநாடகா, கேரளா ஆகிய மூன்று மாநிலங்களின் சந்திப்பில் அமைந்துள்ளதும்; மலைகளின் ராணி என்று போற்றப்படுவதும்; சர்வதேச அளவில் புகழ் பெற்ற சுற்றுலாத் தலமாக விளங்குவதும் ஆன நீலகிரி மாவட்டத்தில், குன்னூ ரில் நடைபெறும் மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டு பல்வேறு புதிய திட்டங்களுக்கு அடிக்கற்கள் நாட்டி; முடிவுற்ற திட்டங்களைத் திறந்து வைத்து; நலத் திட்ட உதவிகளை வழங்கி, உங்களிடையே உரையாற்றுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

மேலும், தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை ஒட்டி, ஆண்டுதோறும் வழங்கப்படும் வேட்டி சேலைத் திட்டத்தையும்; பொங்கல் திருநாளைத் தமிழக மக்கள் சீரோடும், சிறப்போடும் கொண்டாடும் வகையில் வழங்கப்படும் சிறப்புப் பொங்கல் பரிசு தொகுப்புத் திட்டத்தினையும் இன்று நான் துவக்கி வைக்க உள்ளேன்.

1982 ஆம் ஆண்டு தென்மேற்கு மற்றும் வடகிழக்குப் பருவமழை பொய்த்ததன் விளைவாக ஏற்பட்ட வறட்சியினைத் தொடர்ந்து, நிலமற்ற வேளாண் தொழிலாளர்கள் வாழ்வில் ஒளியேற்றும் வண்ணம் இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் 1983 ஆம் ஆண்டு இந்த வேட்டி–சேலை வழங்கும் திட்டம் துவங்கி வைக்கப்பட்டது. இது மட்டுமல்லாமல்

கைத்தறி நெசவாளர்களின் வாழ்வில் ஒளியேற்றும் வகையில், இந்தத் திட்டத்திற்கான வேட்டி–சேலைகளை உற்பத்தி செய்யும் பொறுப்பு கைத்தறி நெசவாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும் வேட்டிகள் மற்றும் சேலைகளின் தரத்தினை உயர்த்தும் வகையில், 40 ஆம் எண் பருத்தி நூலுடன் பாலியஸ்டர் நூல் கலந்த வேட்டிகள் மற்றும் சேலைகளைத் தயாரித்து வழங்குமாறு 2003 ஆம் ஆண்டு நான் ஆணையிட்டேன். இதன்படி ஒவ்வொரு ஆண்டும் பொங்கல் திருநாளன்று ஏழை எளிய மக்களுக்குத் தரமான வேட்டி–சேலைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இந்த ஆண்டிற்கான சேலைகளில் பெண்களின் விருப்பத்திற்கேற்ப சேலைகளின் வடிவமைப்பு மற்றும் வண்ணங்களில் மாற்றம் செய்யவும்; தரத்தினை மேம்படுத்தும் வகையில் 60 ஆம் எண் பருத்திச் சாயமிட்ட நூலினைப் பாவாகவும்; 80/34 பருமன் சாயமிட்ட பாலியஸ்டர் நூலினை ஊடையாகவும்; 150 பருமன் காட்லுக் (cotlook) சாயமிட்ட பாலியஸ்டர் நூலினைக் கரையாகவும் கொண்ட பாலிகாட் சேலைகளை வழங்கவும் நான் உத்தரவிட்டு இருந்தேன். இதன்படி, இந்த ஆண்டிற்கான சேலைகள் உற்பத்தி செய்யப்பட்டு வழங்கப்பட உள்ளன. இவ்வாறு தரம் உயர்த்தப்பட்ட சேலைகளை வழங்குவதன் மூலம் அரசுக்கு 73 கோடியே 44 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளது. மொத்தத்தில் விலையில்லா வேட்டி–சேலை வழங்கும் திட்டம் 486 கோடியே 36 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டு செயல்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் மூலம், 15,000 கைத்தறி நெசவாளர்கள் மற்றும் 50,000 விசைத்தறித் தொழிலாளர்கள் வேலைவாய்ப்புப் பெறுகின்றனர். 1 கோடியே 73 இலட்சத்து 24 ஆயிரம் பெண்களும், 1 கோடியே 72 இலட்சத்து 5 ஆயிரம் ஆண்களும் என மொத்தம் 3 கோடியே 45 இலட்சத்து 29 ஆயிரம் பேர் பயனடையக் கூடிய வேட்டி–சேலைத் திட்டத்தினை இன்று நான் துவக்கி வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தத் திட்டத்தின் மூலம் நீலகிரி மாவட்டத்தில் மட்டும் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 701 பெண்களும், 2 இலட்சத்து 11 ஆயிரத்து 701 ஆண்களும் என மொத்தம் 4 இலட்சத்து 23 ஆயிரத்து 402 பேர் பயனடைவர். பருவமழை பொய்த்து விட்டதன் காரணமாகவும், தமிழகத்திற்குரிய காவேரி நீரைக் கருநாடகா தர மறுத்ததன் காரணமாகவும் ஏற்பட்ட வறட்சி நிலைமை மற்றும் பயிர்கள் பாதிப்பு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையைத் தமிழக மக்கள் மகிழ்ச்சியுடன் கொண்டாடும் வகையில், ஒரு கோடியே 84 இலட்சம் குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் 100 ரூபாய் ரொக்கம் என சிறப்பு பொங்கல் பரிசு தொகுப்பு ஒன்றை நான் வழங்கினேன். வரும் பொங்கல் திருநாளைத் தமிழக மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் 100 ரூபாய் என்ற சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இந்த பொங்கல் பரிசுத் தொகுப்பு வழங்கும் திட்டத்தினை இன்று நான் துவக்கி வைப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

**எனது நோக்கம்**

தமிழகத்தின் நிதி நிலைமையையும் பொருட்படுத்தாமல் 281 கோடி ரூபாய் செலவில் இந்த சிறப்புப் பொங்கல் பரிசுத் தொகுப்பினை நான் வழங்கி உள்ளேன். ஏனெனில், பொங்கல் திருநாளைத் தமிழர்கள் அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாட வேண்டும் என்பது எனது அவா. என்னைப் பொறுத்தவரை, நேரம் பார்த்து தேவை அறிந்து முழுமையான உதவி செய்ய வேண்டும் என்பதே எனது நோக்கமாகும். இது போன்ற உதவிகளை நான் செய்து வருவதால் தான் மக்கள் என் பக்கம் இருக்கிறார்கள். மக்கள் பக்கம் நான் இருக்கிறேன். அதனால் தான் உங்களுக்கு

உதவி செய்யக் கூடிய இடத்திலே நீங்கள் என்னை வைத்து இருக்கிறீர்கள்.

அமெரிக்காவில் உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருந்த வேளையில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சி எனக்கு நினைவுக்கு வருகிறது. ஆபிரகாம் லிங்கன் அப்போது ஜனாதிபதியாக இருந்தார். சிக்கல் மிகுந்த அந்த வேளையில் ஒரு மூதாட்டி, ஆபிரகாம் லிங்கனை அணுகி அவருக்கு ஆறுதல் கூறுவதாக நினைத்து ஒன்றைச் சொன்னார். ‘‘ஜனாதிபதி அவர்களே எதற்கும் கவலைப்படாதீர்கள், கடவுள் நம் பக்கம் இருக்கிறார். அவர் நம்மைக் காப்பாற்றுவார்’’ என்று சொன்னார்.

இதற்கு பதில் அளித்த ஆபிரகாம் லிங்கன், ‘‘தாயே உங்கள் அன்பு மொழிக்கு நன்றி. நம்மைக் கடவுள் காப்பாற்றுவார் என்று எனக்கு நன்றாகத் தெரியும். அது அவருடைய கடமை. ஆனால் நான் என்ன நினைக்கிறேன் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும். கடவுள் நம் பக்கம் இருக்கிறாரா என்பதை விட கடவுளின் பக்கம் நாம் இருக்கிறோமா என்பது தான் எப்போதும் என்னுடைய சிந்தனையாக இருக்கிறது’’ என்று ஆபிரகாம்லிங்கன் சொன்னாராம்.

இதைப் போல, எனது அரசின் மீது அவதூறுகளைப் பரப்பி, பொய்ப் பிரச்சாரங்களை மேற்கொண்டு, மக்களைத் தங்கள் பக்கம் வரவழைத்து விடலாம் என்று சிலர் பகல் கனவு கண்டு கொண்டு இருக்கின்ற சூழ்நிலையில், மக்களின் பக்கம் நாம் இருக்கிறோமா என்று நினைத்தே எனது அரசின் நடவடிக்கைகள் அனைத்தும் அமைந்துள்ளன. மக்களும் எனது அரசிற்கு உறுதுணையாக இருக்கிறார்கள்.

பொதுமக்களுக்கு என்னென்ன வழிகளில் எல்லாம் நன்மை செய்ய இயலுமோ, அந்த வழிகளைப் பற்றியே நான் சதா சர்வ காலமும் சிந்தித்துக்கொண்டு இருக்கிறேன்.

பொது நலம் என்பது புல்லாங்குழல் போன்றது. சுயநலம் என்பது கால்ப் பந்து போன்றது. இவை இரண்டும் காற்றால் இயங்குகின்றன. புல்லாங்குழல் முத்தமிடப்படுகின்றது. கால்ப்பந்து காலால் உதைக்கப்படுகின்றது. ஏன் ? தான் வாங்கிய காற்றை சுயமாக வைத்துக் கொள்வதால் கால்ப் பந்து உதைபடுகிறது. தான் வாங்கிய காற்றை இசை வடிவில் மற்றவர்களுக்குக் கொடுப்பதால் புல்லாங்குழல் முத்தமிடப்படுகிறது. சுயநலம் உள்ள மனிதர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். பொதுநலம் உள்ள மனிதர்கள் போற்றப்படுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் ஒரே நலம் தான் இருக்கிறது. அது தமிழக மக்களின் நலம். அதனால் தான் என் அன்புக்குரிய மக்களாகிய நீங்கள் எப்பொழுதும் என் பக்கம் இருக்கிறீர்கள். நானும் உங்கள் பக்கம் இருக்கிறேன்.

இன்றைய தினம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இந்தச் சீர்மிகு விழாவில், 74 கோடியே 85 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதிலும், 21 கோடியே 35 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்ததிலும், 18 கோடியே 23 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான நலத் திட்ட உதவிகளை 2,17,509 பயனாளிகளுக்கு வழங்குவதிலும் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இது தவிர 3 கோடியே 54 இலட்சத்து 6 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான சிறப்புப் பொங்கல் பரிசினை நீலகிரி மாவட்டத்திலுள்ள 2 இலட்சத்து 21 ஆயிரத்து 290 குடும்பங்களுக்கு வழங்குவதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். மொத்தத்தில் 117 கோடியே 98 இலட்சத்து 46 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணிகளையும், நலத் திட்ட உதவிகளையும் நீலகிரி மாவட்டத்திற்காக நான் அளித்துள்ளேன்.

இந்த இனிய விழாவில் 74 கோடியே 85 இலட்சத்து 82 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான பணிகளுக்கு அடிக்கல் நாட்டியதில் ஒரு சிலவற்றை இங்கே எடுத்துரைக்க விரும்புகிறேன்.

❖ பழங்குடியின மக்களின் கலாச்சாரத்தினை மக்களிடையே எடுத்துச் செல்லும் வகையில், 10 கோடியே 12 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நவீன கலையரங்கம், பொருட்காட்சிக் கூடம், அருங்காட்சியகம் மற்றும் நிலையான விற்பனை அரங்கங்களுடன் கூடிய பழங்குடியினர் பண்பாட்டு வளமையம் அமைத்தல்;

❖ உறைவிந்துக் குச்சிகளின் உற்பத்தியை அதிகரிக்கும் வகையில், 6 கோடியே 46 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஊட்டி உறைவிந்து உற்பத்தி நிலையத்தின் கட்டமைப்பு மேம்பாடு, தொழில் நுட்பப் பணிகள் மற்றும் உபகரணங்கள் கொள்முதல் போன்றவற்றை மேற்கொள்ளுதல்;

❖ கோடநாடு ஊராட்சி ஒன்றியத்தில் வசிக்கும் மலைவாழ் மக்கள் மேம்படுத்தப்பட்ட சுகாதார வசதிகளைப் பெறும் வகையில், கெரடாமட்டம் ஊராட்சியில் செயல்பட்டு வரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் செலவில் 30 படுக்கைகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையமாக மேம்படுத்துதல்;

❖ நெல்லியாளம் நகராட்சியில் 2 கோடியே 27 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வணிக வளாகத்துடன் கூடிய புதிய பேருந்து நிலையம் அமைத்தல்;

❖ ஒரு கோடியே 64 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் ஜெகதளா குடிநீர் அபிவிருத்தித் திட்டத்தை ஏற்படுத்துதல்;

❖ நஞ்சநாடு கிராமத்தில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு புதிய தொழில் கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை அமைத்தல்;

❖ மேட்டுப்பாளையத்தில் 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தேயிலைக் குழுமப் பொது வசதி மையம் ஏற்படுத்துதல்;

❖ நீலகிரி மாவட்ட ஆட்சியரகத்தில் 27 கோடி ரூபாய் மதிப்பில் கூடுதல் கட்டடங்கள் கட்டுதல்;

❖ 58 இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் 3 கிராம நிருவாக அலுவலர் அலுவலகங்கள் மற்றும் 2 குறுவட்ட நில அளவர் குடியிருப்புகள் கட்டுதல் உட்பட பல்வேறு பணிகளுக்கு நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

கோடை வாசஸ்தலங்களில் மிகவும் முக்கியமானதாக விளங்கும் நீலகிரி மாவட்டத்தில், ‘‘ஊட்டி படகு இல்லம்’’ மற்றும் ‘‘தொட்டபெட்டா தொலைநோக்கிநிலையம்’’ ஆகியவை சுற்றுலாப் பயணிகளை மிகவும் கவரக் கூடியவை. இதனைக் கருத்தில் கொண்டு, 4 கோடியே 3 இலட்சம் ரூபாய் செலவில் ஊட்டி படகு இல்லத்தினையும்; 17 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் தொட்டபெட்டா தொலைநோக்கி நிலையத்தையும் மேம்படுத்தும் பணிகளுக்கு இன்று நான் அடிக்கல் நாட்டியுள்ளேன்.

ஊட்டிக்கு வருகை புரியும் சுற்றுலாப் பயணிகள் இயற்கை அழகைக் கண்டுகளிக்க தொட்டபெட்டா பகுதிக்குச் செல்கின்றனர். நீலகிரி மாவட்டத்திற்குப் பெருமை சேர்க்கும் தேயிலை குறித்து சுற்றுலாப் பயணிகள் அறிந்து கொள்ளும் வகையில், 79 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தொட்டபெட்டா பகுதியில் தேயிலைப் பூங்கா அமைக்கும் பணிக்கும் நான் இன்று அடிக்கல் நாட்டியுள்ளேன்.

இதே போன்று 21 கோடியே 35 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய் மதிப்பிலான முடிவுற்றப் பணிகளைத் திறந்து வைத்ததில் முக்கியமான சிலவற்றை இங்கே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

❖ உதகை அரசுத் தலைமை மருத்துவமனையில் 48 இலட்சம் ரூபாய் செலவில் அறுவை சிகிச்சைப் பிரிவிற்காக கட்டப்பட்டுள்ள புதிய கட்டடம்;



❖ 11 இலட்சம் ரூபாய் செலவில் பழைய அருவங்காடு பகுதியில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம் மற்றும் கக்குச்சி ஊராட்சிக்கு உட்பட்ட சக்தி நகர் பகுதியில் கட்டப்பட்டுள்ள அங்கன்வாடி மையம்;

❖ அதிகரட்டி மற்றும் தாம்பட்டி பகுதிகளில் 10 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நூலகக் கட்டடங்கள்;

❖ மஞ்சூர் நடுவட்டம் மற்றும் அன்னமலைப் பகுதிகளில் 15 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நவீன பயணிகள் நிழற்குடைகள்;

❖ 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட மசினகுடி வனச் சரக அலுவலர் குடியிருப்புக் கட்டடம்;

❖ 6 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள கோர குந்தா கண்காணிப்புக் கோபுரம்;

❖ 12 இலட்சத்து 35 ஆயிரம் ரூபாய் செலவில் FERN HILL வன வளாகத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கவர்னர் சோலை வனச் சரக அலுவலகக் கட்டடங்கள்;

❖ ஊட்டி ஏரி முகப்பில் 1 கோடி ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம்;

❖ மஞ்சூர் அரசு மருத்துவமனையில் 1 கோடியே 19 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மகப்பேறுப் பிரிவு, சமையல் அறை மற்றும் இதரக் கட்டடங்கள்;

❖ 38 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் செலவில் கோத்தகிரி அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள அமரர் பிரிவு மற்றும் கூடலூர் அரசு மருத்துவமனையில் கட்டப்பட்டுள்ள இளம் சிசுக்கள் தீவிர கவனிப்புப் பிரிவு;

❖ பாரதியார் பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள நான்கு வகுப்பறைகள் மற்றும் இரண்டு பணியாளர் அறைகள்;

❖ 7 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் செலவில் குன்னூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட மூப்பர் காடு பழங்குடியினப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள புதிய பள்ளிக் கட்டடம்;

❖ 34 இலட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய ஊராட்சி அலுவலகக் கட்டடங்கள்;

- ❖ 5 இலட்சம் ரூபாய் மதிப்பில் கட்டப்பட்டுள்ள சமையற் கூடங்கள்;

- ❖ நீலகிரி மாவட்டத்தில் உள்ள நான்கு ஊராட்சி ஒன்றியங்களில் 16 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள நான்கு ஒருங்கிணைந்த ஆண்கள் சுகாதார வளாகங்கள்;

- ❖ 2 கோடியே 9 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள குந்தா வட்டாட்சியர் அலுவலகம்;

- ❖ குந்தா தாலுகாவில் உள்ள முள்ளிமலை அரசு உயர்நிலைப் பள்ளி, பந்தலூர் தாலுகாவில் உள்ள பாக்கனா அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் நெலாக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி ஆகியவற்றில் 1 கோடியே 59 இலட்சத்து 11 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள வகுப்பறைகள், குடிதண்ணீர் வசதி, கழிப்பறை வசதி மற்றும் சுற்றுச்சுவர் பணிகள்;

- ❖ 17 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள குன்னூர் கிளை நூலகக் கட்டடம்

உட்பட பல்வேறு திட்டங்கள் இன்று என்னால் மக்கள் பயன்பாட்டிற்காகத் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இவை தவிர சூரிய மின்சக்தியுடன் கூடிய முதலமைச்சரின் பசுமை வீடுகள் திட்டம், இந்திரா நினைவுக் குடியிருப்புத் திட்டம், விலையில்லா மிக்ஸி கிரைண்டர் மின்காந்த அடுப்பு வழங்கும் திட்டம், ஏழைப் பெண்கள் திருமண உதவித் திட்டம், மாற்றுத் திறனாளிகளுக்கான பெட்ரோல் ஸ்கூட்டர் வழங்கும் திட்டம், பசுமைக் குடில் அமைக்க மானியம் வழங்கும் திட்டம், தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவ, மாணவியருக்கு மடிக்கணினி வழங்கும் திட்டம், வேட்டி—சேலை வழங்கும் திட்டம் ஆகியவற்றின் கீழ் 18 கோடியே 23 இலட்சத்து 29 ஆயிரம் ரூபாய்

மதிப்பிலான நலத் திட்ட உதவிகள் 2 இலட்சத்து 17 ஆயிரத்து 509 பயனாளிகளுக்கு இன்று வழங்கப்பட உள்ளன. இவர்களில் 45 பேருக்கான நலத் திட்ட உதவிகளை இந்த மேடையில் நானே வழங்க உள்ளேன். எஞ்சியுள்ள பயனாளிகளுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் நலத் திட்ட உதவிகளை இன்றே வழங்குவார்கள்.

தமிழக மக்களுக்கும், தமிழகத்திற்கும் இன்னும் நிறைய செய்ய வேண்டிய பணிகள் கடமைகள் உள்ளன. அவற்றை நிறைவேற்ற வேண்டும் என்றால் இந்திய அளவில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். உங்கள் உறுதுணையோடு அத்தகைய மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்துக் கொண்டு;

இந்த விழா சிறப்பாக அமைந்திட பணியாற்றிய நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. பொ. சங்கர் அவர்களுக்கும், அனைத்து அரசுத் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறையினருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டு,

அண்ணா நாமம் வாழ்க ! புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் நாமம் வாழ்க ! என்று கூறி விடை பெறுகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை, ஜவஹர்லால் நேரு உள் விளையாட்டு அரங்கில்
27.01.2014 அன்று நடைபெற்ற 4 ஆவது அகில இந்தியக் காவல்
அதிரடிப்படையினர் திறன்போட்டி நிறைவு விழாவில்
ஆற்றிய பேருரையின் தமிழாக்கம்!



**நாட்டின் முன்னோடிக்
காவல்துறையாக விளங்கும்
தமிழ்நாடு காவல் துறை!**

**நா**ன்காவது அகில இந்தியக் காவல் அதிரடிப்படையினர் திறன் போட்டி–2013இன் நிறைவு விழாவில் கலந்துகொண்டு, வெற்றி பெற்றவர்களைப் பாராட்டி, விருதுகள் மற்றும் பரிசுகளை வழங்குவதிலும், வெற்றிபெறாதவர்களுக்கு ஊக்கம் அளிப்பதிலும் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சுவாமி விவேகானந்தரின் சொற்றொடர்கள் தற்போது என் நினைவுக்கு வருகின்றன. “என் நாட்டு மக்களுக்கு இரும்பால் ஆன தசைகளும், எஃகு போன்ற நரம்புகளும், இடியுடன் கூடிய மின்னலைப் போன்று உறுதிமிக்க மனமும் இருக்க வேண்டும் என விரும்புகிறேன்” என்பது சுவாமி விவேகானந்தரின் வாக்கு. நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற நோக்கமும், தொலைநோக்கு சிந்தனையும் இளைஞர்கள் மற்றும் இளம் பெண்களுக்கு இருக்க வேண்டும். அப்போதுதான் சவால்களைச் சந்தித்து, நம்முடைய மனஉறுதியையும், செயலாற்றலையும் மென்மேலும் வலிமைப்படுத்திக் கொள்ளலாம்.

### உறவைப் பலப்படுத்தும் விளையாட்டு

தற்போது நடைபெறும் இந்நிகழ்ச்சியில், பல்வேறு கலாச்சாரப் பின்னணிகளுடன் கூடிய பலதரப்பட்ட மக்களை ஒன்றாகக் காண்கிறோம். குறிப்பாக இதுபோன்ற விளையாட்டுத் திறன் போட்டிகள் தனிப்பட்ட நபர்களையும், அமைப்பாளர்களையும், ஒன்றாகக் கொண்டு வருகின்றன. இதன்மூலம், கலாச்சார மற்றும் இன ரீதியான வேறுபாடுகளுக்கு இணைப்புப் பாலம் அமைக்கப்படுகிறது. பலதரப்பட்ட மக்களை ஒன்றிணைக்கும் விளையாட்டுத் திறன் போட்டிகள், பங்கேற்போரின் வலிமையைப் பறைசாற்றுவதோடு, திறமையை மென்மேலும் பெருக்கி, வெற்றி பெற உதவுகின்றன. ஒழுக்க நெறிகள், நம்பிக்கை, தலைமைப் பண்பு, பரஸ்பர ஒத்துழைப்பு, அனைவரையும் மதித்தல் உள்ளிட்ட அம்சங்களை வலிமைப்படுத்தவும், பல்வேறு திறன்களை

மேம்படுத்தவும், விளையாட்டுத் திறன் போட்டிகள் தளம் அமைத்துத் தருகின்றன.

முயற்சியின் மதிப்பை வெளிப்படுத்துவதோடு, வெற்றியையும், தோல்வியையும் எதிர் கொள்வது எப்படி என்பதையும் விளையாட்டுத் திறன் போட்டிகள் கற்றுத் தருகின்றன.

விளையாட்டின் இத்தகைய அடிப்படை கூறுகள்தான், தேசிய அளவிலான வளர்ச்சியை எய்தும் நோக்கத்திற்குப் பெரிதும் உதவுகின்றன. ஒட்டுமொத்த வளர்ச்சி, அமைதி, சமாதானம், பரஸ்பர ஒத்துழைப்பு, எதிர் அணியில் இருப்போரையும் மதித்து நடந்து கொள்வது ஆகிய பல்வேறு அம்சங்கள் விளையாட்டுப் போட்டிகள் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றன.

விளையாட்டுத்திறன் போட்டிகள் மூலமாகக் கற்றுக் கொள்ளப்படும் இது போன்ற வாழ்க்கைத் திறன்கள், தனிப்பட்ட நபர்களின் நல்ல குணங்களை வளர்த்துக் கொள்வதற்கும், ஆளுமைத் திறனைப் பெருக்கிக் கொள்வதற்கும், மற்றவர்கள் உடனான உறவைப் பலப்படுத்திக் கொள்வதற்கும் உதவுகின்றன.

உங்களிடையே, போட்டித் திறமையை வளர்த்துக் கொள்வதற்கும், வெற்றி பெறுவதற்கும் இது போன்ற நிகழ்ச்சிகள் பெரிதும் பயன்படுகின்றன.விளையாட்டுத்திறன் போட்டி என்பது தனிப்பட்ட பெருமை வாய்ந்த நிகழ்ச்சியாகும். குறிப்பாக, காவலர்கள் தங்கள் பணியில் ஊக்கத்தை வளர்த்துக் கொள்ளவும், மன ரீதியான அழுத்தத்திலிருந்து விடுபடவும் இத்தகைய போட்டிகள் பெரிதும் பயன்படுகின்றன. இதுமட்டுமின்றி, உடல் ரீதியான திறன்கள், உடல் வலிமை ஆகியவற்றை அதிகரித்துக் கொள்ளவும் இவை உதவுகின்றன.

அகில இந்தியக் காவல்துறை விளையாட்டுக் கட்டுப்பாட்டு வாரியம், மற்றும் ஒருங்கிணைப்புக் குழு, காவல்துறை ரீதியிலான விளையாட்டுப்போட்டிகளை அகில இந்திய அளவில் நடத்துகிறது. ஒவ்வொரு ஆண்டும், ஒரு குறிப்பிட்ட காவல்துறைப் பிரிவால் இப்போட்டி நடத்தப்படுகிறது. துப்பாக்கிச் சுடுதல் மற்றும் தடகளம் மற்றும் ஏனைய அதிரடிப்படைகளுக்கான போட்டிகள் தனிப்பட்ட அலுவலர்களின் திறமையையும், அணிரீதியான திறமையையும் வளர்க்கின்றன.

**சிறப்புக் கமாண்டோக் குழு**

காவல்துறைக் கமாண்டோ என்பது ஒரு புதிய கருத்தாக்கமாகும். முறையான காவல் துறையில் முழுமையான பயிற்சி பெற்ற சிறப்பு கமாண்டோப் பிரிவு முதன்முதலில் 1967 ஆம் ஆண்டு அமெரிக்காவில் லாஸ் ஏஞ்சல்ஸ் காவல் துறையில் ஏற்படுத்தப்பட்டது. அப்போது லாஸ் ஏஞ்சல்ஸ் காவல்துறை இந்தப் புதிய கமாண்டோப் பிரிவை ஒரு சிறப்பு பிரிவு அல்லது சிறப்பு ஆயுதம் மற்றும் செயலாக்கக் குழு (SWAT) என்ற பெயரில் அமைத்தது. இவர்களுக்கு நெருக்கடியான சூழ்நிலைகளைக் கையாளும் பணி ஒதுக்கப்பட்டது.

இந்தப் பிரிவில் உள்ளவர்கள், பிணைக் கைதிகளை மீட்பது, பயங்கரவாத எதிர்தாக்குதல், தேடுதல் மற்றும் மீட்புப் பணி உள்ளிட்ட நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்ளும் உயர்திறன் படைத்தவர்களாக இருந்தனர். மேலும், வழக்கமான காவல் துறையினர் ஈடுபடாத நெருக்கடியான பணிகளில் இவர்கள் ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்த சிறப்புப் பிரிவின் பயன் பிரமிக்கத்தக்க வகையில் இருந்ததால், இன்று உலகத்தின் அனைத்துக் காவல் துறையும் இந்த சிறப்புக் கமாண்டோக் குழுவை உருவாக்கியுள்ளது.



இந்தக் குழுக்களின் பணிகள் நெருக்கடியான சூழ்நிலைகளை எதிர்கொள்வதாகவே தற்போது வரை நீடிக்கிறது.

**பொதுமக்களின் உயிர்காக்கும் சேவையே காவல்துறைப்பணி**

அகில இந்தியக் காவல்துறைக் கமாண்டோப் போட்டிகள், காவல்துறையின் ஆண்டு விளையாட்டுப் பட்டியலில் தற்போதுதான் சேர்க்கப்பட்டுள்ளது.

தற்போதைய உள்நாட்டுப் பாதுகாப்புக்குப் பயங்கரவாதமும், தீவிரவாதமும் மிகப்பெரிய அச்சுறுத்தல்களாக எழுந்துவரும் தற்போதைய சூழ்நிலையில், சிறப்பு கமாண்டோப் பிரிவினருக்குப் பயங்கரவாத எதிர்தாக்குதல் திறன்களை மேம்படுத்துவதற்கான முக்கியத்துவம் கருதி இந்தப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பயங்கரவாதத்தை எதிர் கொள்ளவும், அதனை வீழ்த்தவும் தேவைப்படும் திறமை கொண்டவர்களாக கமாண்டோப் படையினரை உருவாக்க வேண்டியது மிக அவசியமானதாகிவிட்டது. இதனால் அனைத்து மாநிலங்களும் நன்கு பயிற்சி பெற்ற காவல்துறை கமாண்டோ பிரிவுகளை உருவாக்கியுள்ளன. இந்தக் கமாண்டோப் படைகள் அனைத்தும் எந்த நேரத்திலும் தயாரான நிலையில் இருக்க வேண்டியுள்ளதால், அவர்களின் எதிர்தாக்குதல் திறன்களைத் தொடர்ந்து மேம்படுத்த வேண்டிய கட்டாயம் உள்ளது.

கமாண்டோப் படையினரின் எதிர்தாக்குதல் திறன்களின் மேம்பாடு என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை ஈடுகொடுக்கக் கூடியதாக இருக்க வேண்டும். ஏனென்றால் காவல் துறையினர்தான் பொதுமக்களின் உயிர்களைப் பாதுகாக்க வேண்டிய மிக அத்தியாவசியமான சேவையில் அதிக அளவில் ஈடுபடுபவர்கள், அனைவருக்கும் வெளிப்படையாக தெரியக்கூடியவர்களாகவும் இருக்கிறார்கள்.

பெரும்பாலான கமாண்டோப் பிரிவுகள் மிகச் சிறந்த வகையில் பயிற்சியளிக்கப்பட்ட, சிறந்த திறன் படைத்த, சிறந்த தலைமையைக் கொண்ட, ஒருமித்த குறிக்கோளுடனான பிரிவுகளாக எல்லாக் காவல்படைகளிலும் திகழ்கிறார்கள்.

குறிப்பிட்ட தேவைகள் தான், சிறப்பான திறன்களை மேம்படுத்திக்கொள்ள வேண்டிய சூழலைத் தீர்மானிக்கிறது. எனினும், தமிழக முதலமைச்சர் என்ற முறையில், என்னுடைய தீவிர முயற்சியெல்லாம் ஒட்டுமொத்தக் காவல்துறையின் பயிற்சியை மேம்படுத்தவும், அவர்களுக்கு நவீனக் கருவிகளை வழங்கவும், சிறந்த தலைமையையும், குறிக்கோளையும் உருவாக்கித் தருவதுதானே தவிர, ஒரு சிறு பிரிவினரை மட்டும் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக உருவாக்குவதல்ல.

உங்களுடைய சேவை என்பது, அதீத உறுதியுடன் எல்லா நேரங்களிலும், தனித் திறமையுடன் விளங்குவதாகும். நீங்கள், உங்கள் பணியை நேர்மையாகவும், ஒழுக்கமாகவும் மற்றவர்களின் நம்பிக்கைக்கு உரியவர்களாகவும் உயர்த்திக் கொள்வதன் மூலம், பொதுமக்களின் உயர்ந்த நம்பிக்கையையும், அவர்களின் மரியாதையைப் பெறுபவர்களாகவும் இருப்பீர்கள்.

2013ஆம் ஆண்டுக்கான அகில இந்தியக் காவல்துறைக் கமாண்டோ திறன் போட்டிகளை நடத்தும் பொறுப்பு தமிழகக் காவல்துறையிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்தப் போட்டிகள்,

4ஆவது முறையாக நடைபெறும் போட்டிகளாகும். இதற்கு முந்தைய 3 போட்டிகள், எல்லைப் பாதுகாப்புப் படை, அசாம் ரைஃபில்ஸ், ராஜஸ்தான் காவல்துறை ஆகியவற்றால் நடத்தப்பட்டுள்ளன.

இந்த ஆண்டு முக்கியமான மத்திய துணை ராணுவப் படைகள் மற்றும் பல மாநிலங்களின் காவல்துறைகளைச் சேர்ந்த 23 அணிகள், இந்தப் போட்டிகளில் பங்கேற்றுள்ளன.

ஏற்கெனவே, கிராமப்புரம் மற்றும் காட்டுப் பகுதிகளில் தீவிரவாதிகளை எதிர்கொள்ளும் பயிற்சியைத்தான் மையமாகக் கொண்டு பயிற்சிகள் அளிக்கப்பட்டுவந்தன. மும்பையில், கடந்த 2008 ஆம் ஆண்டு நடந்த பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து, நகர்ப்புரங்களிலும் பயங்கரவாத எதிர் தாக்குதல் நடத்தும் திறன்களை மேம்படுத்த வேண்டிய அவசரத்தேவை ஏற்பட்டது. இந்தப் போட்டிகளில், ஒரு கமாண்டோக் குழுவின் தாக்குப்பிடிக்கும் திறன், உடல் மற்றும் மன உறுதியின் திறன், ஒருங்கிணைப்பு, குறிவைத்துச் சுடுதல், எதிர் தாக்குதலுக்கான வியூகம் அமைத்தல், திட்டமிடல் மற்றும் சிறு குழுக்களாக எதிர்த் தாக்குதல் நடத்துதல் ஆகியவை அளவிடப்படும்.

போட்டியில் பங்கேற்கும் ஒவ்வொரு குழுவிலும் 22 பேர் இருப்பார்கள். இவர்கள், மிக வேகமான ஓட்டம், தடைகளை எதிர்கொள்ளும் திறன், எதிர் துப்பாக்கிச்சூடு மற்றும் நகர்ப்புரங்கள் மற்றும் காட்டுப் பகுதிகளில் செயல்படுதல் ஆகிய போட்டிகளில் ஒன்றாக இணைந்து ஈடுபடுவார்கள். இந்தக் குழுக்கள், இத்தனை விஷயங்களையும் 4 மணி 45 நிமிடங்களில் முடித்தாக வேண்டும்.

இந்தப் போட்டிதான், அவர்களின் தாக்குப்பிடிக்கும் திறன், அவர்களின் உடல்ரீதியான மனரீதியான உறுதியை வெளிப்படுத்துவதாகும். இத்தகைய போட்டிகளில் வெற்றி

பெற்றவர்களை நான் பாராட்டுகிறேன். மேலும், இந்தப் போட்டிகளில் பங்கேற்ற அனைத்துக் குழுக்களையும் பாராட்டுகிறேன்.

**கமாண்டோ படையும் கோடாரியும்**

இந்தப் போட்டிகள், நகர்ப்புரம் மற்றும் காடுகளை உள்ளடக்கியதாக இருந்ததால், அனைத்துக் குழுக்களும் அவர்களின் நடைமுறைகள் மற்றும் எதிர்தாக்குதல் திறன்களை அளவிட்டுக் கொள்ள இது உதவிகரமாக இருக்கும். மேலும், கமாண்டோ படைகள் மற்ற குழுக்களிடமிருந்து புதிய உத்திகளையும், தொழில்நுட்பங்களையும் கற்றுக்கொள்ளவும் இந்தப் போட்டிகள் வழிவகுத்துள்ளன.

"ஒரு மரத்தை வெட்ட 6 மணிநேரம் ஒதுக்கினால், அதில் 4 மணிநேரத்தை என்னுடைய கோடாரியை கூர்மைப்படுத்த பயன்படுத்துவேன்" என்று ஆபிரஹாம் லிங்கன் ஒருமுறை கூறினார். இதைத்தான், நான் உறுதியாக செய்ய வேண்டியுள்ளது. நம்முடைய கமாண்டோப் படைகள், கோடாரியாகும். இதுபோன்ற போட்டிகள், அவர்களின் திறமைகளை மேலும் மேம்படுத்தப் பயனுள்ளதாக அமையும்.

தமிழ்நாடு காவல்துறை இந்தப் போட்டிகளை, சென்னையை அடுத்த ஊனமாஞ்சேரி காவல் பயிற்சி அகாடமியில் நடத்தியது எனக்குப் பெரும் மகிழ்ச்சியை அளித்துள்ளது.

இந்தப் போட்டிகளுக்காக, நான் 94 இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் நிதி ஒதுக்கி அளித்துள்ளேன். தடைகளைக் கொண்ட களப்பாதை, மின்னணுக் கட்டுப்பாட்டுடன் கூடிய இலக்குகள் ஆகிய புதிய உள்கட்டமைப்புகள் 50 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. இவை, இந்தக் காவல்துறை அகாடமியின் நிரந்தரக் கட்டமைப்புகளாக இருக்கும்.

இந்தப் போட்டிகளில், தமிழகக் காவல் துறையினர் தான் முதல்முறையாக மின்னணு முறையில் கட்டுப்படுத்தக்கூடிய எதிர்த் துப்பாக்கிச்சூடு களத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பது மகிழ்ச்சியளிக்கிறது.

சிறந்த தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்துவதில் தமிழகக் காவல்துறை எப்போதுமே, நாட்டின் முன்னோடிக் காவல்துறையாக விளங்கி வருகிறது. உள்நாட்டுப் பாதுகாப்பு மிக வேகமாக எப்போதும் இல்லாத வகையில், தீவிரமடைந்து வரும் நிலையில், நாம் அலட்சியமாகவும், தேவையான தொழில்நுட்பம் இல்லாமலும் இருக்க முடியாது. தமிழக முதலமைச்சராக நான் பதவி வகித்த போதெல்லாம், காவல்துறையின் மேம்பாடு மற்றும் அதன் நலனில் நான் ஒருபோதும் கஞ்சத்தனமாக நடந்து கொண்டதில்லை. தமிழ்நாடு காவல்துறை, மிகச் சிறந்த உள்கட்டுமானத்தைப் பெறுவதை நான் எப்போதும் உறுதிப்படுத்தியுள்ளேன். அவர்களுக்கு, மிக நவீன ஆயுதங்கள் மற்றும் தொடர்ச்சியான பயிற்சி கிடைப்பதற்கும், அவர்களின் ஒருங்கிணைப்பையும் பணித்திறனையும் மேம்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளேன்.

**தன்னிகரில்லா பயிற்சி பெற்ற தமிழ்நாடு கமாண்டோ படை**

தமிழ்நாட்டின் கமாண்டோப் பிரிவுகள், முறையான போர் முறைகள் அல்லாத முறைகளான, கடத்திப் பணம் பறித்தல், சதித் திட்டம், உளவு நடவடிக்கைகள், தப்பித்தல் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளையும் கையாளப் பயிற்றுவிக்கப்பட்டுள்ளது. இதேபோல, பயங்கரவாத நடவடிக்கைகள், பயங்கரவாத எதிர்த்தாக்குதல், பயங்கரவாதத்திற்கு எதிரான தொடர்ச்சியான நடவடிக்கைகள், பிணைக் கைதிகளை மீட்டெடுத்தல், பயங்கரவாத அமைப்புகளிடம்இருந்து ஆபத்தான பொருட்களைக் கைப்பற்றுதல், பயங்கரவாத கட்டமைப்புகளைத் தாக்கி அழித்தல்




உள்ளிட்ட பயிற்சிகளும் தமிழகக் கமாண்டோப் படையினருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

**மிகச்சிறந்த படைப்பிரிவு**

தமிழகக் காவல்துறையினருக்கு பணிதொடர்பான முழுமையான சுதந்திரத்தை எனது அரசு வழங்கியுள்ளதால், அவர்கள் சவால்களை எதிர்கொண்டு சிறப்புடன் செயல்பட்டு வருகிறார்கள். இது எனக்கு மிகவும் பெருமை அளிக்கிறது.

தமிழகக் காவல்துறையினரின் மகத்தான தலைமைப் பண்பும், சிறந்த பயிற்சி முறையும் சமூகத்தைப் பாதுகாப்பதில் மிகப்பெரிய உந்துதலாக இருக்கிறது.

மகிழ்ச்சியான தருணங்களில் ஒருவர் எப்படி இருக்கிறார் என்பதைக் கொண்டு அவரின் திறன் மதிப்பிடப்படுவதில்லை. மாறாக சவால்களையும், நெருக்கடிகளையும் அவர் எப்படி எதிர்கொள்கிறார் என்பதைக் கொண்டுதான் அவர் அளவிடப்படுகிறார் என மார்ட்டின் லூதர் கிங் ஒருமுறை குறிப்பிட்டார். எப்படி நெருப்பு உலோகத்தைச் சுத்தப்படுத்துகிறதோ, அதேபோல சவால்கள்தான் உங்களை மிகச் சிறந்த அதிகாரிகளாக வடித்தெடுக்கும்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், தமிழக அரசு எவ்வாறு மிகுந்த பொறுப்புடன் செயல்பட்டது என்பதற்கு உதாரணமாக, அண்மையில் புதூரில் நடைபெற்ற

ஃபக்ருதீன் மற்றும் அவரது இரண்டு கூட்டாளிகள் எந்தவித உயிரிழப்பும் இன்றி கைது செய்யப்பட்ட நிகழ்வைக் கூறலாம். நாட்டிலேயே தமிழகக் கமாண்டோப் படைப்பிரிவு சந்தேகத்திற்கிடமின்றி மிகச் சிறந்தது என்பதை இந்த நடவடிக்கை நிரூபித்து இருக்கிறது.

இந்த அதிரடிக் கைது நடவடிக்கையில் ஈடுபட்ட தமிழகக் காவல்துறையைச் சேர்ந்த 260 காவலர்களையும் நான் தனிப்பட்ட முறையில் வாழ்த்துகிறேன். இதற்காக, 20 காவல் துறையினருக்குத் துறைரீதியான பதவி உயர்வு கொடுத்ததோடு மட்டுமல்லாமல் ஒரு இலட்சம் ரூபாய் முதல் 15 இலட்சம் ரூபாய் வரை ரொக்கப் பரிசுகளும் வழங்கி கௌரவித்துள்ளேன்.

இதேபோன்று, விளையாட்டுப் போட்டிகளில் காவல்துறையினர் கலந்து கொள்வதையும் எனது அரசு ஊக்குவித்து வருகிறது. மாநில அளவில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெறும் காவல்துறையினருக்குப் பரிசுப் பொருட்களை வழங்கியும் ஊக்குவித்து வருகிறேன். அகில இந்திய அளவில் நடைபெறும் காவல்துறையினருக்கான விளையாட்டுப் போட்டிகளில் தங்கம், வெள்ளி மற்றும் வெண்கலப் பதக்கங்கள் பெறுபவர்களுக்கான பரிசுத் தொகையை 10 மடங்காக உயர்த்தி முறையே ரூ.5 இலட்சம், ரூ.3 இலட்சம், ரூ. 2 இலட்சம் என உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. மேலும், அகில இந்திய விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம் பெறும் தமிழக காவல்துறை அணியினர் ஒவ்வொருவருக்கும் தலா 50ஆயிரம் ரூபாயும், இரண்டாவது இடம் பெறும் அணியினர் ஒவ்வொருவருக்கும் தலா 30 ஆயிரம் ரூபாயும் பரிசளிக்கப்படுகிறது.

தனிப்பட்ட தியாகம் மற்றும் கடின உழைப்பால் ஆனது தான் உங்களது பணியின் தன்மை. மேலும், சமுதாயத்தைப்

பாதுகாக்கவும், காப்பாற்றவும் உங்கள் பணியில் நீங்கள் செய்யக்கூடிய தீரச் செயல்களுக்கு வழங்கக் கூடிய, பரிசுகள், சலுகைகள், நிதியுதவிகள், பதவி உயர்வுகள் போன்றவை உங்களுக்கு மிகப்பெரிய உந்துதலாக இருக்கும்.

ஒவ்வொரு காவலர் மற்றும் பெண்காவலரும், சமுதாயத்தில் கலவரமான சூழ்நிலை நிலவும் போதுகூட, அமைதியான வழிமுறையைக் கடைபிடிக்க வேண்டும். சமுதாயத்தில் ஒற்றுமையைக் காக்க தொடர்ந்து தைரியத்துடன் பாடுபடும் உங்களுடைய தியாகத்துடன் கூடிய பணியைப் பாராட்டுகிறேன். உங்களுடைய உணர்வு மற்றும் நம்பிக்கை உங்களுடைய வாழ்க்கையை மிகவும் சிறப்புறச் செய்யும்.

இந்தப்போட்டிகளில்பங்கேற்றஒவ்வொருஅணியினருக்கும், பல்வேறு அணியில் பங்கேற்ற ஒவ்வொருவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றிபெற்ற ஒவ்வொரு அணியிலும் பங்கேற்ற வீரர்களுக்கும், அவர்களுக்குப் பயிற்சியளித்து ஊக்குவித்த பயிற்சியாளர்களுக்கும், தொடர்ந்து வெற்றி பெற எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதேநேரத்தில் போட்டிகளில் வெற்றிபெறாதவர்கள் எதையும் இழக்கவில்லை. அடுத்த போட்டிகளில் வெற்றி பெறக்கூடிய அளவில் தங்களது தகுதியை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இந்த அரங்கில் கூடியிருக்கும் ஒவ்வொரு காவலர் மற்றும் பெண் காவலரும், நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் சேவை செய்து தங்களது பணியில் சிறந்து விளங்கிட வாழ்த்துகிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்
**3.2.2014** அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில்
மேதகு ஆளுநரின் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும்
தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்திற்கு
அளித்த பதிலுரை




**எங்கள் பக்கம் மக்கள்!**
**மக்களின் பக்கம் நாங்கள்!**

**மா**ண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பல்வேறு கட்சித் தலைவர்களும், மாண்புமிகு உறுப்பினர்களும்

தங்களது கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறார்கள். இந்த ஆளுநர் உரையில் உள்ள நல்ல அம்சங்களை, பாராட்ட வேண்டியவைகளைப் பாராட்டியும், அதில் உள்ள குற்றம் குறைகளை சுட்டிக்காட்டி அவற்றை எல்லாம் தீர்த்து வைக்க ஆவன செய்ய வேண்டும் என்ற அளவிலேயும், இங்கே உறுப்பினர்கள் தங்களது உரைகளை ஆற்றியிருக்கிறார்கள்.

இந்த அவையில் கருத்துகளை தெரிவிக்க வாய்ப்பு இருந்தும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளாமல் இந்த அரசின் மீது குற்றங்களை மட்டுமே சுமத்த வேண்டும் என்ற எண்ணத்தில் அவைக்கு வெளியே இந்த ஆளுநர் உரை குறித்து மனம் போன போக்கில் சிலர் பேசியிருக்கிறார்கள். பொத்தாம் பொதுவாக பொறுப்பிலே இருந்தவர்கள் பொறுப்பிலே இருக்கின்றவர் பொறுப்பற்ற முறையில் பேசி இருக்கிறார்கள்.

எங்களை பொறுத்தவரையில், மக்களுக்கு நல்லது செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் தான் திட்டங்களை தீட்டுகிறோம். அவ்வாறு தீட்டப்பட்ட திட்டங்கள் மக்களை சென்றடைகின்றன. திட்டங்களிலே ஒரு சில குறைகள் இருக்கலாம். திட்டங்கள் மக்களைச் சென்றடைவதிலே சில இடங்களில் சில குறைகள் இருக்கலாம். அவற்றைச் சுட்டிக்காட்டினால், அவற்றை சரிசெய்ய நாங்கள் தயங்க மாட்டோம். அதற்காக ஒட்டுமொத்தமாக குற்றம் சாட்டுவது என்பது ஏற்றுக்கொள்ள முடியாதது. எந்த திட்டம் ஆனாலும் எந்த செயல் ஆனாலும் நல்லதைக் காண்பதென்றாலும் காணலாம். கெட்டதைக் காண்பதென்றாலும் காணலாம். நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றது தான் ஒவ்வொரு செயலிலும் நல்லதும் கெட்டதும். அவரவர்களுடைய மனதைப் பொறுத்து நல்லதும் கெட்டதும் தெரியும்.

இங்கே பேசியவர்களில் சிலர் அரசு இயந்திரத்தில் உள்ள சில குறைகளை சுட்டிக் காட்டினார்கள். அவர்கள் அவற்றை குற்றங்களாக, குற்றச்சாட்டுகளாக எடுத்துக்

கூறவில்லை. ஆனால், ஒரு சிலர் குறைகளையும், குற்றங்களாக சித்தரித்தனர்.

இதை, ஓர் உதாரணத்தின் மூலம் நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். +2 படிக்கும் மாணவி நூற்றுக்கு நூறு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் படிக்கிறாா். அவளுடைய பெற்றோரும் அந்த மாணவியின் நலனில் அக்கறை உள்ளோரும் அதைத் தான் விரும்புவார்கள். ஒரு வேளை அந்த மாணவி 96 மதிப்பெண் பெற்றால் கூட நூற்றுக்கு நூறு வாங்கும், திறமை இருந்தும் 4 மதிப்பெண்கள் குறைந்துவிட்டதே என்ற ஆதங்கம்தான் அவர்களிடம் வெளிப்படும். எஞ்சிய 4 மதிப்பெண்களை வரும் காலங்களில் பெற்றுவிட வேண்டும் என்ற துடிப்புதான் அந்த ஆதங்கத்தின் வெளிப்பாடு. இதேபோன்று தான் இங்கே குறைகளை சுட்டிக் காட்டியவர்கள் தங்கள் கருத்துகளை எடுத்துரைத்து இருக்கிறார்கள் என நான் கருதுகிறேன். ஆனால், அதே நேரத்தில் அந்த மாணவியின் நலனில் அக்கறை இல்லாதவர்கள் 96 மதிப்பெண் என்ன பெரிய மதிப்பெண்? நூற்றுக்கு குறைவாக பெற்றால் 96 மதிப்பெண்ணும் ஒன்று தான், 40 மதிப்பெண்ணும் ஒன்று தான் என்று தங்கள் பொறாமையை, அழுக்காறை, ஆற்றாமையை வெளிப்படுத்துவார்கள். இல்லை என்றால் "சுலபமாக கேட்கப்பட்ட கேள்விகளுக்கு நூற்றுக்கு நூறு வாங்கியிருக்க வேண்டும். 96 மதிப்பெண் என்பது குறைவு தான்" என்று கூறி, அந்த மாணவியின் சாதனையை சிறுமைபடுத்துவார்கள். இவர்களைப் போன்றவர்கள்தான், இந்த அரசின் திட்டங்கள் குறித்தும், அவற்றை செயல்படுத்தும் விதம் குறித்தும், நியாயமற்ற குற்றச்சாட்டுகளை சுமத்தியவர்கள்.

நிறைகளையும் குறைகளையும் ஆராய்ந்து பார்த்து, அவற்றில் மிகுதியாக இருப்பவை எவை என்பதைத் தெரிந்து அதன் பிறகு தெளிவான முடிவுக்கு வர வேண்டும் என்கிறார் திருவள்ளுவர்.

**அண்ணா தந்த அருமையான பதில்**

**1961** ஆம் ஆண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் நிறைவுக் கூட்டம். அடுத்து தேர்தல் நடைபெற இருந்தது. புதிய உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அமைச்சரவை புதிதாக அமைக்கப்பட வேண்டும். இந்த நிறைவுக் கூட்டத்தில் அமைச்சர் திரு. சி. சுப்ரமணியம் அவர்கள் மக்களவை தேர்தலில் நிற்கப் போகிறார் என்பதைத் தெரிந்து, அவரை வாழ்த்தி உறுப்பினர்கள் பேசினார்கள்.

அப்போது எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் திரு. சி. சுப்ரமணியம் அவர்களை பாராட்டி பேசினார். அப்போது, ‘‘இன்றைய தினம், என்னுடைய கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர் திரு. கோவிந்தசாமி, நம் நிதி அமைச்சராகவும், காங்கிரஸ் கட்சி முக்கியஸ்தராகவும், இன்றைய தினம் சட்ட சபையின் நடவடிக்கைகளை நடத்திச் செல்லும் தலைவராகவும் அமர்ந்து நல்ல பணி ஆற்றிக் கொண்டு வருகிற கனம் சுப்ரமணியம் அவர்களை ஏசுநாதருக்கு ஒப்பிட்டுச் சொன்னார்கள். நல்ல உபதேசங்களை செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதை மனதில் வைத்துக் கொண்டு, ஏசுநாதருக்கு ஒப்பிட்டுச் சொன்னதைக் கேட்டு ஒரு கணம் சந்தோஷம் அடைந்தேன். ஐந்து வருட காலம் அவர்களோடு பழகிய நட்புரிமையோடு, கனம் சுப்ரமணியம் அவர்களோடு, ஏசுநாதரோடு நாமும் கூடிப் பழகி இருக்கிறோம் என்று பெருமைப்பட்டுக் கொள்ளலாம் என்று மகிழ்ந்தேன்’’ என புகழாரம் சூட்டினார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

திரு. சி.சுப்பிரமணியம் அவர்கள் எழுந்து ‘‘சிலுவையில் அறையாமல் இருக்க வேண்டும்!’’ என்று கூறினார்.

அதற்கு அண்ணா அவர்கள் தந்த அருமையான பதில், என்ன தெரியுமா ?

“மறுகணம் மருட்சி அடைந்தேன். ஏனென்றால், ஏசுநாதரின் சீடர்களில் ஒருவர் அவரைக் காட்டிக் கொடுத்தது போல், இந்த ஏசுநாதருக்கு ஆபத்து வராமல் இருக்க வேண்டும், என்று கவலைப்பட்டேன்” என்று கூறினார். அதாவது, உங்கள் கட்சிக்காரர்களால் தான் நீங்கள் எதிர்பார்க்கின்ற தொந்தரவு ஏற்படலாமே தவிர, எங்களால் அல்ல என்பதை அவ்வளவு அழகாக, நகைச்சுவையுடன் பதில் அளித்தார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

நாணயத்தின் ஒரு பக்கத்தை கண்டார் திரு. சி.எஸ். அவர்கள். அதன் மறு பக்கம் கண்டார் பேரறிஞர் அண்ணா அவர்கள்.

எனவே, எல்லாவற்றிலும் இருக்கும் இரு பக்கங்களில், ஒன்றை மட்டும் பாராமல் இரு பக்கமும் பார்த்து கருத்துகளை தெரிவிப்பது நல்லது என்ற என் கருத்தை இங்கு நான் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனது தலைமையிலான அரசின் மீது புழுதிவாரி இறைக்க வேண்டுமே என்பதற்காக, மக்கள் மத்தியில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக்கு உள்ள நற்பெயருக்கு களங்கம் கற்பிக்க வேண்டுமே என்பதற்காக, நாணயத்தின் ஒரு பக்கத்தை மட்டும் பார்த்து இந்த அரசின் மீது குற்றங்களை சில உறுப்பினர்கள் சுமத்தி இருக்கிறார்கள்.

**எங்களிடம் தடுமாற்றம் இல்லை**

மக்கள் நலப் பணிகளை மேற்கொண்டு வரும் எனது தலைமையிலான அரசின் மீது, அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக புழுதிவாரி இறைக்கின்றவர்கள் பக்கம் மக்கள் இல்லை. அவர்களும் மக்கள் பக்கம் இல்லை. பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டது போல, அவர்களது வீழ்ச்சிக்கு அவர்களது அழிவுக்கு, அவர்களது கட்சிக்காரர்கள் தான்

காரணமாக இருப்பார்கள். அவர்களது குடும்ப உறுப்பினர்கள் கூட காரணமாக இருக்கலாம். எங்களைப் பொறுத்த வரையில், எவ்வித தடுமாற்றமும் இல்லாமல் இருக்கிறோம். ஏனெனில், மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துகின்ற எங்கள் பக்கம் மக்கள் இருக்கிறார்கள். மக்களின் பக்கம் நாங்கள் இருக்கிறோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

இந்த ஆளுநர் உரை குறித்து தெரிவிக்கப்பட்ட எதிர்க்கட்சிகளின் ஆக்கப்பூர்வமான கருத்துகள் நிச்சயம் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்பதையும், எதிர்க்கட்சி உறுப்பினர்களால் சுட்டிக் காட்டப்பட்டுள்ள குறைகளில் உண்மை இருக்குமானால் அவை நிச்சயம் களையப்படும் என்பதையும் நான் முதலில் தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

எனது தலைமையிலான அரசைப் பொறுத்த வரையில், பயனற்ற இலவசங்களை கொடுத்து மக்களை ஏமாற்ற வேண்டும் என்ற எண்ணம் இல்லை. நான் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த போது பயனற்ற இலவசங்களை கொடுத்து மக்களை ஏமாற்றுபவர்களை வித்தை காட்டி குழந்தையை ஏமாற்றுபவர்களோடு ஒப்பிட்டு இதே சட்டமன்றத்தில் பேசினேன். இதைப் புரிந்து கொண்ட மக்கள், 2011 ஆம் ஆண்டு அவ்வாறு ஏமாற்றியவர்களை தூக்கி எறிந்தார்கள். மக்கள் வாழ்வில் வளம் பெற வேண்டுமென்றால், மாநிலம் செழிக்க வேண்டுமென்றால், மனித வள வளர்ச்சியில் அதிக அக்கறை செலுத்த வேண்டும். இந்த கொள்கையைத்தான் எனது அரசு பின்பற்றி வருகிறது. எனவே தான், எதிர்கால சந்ததியினருக்கு பயன்தரக் கூடிய கல்வி மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டுக்கும் நான் முக்கியத்துவம் அளித்து வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கல்வியே, சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிகோலும் என்பதால், அனைத்துத் தரப்பு மக்களும், குறிப்பாக, ஏழை எளிய, ஒடுக்கப்பட்ட, ஒதுக்கப்பட்ட, சமூக மற்றும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப்பினர் கல்வி அறிவை பெறும் வகையிலான திட்டங்கள் எனது அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. நடப்பு நிதியாண்டில், பள்ளிக் கல்விக்கென 16,965 கோடியே 37 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது. 2010–2011 ஆம் ஆண்டு, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பள்ளிக் கல்விக்காக ஒதுக்கப்பட்ட தொகை 11,274 கோடியே 75 இலட்சம் ரூபாய் ஆகும். அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், நான்கு இணை சீருடைகள், புத்தகப் பைகள், காலணிகள், கணித உபகரணப் பெட்டிகள், கிரையான்ஸ் மற்றும் வண்ணப் பென்சில்கள், புவியியல் வரைபடப் புத்தகங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. ஒன்று முதல் பன்னிரெண்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு, கட்டணமில்லா பேருந்து பயண அட்டைகள் வழங்கப்படுகின்றன. இதுதவிர, மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் குறித்த நேரத்தில் பள்ளி செல்ல வசதியாக விலையில்லா மிதி வண்டிகள் வழங்கப்படுகின்றன. மடிக்கணினிகளும் வழங்கப்படுகின்றன.

**பள்ளிக்கல்வியை ஊக்குவிக்க பற்பல திட்டங்கள்**

இடை நிற்றலைக் குறைக்கும் பொருட்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் 10 ஆம் வகுப்பு மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு தலா 1,500 ரூபாயும், 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவியருக்கு தலா 2,000 ரூபாயும் கல்வி ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது. இந்தத் தொகை தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை

வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு, மாணவ, மாணவியர் மேல்நிலைக் கல்வியை முடித்தவுடன் அவர்களுக்கு வழங்கப்படுகிறது. நடப்பாண்டில் மட்டும் இந்தத் திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 23 இலட்சம் மாணவ, மாணவியர் பயன் அடைந்துள்ளனர்.

வருவாய் ஈட்டும் பெற்றோரை இழக்க நேரிடும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் கல்வி எவ்விதத்திலும் பாதிக்கப்படக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு, அவர்களின் பெயர்களில் 50,000 ரூபாய் பொதுத் துறை நிறுவனத்தில் வைப்பு நிதியாக செலுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் கடந்த இரண்டரை ஆண்டுகளில் 1,080 மாணவ மாணவியர் பயன் அடைந்துள்ளனர்.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு முடித்துச் செல்லும் மாணவ, மாணவியர் தங்களது கல்வித் தகுதியை பதிவு செய்வதற்காக வேலைவாய்ப்பு அலுவலகங்களுக்குச் சென்று அலைவதை தவிர்க்கும் வகையில், இந்த வேலைவாய்ப்பு பதிவு முறையை பள்ளிகளிலேயே நாங்கள் அறிமுகப்படுத்தி இருக்கிறோம். இதேபோன்று சாதி சான்றிதழ், இருப்பிடச் சான்றிதழ், வருவாய் சான்றிதழ் ஆகியவற்றையும் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர் இடமிருந்து பள்ளித் தலைமை ஆசிரியர் பெற்று மாணவ, மாணவியருக்கு வழங்கும் முறையும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

**புத்தகச் சுமை குறைப்பு**

மாணவ, மாணவியர் மன அழுத்தமின்றி, தேர்வு பயமின்றி மகிழ்ச்சியுடன் கல்வி கற்க ஏதுவாக, முப்பருவ முறை திட்டம் ஒன்று முதல் ஒன்பதாம் வகுப்பு வரை செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த முறையில் ஒவ்வொரு பருவத்திற்கும் ஒரு பாடநூல் வழங்கப்படுவதால், மாணவ மாணவியரின் கடுமையான புத்தகச் சுமை குறைக்கப்பட்டு உள்ளது. மாணவர்களது படைப்புச்

சிந்தனை மற்றும் திறன்களை வளர்க்கும் செயல்பாடுகள் பாடநூல்களில் சேர்க்கப்பட்டுள்ளன.

உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியரின் மன அழுத்தத்தை குறைக்கும் பொருட்டு, நகரும் ஆலோசனை மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதன்மூலம், இதுவரை 46,794 குழந்தைகள் பயனடைந்துள்ளனர்.

மாணவர்களது ஒருமுகத் தன்மையை மேம்படுத்துதல், பகுப்பாய்வுத் திறன் மற்றும் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் திறனை அதிகரித்தல் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவ மாணவியருக்கு சதுரங்க விளையாட்டு அறிமுகப்படுத்தப்பட்டு, இதற்கான போட்டிகளில் 11 இலட்சத்து, 25 ஆயிரத்து 628 மாணவ மாணவியர் பங்கு பெற்றுள்ளனர்.

**அரசுப் பள்ளிகளில் ஆங்கிலப் பயிற்சி**

தங்களுடைய குழந்தைகள் ஆங்கில மொழியை கற்க வேண்டும் என்ற ஆர்வம் பெற்றோர்களிடையே இருப்பதால், கூடுதல் செலவையும் பொருட்படுத்தாமல் ஆங்கில வழி கல்வியினை போதிக்கும் தனியார் பள்ளிகளில் தங்கள் குழந்தைகளை சேர்க்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களிடையே மேலோங்கி நிற்கிறது. ஏழை, எளிய பெற்றோர்களின் நிதிச் சுமையினை குறைக்கும் வகையிலும்; ஆங்கில மொழியில் கல்வி கற்க வேண்டும் என்ற எண்ணமும், அதற்குரிய ஆற்றலும் உள்ள குழந்தைகளுக்கு அதற்கான வாய்ப்பை அரசு பள்ளிகளிலேயே ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற நோக்கத்துடன், கடந்த ஆண்டு சில பள்ளிகளில் ஆங்கில வழிப் பிரிவு தொடங்கப்பட்டது. இந்த ஆண்டு 6,594 பள்ளிகளில் ஒன்றாம் மற்றும் 6 ஆம் வகுப்புகளில் ஆங்கில வழிப் பிரிவுகள் தொடங்கப்பட்டுள்ளன. இது தவிர ஆங்கில பேச்சாற்றல் பயிற்சியும் அளிக்கப்படுகிறது.

இந்த அரசின் நடவடிக்கைமீது அவதூறு பரப்ப வேண்டும் என்ற எண்ணத்தில் சிலர் இதை குறை கூறி வருகின்றனர். ஆனால், அவ்வாறு குறை கூறுவோர் தங்கள் பிள்ளைகளை தமிழ் மொழி வழிக் கல்வியில் படிக்க வைத்தார்களா ? தி.மு.க.வின் சட்டமன்றக் கட்சித் தலைவர் திரு. மு.க. ஸ்டாலின், தனது பிள்ளைகளை தமிழ் மொழி வழிக் கல்வியில் படிக்க வைத்தாரா ? இல்லையே ! அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் வைத்திருக்கும் பள்ளிகளிலாவது தமிழ் மொழி வழிக் கல்வி பயிற்றுவிக்கப்படுகிறதா என்றால் அதுவும் இல்லை. பள்ளிகளின் பெயர்கள் கூட ஆங்கிலத்தில் தான் இருக்கின்றன. ‘‘துர்காவதி கல்வி அறக்கட்டளை’’ என்ற அமைப்பு, சென்னை–29, மேத்தா நகர், ராஜேஸ்வரி தெருவில் சன்ஷைன் அகாடமி (SUNSHINE ACADEMY) மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி என்ற பள்ளியை இயக்கி வருகிறது. இந்தப் பள்ளியின் இயக்குநர் திரு. மு.க. ஸ்டாலினின் மகள் திருமதி செந்தாமரை சபரீசன். திரு. மு.க. ஸ்டாலினின் மருமகள் திருமதி கிருத்திகா உதயநிதியும் இந்த அறக்கட்டளையில் உறுப்பினராக இருக்கிறார். இங்கு என்ன தமிழ்வழிக் கல்வி போதிக்கப்படுகிறதா ?

இதேபோன்று, சென்னை, வேளச்சேரி, டாக்டர் சீதாபதி நகர், ராணி தெருவில், சன்ஷைன் மாண்டிசோரி மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளியும், மடிப்பாக்கத்தில் Sunshine Chennai Senior Secondary Schoolலும் இயங்கி வருகின்றன. இந்த இரண்டு பள்ளிகளுக்கும் இயக்குநராக இருப்பவர், திரு. மு.க. ஸ்டாலினின் மகள் திருமதி செந்தாமரை சபரீசன். இங்கு ஆங்கில வழிக் கல்வி மாத்திரம் இல்லை. இந்தியும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. மழலையர் வகுப்பிற்கான ஆண்டுக் கட்டணம் 9,000 ரூபாய். 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளுக்கான கட்டணம் 15,400 ரூபாய்.

தனியார் பள்ளிகள் எல்லாம் இதேபோன்று ஆங்கில மொழி வழியில் வகுப்புகளை நடத்தி அதிக கட்டணம் வசூலிக்கின்றன.

எனவேதான், கட்டணம் ஏதும் செலுத்தாமல் ஏழை எளிய மக்கள் பயன் பெற வேண்டும் என்பதற்காகத்தான், 6,594 அரசு பள்ளிகளில், ஒரு பிரிவில் ஆங்கில வழிக் கல்வி கற்பிக்கப்பட்டு வருகிறது.

**ஆசிரியர் பணி நியமனத்தில் சாதனை**

மாணவமாணவியர் தரமான கல்வியை பெற வேண்டுமெனில் தகுதி வாய்ந்த ஆசிரியர்கள் அவசியம் என்பதைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் 68,481 ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப நான் உத்தரவிட்டுள்ளேன். இதுநாள் வரை 51,757 ஆசிரியர்கள் பணியமர்த்தப்பட்டு உள்ளனர். இந்த பணி நியமனங்களில் இட ஒதுக்கீடு முற்றிலும் பின்பற்றப்பட்டது என்பதையும் நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

ஒரே நாளில் 20,920 ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கி சாதனை புரிந்த அரசு எனது தலைமையிலான அரசு என்பதை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஆசிரியர் அல்லாத பணியிடங்களை பொறுத்த வரையில் இதுவரை, 19,673 பணியிடங்களுக்கு என்னால் ஒப்புதல் அளிக்கப்பட்டு 10,220 பணியிடங்கள் நிரப்பப்பட்டு உள்ளன.

பள்ளிகளின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்குடன், நடப்பு நிதியாண்டில் மட்டும் கிட்டத்தட்ட 366 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**1125 பள்ளிகள் தரம் உயர்வு**

தேவைக்கேற்ப புதிய தொடக்கப் பள்ளிகளை ஆரம்பித்தல், தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், நடுநிலைப் பள்ளிகளை உயர் நிலைப் பள்ளிகளாகவும், உயர் நிலைப்

பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்துதல் போன்ற நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

300–க்கு மேற்பட்ட மக்கள் தொகை உள்ள இடத்தில் ஒரு கிலோ மீட்டர் சுற்றுவட்டத்தில் தொடக்கப் பள்ளிகள் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் 54 புதிய தொடக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, 1,125 பள்ளிகள் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பில் தோல்வியுறும் மாணவ, மாணவிகள் அதே ஆண்டிலேயே உயர் கல்வியை தொடர ஏதுவாக, தேர்ச்சி பெறாத பாடங்களின் எண்ணிக்கையை கணக்கில் கொள்ளாமல், அனைத்து பாடங்களையும் ஜூன் அல்லது ஜூலை மாதங்களில் உடனடித் தேர்வு எழுத அனுமதித்தல், புகைப்படம், இருபரிமாணப் பட்டக் குறியீடு மற்றும் கூடுதல் ரகசிய குறியீடு ஆகியவற்றுடன் கூடிய பொதுத் தேர்வுக்கான சான்றிதழ்கள் வழங்குதல் என பல்வேறு புதுமையான நடவடிக்கைகள் எனது தலைமையிலான அரசால் எடுக்கப்பட்டு உள்ளன.

**மாணவ மாணவியர் எண்ணிக்கை அதிகரிப்பு**
**தேர்ச்சி விகிதம் உயர்வு**

பள்ளிக் கல்வியில் இவ்வாறு பல புதிய திட்டங்களை செயல்படுத்திவருவதன் காரணமாகவும், மேல்நிலை வகுப்புகளில் இடை நிற்றலைக் குறைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதன் காரணமாகவும், பத்தாம் வகுப்பு பயின்றவர்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

2010–2011 ஆம் ஆண்டு 8 இலட்சத்து 38 ஆயிரத்து 165 என்று இருந்த பத்தாம் வகுப்பு மாணவ மாணவியரின்

எண்ணிக்கை, 2013–2014 ஆம் ஆண்டு 11 இலட்சத்து 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது. பன்னிரண்டாம் வகுப்பை பொறுத்த வரையில், 2010–2011 ஆம் ஆண்டு 7 இலட்சத்து 16 ஆயிரத்து 543 என்று இருந்த எண்ணிக்கை; 2013–2014 ஆம் ஆண்டில் 8 இலட்சத்து 40 ஆயிரமாக உயர்ந்துள்ளது.

தேர்ச்சி விகிதத்தை எடுத்துக் கொண்டால், 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத் தேர்வில் 85.3 விழுக்காடு என்றிருந்த தேர்ச்சி விகிதம், 2013 ஆம் ஆண்டு 89 விழுக்காடாக உயர்ந்துள்ளது. இதே போன்று, 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற பன்னிரண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் 85.9 விழுக்காடாக இருந்த தேர்ச்சி விகிதம், 2013 ஆம் ஆண்டு 88.1 விழுக்காடாக உயர்ந்துள்ளது.

**கல்விப் புரட்சி**

உயர் கல்வியை எடுத்துக் கொண்டால், திருச்சிராப்பள்ளி, தேனி, தருமபுரி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் புதிதாக அரசு பொறியியல் கல்லூரிகள் துவக்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு முழுவதும் இதுவரை 11 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. 24 பல்கலைக்கழக உறுப்புக் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 12 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் துவங்கப்பட்டுள்ளன. திருச்சி மாவட்டம், ஸ்ரீரங்கத்தில் தேசிய சட்டப் பள்ளி துவங்கப்பட்டுள்ளது.

கல்லூரிகளின் உட்கட்டமைப்பு வசதிக்கென 100 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வருகின்றன. கல்லூரிகளில் காலியாக உள்ள உதவிப் பேராசிரியர் பணியிடங்கள், இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்பப்பட்டு வருகின்றன.

மொத்தத்தில் ஒரு கல்விப் புரட்சியை தமிழ்நாட்டில் ஏற்படுத்தி இருக்கிறோம். விரைவில் 100 விழுக்காடு கல்வி அறிவு பெற்ற

மாநிலமாக தமிழகம் திகழும் என்பதை மிகுந்த பெருமிதத்துடன் இந்த மாமன்றத்திற்கு நான் தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டு இருக்கிறேன்.

**கல்விக்கு இணையாக மக்கள் நல்வாழ்வு**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மக்களின் வாழ்வு வளம் பெற கல்விக்கு இணையாக உள்ளது மக்கள் நல்வாழ்வு. தரமான மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்கள் காலத்தே நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதன் அடிப்படையில், இந்தியாவிலேயே முதலாவதாக மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது.

இதன்மூலம் மட்டும் **2,334** மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம் அமைக்கப்படுவதற்கு முன், 2,027 மருத்துவர்கள் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். ஆக மொத்தம், **4,361** மருத்துவர்கள் காலமுறை ஊதியத்தில் நியமிக்கப்பட்டு பணிபுரிந்து வருகிறார்கள். இதேபோன்று, **912** மருத்துவம் சார்ந்த பணியாளர்களும் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

ஏழை எளிய, நலிந்த மக்கள் பயன்பெறும் வண்ணம், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தப் புதிய காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், ஒரு குடும்பத்திற்கு ஆண்டிற்கு ஒரு இலட்சம் ரூபாய் வீதம், 4 ஆண்டுகளுக்கு 4 இலட்சம் ரூபாய் வரையிலும், சில குறிப்பிட்ட சிகிச்சை முறைகளுக்கு ஆண்டிற்கு 1½ இலட்சம் ரூபாய் வரையிலும் வழங்கப்படுகிறது.

ஒரு குடும்பத்தில் ஒருவர் மாற்றுத் திறனாளியாக இருந்தால், அக்குடும்பத்தினர் வருமான வரம்பின்றி,

இந்தத் திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள். இந்தத் திட்டம் தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களுக்கும் நீட்டிக்கப்பட்டு உள்ளது. இந்தத் திட்டத்தின்கீழ், இதுவரை 1,256 கோடி ரூபாய் செலவில் 5 இலட்சத்து 84 ஆயிரம் ஏழை எளிய மக்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு உள்ளது. இதில் அரசு மருத்துவமனைகள் மூலம், 447 கோடி ரூபாய் செலவில் 2 இலட்சத்து 25 ஆயிரம் பேர் பயன் அடைந்துள்ளனர். மேலும், இந்தத் திட்டத்தில் வரையறுக்கப்பட்ட தொகைக்கு மேல் செலவு ஏற்படும் சிறப்பு அறுவை சிகிச்சைகளுக்கான முழு செலவுத் தொகையை வழங்க வழிவகை செய்யும் ஏற்பாடாக, 10 கோடி ரூபாய் முதலீட்டில் சிறப்பு நிதியம் ஏற்படுத்தப் பட்டுள்ளது. இந்தத் திட்டத்தின் கீழ் 926 பேர் பயன் பெற்றுள்ளனர்.

**எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையாக பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனை**

சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில், எய்ம்ஸ் மருத்துவமனைக்கு இணையான பலதுறை உயர் சிறப்பு மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி அமைக்கப்பட்டு வருகிறது.

இதேபோன்று, 2000–க்கும் மேற்பட்ட புற நோயாளிகள் சிகிச்சை பெறும் சென்னை பல் மருத்துவக் கல்லூரிக்கென ஒரு புதிய அடுக்குமாடிக் கட்டடம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. இதுதவிர, தமிழ்நாடு பல் மருத்துவமனைக்கு கூடுதல் கட்டடம் கட்டுவதற்கும், புதிய பணியிடங்களை தோற்றுவிப்பதற்கும், இதனை Centre of Excellence in Dentistry ஆக தரம் உயர்த்துவதற்கும் ஆன பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன.

அரசு ஊழியர்களுக்கான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை எடுத்துக் கொண்டால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நான்கு ஆண்டுகளுக்கு இரண்டு இலட்சம் ரூபாய் வரை

சிகிச்சை பெற தனியார் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் வழிவகை செய்யப்பட்டு இருந்தது. ஆனால், 2011இல், நான் ஆட்சி பொறுப்பேற்ற பிறகு, நான்கு ஆண்டுகளுக்கு நான்கு இலட்சம் ரூபாய் வரை சிகிச்சை பெற வழிவகை செய்ததோடு, தனியார் காப்பீட்டு நிறுவனத்துடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தை மாற்றி மத்திய அரசு நிறுவனத்துடன், அதாவது, United India Insurance நிறுவனத்துடன் ஒப்பந்தம் மேற்கொள்ளவும் வழிவகை செய்துள்ளேன்.

**அனைவருக்கும் மருத்துவ வசதி**

நகர்ப்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்க வேண்டும் என்பதன் அடிப்படையில், கிராமப் புறங்களில் உள்ள 58 ஆரம்ப சுகாதார நிலையங்கள் 30 படுக்கை வசதி கொண்ட மருத்துவமனைகளாக தரம் உயர்த்தப்பட்டுள்ளன. 42 ஆரம்ப சுகாதார மையங்களில், தாய் சேய் நல மையங்கள் 20 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளன. அவசர மகப்பேறு அறுவை சிகிச்சை போன்றவற்றிற்கு தேவையான அனைத்து உபகரணங்களும் அந்த மருத்துவமனைகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

இதுவன்றி, 28 கோடி ரூபாய் செலவில் புதிதாக 47 ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. 27 மாவட்ட மருத்துவமனைகளுக்கு சுமார் 13 கோடி ரூபாய் செலவில் புதிய உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. மதுரை மற்றும் சேலம் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் உள்ள தாய் சேய் நலப் பிரிவுகளை மேன்மைமிகு மையங்களாக மேம்படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

எழும்பூர் மகப்பேறு மருத்துவமனையின் தாய் சேய் நலப் பிரிவு மேம்படுத்தப்பட்டு உள்ளது. இதுதவிர, அனைத்து அரசுமருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளும் வலுப்படுத்தப்பட்டு உள்ளன.

55 மருத்துவமனைகளில், மகப்பேறு தீவிர சிகிச்சை பிரிவு தொடங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது. கர்ப்பிணிப் பெண்கள் குழந்தைகள் மற்றும் பிரசவித்த தாய்மார்கள் ஆகியோர் பற்றிய விவரங்களை பதிவு செய்யும் கிராம சுகாதார செவிலியர்களின் பணியினை மேம்படுத்தும் வகையில், அவர்களுக்கு மடிக்கணினிகள் வழங்கப்பட்டுள்ளன.

**ஆரம்ப சுகாதார நிலையங்கள் அதிகரிப்பு**

இவையன்றி, கிராமப்புற மக்களுக்கான மருத்துவ வசதியை மேலும் மேம்படுத்தும் வகையில், 100 கோடி ரூபாய் செலவில் 118 ஆரம்ப சுகாதார நிலையங்களை புதிதாக ஏற்படுத்தவும், 77 கோடி ரூபாய் செலவில் 64 ஆரம்ப சுகாதார நிலையங்களை 30 படுக்கை வசதிகள் கொண்ட ஆரம்ப சுகாதார நிலையங்களாக தரம் உயர்த்தவும் நான் உத்தரவிட்டுள்ளேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கருவுற்ற ஏழைத் தாய்மார்களுக்கு ஏற்படும் வருமான இழப்பைஈடுகட்டும்வகையிலும்,கர்ப்பகாலத்தில்சத்தானஉணவு உண்டு, நிறைவான எடையுள்ள குழந்தையை ஈன்றெடுக்கும் வகையிலும், இரத்த சோகை மற்றும் பேறு காலத்திற்குப் பின் ஏற்படும்நோய்களைதடுக்கவேண்டும்என்பதன்அடிப்படையிலும், டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி உதவித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்தத் திட்டத்தின் கீழ் அளிக்கப்பட்டு வந்த மகப்பேறு நிதி உதவியை, 6,000/– ரூபாயிலிருந்து 12,000/–ரூபாயாக நாங்கள் உயர்த்தி இருக்கிறோம். கர்ப்ப கால சேவைகளை அரசு மருத்துவ நிலையங்களில் பெறும் போது 4,000 ரூபாய், அரசு மருத்துவ நிலையங்களில் பிரசவம் மேற்கொண்ட பிறகு 4,000 ரூபாய், முத்தடுப்பு ஊசி மற்றும் போலியோ சொட்டு மருந்து கொடுத்த பிறகு 4,000 ரூபாய் என மொத்தம் 12,000 ரூபாய் மகப்பேறு நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

இதன் மூலம், கர்ப்ப கால சேவைகளை பெறுவதற்கு ஊக்கம் அளிக்கப்படுவதுடன், மருத்துவமனைகளில் பிரசவம் மேற்கொள்ளப்படுவதும், சிசுக்களுக்கு தடுப்பு ஊசி வழங்கப்படுவதும் உறுதி செய்யப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும், கிட்டத்தட்ட 6 இலட்சம் பேர் பயனடைகிறார்கள். இதுவரை 1,667 கோடி ரூபாய் அளவுக்கு நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.

**மக்கள் நல்வாழ்வுக்கு சிறப்பான முன் முயற்சி**
**அதனால் நல்வாழ்வு குறியீடுகள் வளர்ச்சி**

மக்கள் நல்வாழ்விற்கு எடுக்கப்பட்ட முன் முயற்சிகள் காரணமாக, நல்வாழ்வு குறியீடுகள் வளர்ச்சி அடைந்துள்ளன. 2010 ஆம் ஆண்டு, 1,000 குழந்தை பிறப்புகளுக்கு 24 என இருந்த ஒரு வயதிற்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம், தற்போது 21 ஆக குறைந்துள்ளது.

2010 ஆம் ஆண்டு, 27 என இருந்த, 5 வயதுக்குட்பட்ட குழந்தை இறப்பு விகிதம், 2012 ஆம் ஆண்டு 24 ஆக குறைந்துள்ளது. அதுபோலவே, 2010 ஆம் ஆண்டு தாய் இறப்பு விகிதம் 1 இலட்சம் உயிருள்ள பிறப்புகளுக்கு 79 என இருந்தது, தற்போது 73 ஆக குறைந்துள்ளது.

இப்படி நாட்டின் வளர்ச்சிக்கு இன்றியமையாததாக விளங்கும் மக்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த எண்ணற்ற நடவடிக்கைகளை எனது தலைமையிலான அரசு எடுத்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

கல்வி மற்றும் நல்வாழ்வு திட்டங்கள் எதிர்காலத்திற்குத் தான் பயன் அளிக்கும். நல்ல உடல் நலமுள்ள கல்வியில் தேர்ந்த இளைஞர்களை உருவாக்கவும் மக்களின் நல்வாழ்வினை உறுதி

செய்யவும் இத்திட்டங்கள் பயன் அளிக்கும். அதே நேரத்தில் ஒதுக்கப்பட்ட மக்களின் நலன் காக்கவும் எனது தலைமையிலான அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

**அடித்தள மக்களுக்கு பாதுகாப்பு**

சமுதாயத்தில் அடித்தளத்தில் உள்ள மக்களைப் பாதுகாக்க வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக உள்ளோம். இதன் அடிப்படையில், சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை 1,000 ரூபாயாக உயர்த்தியுள்ளோம்.

**தாய்மார்களின் சுமை நீக்க விலையில்லா மிக்சி, கிரைண்டர்**

தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர் மற்றும் மின் விசிறி வழங்கும் திட்டத்தினை அறிமுகப்படுத்தி, செயல்படுத்தி வருகிறோம். இதுவரை 71 இலட்சத்திற்கும் மேற்பட்ட குடும்ப அட்டைதாரர்களுக்கு, இந்த பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

**விலையில்லா கறவைப் பசு மற்றும் வெள்ளாடுகள்**

வெண்மைப் புரட்சியை ஏற்படுத்தும் வகையில், கறவைப் பசுக்கள் மற்றும் வெள்ளாடுகள் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. இதுவரை 32,052 கறவைப் பசுக்கள் மற்றும் 14 இலட்சத்து 97 ஆயிரத்து 624 வெள்ளாடுகள் வழங்கப்பட்டு உள்ளன.

முதலமைச்சரின் சூரிய மின் சக்தியுடன் கூடிய பசுமை வீடு திட்டத்தின்கீழ், 1,80,000 நபர்கள் பயன் அடைந்துள்ளனர்.

**படித்த ஏழைப்பெண்களின் திருமணத்திற்கு தாலிக்குத் தங்கம்**

ஏழைப் பெண்களுக்கு, 25,000 ரூபாய் திருமண உதவித் தொகையுடன் 4 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம், பட்டம்

மற்றும் பட்டயப் படிப்பு படித்த ஏழைப் பெண்களுக்கு 50,000 ரூபாய் திருமண உதவித் தொகையுடன், 4 கிராம் தாலிக்கு தங்கம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் 2.86 இலட்சத்திற்கும் மேற்பட்ட ஏழைப் பெண்கள் பயன் அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு அரசு கேபிள் டி.வி. கார்ப்பரேஷன் மூலம் ஏழை எளிய மக்கள் குறைந்த கட்டணத்தில், நிறைவான சேனல்களை கண்டு களிக்க வழிவகை செய்யப்பட்டு இருக்கிறது.

**மாற்றுத்திறனாளிகளின் நலன்காக்கும் அரசு**

இதே போன்று, மாற்றுத் திறனாளிகளுக்கென பல்வேறு திட்டங்களை எனது அரசு செயல்படுத்தி வருகிறது. இதன் காரணமாக, “மாற்றுத் திறனாளிகளுக்கு அதிகாரமளித்தல் (Empowerment)” என்ற பிரிவின் கீழ் 2013–ஆம் ஆண்டிற்கான சிறந்த மாநிலமாக மத்திய அரசால் தமிழ்நாடு தெரிந்தெடுக்கப்பட்டு, அதற்கான விருது வழங்கப்பட்டுள்ளது.

**விலைவாசியை கட்டுப்படுத்த தீவிர நடவடிக்கைகள்**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மத்திய அரசின் தவறான பொருளாதாரக் கொள்கை களினாலும், தவறான டீசல், பெட்ரோல், சமையல் எரிவாயு, விலை நிர்ணயத்தாலும், விலைவாசி உயர்ந்து கொண்டே வருகிறது.

விலைவாசி உயர்வை குறைக்கும் நடவடிக்கைகளில் மத்திய அரசு தவறியுள்ளது என்பதை மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களே ஒப்புக் கொண்டுள்ளார். “We have also not been as successful in controlling inflation, as we would have wished. This is primarily because, food inflation has increased” என்று கூறியுள்ளார். அதாவது, “பணவீக்கத்தை

கட்டுப்படுத்துவதில் நாங்கள் எதிர்பார்த்த அளவுக்கு எங்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை. இதற்கு முக்கியக் காரணம் உணவு பொருட்களுக்கான பணவீக்கம் உயர்ந்தது தான்'' என்று கூறி இருக்கிறார் பாரதப் பிரதமர்.

விலைவாசியை கட்டுப்படுத்துவது மத்திய அரசின் நிதிக் கொள்கை மற்றும் பாரத ரிசர்வ் வங்கியின் பணக் கொள்கை ஆகியவை தான். மத்திய அரசின் விரிவான பொருளாதாரக் கொள்கை மற்றும் இதர பொருளாதாரக் கொள்கைகள் சரி செய்யப்பட்டால்தான் விலைவாசியை கட்டுப்படுத்த இயலும்.

எனினும், மாநில அரசால் என்னென்ன செய்ய இயலுமோ அவை அனைத்தையும், எனது தலைமையிலான அரசு செய்து வருகிறது. விலைவாசியை ஓரளவுக்கு கட்டுப்படுத்தும் வகையில் இந்தியாவில் வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் 20 கிலோ விலையில்லா அரிசியை நாங்கள் மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிறோம்.

வெளிச் சந்தையில் விற்கப்படும் பொருட்களின் விலைகளை கட்டுப்படுத்த ஏதுவாக, விலை நிலைப் படுத்தும் நிதியம் ஏற்படுத்தப்பட்டு 100 கோடி ரூபாய் வழங்கப் பட்டுள்ளது.

அமுதம் அங்காடிகள், கூட்டுறவு நிறுவனங்கள் மற்றும் சிறப்பு அங்காடிகள் மூலமாக ஒரு கிலோ அரிசி 20 ரூபாய் என்ற விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இது மட்டுமல்லாமல், சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின்கீழ், ஒரு லிட்டர் பாமாயில் 25 ரூபாய்க்கும், ஒரு கிலோ துவரம் பருப்பு 30 ரூபாய்க்கும், ஒரு கிலோ உளுத்தம் பருப்பு 30 ரூபாய்க்கும் வழங்கப்படுகின்றன.

**காய்கறி விலையைக் கட்டுப்படுத்த பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள்**

காய்கறி விலையைக் கட்டுப்படுத்த நகர்புற பகுதிகளில் கூட்டுறவு அமைப்புகள் மூலமும், தோட்டக்கலைத் துறை மூலமும் விவசாயிகளையும், நுகர்வோரையும் நேரடியாக இணைக்கக் கூடிய பண்ணைப் பசுமை நுகர்வோர் கடைகள் திறக்கப்பட்டுள்ளன.

ஏழை, எளிய தாய்மார்களின் நலனைக் கருத்தில் கொண்டு, சமையல் எரிவாயு மீதான மதிப்புக் கூட்டு வரி 1.7.2011 முதல் எனது தலைமையிலான அரசால் முழுவதுமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

**அனைத்து மாநகராட்சிகளிலும் அம்மா உணவகங்கள்**

வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்கு ஏழை, எளிய மக்கள் பயன்பெறும் வண்ணம், அம்மா உணவகங்கள், அனைத்து மாநகராட்சிகளிலும் திறக்கப்பட்டுள்ளன. இந்த உணவகங்களில், இட்லி ஒரு ரூபாய்க்கும், பொங்கல், சாம்பார் சாதம், கருவேப்பிலை சாதம், எலுமிச்சம்பழ சாதம் ஆகியவை 5 ரூபாய்க்கும், தயிர் சாதம் 3 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகின்றன.

**மக்கள் நலம் பயக்கும் மகத்தான திட்டங்கள்**

இது தவிர, ‘‘மக்களை நாடி அரசு’’ என்பதற்கேற்ப, மக்கள் குறை தீர்க்கும் அம்மா திட்டம், அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் பயணிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, 10 ரூபாய்க்கு 1 லிட்டர் மினரல் வாட்டர் வழங்கும் அம்மா குடிநீர் திட்டம், சென்னை மாநகர மக்களின் தேவையை நிறைவு செய்யும் வகையில், போக்குவரத்து இணைப்பு இல்லாத பகுதிகளிலிருந்து அருகிலுள்ள பேருந்து நிலையம் மற்றும் ரயில் நிலையத்தை இணைக்கும் வகையில் சிற்றுந்துகள் அறிமுகம், புதிய வழித்

தடங்கள் அறிமுகம், புதிய பேருந்துகள் அறிமுகம், கிறிஸ்தவர்கள் ஜெருசலம் செல்ல மானியம், இந்துக்கள் மானசரோவர் மற்றும் முக்திநாத் செல்ல மானியம், உலமாக்களுக்கான ஓய்வூதியம் அதிகரிப்பு, உலமாக்கள் எண்ணிக்கை அதிகரிப்பு, வக்ஃபு வாரியத்திற்கு நிதி உதவி என எண்ணற்ற மக்கள் நலம் பயக்கும் திட்டங்கள் எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

**இருளிலிருந்து மீண்டு வெளிச்சத்திற்கு வரும் தமிழகம்**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

இங்கே பேசிய பல உறுப்பினர்கள் மின்சாரப் பிரச்சினை குறித்து தங்கள் கருத்துகளை எடுத்துரைத்தார்கள்.

மின்சாரத்தை எடுத்துக் கொண்டால், பல தடைகளை தகர்த்தெறிந்து, கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில், எனது தலைமையிலான அரசு எடுத்த பகீரத முயற்சிகளின் காரணமாக, இருளில் மூழ்கியிருந்த தமிழகம் வெளிச்சத்திற்கு வரத் துவங்கியுள்ளது. 1991 முதல், 1996 வரையிலான எனது முதல் ஆட்சிக் காலத்தில், கிட்டத்தட்ட 1,300 மெகாவாட் மின் நிறுவு திறன் கூடுதலாக சேர்க்கப்பட்டது. 2001 முதல் 2006 வரையிலான எனது இரண்டாவது ஆட்சிக் காலத்தில், 2,500 மெகாவாட் அளவுக்கு கூடுதல் மின் நிறுவு திறன் சேர்க்கப்பட்டது.

தற்போது மூன்றாவது முறையாக நான் முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு, தேவைக்கேற்ப மின் உற்பத்தியை பெருக்குவதற்கான நடவடிக்கைகளை நான் முனைப்புடன் எடுத்து வருகிறேன்.

மேட்டூர் அனல் மின் திட்ட மூன்றாம் அலகிலிருந்து 600 மெகாவாட், வல்லூர் கூட்டு மின் திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 700 மெகாவாட், வட சென்னை அனல் மின்

திட்டத்தின் இரு அலகுகளிலிருந்து 1,200 மெகாவாட் என கிட்டத்தட்ட 2,500 மெகாவாட் அளவுக்கு கூடுதல் மின்சாரம் தற்போது உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. அதாவது 8,000 மெகாவாட், 9,000 மெகாவாட் என இருந்த மின் உற்பத்தி, இதுவரை இல்லாத அளவுக்கு 29.1.2014 அன்று 12,799 மெகாவாட்டை எட்டி சாதனை படைத்துள்ளது என்பதை இந்த மாமன்றத்திற்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றப் பேரவை கூட்டத் தொடரின் போது புதிய மின் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு மின் உற்பத்தி தொடங்கப்பட்டுள்ளதன் மூலம் கூடுதலாக 1,700 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைத்து வருகிறது என்று நான் தெரிவித்தேன். உடனே தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, ‘‘இந்த 1,700 மெகாவாட் மின்சாரம் முழுவதும் தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட திட்டங்களின் மூலம் கிடைத்தது தான்’’ என்று தெரிவித்து சாதனையில் பங்கு போட முயற்சி செய்தார்.

### தமிழகத்தை இருளில் மூழ்கடிக்க திட்டமிட்ட சதி

இதனையடுத்து ஒரு சில நாட்களிலேயே தமிழ்நாடு மின்சார வாரியத்திடம் ஒப்படைக்கப்படாத புதிய கூட்டு மின் திட்டங்கள் உட்பட மத்திய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள் மூலம் பெறப்பட்டு வந்த மின் உற்பத்தி சுமார் 2,500 மெகாவாட் அளவுக்கு குறைந்தது. மீண்டும் மின்வெட்டினை நடைமுறைப்படுத்தும் சூழ்நிலைக்கு எனது அரசு தள்ளப்பட்டது. இவற்றைச் சுட்டிக் காட்டி மாண்புமிகு பாரதப் பிரதமருக்கு நான் 25.11.2013 அன்று கடிதம் எழுதினேன்.

அந்தக் கடிதத்தில் தேசிய அனல் மின் கழகத்தின் கீழுள்ள கூட்டு நிறுவனம் உள்ளிட்ட மத்திய மின் உற்பத்தி நிலையங்களும், பாரத மிகுமின் நிறுவனத்தால் சோதனை அடிப்படையில் செயல்படுத்தப்பட்டு வரும் மின் உற்பத்தி நிறுவனங்களும்

ஒரே சமயத்தில் இவ்வளவு மோசமாக செயல்படுவதை தமிழக மக்களால் நம்ப முடியவில்லை. மத்திய அரசின் கீழுள்ள பொதுத் துறை நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களில் 2,500 மெகாவாட் அளவுக்கு உற்பத்தி குறைந்து இருப்பது தமிழகத்தை இருளில் மூழ்கச் செய்யும் செயல் திட்டமிட்ட சதி என்று தமிழக மக்கள் நம்பும் நிலைக்கு கொண்டு சென்று விடும் என்று குறிப்பிட்டு இருந்தேன்.

இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய திரு. கருணாநிதி, "இதைப் பற்றிய குற்றச்சாட்டினை தமிழக முதல் அமைச்சரே, பிரதம அமைச்சருக்கு கடிதம் மூலமாக எழுதியிருக்கிறார். அதற்கு பிரதமரின் பதில் வந்த பிறகு, அந்த விவரத்தை அறிந்து நான் விளக்கம் அளிக்கிறேன்" என்று கூறினார். பின்னர், ஓரிரு நாட்களிலேயே பிரதமரிடம் இருந்து எவ்வித பதிலும் வரப் பெறாமலேயே மத்திய மின் தொகுப்பிலிருந்து வரும் மின்சாரம் ஏன் குறைந்துள்ளது என்பது குறித்து விளக்கம் அளித்தார்.

அதன் பின்னர், மாண்புமிகு பாரதப் பிரதமர் தனது 16.12.2013 நாளிட்டக் கடிதத்தில், மத்திய மின் உற்பத்தி நிலையங்களில் என்ன காரணங்களினால் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது என தெரிவித்து, "Thus it may be seen that by sheer coincidence various problems have hit the power sector in Tamil Nadu at the same time. However, efforts are being made to resolve these problems at the earliest" என்று கூறியுள்ளார்.

அதாவது, தமிழ்நாட்டில் மின்சார துறையில் ஒரே சமயத்தில் பல்வேறு பிரச்சினைகள் நிகழ்ந்துள்ளது யதேச்சையாக ஏற்பட்டது. இருப்பினும், விரைவில் அவற்றை தீர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும், என்று தெரிவித்துள்ளார். இதற்கு என்ன பொருள் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் மற்றும் தமிழக மக்களின் முடிவிற்கே நான் விட்டுவிடுகிறேன்.

சற்று முன் தெரிவித்ததை போல், 2,500 மெகாவாட் அளவுக்கு கூடுதல் மின்சாரம் தற்போது நமக்கு கிடைத்து வருகிறது. இதுதவிர, 3,330 மெகாவாட் அளவு மின்சாரத்தை 15 ஆண்டுகளுக்கு பெறத் தக்க வகையில், நீண்டகால அடிப்படையில் கொள்முதல் ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன. இதில் 74 மெகாவாட், தமிழகத்தில் நிறுவப்பட்டுள்ள ஒரு தனியார் மின் நிலையத்திலிருந்து 1.1.2014 முதல் பெறப்பட்டு வருகிறது. மேலும், 1098 மெகாவாட் மின்சாரம் தமிழகத்தில் தூத்துக்குடி மற்றும் கடலூர் மாவட்டங்களில் நிறுவப்பட்டு வரும் தனியார் மின் நிலையங்களில் இருந்து, 2014–2015இல் பெறப்படும். மீதமுள்ள 2,158 மெகாவாட் மின்சாரம், சத்தீஸ்கர், ஒடிசா, ஜார்கண்ட் மற்றும், மகாராஷ்டிரா மாநிலங்களில் உள்ள தனியார் மின் நிலையங்களில் இருந்து பெறப்படும்.

தற்போது, பரிசோதனையில் உள்ள சோலாப்பூர் – ரெய்ச்சூர் மின் வழித்தடம் வணிக உபயோகத்திற்கு விரைவில் கொண்டு வரப்படும் போது, வரும் ஆகஸ்ட் மாதத்திலிருந்து 1,426 மெகாவாட் மின்சாரம் நமக்கு கிடைக்கும். எனது தலைமையிலான அரசின் தொடர் முயற்சி காரணமாக, கூடங்குளம் அணுமின் திட்டமும் செயல்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. விரைவில் இந்தத் திட்டம், தனது முழு உற்பத்தி திறனையும் எட்டும் நிலையில் உள்ளது.

**எதிர்கால மின்தேவையை ஈடுசெய்ய அனல் மின் திட்டங்கள்**

இதுமட்டுமல்லாமல், எதிர்கால மின் தேவையை கருத்தில் கொண்டு, 3,300 மெகாவாட் திறன் கொண்ட அனல் மின் திட்டங்களுக்கு சர்வதேச ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டு பெறப்பட்டு உள்ளன. இவை வெகு விரைவில் இறுதி செய்யப்படும். 2,000 மெகாவாட் திறன் கொண்ட சில்லஹல்லா நீரேற்று புனல் மின் திட்டத்திற்கான தொடக்க ஆய்வுப் பணிகள் முடிவு பெற்றுள்ளன. விரைவில் முதற் கட்டத்திற்கான விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்கான பணிகள் எடுத்துக் கொள்ளப்படும்.

5,000 கோடி ரூபாய் முதலீட்டில், 3,572 கோடி ரூபாய் ஜப்பானிய நிதி உதவியுடன் புதிதாக ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும், பதினான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களும் அமைத்து, தமிழ்நாட்டின், குறிப்பாக சென்னையின் மின் கட்டமைப்பை வலுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஐந்து 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில் இரண்டு துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டுள்ளன. ஒரு 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைப்பதற்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. மீதம் இரு துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்படவுள்ளன. பதினான்கு 230 கிலோ வோல்ட் துணை மின் நிலையங்களில் நான்கு துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி செய்யப்பட்டு விட்டன. ஆறு துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் ஆய்வில் உள்ளன. நான்கு துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் இந்த மாதம் கோரப்படவுள்ளன.

**மின்வெட்டே இல்லை என்ற நிலையை எட்டுவோம்**

1,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், வேலூர் மாவட்டம், திருவலத்தில், 400 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும், அதனைச் சார்ந்த மின் தொடரமைப்பும் அமைப்பதற்கான ஒப்பந்தக்காரர்கள் தேர்வு செய்யப்பட்டு, பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

இதே போன்று 8,000 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 56 புதிய துணை மின் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அறிவித்து இருந்ததில், 9 துணை மின் நிலையங்கள் இயக்கி வைக்கப்பட்டுவிட்டன. 24 துணை மின் நிலையங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. 8 துணை மின் நிலையங்கள் அமைக்க ஒப்பந்தப் புள்ளிகள் இறுதி

செய்யப்பட்டு, பணி ஆணைகள் வழங்கப்படவுள்ளன. 9 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. இவை விரைவில் இறுதி செய்யப்படும். மீதமுள்ள 6 துணை மின் நிலையங்களுக்கான ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட உள்ளன.

மின் நுகர்வோர்களுக்கு சீரான மின்சாரம் வழங்கும் பொருட்டு, இந்த நிதியாண்டில் இதுவரை 16,151 புதிய மின்மாற்றிகள் நிறுவப்பட்டுள்ளன. இந்த அரசு 2011 மே மாதம் பொறுப்பேற்றது முதல், 2013 டிசம்பர் வரை 27.5 இலட்சம் புதிய மின் இணைப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.

நான் ஏற்கெனவே உறுதி அளித்தபடி, மின் வெட்டே இல்லை என்ற நிலைமையை தமிழகம் விரைவில் எட்டிவிடும் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**உயர்ந்தது உணவு உற்பத்தி**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

விவசாயிகளின் வருவாயைப் பெருக்கும் வகையில் முதன்மைத் துறையான வேளாண் துறைக்கு எனது அரசு மிகுந்த முக்கியத்துவம் அளித்து வருகிறது. சாகுபடி பரப்பை அதிகரிக்கவும் வேளாண் உற்பத்தியைப் பெருக்கவும் அதன் மூலம் விவசாயிகளுக்கு நல்ல வருமானம் கிடைக்கவும் தேவையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன் தமிழக வரலாற்றிலேயே முதன் முறையாக 2011ஆம் ஆண்டு ஜூன் மாதம் 6 ஆம் தேதி முன்கூட்டியே மேட்டூர் அணையை திறந்துவிட உத்தரவிட்டேன். இதன் காரணமாகவும்; புதிய உத்திகளை கடைபிடித்ததன் காரணமாகவும் 2011–2012 ஆம் ஆண்டிற்கான உணவு தானிய உற்பத்தி 101.52 இலட்சம் மெட்ரிக்

டன்னாக உயர்ந்து சாதனை படைத்தது. இந்தச் சாதனைக்காக மத்திய அரசின் கிரிஷி கர்மான் விருது தமிழகத்திற்கு வழங்கப்பட்டது.

2012–2013ஆம் ஆண்டில் பருவ மழை பொய்த்ததன் காரணமாகவும், கருநாடகம் காவேரி தண்ணீர் திறந்துவிட மறுத்ததன் காரணமாகவும், உணவு தானிய உற்பத்தியில் புதிய சாதனையை படைக்க முடியவில்லை. இருப்பினும், நுண்ணீர் பாசனம், 12 மணி நேர தடையில்லா மும்முனை மின்சாரம் உள்பட பல்வேறு உத்திகளை கையாண்டதன் காரணமாக உணவு தானிய உற்பத்தி வெகுவாக குறைவது தடுக்கப்பட்டது. இருப்பினும், வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் சென்னையைத் தவிர அனைத்து மாவட்டங்களும் வறட்சி மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டன. சுமார் 5.32 இலட்சம் விவசாயிகளுக்கான முழு பிரிமியத் தொகையான 27 கோடியே 67 இலட்சம் ரூபாயினை எனது தலைமையிலான அரசே காப்பீட்டு நிறுவனத்திற்கு செலுத்தியது.

**விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம்**

டெல்டா பகுதிகளில் 3.61 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்த நெற்பயிர் வறட்சியினால் பாதிப்படைந்ததால் ஒரு ஏக்கருக்கு 15,000 ரூபாய் வீதம் சுமார் 524 கோடி ரூபாய் வறட்சி நிவாரணமாக 3,52,613 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

டெல்டா அல்லாத மாவட்டங்களைப் பொறுத்தவரையில் 22.89 இலட்சம் ஏக்கர் பரப்பில் சாகுபடி செய்த பயிர் பாதிக்கப்பட்டது. 50 விழுக்காட்டிற்கு மேல் மகசூல் இழப்பு ஏற்பட்ட நெற் பயிருக்கு ஒரு ஏக்கருக்கு 5,000 ரூபாய் வீதமும் பாசனம் பெறும் இதர பயிர்களுக்கும் பல்லாண்டு பயிர்களுக்கும் ஏக்கருக்கு 4,000 ரூபாய் வீதமும் பாசனம் பெறாத பயிர்கள் மற்றும் மல்பெரி பயிர்களுக்கு ஏக்கருக்கு 3,000 ரூபாய் வீதமும், சுமார் 804 கோடியே

24 இலட்சம் ரூபாய் 17 இலட்சத்து 37 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. மொத்தத்தில் 1,328 கோடியே 24 இலட்சம் ரூபாய், 20 இலட்சத்து 90 ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

2013–2014ஆம் ஆண்டில் 24.1.2014 முடிய 40.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் நெல் சாகுபடி தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டது. இது மட்டுமல்லாமல் பிற பயிர்களும் சாகுபடி செய்யப்பட்டன. இதன் மூலம் இந்த ஆண்டு உணவு தானிய உற்பத்தி சுமார் 100 இலட்சம் மெட்ரிக் டன்னை எட்டும். சென்ற ஆண்டை ஒப்பிடுகையில் உணவு தானிய உற்பத்தி 59 விழுக்காடு அதிகரிக்கும்.

திருந்திய நெல் சாகுபடி ஒட்டுமொத்த கிராமத் திட்டத்தின் கீழ், 2013–2014ஆம் ஆண்டில் 2,000 கிராமங்களில் செயல்படுத்தப்பட்டு இன்றைய நிலவரப்படி 4.70 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் திருந்திய நெல் சாகுபடி தொழில்நுட்பம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடும் போது இது 13 விழுக்காடு கூடுதல் ஆகும்.

2013–2014ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த பயறு சாகுபடி திட்டத்தின் கீழ் 1,695 கிராமங்களில் 2.50 இலட்சம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த ஆண்டை ஒப்பிடும் போது கூடுதலாக 11 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் பயறுவகை பயிர்கள் சாகுபடி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**நெல் – கரும்புக்குக் கூடுதல் விலை**

நெல் கொள்முதல் விலை மற்றும் கரும்பு ஆதரவு விலை ஆகியவற்றில் மத்திய அரசு நிர்ணயித்த விலைக்கு மேல் கூடுதல் விலையை எனது தலைமையிலான அரசு நிர்ணயித்துள்ளது.

விவசாயிகள் தங்களின் விளை பொருட்களை இருப்பில் வைத்து நியாயமான விலை கிடைக்கும் போது அவற்றை

விற்பனை செய்ய ஏதுவாக, சந்தை உட்கட்டமைப்பு வசதிகள், குளிர்சாதன வசதி அமைப்புகள், கிடங்குகள் ஆகியவை அமைத்துத் தரப்பட்டுள்ளன. மேலும், ஒருங்கிணைந்த தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 1.13 இலட்சம் ஏக்கர் தரிசு நிலங்கள் விளை நிலங்களாக மாற்றப்பட்டு உள்ளன. பண்ணைக் குட்டைகள், கசிவு நீர் குட்டைகள், தடுப்பணைகள் ஆகியவை அமைக்கப்பட்டதன் மூலம் விவசாயத்திற்கு தேவையான தண்ணீர் கிடைக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நுண்ணீர் பாசனத்திற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 100 விழுக்காடு மானியமும், இதர விவசாயிகளுக்கு 75 விழுக்காடு மானியமும் வழங்கப்படுகிறது. வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்க விவசாயிகளுக்கு 141 கோடியே 67 இலட்சம் ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது.

**காவிரியில் தமிழக உரிமையை நிலை நாட்டினோம்**

இவை எல்லாவற்றிற்கும் மேலாக, நீண்ட நாட்களாக மத்திய அரசிதழில் வெளியிடப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருந்த காவேரி நடுவர் மன்ற இறுதி ஆணையை மத்திய அரசிதழில் வெளியிடச் செய்த அரசு எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கால்நடை, மீன்வளம் ஆகிய முதன்மைத் துறைகளுக்கும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது. 643 கால்நடை மருந்தகங்கள் மற்றும் நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. 882 கட்டடங்கள் புதுப்பிக்கப்பட்டு உள்ளன. 485 கால்நடை கிளை நிலையங்கள் ஊரக கால்நடை மருந்தகங்களாக தரம் உயர்த்தப்பட்டு உள்ளன. 50 புதிய கால்நடை கிளை நிலையங்களும், 20 மருந்தகங்களும் ஏற்படுத்தப்பட்டு உள்ளன. 798 கால்நடை மருத்துவர்கள் நியமனம் செய்யப்பட்டு உள்ளனர். 289 கால்நடை ஆய்வாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோழி வளர்ப்பு தொழிலை மேம்படுத்த கோழி அபிவிருத்தி திட்டம் என்ற ஒரு திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. புதிதாக 1,214 கோழிப் பண்ணைகள் அரசு உதவியுடன் ஏற்படுத்தப்பட்டு உள்ளன.

## மீனவர் நலன்

2 இடங்களில் மீன் பதனிடும் பூங்காக்களை ஏற்படுத்த ஒப்பந்தப் புள்ளிகள் கோரப்பட்டுள்ளன. 4 இடங்களில் துறைமுகங்கள் ஏற்படுத்தப் பட்டு வருகின்றன. 11 இடங்களில் மீன் இறங்குதளங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

நாகப்பட்டினத்தில் மீன் வளப் பல்கலைக்கழகம் ஏற்படுத்தப்பட்டு உள்ளது. ஆழ்கடல் மீன்பிடிப்பை ஊக்குவிக்கும் வகையில் தற்போதுள்ள படகுகளை சூரை மீன் பிடிப்பிற்கு ஏதுவாக மாற்றியமைக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதற்கென 149 படகுகள் சுமார் 3½ கோடி ரூபாய் செலவில் வழங்கப்பட்டுள்ளன. 3,848 மீன்பிடி படகுகள் இயந்திரமயம் ஆக்கப்பட்டு உள்ளன. மீனவர்களுக்கு டீசல் மற்றும் மண்ணெண்ணெய் மானிய விலையில் வழங்கப்படுகிறது.

## தொழில் துறையில் தமிழகம் முன்னணி மாநிலம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

தொழில்துறையை எடுத்துக் கொண்டால், இந்தியாவில் உள்ள பெரிய மாநிலங்களில் முன்னணியில் உள்ள மாநிலமாக தமிழகம் விளங்குகிறது. தொழில் துறையில் மேலும் சிறந்த வளர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், தொலைநோக்குத் திட்டம் 2023–ஐ நாங்கள் வெளியிட்டு இருக்கிறோம். இதில் தமிழகத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 17 விழுக்காடாக உள்ள தொழில்களின் தற்போதைய பங்களிப்பை 22 விழுக்காடாக உயர்த்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கினை

எய்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

நான் ஆட்சிப் பொறுப்பேற்ற 2011ஆம் ஆண்டு மே மாதம் முதல் இன்று வரை 1 இலட்சத்து 46 ஆயிரம் பேருக்கு நேர்முக மற்றும் மறைமுக வேலைவாய்ப்பு கிடைக்கும் வகையில், 17 இந்திய மற்றும் பன்னாட்டு பெரும் நிறுவனங்களுடன் 26,625 கோடி ரூபாய் முதலீட்டிற்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டுள்ளன.

இது நாள் வரை 10,660 கோடி ரூபாய் முதலீடுகள் கிடைக்கப் பெற்று, 10,022 நபர்களுக்கு நேரடி வேலைவாய்ப்புகள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல ஆயிரம் பேர்களுக்கு மறைமுக வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டு உள்ளன. இது தவிர, தமிழ்நாடு அரசின் வழிகாட்டி நிறுவனம் மூலம், 21 நிறுவனங்கள் 3,108 கோடியே 88 இலட்சம் ரூபாய் முதலீட்டினை தமிழகத்தில் செய்ய உள்ளன.

**தமிழகத்தில் ரூ.5,900 கோடி ஜப்பானிய முதலீடு**

ஜப்பான் நாட்டு நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்ய ஏதுவாக, ஜப்பான் வெளி வர்த்தக அமைப்பு, Japan External Trade Organisation (JETRO) சென்னையில் ஒரு வர்த்தக ஆதரவு மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து தமிழ்நாடு அரசு மற்றும் தொழில் வழிகாட்டுதல் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் 970 மில்லியன் அமெரிக்க டாலர், அதாவது சுமார் 5,900 கோடி ரூபாய் முதலீட்டில் 18 ஜப்பானிய பெரும் தொழில் நிறுவனங்களை நிறுவ, ஜப்பான் வர்த்தக அமைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இவை தவிர, 300க்கும் அதிகமான ஜப்பானிய நிறுவனங்கள் தமிழ்நாட்டில் அமையப் பெற்றுள்ளன. இதன் மூலம், ஜப்பானிய நிறுவனங்களின் முதலீடுகளை ஈர்ப்பதில்

இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாக விளங்குகிறது என்ற பெருமையை நாம் அடைந்துள்ளோம்.

### தென் மாவட்ட தொழில் முனைவோருக்கு எண்ணிலா சலுகைகள்

தென் தமிழ் மாவட்டங்களான இராமநாதபுரம், புதுக்கோட்டை, திண்டுக்கல், தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் தொழில் பூங்காக்களை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில், பல்வேறு சலுகைகளை நான் அறிவித்துள்ளேன்.

இந்தப் பகுதிகளில் தொழில் துவங்க முனைவோருக்கு, 50 விழுக்காடு மானிய விலையில் சிப்காட் நிறுவனம் மூலம் நிலம் ஒதுக்கீடு செய்தல், நில குத்தகை பத்திரப் பதிவிற்கான முத்திரைத்தாள் கட்டணத்தில் 100 விழுக்காடு விலக்கு, மூலதன மானியம் 1.5 மடங்கிலிருந்து 2 மடங்காக அதிகரிப்பு, உட்கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல், மதிப்புக் கூட்டு வரி அடிப்படையிலான சலுகைகள் பெற தற்போது நடைமுறையில் உள்ள குறைந்தபட்ச முதலீட்டுத் தொகையான 50 கோடி ரூபாய் என்பதை 10 கோடி ரூபாயாக குறைத்தல் போன்ற சலுகைகள் கிடைக்கும். இதற்கான பணிகள் தற்போது முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

எனது தலைமையிலான அரசின் இது போன்ற நடவடிக்கைகள்மூலம், தொழில் வளர்ச்சியில் தமிழகம் விரைவில் இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக விளங்கும்.

### உண்மைக்கு மாறான பிரச்சாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழகத்தில் தற்போது தொழில் துறை வளர்ச்சி அடையவில்லை என்றும், முந்தைய மைனாரிட்டி தி.மு.க.

ஆட்சியின் போது அதிக அளவு தொழில் முதலீடுகள் வந்ததாகவும், அதனால் தான் மின் வெட்டு பிரச்சினை ஏற்பட்டதாகவும் உண்மைக்கு மாறான பிரச்சாரத்தை எதிர்க் கட்சியினர், தி.மு.க.வினர், குறிப்பாக தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் ஆகியோர் சொல்லி வருகின்றனர்.

“Times of India” நாளிதழுக்கு பேட்டியளித்த மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 51 உள்நாட்டு, வெளிநாட்டு நிறுவனங்கள் 62,340 கோடி ரூபாய் முதலீடு செய்து 2 இலட்சத்து 35 ஆயிரம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டதாக கூறியுள்ளார். தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் தமிழகத்தில், தி.மு.க. ஆட்சி காலத்தில் தொழில்கள் வளர்ச்சி அடைந்ததாக அறிக்கை வெளியிட்டுள்ளார். ஆனால், இதன் உண்மை நிலை என்ன என்பதை இந்த மாமன்றத்துக்கு விளக்குவது எனது கடமை என கருதுகிறேன்.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலமும், அரசாணைகள் மூலமும் 54 தொழில் நிறுவனங்கள் முதலீடு செய்வதாக சொல்லப்பட்ட தொகை 66,664 கோடி ரூபாய் ஆகும். இதில் 15,982 கோடி ரூபாய்க்கான 12 தொழில்கள் தொடங்கப்படவே இல்லை. உதாரணத்திற்கு சொல்ல வேண்டுமானால், 2,500 கோடி ரூபாய் முதலீடு செய்ய ஒப்பந்தம் செய்த ‘TATA Steel’ ஒரு ரூபாய் கூட முதலீடு செய்யவில்லை. அதேபோல், 4,320 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக தெரிவித்து அரசாணையும் வழங்கப் பெற்ற இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமும், 2,000 கோடி ரூபாய் முதலீடு செய்வதாக புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்திட்ட ‘Signet Solar’ நிறுவனமும், 2,000 கோடி முதலீடு செய்வதாக சொன்ன ‘Moser Baer Infrastructure & Developers India Ltd’

நிறுவனமும் தொழில் எதையும் ஆரம்பிக்கவும் இல்லை; 1 ரூபாய் கூட முதலீடும் செய்யவில்லை. எஞ்சிய தொழில் நிறுவனங்கள் இன்று வரை செய்த முதலீடு 36,336 கோடியே 28 இலட்சம் ரூபாய் தான். இதில் 2011ஆம் ஆண்டு மே மாதத்திற்குப் பிறகு செய்யப்பட்ட முதலீடுகளும் அடங்கும். எனவே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் தொழில் நிறுவனங்கள் செய்த முதலீடு 62,000 கோடி ரூபாய் என்பது முற்றிலும் உண்மைக்கு மாறானது ஆகும்.

**தொழிற்சாலைகளும் வேலைவாய்ப்புகளும் அதிகரிப்பு**

எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின் கடந்த 2½ ஆண்டுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மற்றும் ஒற்றை சாளர அனுமதி மூலம் தமிழகத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் மொத்த முதலீடுகள் 29,558 கோடி ரூபாய் ஆகும். இந்த முதலீட்டுத் திட்டங்களுக்கான நில ஒதுக்கீடு மற்றும் அனுமதிகள் வழங்குதல் ஆகியன மேற்கொள்ளப்பட்டு இதுவரை 10,660 கோடி ரூபாய் முதலீடு செய்யப்பட்டுள்ளது.

இதுமட்டுமின்றி தற்போது மேலும் புதிய முதலீடுகளாக 16 நிறுவனங்கள் தமிழகத்தில் 42,400 கோடி ரூபாய் முதலீடு செய்ய விருப்பம் தெரிவித்துள்ளன. அவை இன்னும், ஓரிரு மாதங்களில் இறுதி செய்யப்பட்டு செயல்வடிவம் பெறும்.

தமிழகத்தில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை பற்றிய புள்ளி விவரங்களை பார்த்தால், தற்போது தமிழ்நாட்டில் அதிக அளவு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்பது தெரிய வரும். Central Statistical Organisation என்ற மத்திய புள்ளி விவர நிறுவனம் வெளியிடும் புள்ளி விவரங்களின்படி, திரு.மு.கருணாநிதியே குறிப்பிட்டுள்ளது போல், 2008–2009ஆம் ஆண்டு இருந்த தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 26,122. மார்ச் 2013 முடிவில், தமிழ்நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் எண்ணிக்கை 40,352 ஆகும். எனவே, தொழிற்சாலைகளின்

எண்ணிக்கையும், வேலை வாய்ப்புகளும் தற்போது எனது ஆட்சியில் அதிகரித்துள்ளன என்பது தான் உண்மை.

தொழில்கள் வளர்ந்துள்ளனவா என்பதை கணிக்க முக்கியமான அளவுகோல் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஆகும். எனது தலைமையிலான அரசு ஏற்பட்ட பின், தமிழகத்தில் தொழிலாளர்கள் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது.

மத்திய அரசின் கட்டுப்பாட்டில் உள்ள மாநில தொழிலாளர் ஆயுள் காப்பீட்டு நிறுவனம், அதாவது Employees Provident Fund Organizationஇல் உள்ள கணக்குப்படி பார்த்தால், 31.3.2006 நாளைய நிலவரப்படி, பதிவு செய்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 55 இலட்சத்து 10 ஆயிரம் ஆகும்.

31.3.2011 அன்று தமிழகத்தைப் பொறுத்தவரையில், பதிவு செய்த மொத்த தொழிலாளர்களின் எண்ணிக்கை 84 இலட்சத்து 21 ஆயிரத்து 904 ஆகும். எனவே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் ஐந்தாண்டு காலத்தில் பதிவு செய்யப்பட்ட கூடுதல் தொழிலாளர்கள் எண்ணிக்கை 29 இலட்சத்து 11 ஆயிரம் தான். 31.12.2013 அன்றைய நிலவரப்படி இந்த எண்ணிக்கை 1 கோடியே 60 இலட்சத்து 61 ஆயிரத்து 58 ஆக உயர்ந்துள்ளது. அதாவது, எனது தலைமையிலான ஆட்சியின் 2½ ஆண்டுகளில், 76 இலட்சத்து 39 ஆயிரம் புதிய வேலை வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன.

எனவே, தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்கு இதைவிட வேறு என்ன சான்று வேண்டும்? இதுவன்றி, EPF தகுதி இல்லாத வேலைவாய்ப்புகளும் ஏற்படுத்தப்படுள்ளன. ஆனால் அது பற்றிய புள்ளி விவரங்கள் எந்த நிறுவனத்தாலும் சேகரிக்கப்படுவதில்லை.

தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி தன்னுடைய அறிக்கையில், 2010ஆம் ஆண்டு ஜூலை 8 ஆம் நாளிட்ட Wall Street Journal இதழில், அரசுத் துறை சார்ந்த 12க்கும் மேற்பட்ட அனுமதிகளை

ஒற்றைச் சாளர முறையில் ஒரே இடத்தில் வழங்குகிறது தமிழகம் என்று பாராட்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இது போன்ற 12க்கும் மேற்பட்ட அரசு துறை சம்பந்தப்பட்ட அனுமதிகளை ஒற்றைச் சாளர முறையில் நிறுவனங்களுக்கு அனுமதி வழங்குதலுக்கான மையமாக தமிழ்நாடு தொழில் வழிகாட்டி மையம் மற்றும் ஏற்றுமதி மேம்பாட்டு நிறுவனம் (GUIDANCE BUREAU) செயல்பட்டு வருகிறது. இந்த நிறுவனத்தினை எனது தலைமையிலான அரசு தான் 1992 ஆம் ஆண்டில் துவக்கியது. எனவே அந்தப் பாராட்டு என்னையே சாரும்.

**தொழில் முதலீடு உயர்வு**

இந்தியப் பொருளாதார கண்காணிப்பு மையத்தின், அதாவது Centre for Monitoring Indian Economyஇன் 2010 அக்டோபர் – டிசம்பர் காலாண்டிற்கான அறிக்கையில் தமிழகம் இந்தியாவில் தொழில் வளர்ச்சியில் 3 ஆவது இடத்தில் உள்ளது என்று தெரிவித்துள்ளதாக முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இதே இந்திய பொருளாதார கண்காணிப்பு மையத்தின், CMIEஇன் 2013 டிசம்பர் காலாண்டிற்கான புள்ளி விவர அறிக்கையில், ஜூன் 2011 இல் தமிழகத்தில் செய்யக் கருதப்பட்ட தொழில் முதலீடு 8 இலட்சத்து 6 ஆயிரத்து 376 கோடியே 90 இலட்சம் ரூபாய் ஆகும் என்றும், அது டிசம்பர், 2013இல் 9 இலட்சத்து 45 ஆயிரத்து 337 கோடியே 40 இலட்சம் ரூபாயாக உயர்ந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது.

மேலும், ஜூன் 2011 இல் இந்தியாவில் செய்ய கருதப்பட்ட மொத்த தொழில் முதலீட்டில் தமிழகத்தின் பங்கு 6.1 விழுக்காடாக இருந்தது என்றும், இது டிசம்பர், 2013இல் 6.5 விழுக்காடாக உயர்ந்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுமட்டுமல்லாமல், ஜுன், 2011 முதல் டிசம்பர் 2013 வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் தொழில் செய்வதற்கு கருதப்பட்ட மொத்த முதலீடு 9.76 விழுக்காடு உயர்ந்துள்ளது என்றும், இந்த முதலீடு தமிழகத்தை பொறுத்த வரையில் 17.23 விழுக்காடு என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் உள்ள 17,474 திட்டங்களில், தமிழகத்தில் மட்டும் 1,538 திட்டங்கள் தொடங்க கருதப்பட்டுள்ளது என்றும் CMIE தெரிவித்துள்ளது.

பொதுத் துறை நிறுவனங்கள் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படையாக அமையும் என்பதால், இந்த அரசு அதற்கு அதிக முக்கியத்துவம் அளித்து சிறந்த முறையில் நிருவகித்து வருகின்ற காரணத்தினால், கடந்த 2012–2013ஆம் ஆண்டில் தொழில் துறையின் கீழ் இயங்கும் பொதுத் துறை நிறுவனங்கள் மற்றும் துறைகள் ஈட்டிய மொத்த வருவாய் 1521 கோடியே 26 இலட்சம் ரூபாய் ஆகும். இது கடந்த 2010–2011 ஆம் ஆண்டில் 1,084 கோடியே 48 இலட்சம் ரூபாயாக மட்டுமே இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

சிப்காட் (SIPCOT) நிறுவனத்தின் மூலம், 300 தொழில் நிறுவனங்களுக்கு 2,326 ஏக்கர் நிலம் சிப்காட் தொழிற்பேட்டைகளில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிறுவனங்களின் மூலம், 42,500 தொழிலாளர்கள் வேலை வாய்ப்பினை பெற்றுள்ளனர். இந்த நிறுவனங்களின் மொத்த முதலீடு ஏறத்தாழ 9,700 கோடி ரூபாயாகும்.

**புதிய தொழில் முதலீடுகள்**

மேலும், பல்வேறு புதிய முயற்சிகள் இத்துறையில் கடந்த இரண்டரை ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டு உள்ளன.

தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனம் நாள் ஒன்றுக்கு 600 டன் சிமெண்ட் உற்பத்தி செய்யும் ஆலை ஒன்றினை

100 கோடி ரூபாய் முதலீட்டில் துவக்கியுள்ளது. இந்தியாவிலேயே காகித ஆலையில் துவக்கப்பட்ட முதல் சிமெண்ட் உற்பத்தி ஆலை இதுவே ஆகும்.

அதுமட்டுமன்றி, அரசுத் துறை நிறுவனங்களிலேயே அதிக முதலீட்டுடன் அதாவது 1500 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய காகித ஆலை ஒன்று திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் பிற்பட்ட பகுதியான மணப்பாறை வட்டம், மொண்டிப்பட்டி கிராமத்தில் அமைத்திட அடிக்கல் நாட்டப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. டிசம்பர் 2015இல் இந்த ஆலை உற்பத்தியை துவங்கும்.

பல ஆண்டுகளாக பரிசீலனையில் மட்டுமே இருந்து வந்த அரியலூர் சிமெண்ட் ஆலையை நவீனமயமாக்கும் பணிக்காக, திட்ட ஆலோசகரின் அறிக்கை ஏற்கப்பட்டு 542 கோடி ரூபாய்க்கான திட்டத்திற்கு மாநில தொழில் திட்ட முதலீட்டுக் குழு, Project Investment Committee அனுமதி அளித்துள்ளது. இதற்கான பணிகள் விரைவில் துவங்கும்.

எனவே, புதிய தொழில் முதலீடுகள், புதிய வேலை வாய்ப்புகளை ஏற்படுத்துவது, பொதுத் துறை நிறுவனங்களின் செயல்பாடு என அனைத்திலும் பன்மடங்கு வளர்ச்சியை தமிழகம் எட்டியிருக்கிறது என்பதை எவராலும் மறுக்க இயலாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கச்சத்தீவு தாரை வார்ப்பு**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

அடுத்து மீனவப் பிரச்சினையை பற்றி இங்கே நான் குறிப்பிட விரும்புகிறேன்.

தமிழக மீனவர்களின் தற்போதைய பிரச்சினைக்கு மூல காரணமாக விளங்குவது கச்சத் தீவு. இந்திய நாட்டிற்கு

சொந்தமான இந்த கச்சத் தீவு மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகள், திரு. கருணாநிதி தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த போது, 1974ஆம் ஆண்டு இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் மூலம் மத்திய அரசால் இலங்கை நாட்டிற்கு தாரைவார்க்கப்பட்டது.

கச்சத் தீவு இலங்கை நாட்டிற்கு தாரைவார்க்கப்படுவதற்கு முன்பே, அப்போது தமிழகத்தின் முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதியுடன் மத்திய அரசு இரண்டு முறை ஆலோசனை செய்திருக்கிறது. மத்திய அரசிடம் இது போன்றதொரு எண்ணம் இருப்பதை அறிந்த திரு. கருணாநிதி, இது குறித்து நாடு தழுவிய போராட்டத்தை நடத்தி, மக்களின் கவனத்தை ஈர்த்திருக்கலாம். ஆனால், அதைச் செய்யவில்லை.

1960ஆம் ஆண்டிற்கு முன்பு, மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள பெருபாரி பகுதியை கிழக்கு பாகிஸ்தானுக்கு அளிக்க மத்திய அரசு முயன்ற போது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு, மத்திய அரசின் அந்த முயற்சி முறியடிக்கப்பட்டது. இதனைப் பின்பற்றி, கச்சத் தீவினை தாரைவார்க்கும் மத்திய அரசின் முயற்சிக்கு முட்டுக்கட்டை போட்டிருக்கலாம். ஆனால் திரு கருணாநிதி, அதையும் செய்யவில்லை.

கச்சத்தீவைதிருமதிஇந்திராகாந்திஅவர்கள்இலங்கைக்குக் கொடுத்தது தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் போவதாக ஜன சங்கத் தலைவர் திரு. வாஜ்பாய் அவர்கள் அப்போது அறிவித்தார். இதைச் சுட்டிக் காட்டி, 29.6.1974 அன்று செய்தியாளர்கள் திரு. கருணாநிதியிடம் கேள்வி கேட்ட போது, “அது பற்றி நான் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை” என்று பதில் அளித்துள்ளார்.

அதாவது, 1974ஆம் ஆண்டு கச்சத் தீவினை மத்திய அரசு இலங்கை நாட்டிற்கு தாரை வார்க்க முயற்சி செய்த போது, அதை

முன்கூட்டியே அறிந்த திரு. கருணாநிதி, அதற்கு மிகப் பெரிய எதிர்ப்பையும் தெரிவிக்கவில்லை; மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், மத்திய அரசுக்கு எதிராக மிகப் பெரிய, போராட்டங்களையும் நடத்தவில்லை, உச்ச நீதிமன்றத்தில் வழக்கையும் தொடுக்கவில்லை, இன்னும் சொல்லப்போனால், திரு. வாஜ்பாய் அவர்களின் கருத்திற்கு ஆதரவாகக் கூட தனது கருத்தை தெரிவிக்கவில்லை.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், அடக்கமாக, சாத்வீக முறையில் தமிழ்நாடு சட்டமன்றத்தில் தீர்மானத்தை நிறைவேற்றியதைத் தவிர வேறு எதையும் திரு. கருணாநிதி செய்யவில்லை.

தமிழக மீனவர்களின் உயிர்நாடியாக விளங்கும் கச்சத் தீவு பிரச்சினைக்கு நான் 1991ஆம் ஆண்டு முதலமைச்சராக பொறுப்பேற்ற பிறகு பல்வேறு தீர்வுகளை முன்மொழிந்து உள்ளேன். இவை எதையும் மத்திய அரசு நிறைவேற்றிடாத சூழ்நிலையில், மீனவர் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் என்ற முறையில் பெருபாரி வழக்கினை மேற்கோள் காட்டி 2008ஆம் ஆண்டு நான் உச்ச நீதிமன்றத்தில் ஒரு வழக்கினைத் தொடுத்தேன்.

உச்ச நீதிமன்றத்தில் என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவில், "1974 மற்றும் 1976 ஆம் ஆண்டைய இந்திய – இலங்கை ஒப்பந்தங்கள் சட்டப்படி செல்லத்தக்கவை அல்ல" என்று உத்தரவிட வேண்டுமென்றும் கோரியிருந்தேன். இந்த வழக்கில் மத்திய அரசுடன் தமிழ்நாடு அரசையும் ஒரு பிரதிவாதியாக சேர்த்திருந்தேன். ஆனால், அப்போது முதலமைச்சராக இருந்த திரு. கருணாநிதி தமிழகத்திற்கு சாதகமான எவ்வித மனுவையும் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை.

மாறாக, ‘‘மத்திய அரசு எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்த பிறகு மாநில அரசின் சார்பில் தாக்கல் செய்யப்பட வேண்டிய எதிர் உறுதி ஆவணம் பற்றி முடிவு செய்யலாம்’’ என்று முடிவு செய்தவர் திரு. கருணாநிதி.

தி.மு.க. ஆதரவுடன் ஆட்சி நடத்தி வந்த காங்கிரஸ் தலைமையிலான மத்திய அரசோ, 1974 மற்றும் 1976ஆம் ஆண்டுகளில் இந்திய – இலங்கை நாடுகளுக்கு இடையேயான கச்சத் தீவு தாரைவார்ப்பு ஒப்பந்தங்களுக்கு நாடாளுமன்றத்தின் ஒப்புதல் பெறப்பட வேண்டியதில்லை என்றும், கச்சத் தீவு இந்திய நாட்டின் ஒரு பகுதியே இல்லை என்றும் தெரிவித்து, என்னால் தாக்கல் செய்யப்பட்ட மனுவினை தள்ளுபடி செய்யுமாறு உச்ச நீதிமன்றத்தில் எதிர் உறுதி ஆவணத்தை தாக்கல் செய்தது.

**சட்டமன்றத்தில் தீர்மானம்**

இந்தச் சூழ்நிலையில், 2013ஆம் ஆண்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் தனி நபர் ஒருவரால் தொடுக்கப்பட்ட பொது நல வழக்கில், பதில் மனுவை தாக்கல் செய்த மத்திய அரசு, ‘‘1974 மற்றும் 1976 ஆம் ஆண்டைய ஒப்பந்தங்களின்படி, இந்திய கடல் எல்லைக்குள் தான் இந்திய மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டும்; கடல் எல்லையைத் தாண்டிச் சென்று அண்டை நாட்டின் வளத்தை எடுத்துக் கொள்ளக் கூடாது’’ என்று தெரிவித்துள்ளது.

மேலும் 1974 மற்றும் 1976 ஒப்பந்தங்களின்படி, இலங்கை கடல் பகுதியில் மீன்பிடிப்பதற்கான எந்த உரிமையும் இந்திய மீனவர்களுக்கு இல்லை என்றும் மத்திய அரசு, தெரிவித்துள்ளது.

இந்தியாவைப் பொறுத்த வரையில், இந்திய – இலங்கை நாடுகளுக்கு இடையேயான கடல் எல்லை மற்றும் கச்சத்தீவு மீதான உரிமை ஆகியவை ஏற்கெனவே முடிந்துவிட்ட ஒன்று என்றும் மத்திய அரசால் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

தமிழர்களுக்கு விரோதமான இந்த மத்திய அரசுக்குத் தான் திரு. கருணாநிதி ஆதரவு அளித்தார், அளிக்கிறார், அளிப்பார்.

இப்படிப்பட்ட திரு. கருணாநிதி, மிக சமீபத்தில் கச்சத் தீவு குறித்து உச்சநீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துவிட்டு, அதைப் பற்றி பெருமைபட்டுக் கொள்வது நகைப்புக்குரியதாக உள்ளது. திரு. கருணாநிதியின் இந்தச் செயல் தும்பை விட்டுவிட்டு வாலை பிடிப்பதற்கு சமம்.

நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு, என்னால் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமிழக அரசின் வருவாய்த் துறையையும் இணைத்துக் கொள்ளும் வகையிலான தீர்மானத்தை தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றினேன். இதன் அடிப்படையில் தமிழக அரசின் வருவாய் துறை கச்சத் தீவு வழக்கில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**தமிழக மீனவர்கள் தொடர்ந்து தாக்கப்பட**
**கச்சத்தீவு தாரைவார்ப்பே காரணம்**

தமிழக மீனவர்கள் தொடர்ந்து இலங்கை கடற் படையினரால் துன்புறுத்தப்படுவதற்கும், தாக்கப் படுவதற்கும், சிறைபிடிக்கப்படுவதற்கும் கச்சத்தீவு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகள் இலங்கைக்கு தாரைவார்க்கப்பட்டது தான் காரணம்.

கடந்த இரண்டே முக்கால் ஆண்டுகளில் **1,131** தமிழக மீனவர்கள் கடல் எல்லையை தாண்டிவிட்டதாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கைக் கடற்படையினரால் சிறை பிடிக்கப்பட்டனர். இருப்பினும் எனது தொடர் முயற்சியின் காரணமாகவும், தூதரக நடவடிக்கைகள் காரணமாகவும் அனைத்து மீனவர்களும் விடுவிக்கப்பட்டு உள்ளனர்.

இந்தச் சூழ்நிலையில் மீனவச் சங்கப் பிரதிநிதிகள் என்னைச் சந்தித்து தமிழக மற்றும் இலங்கை மீனவர்கள் சந்தித்து பேசுவதற்கான ஒரு வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இவர்களின் கோரிக்கையினை ஏற்று இரு நாடுகளின் மீனவச் சங்க பிரதிநிதிகளுக்கு இடையேயான பேச்சுவார்த்தைக்கு நான் ஏற்பாடு செய்தேன்.

இந்தப் பேச்சுவார்த்தை ஒரு சுமுகமான சூழ்நிலையில் நடைபெற ஏதுவாக, பேச்சுவார்த்தைக்கு முன்பே இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கும் தமிழக மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கை மத்திய அரசிடம் வைக்கப்பட்டது. இதனை ஏற்றுக் கொண்ட மத்திய அரசு, தமிழக சிறைச்சாலைகளில் உள்ள இலங்கை மீனவர்களை விடுவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டது. இதன் அடிப்படையில், கடல் எல்லையை தாண்டி மீன் பிடித்ததாக குற்றம் சாட்டப்பட்டு இலங்கை சிறைகளில் வாடிக் கொண்டிருந்த தமிழக மீனவர்கள் 295 பேரும் விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களது உடைமைகளும் திருப்பித் தரப்பட்டுள்ளன. இதே போன்று தமிழக சிறைச்சாலைகளில் இருந்த இலங்கை மீனவர்களும் விடுவிக்கப்பட்டனர்.

இந்தச் சுமுகமான சூழ்நிலையில், 27.1.2014 அன்று தமிழக – இலங்கை நாட்டு மீனவர்களுக்கிடையே பேச்சுவார்த்தை நடைபெற்றது.

**தமிழக – இலங்கை மீனவர்கள் பேச்சுவார்த்தை**

இந்தப் பேச்சுவார்த்தையில், இரட்டை மடி, pair trawling மற்றும் சுருக்கு மடி, purse seine மூலம் மீன்பிடிப்பது இந்தியாவில் தமிழகம் உட்பட பல மாநிலங்களிலும், உலக அளவில் பல நாடுகளிலும் தடை செய்யப்பட்டு உள்ளதால்

இதனை முழுமையாக செயல்படுத்துவது என்றும், இதனை மீறுபவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழக மீனவர்களால் முன் வைக்கப்பட்ட கோரிக்கைகளை இலங்கை வட மாகாணத்தைச் சார்ந்த மீனவர்களிடம் கொண்டு சென்று அவர்களின் நம்பிக்கையினை பெறுவதற்காகவும், மீனவர்கள் பேச்சுவார்த்தைக்கு மேலும் முன்னேற்றத்தை அளிக்கும் நல்லெண்ண நோக்கத்துடன் 2014 பிப்ரவரி 10 ஆம் தேதி முதல் 30 நாட்களுக்கு இழுவை படகுகள், இலங்கை மற்றும் தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி இலங்கை கடற் பகுதியில் மீன்பிடிப்பதை நிறுத்தி வைக்க இலங்கை மீனவப் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர். தமிழக – இலங்கை மீனவர்களிடையே நடைபெறும் பேச்சுவார்த்தையை நல்ல முறையில் முன்னெடுத்து செல்ல இந்த கோரிக்கையை தமிழக மீனவர்கள் ஏற்றுக் கொண்டனர்.

இலங்கை நாட்டின் கரையோர பகுதிகளில் இழுவலை படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடுவதால், இலங்கை மீனவர்களின் வலைகள் சேதம் அடைவதாக தெரிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, மேற்குறிப்பிட்ட ஒரு மாத கால தடை நடைமுறைக்கு வரும் வரை, இலங்கை நாட்டின் கரையோர பகுதிகளில் இழுவலை படகுகள் மீன்பிடிப்பில் ஈடுபடக் கூடாது என்பது இருநாட்டு மீனவர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, அடுத்த கட்ட பேச்சுவார்த்தைக்காக இலங்கை நாட்டிற்கு வரும்படி தமிழக மீனவர்களுக்கு இலங்கை மீனவப் பிரதிநிதிகள் அழைப்பு விடுத்ததை ஏற்று, அடுத்த கட்ட பேச்சுவார்த்தையை இலங்கை நாட்டில் நடத்தி சுமுக முடிவுகள் எடுக்கப்படும்.

இலங்கை மற்றும் இந்திய நாட்டில் சிறைபிடித்து வைக்கப்பட்டுள்ள மீதமுள்ள மீனவர்கள் மற்றும் மீன்பிடி

படகுகளைஉடனடியாகபரஸ்பரம்விடுதலைசெய்யவேண்டும்என இரு நாட்டு அரசுகளையும் இரு நாட்டு மீனவப் பிரதிநிதிகளும் ஒரு மனதாக கேட்டுக் கொண்டனர்.

இந்தப் பேச்சுவார்த்தையில் ஓர் உடன்படிக்கை ஏற்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையினால், உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்குக்கு எவ்வித குந்தகமும் ஏற்படாது என்பதை இந்த மாமன்றத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். இந்தப் பேச்சுவார்த்தைக்குப் பின்னரும், இலங்கை கடற்படை இந்திய மீனவர்களை சிறைபிடித்துள்ளது கவலை அளிப்பதாக உள்ளது.

**இலங்கைத் தமிழர் ஆதரவில் உறுதி**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

இலங்கைத் தமிழர்கள் பிரச்சனை பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே பேசினார்கள். எங்களைப் பொறுத்த வரையில், இலங்கை உள்நாட்டுப் போரில் சர்வதேச போர் நெறிமுறைகளை மீறி நடந்து கொண்டவர்களை போர்க் குற்றவாளிகள் என அறிவிக்க வேண்டும்; இனப் படுகொலையை நடத்தியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; அதுவரை இலங்கை நாட்டின் மீது பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும், தமிழ் ஈழம் குறித்து இலங்கையில் உள்ள மற்றும் வெளிநாடுகளில் வாழுகின்ற இலங்கை தமிழர்களிடையே பொது வாக்கெடுப்பு நடத்தி அதற்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும், இலங்கை நாட்டில் நடைபெறும் அனைத்துக் கூட்டங்களையும் இந்தியா புறக்கணிக்க வேண்டும்; இலங்கை வீரர்கள் எவருக்கும் ராணுவப் பயிற்சியை இந்தியாவில் அளிக்கக் கூடாது; இலங்கை நாட்டுடனான விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளக்கூடாது என்பனவற்றில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இது குறித்து பல்வேறு கால கட்டங்களில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டன. எந்த ஒரு தீர்மானத்தின் மீதும் மத்திய அரசு இது நாள் வரை நடவடிக்கை எடுக்கவில்லை. மத்திய அரசுக்கு அப்போது ஆதரவு அளித்த தி.மு.க.வும் வாய் மூடி மவுனியாகத்தான் இருந்தது.

காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பில் யாரும் கலந்து கொள்ளக் கூடாது என இந்த மாமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்ட பின்பும், மத்திய அரசு வெளியுறவுத் துறை அமைச்சரை அந்த மாநாட்டிற்கு அனுப்புவதில் உறுதியாக உள்ளது என்பதை அறிந்து; கடைசி முயற்சியாக, மாநாடு கூடுவதற்கு இரு நாட்கள் முன்பு இந்த மாமன்றத்தின் சிறப்புக் கூட்டத்தைக் கூட்டி, காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா சார்பாக எவரும் கலந்து கொள்ளக் கூடாது என்ற தீர்மானத்தினை நிறைவேற்றினோம். இந்தத் தீர்மானத்தினை, தமிழர்களின் ஒட்டுமொத்த உணர்வினை முற்றிலும் புறக்கணிக்கும் வகையில், இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் இலங்கையில் நடைபெற்ற காமன்வெல்த் மாநாட்டில் கலந்து கொண்டார். மத்திய அரசின் இந்தச் செயல் மிகுந்த வேதனை அளிக்கிறது. இதனை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

இந்த ஆண்டு மார்ச் மாதம் ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக நான்கு நாடுகள் தீர்மானம் கொண்டு வரப்போவதாக செய்திகள் வந்துள்ளன. எங்களைப் பொறுத்த வரையில்,இந்தியாவே,இனப்படுகொலையைநிகழ்த்தியவர்களை தண்டிக்க தனித் தீர்மானத்தை இலங்கைக்கு எதிராக கொண்டு வந்து அதற்கு ஆதரவாக மற்ற நாடுகளை வாக்களிக்க வைத்து அந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஆனால், தற்போதைய மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு இதனை நிச்சயம் நிறைவேற்றாது.

நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் விரைவில் வர இருக்கிறது. அப்போது ஆட்சி மாறும். காட்சிகளும் மாறும். மத்திய அரசின் கொள்கைகளை தீர்மானிக்கக் கூடிய நிலையில், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் இருக்கும். அப்போது, ஐ.நா. மனித உரிமை சபையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டு வந்து அதனை வெற்றி பெறச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கடந்த ஆட்சியில் சட்டம் ஒழுங்கு பட்டபாடு**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே !

மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து சில குற்றச்சாட்டுகளை எதிர்கட்சியினர் தெரிவித்து வருகிறார்கள். மாநிலத்தில் சட்டம் ஒழுங்கு சரிவர பராமரிக்கப்படுவது இல்லை, குற்றங்கள் அதிகரித்துள்ளன என்று உண்மைக்கு மாறான ஒரு தொடர் பிரச்சாரம் தி.மு.க.வினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இது குறித்த எனது விளக்கத்தை இந்த மாமன்றத்திற்கு நான் எடுத்துரைக்க விரும்புகிறேன்.

முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், மதுரையில் பத்திரிகை அலுவலகம் எரிக்கப்பட்டது. இந்தக் கொடூரக் காட்சிகள் தொலைக் காட்சிகளில் ஒளிபரப்பாயின. என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ? குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். இது தான் சட்டத்தையும், நீதியையும் நிலைநாட்டிய லட்சணமா ?

சென்னை சட்டக் கல்லூரி வளாகத்தில் இரு பிரிவினருக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதைத் தடுக்க வேண்டிய காவல் துறையின் கைகளை கட்டிப் போட்டது யார் ? இது என்ன சட்டத்தை நிலை நாட்டியதன் அடையாளமா ?

சென்னை உயர் நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியில், உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், உயர் நீதிமன்ற தலைமை நீதிபதி, உயர்நீதிமன்ற நீதிபதிகள், முதலமைச்சர், காவல் துறை தலைமை இயக்குநர் ஆகியோர் முன்னிலையில் ஒரு ரவுடிக் கும்பல் வழக்கறிஞர்களை தாக்கியது. அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையே? இதற்குப் பெயர் தான் சட்டத்தின் ஆட்சியா?

இது போன்ற எண்ணற்ற குற்றச்சாட்டுகளை அடுக்கிக் கொண்டே போகலாம். இவை வெறும் குற்றச்சாட்டுகள் அல்ல – உண்மை சம்பவங்கள்! சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், சட்டத்தின் ஆட்சிக்கு பதிலாக சமூக விரோதிகளுக்கான ஆட்சி தான் நடைபெற்றது.

ஆட்சியில் இருந்த போது தான் சட்டத்திற்கு எதிராக செயல்பட்டார் என்றால், ஆட்சியில் இல்லாத போதும் சட்டத்திற்கு விரோதமாக செயல்பட்டுக் கொண்டிருக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி.

மதுரை புறநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் உட்பட ஐந்து பேர் மீது ஒருவர் தீண்டாமை வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் காவல் துறையிடம் புகார் கொடுத்தார். இதனுடைய உண்மைத் தன்மையை ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க வேண்டியது காவல் துறை.

ஆனால், இது குறித்து திரு. கருணாநிதியே நடவடிக்கை எடுத்து இருக்கிறார். இந்தப் பிரச்சனை குறித்து 28.1.2014 அன்று செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்த திரு. கருணாநிதி, ‘‘கட்சியிலே உள்ள மதுரை மாவட்ட கழகச் செயலாளர் மூர்த்தி அவர்கள் மீது பி.சி.ஆர். சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று போலீசாருக்கு எழுதிக் கொடுத்தவரை, கட்சித் தலைவர்

என்ற முறையில் நான் விசாரிப்பதும், கண்டிப்பதும் எப்படிக் குற்றமாகும்... ?'' என்று வினவியுள்ளார்.

அதாவது, சட்டத்திற்கு புறம்பாக செயல்பட்டவர் மீது காவல் துறையில் புகார் கொடுப்பதே தவறு என்று கூறி இருக்கிறார்.

ஆட்சியில் இல்லாத போதே இப்படி என்றால், ஆட்சியில் இருந்த போது சட்டம்–ஒழுங்கு எப்படி நிலைநாட்டப்பட்டு இருக்கும் என்பதை உங்களின் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன்.

மதுரை பத்திரிகை அலுவலக எரிப்புச் சம்பவத்திற்கும், தா. கிருட்டிணன் கொலை வழக்கிற்கும் மூல காரணம் யார் என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. மேற்கண்ட இரண்டு சம்பவங்களும் தானாகவே நடந்தது போல், இந்த இரண்டு வழக்குகளில் கைது செய்யப்பட்ட குற்றவாளிகள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

**சட்டத்தின் முன் அனைவரும் சமம்**

தற்போது, தன்னுடைய இளைய மகன் மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் வாழ்வு பற்றி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. அழகிரி சொல்லியவற்றை பத்திரிகையாளர்களிடம் திரு. கருணாநிதி தெரிவித்துள்ளார். இதோடு நின்றுவிடாமல், பாரதப் பிரதமருக்கு திரு. டி.ஆர். பாலு மூலம் கடிதம் எழுதச் சொல்லியிருக்கிறார். திரு. பாலுவும், 27.1.2014 அன்று பாரதப் பிரதமருக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடிதத்தில், எல்.டி.டி.ஈ., மத அடிப்படைவாதிகள் மற்றும் அரசியல் விரோதிகளால் திரு. மு.க. ஸ்டாலினுக்கு ஆபத்து உள்ளது என்று குறிப்பிட்டு, Z PLUS பாதுகாப்பு கொடுக்குமாறு வேண்டுகோள் விடப்பட்டுள்ளது என செய்திகள் வெளி வந்துள்ளன.

இலங்கை இனப்படுகொலையில் தமிழ் ஈழ விடுதலை அமைப்பினர் மட்டுமல்லாமல், பல்லாயிரக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் கொல்லப்பட்டுவிட்ட நிலையில், எல்.டி.டி.ஈ. அமைப்பிடமிருந்து ஆபத்து என்பது இல்லாத ஒன்றாகும்.

எந்த ஒரு பெயரும் குறிப்பிடாமல், மத அடிப்படை வாதிகளிடம் இருந்து அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. இதுவும் கற்பனையான ஒன்று.

கடைசியாக, பல தரப்பட்ட அரசியல் விரோதிகளிடமிருந்து அச்சுறுத்தல் இருப்பதாக கூறப்பட்டுள்ளது. யார் யார் அந்த அரசியல் விரோதிகள் என்பது குறிப்பிடப்படவில்லை. கடிதம் எழுதியுள்ள தருணத்தையும், தற்போது திரு. கருணாநிதியின் குடும்பத்தில் நடக்கும் குழப்பத்தையும் ஒப்பிடுகையில் திரு. மு.க. அழகிரியின் மூலம் ஆபத்து என்பது மறைமுகமாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது இளைய மகனுக்கு மூத்த மகனால் ஆபத்து என்றவுடன் பாரதப் பிரதமருக்கு வரிந்து கட்டிக் கொண்டு கடிதம் எழுதச் சொல்லும் திரு. கருணாநிதி, பத்திரிகை எரிப்புச் சம்பவம் மற்றும் தா. கிருட்டிணன் கொலை வழக்குகளில் என்ன நிலைப்பாட்டை எடுத்தார்? தனக்கு ஒரு நீதி; தன் குடும்பத்திற்கு ஒரு நீதி; மற்றவர்களுக்கு ஒரு நீதி, என்ற ரீதியில் செயல்படும் திரு. கருணாநிதியை தலைவராகக் கொண்டு செயல்படும் தி.மு.க.வினர், சட்டம்–ஒழுங்கு குறித்து பேசுவது நகைப்புக்குரியதாக உள்ளது.

**சட்டத்தின் ஆட்சி**

எங்களைப் பொறுத்த வரையில் சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையோடு செயல்பட்டு வருகிறோம். சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பதே எங்களின் தாரக மந்திரம்.

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, சமூக விரோதிகளின் ஆட்சி என்று இருந்த நிலைமை மாற்றப்பட்டு சட்டத்தின் ஆட்சி நிலைநாட்டப்பட்டுள்ளது. காவல் துறையினர் யாருக்காகவும், எதற்காகவும், அஞ்சாமல் சட்டப்படியான நடவடிக்கையை எடுப்பதற்கான சுதந்திரத்தைப் பெற்றுள்ளனர். இதன் காரணமாக, தமிழகத்தில் பொது அமைதி சிறப்பாக பராமரிக்கப்பட்டு வருகிறது. கொள்ளை, வழிப்பறி, ஆட்கடத்தல், கள்ளக் கடத்தல் போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 2005 ஆம் ஆண்டு எனது முந்தைய ஆட்சியில் 1,366 ஆக இருந்த கொலைகளின் எண்ணிக்கை, 2010 ஆம் ஆண்டு முந்தைய திமுக ஆட்சியில் 1,715 ஆக உயர்ந்தது. இதே போல் ஆதாயக் கொலைகள் 74ல் இருந்து 153 ஆக உயர்ந்தது.

2005 ஆம் ஆண்டு 73 என்றிருந்த கூட்டுக் கொள்ளைகள் 2010 ஆம் ஆண்டு முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் 85 ஆகவும், கொள்ளைகள் 437இல் இருந்து 1,817 ஆகவும், கன்னக் களவுகள் 3,738இல் இருந்து 4,715 ஆகவும் உயர்ந்தன.

சுருக்கமாக சொல்ல வேண்டுமென்றால், கடந்த ஐந்து ஆண்டு கால மைனாரிட்டி திமுக ஆட்சியில் கொலை வழக்குகள் 25.5 விழுக்காடும், ஆதாயக் கொலை 106.75 விழுக்காடும், கூட்டுக் கொள்ளை 16.44 விழுக்காடும், கொள்ளைகள் 315.8 விழுக்காடும், கன்னக் களவு 26 விழுக்காடும் அதிகரித்துள்ளன.

கொலைகளின் எண்ணிக்கையை எடுத்துக் கொண்டால் முந்தைய தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்கு 5.11 விழுக்காடு கூடியுள்ளது. நான் ஆட்சிப் பொறுப்பேற்ற பிறகு, 2011 ஆம் ஆண்டு 1,747 கொலைகளும், 2012 ஆம் ஆண்டு 1,806

கொலைகளும், சென்ற 2013 ஆம் ஆண்டு 1,806 கொலைகளும் நடந்துள்ளன. திமுக ஆட்சியின் போதான அதிகரிப்பு விகித்ததுடன் ஒப்பிடும்போது, கடந்த இரண்டு ஆண்டுகளில் கொலைகளின் அதிகரிப்பு 3.42 விழுக்காடு குறைந்துள்ளது என்பதே உண்மை.

கொலைகளிலேயே மிகவும் கொடியவை ஆதாயக் கொலைகளாகும். இவற்றின் எண்ணிக்கை 2010 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில், 153 ஆக இருந்தது. ஆனால் 2011 ஆம் ஆண்டு, ஆதாயக் கொலைகளின் எண்ணிக்கை 123 ஆக குறைந்தது. 2013 ஆம் ஆண்டு 121 ஆக மேலும் குறைந்துள்ளது. 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டு ஆதாயக் கொலைகள் 1.63 சதவிகிதம் குறைந்துள்ளது. இவ்வழக்குகளின் சதவிகிதம் இவ்விரு ஆண்டுகளில் ஆண்டொன்றுக்கு 0.81 சதவிகிதம் குறைந்துள்ளது. ஆனால் இதற்கு நேர்மாறாக, திமுக ஆட்சியின் போது, ஆண்டிற்கு சராசரியாக 21.35 சதவிகிதம் ஆதாயக் கொலைகள் அதிகரித்து இருந்தன.

**குற்றங்கள் குறைந்தன**

கூட்டுக் கொள்ளை வழக்குகளைப் பொறுத்த வரையில், 2011 ஆம் ஆண்டு 101 வழக்குகள் என்று இருந்த எண்ணிக்கை, 2012 ஆம் ஆண்டு 97 ஆக குறைந்தது. 2013 ஆம் ஆண்டு 83 ஆக குறைந்துவிட்டது. இவ்வழக்குகள் 2011 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது, 2013 ஆம் ஆண்டு 17.82 விழுக்காடு குறைந்துள்ளது. இவ்விரு ஆண்டுகளில் சராசரியாக 8.91 சதவிகிதம் குறைந்துள்ளது. ஆனால், கடந்த மைனாரிட்டி திமுக ஆட்சியில் கூட்டுக்கொள்ளை வழக்குகள் சராசரியாக ஆண்டொன்றுக்கு 3.29 சதவிகிதம் அதிகரித்தன.

களவு வழக்குகளைப் பொறுத்த வரையில் 2010 ஆம் ஆண்டு 14,583 வழக்குகள் என்று இருந்த எண்ணிக்கை, 2011

ஆம் ஆண்டு 13,924 ஆகவும்; 2012 ஆம் ஆண்டு 11,996 ஆகவும்; 2013 ஆம் ஆண்டு 11,950 ஆகவும் படிப்படியாக குறைந்துள்ளன. 2011 ஆம் ஆண்டு வழக்குகளை, 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில் 14.18 விழுக்காடு குறைந்துள்ளது. இது ஆண்டிற்கு 7.09 விழுக்காடு குறைந்து வருவதை காட்டுகிறது.

சொத்து தொடர்பான வழக்குகளைப் பொறுத்த வரையில் 2010 ஆம் ஆண்டு 21,353 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. இந்த எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டில், 21,062 ஆகவும், 2012 ஆம் ஆண்டு 18,585 ஆகவும் குறைந்தது. ஆனால், 2013 ஆம் ஆண்டு 19,465 வழக்குகள் தாக்கலாகியுள்ளன. முந்தைய மைனாரிட்டி திமுக ஆட்சியில் 2010 ஆம் ஆண்டு தாக்கலான மொத்த சொத்து வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடும் போது 1,888 வழக்குகள் குறைந்துள்ளன. இதிலிருந்து காவல் துறையினர் எடுத்து வரும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளினால் சொத்து சம்பந்தமான ஒட்டுமொத்தக் குற்றங்கள் குறைந்து வருகின்றன என்பது தெரிய வரும்.

தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் அறிக்கையின்படி, மற்ற மாநிலங்களில் தாக்கலான குற்றங்களுடன் ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் தாக்கலான குற்றங்களின் எண்ணிக்கை குறைந்தே காணப்படுகின்றன. உதாரணத்திற்கு, 2012 ஆம் ஆண்டு உத்திரப் பிரதேச மாநிலத்தில் 4,966 கொலை வழக்குகளும்; பீகாரில் 3,566 கொலை வழக்குகளும், ஆந்திராவில் 2,717 கொலை வழக்குகளும்; மகாராஷ்டிராவில் 2,712 கொலை வழக்குகளும்; மத்திய பிரதேசத்தில் 2,373 கொலை வழக்குகளும், மற்றும், மேற்கு வங்கத்தில் 2,252 கொலை வழக்குகளும் தாக்கலாகியுள்ளன. ஆனால், இவற்றுடன் ஒப்பிடும் போது தமிழ்நாட்டில் கொலை வழக்குகளின் எண்ணிக்கை 1806 தான்.

குற்ற நிகழ்வுகளை ஒப்பிடும் போது, குற்ற விகிதம் என்ற எண்ணிக்கை பயன்படுத்தப்படுகிறது. இது 1 இலட்சம் மக்கள் தொகைக்கு எத்தனை குற்றங்கள் நடந்துள்ளன என்பதன் குறியீடு ஆகும். 2012ஆம் ஆண்டு நடந்த சொத்து சம்பந்தமான குற்றங்களின் தமிழ்நாடு குற்ற விகிதம் 27.16 ஆகும். இது தேசிய சராசரி ஆன 36.78 சதவிகிதத்துடன் ஒப்பிடும் போது, 9.62 புள்ளிகள் குறைவாக உள்ளது. ஆனால், இக்குற்ற விகிதம் அரியானாவில் 91.6 ஆகவும், மகராஷ்டிராவில் 62.07 ஆகவும், மத்திய பிரதேசத்தில் 47.98 ஆகவும், கர்நாடகாவில் 45.10 ஆகவும்; ஆந்திர பிரதேசத்தில் 42.82 ஆகவும், ராஜஸ்தானில் 41.64 ஆகவும்; குஜராத்தில் 37.16 ஆகவும்; ஒடிசாவில் 36.81 ஆகவும் உள்ளது.

**குற்றங்களைத் தடுக்க தீவிர நடவடிக்கைகள்**

காவல் துறையினர், குற்ற வழக்குகளில் திறமையாக புலன் விசாரணை செய்து; பல முக்கிய கொலை, கொள்ளை வழக்குகளில் எதிரிகளைக் கைது செய்து; களவு போன பொருட்களை மீட்டு வருவதுடன், தொடர்ந்து குற்றம் செய்யும் குற்றவாளிகளை தடுப்புக் காவலில் வைத்திடவும் நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

கடந்த 2012 ஆம் ஆண்டு, பல்வேறு தடுப்புக் காவல் சட்டங்களின் கீழ் 2,158 நபர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இந்த எண்ணிக்கை கடந்த 2013 ஆம் ஆண்டு 3,433 ஆக உயர்ந்தது.

2012 ஆம் ஆண்டு தாக்கலான சொத்து சம்பந்தமான வழக்குகளில், 13,275 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு, எதிரிகள் கைது செய்யப்பட்டு, களவு போன 80 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப்பட்டன. சென்ற 2013 ஆம் ஆண்டு தாக்கலான சொத்து சம்பந்தமான வழக்குகளில், இதுவரை 73 சதவிகித வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு,

எதிரிகள் கைது செய்யப்பட்டு, களவு போன 146 கோடியே 59 லட்சம் ரூபாய் மதிப்பிலான சொத்துக்கள் மீட்கப் பட்டுள்ளன. காவல் துறையினர் சொத்து சம்பந்தமான வழக்குகளில் குற்றவாளிகளை கைது செய்து, களவு போன சொத்துக்களை மீட்பதுடன், குற்றவாளிகள் மீண்டும் பிணையில் வெளிவந்து குற்றங்களில் ஈடுபடுவதை தடுக்கும் வகையில் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளையும் சிறப்பாக எடுத்து வருகின்றனர்.

குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் மற்றும் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் குறித்து மாநில உளவுத் துறையினர் முன்கூட்டியே அளிக்கும் தகவல்களின் அடிப்படையில், மாவட்டக் காவல் துறையினர் குற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவோரை கைது செய்து வருவதுடன், தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**காவல்துறையின் கடும் நடவடிக்கையால்**
**குறைந்துவரும் குற்ற நிகழ்வுகள்**

ஒவ்வொரு ஆண்டும் மக்கள் தொகை அதிகரிப்பு, வளர்ந்து வரும் பொருளாதாரம், தகவல் தொழில்நுட்ப முன்னேற்றம், மாறி வரும் சமுதாய சூழ்நிலை மற்றும் நகரமயம் ஆகுதல் போன்றவற்றால் குற்ற நிகழ்வுகள் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. நமது மாநிலத்தைப் பொறுத்தவரை, காவல் துறையினர் குற்றவாளிகள் மீது எடுத்து வரும் கடும் நடவடிக்கைகளினால் குற்ற நிகழ்வுகள் குறைந்து வருகின்றன.

மாநிலத்தில் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறிப்பாக, வரதட்சணை கொலைகள், பாலியல் கொடுமைகள், மானபங்க வழக்குகள் போன்ற முக்கிய குற்றங்கள் குறைந்து வருவதோடு, மற்ற குற்றங்களும் கட்டுப்பாட்டிற்குள் இருந்து வருகின்றன. உதாரணமாக, திமுக ஆட்சியின் இறுதியில் 2010ஆம் ஆண்டு, 165 ஆக இருந்த வரதட்சணை கொலைகள், 2011ஆம் ஆண்டு

152 ஆகவும், 2012ஆம் ஆண்டு 110 ஆகவும் குறைந்துள்ளன. 2013ஆம் ஆண்டு வரதட்சணை கொலை வழக்குகள் 118 மட்டுமே தாக்கலாகியுள்ளன. 2010ஆம் ஆண்டு தாக்கலான வரதட்சணை கொலை வழக்குகளை 2013ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இக்கொலை வழக்குகள் 28.48 சதவிகிதம் குறைந்துள்ளன.

மேலும், கடந்த 2010ஆம் ஆண்டு நடைபெற்ற பாலியல் கொடுமைகள் 638. இது 2011ஆம் ஆண்டு 464 ஆகவும், 2012 ஆம் ஆண்டு 382 ஆகவும், 2013 ஆம் ஆண்டு 313 ஆகவும் குறைந்துள்ளன. 2010ஆம் ஆண்டு தாக்கலான பாலியல் கொடுமை வழக்குகளை 2013ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இவ்வழக்குகள் 51 சதவிகிதம் குறைந்துள்ளன.

கடந்த திமுக ஆட்சியில், 2010 ஆம் ஆண்டு 1,405 மானபங்க வழக்குகள் தாக்கலாகி உள்ளன. ஆனால் 2013ஆம் ஆண்டு 1,271 மானபங்க வழக்குகள் மட்டுமே தாக்கலாகியுள்ளன. 2010ஆம் ஆண்டு தாக்கலான மானபங்க வழக்குகளை 2013 ஆம் ஆண்டு தாக்கலான வழக்குகளோடு ஒப்பிடுகையில், இவ்வழக்குகள் 9.53 சதவிகிதம் குறைந்துள்ளன.

மேலும், தேசிய குற்ற ஆவண காப்பகத்தின் புள்ளி விவர அறிக்கையின்படி, 2012ஆம் ஆண்டு மேற்கு வங்காளத்தில் 30,942 பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இது ஆந்திரப் பிரதேசத்தில் 28,171 ஆகவும், உத்தரப் பிரதேசத்தில் 23,569 ஆகவும், ராஜஸ்தானில் 21,106 ஆகவும், மத்திய பிரதேசத்தில் 16,832 ஆகவும், மகாராஷ்டிராவில் 16,353 ஆகவும், அசாமில் 13,544 ஆகவும், ஒடிசாவில் 11,988 ஆகவும், பீகாரில் 11,229 ஆகவும், கேரளாவில் 10,930 ஆகவும், கர்நாடகாவில் 10,366 ஆகவும், குஜராத்தில் 9,561 ஆகவும் உள்ளன. ஆனால் 2012 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் நடந்த பெண்களுக்கு

எதிரான குற்றங்கள் 7,192 மட்டுமே. இதிலிருந்து தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராக தாக்கலாகும் மொத்த குற்றங்களை பிற மாநிலங்களோடு ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் குற்றங்கள் குறைவாகவே உள்ளன என்பது தெரிய வரும்.

சென்னை மாநகரத்தை எடுத்துக் கொண்டால், 2010ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் குற்றங்களின் எண்ணிக்கை 30 விழுக்காடு குறைந்துள்ளது. 2010ஆம் ஆண்டு 3,172 என்று இருந்த குற்றங்களின் எண்ணிக்கை 2013ஆம் ஆண்டு 2,232 ஆக குறைந்துள்ளது.

ஆதாயக் கொலைகளைப் பொறுத்த வரையில், 2010ஆம் ஆண்டில் 20 ஆக இருந்த குற்றங்கள் 2013ஆம் ஆண்டு 15 ஆக குறைந்துள்ளன.

இதேபோன்று, 2010ஆம் ஆண்டு 173 ஆக இருந்த வழிப்பறிக் குற்றங்கள் 2013ஆம் ஆண்டு 81 ஆக குறைந்துள்ளன.

வீடு புகுந்து திருடும் குற்றங்களைப் பொறுத்த வரையில், 2010ஆம் ஆண்டு 743 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. 2013ஆம் ஆண்டு 467 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன.

திருட்டுக் குற்றங்களை எடுத்துக் கொண்டால், 2010ஆம் ஆண்டு 1,122 என்று இருந்த குற்றங்கள் 2013ஆம் ஆண்டு 658 ஆக குறைந்துவிட்டன.

கொடுங்காயங்களை விளைவிக்கும் குற்றங்களைப் பொறுத்தவரையில், 2010ஆம் ஆண்டு 95 ஆக இருந்த குற்றங்கள் 2013ஆம் ஆண்டு 48 ஆக குறைந்துவிட்டன.

ஆள் கடத்தல் குற்றங்களைப் பொறுத்த வரையில் 2010ஆம் ஆண்டு 77 குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், 2013ஆம் ஆண்டு 59 குற்றங்கள் மட்டுமே நிகழ்ந்துள்ளன.

இதே போன்று, 2010ஆம் ஆண்டு 294 கொலை முயற்சி குற்றங்கள் நிகழ்ந்துள்ளன. ஆனால், 2013ஆம் ஆண்டில் 203 குற்றங்களே நிகழ்ந்துள்ளன.

பெண்களுக்கு எதிரான குற்ற விகிதம் புதுடெல்லியில் 68.56 எனவும், பெங்களூருவில் 55.76 எனவும், ஐதராபாத்தில் 50.45 எனவும், கொல்கத்தாவில் 30.52 எனவும் உள்ள நிலையில் சென்னையில் இது 19.32 என்ற அளவில் மட்டுமே உள்ளது.

எனவே, தமிழ்நாட்டில் குற்றங்கள் அதிகரித்துள்ளன என்ற எதிர்க்கட்சியினரின் பிரச்சாரம் உண்மைக்கு முற்றிலும் மாறானது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**அரசு செவிலியர் பள்ளி மாணவியர்**
**அனைவருக்கும் கல்வி உதவித் தொகை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர் திரு சு. குணசேகரன் அவர்கள் பேசும் போது அரசு செவிலியர் பயிற்சி பள்ளிகளில் பட்டயப் படிப்பு படிக்கும் 1,400 பேரில் 600 பேருக்கு தான் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது என்றும்; மற்றவர்களுக்கும் உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தார்.

அரசு செவிலியர் பயிற்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவியர் அனைவருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கும் திட்டம் பல ஆண்டுகளாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. இருப்பினும், மாணவியர்களின் சேர்க்கை உயர்த்தப்பட்டதற்கு ஏற்ப கல்வி உதவித் தொகை வழங்கும் மாணவியரின் எண்ணிக்கை உயர்த்தப்படவில்லை.

தற்போது 23 அரசு செவிலியர் பள்ளிகளில் ஒவ்வொரு ஆண்டும் 2,000 மாணவியர் சேர்க்கப்பட்டு பட்டயப் படிப்பு பயின்று வருகின்றனர்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களின் வேண்டுகோளினை ஏற்று வரும் கல்வியாண்டு முதல் அரசு செவிலியர் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவியருக்கும் கல்வி உதவித் தொகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலம் அரசுக்கு கூடுதலாக ஆண்டொன்றுக்கு 3 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும்.

**சிவகங்கை நகராட்சி பொன்விழா**
**புதிய பணிகளை மேற்கொள்ள ரூ.25 கோடி**

இதே போன்று, சிவகங்கை நகராட்சியின் பொன்விழா ஆண்டு, வரும் ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் துவங்குகிறது என்றும்; அதற்கென சிறப்பு திட்டங்களை நிறைவேற்றும் வகையில், நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டது. இதனை ஏற்று சிவகங்கை நகராட்சி பொன்விழா ஆண்டில் சில புதிய பணிகளை மேற்கொள்ள ஏதுவாக 25 கோடி ரூபாய் வழங்கப்படும் என்பதை நான் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், விருதுநகர் மாவட்டத்தில் 24.11.2013 அன்று குளத்தில் விழுந்து 5 மாணவிகள் இறந்து விட்டார்கள் என்றும், இறந்த 5 மாணவிகளின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிதி உதவி வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. குணசேகரன் அவர்கள் வைத்தார். இந்த கோரிக்கை ஏற்கப்படுகிறது. குளத்தில் விழுந்து இறந்த 5 மாணவிகளின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும்.

**சிவாலய ஓட்ட நாளன்று உள்ளூர் விடுமுறை**

மாண்புமிகு உறுப்பினர் திரு. J.J. பிரின்ஸ் அவர்கள் பேசும் போது, 23.1.2014 அன்று தடம் எண் 86, மார்த்தாண்டம் – பத்தமடை நகரப் பேருந்தில் பயணம் செய்த 7 ஆம் வகுப்பு மாணவி பேருந்திலிருந்து விழுந்து உயிரிழந்தார் என்றும், அந்த மாணவி குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து உதவித் தொகை வழங்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இந்த கோரிக்கையை ஏற்று அந்த மாணவியின் குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ஒரு இலட்சம் ரூபாய் உதவித் தொகை வழங்கப்படும்.

மேலும், சிவராத்திரி விழா கன்னியாகுமரி மாவட்டத்தில் சிறப்பாக நடைபெறுகிறது என்று தெரிவித்து அன்றைய நாளை விடுமுறைநாளாக அறிவிக்க வேண்டும் எனவும் திரு. J.J. பிரின்ஸ் அவர்கள் கேட்டுக் கொண்டார். இவரது கோரிக்கையினை ஏற்று, சிவராத்திரி தினத்தன்று 12 சிவாலயங்களுக்கு பக்தர்கள் ஓடிச் சென்று வழிபடும் சிவாலாய ஓட்டம் வெகு விமரிசையாக நடைபெறும் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அளிக்கப்படும்.

**பலதுறை உயர்சிறப்பு மருத்துவமனையில்
இடஒதுக்கீடு முழுமையாக பின்பற்றப்படுகிறது**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜவாஹிருல்லா அவர்கள் பேசும் போது, பல்நோக்கு மருத்துவமனையில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டினை கூறியுள்ளார்.

இந்தப் பலதுறை உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனைக்காக தெரிந்தெடுக்கப்பட அறிவிக்கப்பட்ட 83 மருத்துவர் பணியிடங்களில், இதுவரை 72 மருத்துவர்கள் தேர்வு

செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 55 மருத்துவர்கள் ஏற்கெனவே அரசு மருத்துவமனைகளில் பணியாற்றிக் கொண்டிருப்பவர்கள். மாற்றுப் பணி அடிப்படையில் இவர்கள் பணி அமர்த்தப்பட்டுள்ளனர். அரசு பணிக்கு தெரிந்தெடுக்கப்படும் போதே இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் தான் இவர்கள் பணி அமர்த்தப்பட்டவர்கள்.

மீதமுள்ள 28 மருத்துவர் பணியிடங்களைப் பொறுத்தவரை, 17 பணியிடங்களுக்கு தகுதியான மருத்துவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 7 மருத்துவர்கள் அரசு மருத்துவமனைகளில் பணியாற்றி ஒய்வு பெற்ற அனுபவம் வாய்ந்த மருத்துவர்கள் ஆவர். 10 மருத்துவர்கள் தகுதியின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்பட்ட தனியார் மருத்துவர்கள் ஆவர். இந்த 17 மருத்துவர்களில் 9 பேர் பிற்படுத்தப்பட்ட வகுப்பினையும், 4 பேர் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினையும், 3 பேர் ஆதிதிராவிடர் வகுப்பினையும், ஒருவர் இதர வகுப்பினையும் சேர்ந்தவர்கள் ஆவர்.

மீதமுள்ள 11 பணியிடங்களைப் பொறுத்தவரை, விண்ணப்பத்தின் அடிப்படையில் தகுதியான நபர்கள் கிடைக்காத நிலையில், அரசு மருத்துவமனைகளிலிருந்து மாற்றுப்பணி மூலம் இந்தப் பணியிடங்கள் நிரப்பப்படும்.

எனவே, பலதுறை உயர் சிறப்பு சிகிச்சை மருத்துவமனை பணியிடங்களில் இட ஒதுக்கீடு பின்பற்றப்படவில்லை என்ற குற்றச்சாட்டு சரியல்ல. இட ஒதுக்கீடு முழுமையாக பின்பற்றப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆசிரியர் தகுதித்தேர்வில் 5 சதவிகிதம் மதிப்பெண் சலுகை**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே!

ஆசிரியர் தகுதித் தேர்வு, அதாவது Teachers Eligibility Test தேர்வில் தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர்,

மிகவும் பிறப்படுத்தப்பட்டோர் ஆகியோருக்கு மதிப்பெண்ணில் சலுகை வழங்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளினை சில உறுப்பினர்கள் இங்கே தெரிவித்தார்கள்.

2009 ஆம் ஆண்டைய குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் மத்திய அரசால் இயற்றப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தின்படி, பள்ளிகளில் ஆசிரியர்களாக நியமனம் செய்யப்படுபவர்கள் அரசால் நியமிக்கப்பட்ட நிறுவனத்தால் நடத்தப்படும் ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

இந்தச் சட்டத்தின் அடிப்படையில், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம், அதாவது National Council for Teacher Education 1 முதல் 8 ஆம் வகுப்பு வரையிலான ஆசிரியர்களுக்கு தகுதித் தேர்வினை கட்டாயமாக்கி அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தின் அறிவிக்கைகளின் படி, 1 முதல் 5 ஆம் வகுப்புக்கான இடைநிலை ஆசிரியர்கள், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் ஒழுங்குமுறை விதிகள் 2002இன் படி ஆசிரியர் பயிற்சியில் இரண்டாண்டு பட்டயப் படிப்பும்; மேல்நிலைத் தேர்வில் குறைந்தபட்சம் 45 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். 2002ஆம் ஆண்டு ஒழுங்கு விதிமுறைகளுக்கு முன் இரண்டாண்டு பட்டயப் படிப்பு தேர்ச்சி பெற்றிருந்தால், மேல்நிலைத் தேர்வில் குறைந்தபட்சம் 50 சதவீத மதிப்பெண்கள் பெற்றிருக்க வேண்டும்.

அதேபோன்று, 6 முதல் 8ஆம் வகுப்புக்கான பட்டதாரி ஆசிரியர்கள், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமம் ஒழுங்குமுறை விதிகள் 2002இன் படி, ஓர் ஆண்டு பி.எட். பட்டமும், பட்டப் படிப்பில் 45 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். 2002ஆம் ஆண்டுக்கு முன் பி.எட். பட்டம் பெற்றிருந்தால், பட்டப் படிப்பில் 50 சதவீத மதிப்பெண் பெற்றிருக்க வேண்டும்.

இதன் பின்னர், தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் 1.4.2011 அன்று வெளியிடப்பட்ட கடிதத்தில், அந்தந்த மாநிலங்களில் கடைபிடிக்கப்படும் இட ஒதுக்கீட்டு கொள்கைக்கு ஏற்ப, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின பிரிவினருக்கு மட்டும் மேல்நிலைத் தேர்வு மற்றும் பட்டப் படிப்பு தேர்வில் குறைந்தபட்ச மதிப்பெண்களில் 5 சதவீதம் தளர்வு அளிக்கலாம் என தெரிவித்துள்ளது.

இதன்படி, 2002ஆம் ஆண்டுக்கு பின் ஆசிரியர் பயிற்சி பட்டயப் படிப்பை முடித்தவர்கள் மேல்நிலை தேர்வில் 40 சதவீத மதிப்பெண்ணும்; அதற்கு முன்னர் தேர்வு பெற்றவர்கள் 45 சதவீத மதிப்பெண்ணும் பெற்றிருக்க வேண்டும்.

ஆனால், தற்போது தமிழகத்தில் மேல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளவர்கள், அதாவது 35 சதவீதம் பெற்றவர்களும், ஆசிரியர் தகுதித் தேர்வு எழுத அனுமதிக்கப்படுகின்றனர். எனவே, மத்திய அரசு அறிவித்துள்ளதை விட அதிகச் சலுகை தமிழ் நாட்டில் அளிக்கப்பட்டுள்ளது.

அதே போன்று, 2002ஆம் ஆண்டுக்கு பின் பி.எட். படித்தவர்கள், பட்டப் படிப்பில் 45 சதவீத மதிப்பெண்களும், அதற்கு முன்னால் பி.எட். படித்தவர்கள், பட்டப் படிப்பில் 50 சதவீத மதிப்பெண்களும் பெற்றிருக்க வேண்டும். தமிழகப் பல்கலைக்கழகங்கள் 40 சதவீத மதிப்பெண் பெற்றிருந்தாலே பட்டம் வழங்குவதால், மத்திய அரசு அறிவித்துள்ளதை விட தமிழ் நாட்டில் அதிகச் சலுகை அளிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற 60 சதவீதம் பெற வேண்டும் என தேசிய ஆசிரியர் கல்விக் குழுமத்தால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அதே சமயத்தில், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், இதர பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு அந்தந்த மாநிலத்தில் உள்ள இட

ஒதுக்கீடு கொள்கையின்படி தேர்ச்சி மதிப்பெண்களில் சலுகை வழங்கிடப் பரிசீலிக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆசிரியர் தகுதி தேர்வின் தேர்ச்சி, இட ஒதுக்கீட்டை நிர்ணயிப்பதில்லை. ஆசிரியர்களை பணியிடங்களில் நியமிக்கும்போது தான் இட ஒதுக்கீடு கடைபிடிக்கப்படுகிறது. ஆசிரியர் நியமனத்தில் 69 சதவீத இட ஒதுக்கீடு முழுமையாக பின்பற்றப்படுகிறது என்பதை இந்தத் தருணத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனினும், இந்த அவையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில், ஆசிரியர் தகுதி தேர்வில் தேர்ச்சி பெற 60 சதவீதம் மதிப்பெண் பெற வேண்டும் என நிர்ணயிக்கப்பட்டிருந்தாலும், இனி தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கு 5 சதவீத மதிப்பெண் சலுகை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதாவது தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் (முஸ்லீம்), மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோர் ஆசிரியர் தகுதித் தேர்வில் இனி 55 சதவீதம் மதிப்பெண் பெற்றாலே தேர்ச்சி பெற்றவர்கள் என அறிவிக்கப்படுவார்கள்.

இந்தச் சலுகை தற்போது ஆகஸ்ட் 2013ஆம் ஆண்டு ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்டுள்ள தகுதி தேர்வுக்கும் பொருந்தும்.

ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு தங்களது கருத்துக்களை,

யோசனைகளை, ஆலோசனைகளை வழங்கிய மாண்புமிகு உறுப்பினர்களுக்கு தக்க விளக்கங்களை தந்துள்ளேன்.

இந்தியாவிலேயே தமிழகம் முதன்மை மாநிலமாகத் திகழ நான் எடுக்கும் முயற்சிகளுக்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்ற வேண்டுகோளினை விடுத்து, இந்த விவாதத்தில் கலந்து கொண்டு நன்றியுரை ஆற்றியவர்களுக்கும், ஆக்கப்பூர்வமான கருத்துகளை வெளிப்படுத்தியவர்களுக்கும் என்னுடைய அன்பார்ந்த நன்றியினைத் தெரிவித்து அமைகிறேன்.

வணக்கம்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சட்டப்பேரவையில் 20.2.2014 அன்று
நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் கலந்து கொண்டு
சட்டம் ஒழுங்கு பற்றி அளித்த விளக்கம்.



## இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் தான் குற்ற நிகழ்வுகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு

**உ**றுப்பினர் பேசுகின்ற போது இந்த ஊரில் இத்தனைக் கொலைகள் நடந்திருக்கின்றன. அந்த ஊரில் இத்தனைக் குற்றங்கள் நடந்திருக்கின்றன, நடவடிக்கை இல்லை என்று சொல்கிறார். குற்றங்கள் நிகழாத நாடு உலகில் கிடையாது. குற்றங்கள் நிகழாத ஊர் எந்த நாட்டிலும் கிடையாது. ஒரு நாட்டை எடுத்துக்கொண்டால் பல்வேறு மாநிலங்களை எடுத்துக்கொண்டால் குற்றங்களே நிகழாத மாநிலம் என்று எதுவும் கிடையாது. குற்றங்களின் விகிதத்தைத்தான் கணக்கில்

எடுத்துக் கொள்வோம். அதாவது, ஒரு இலட்சம் பேருக்கு எத்தனைக் குற்றங்கள் நடந்திருக்கின்றன என்பதைக் குறிப்பிட்டு, அதன்படிதான் இந்த விகிதாச்சாரம் குறிப்பிடப்படுகிறது. அதன்படி, ஆளுநர் அவர்களின் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது நடைபெற்ற விவாதத்திற்கு நான் பதிலுரை ஆற்றியபோது உறுப்பினர் வரவில்லை. அது இந்த அரசினுடைய தவறல்ல. அன்றைக்கு மிக விரிவாக சட்டம் ஒழுங்கைப் பற்றி குற்றங்களின் நிகழ்வுகளைப் பற்றி எப்படி தமிழ்நாட்டில் இந்த அரசு, எனது தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் படிப்படியாகக் குற்றங்கள் குறைந்து கொண்டே வருகின்றன என்பதையெல்லாம் விரிவாக எடுத்துச்சொல்லி, மத்திய அரசே வெளியிட்ட புள்ளி விவரங்களின்படி பிற மாநிலங்களிலுள்ள குற்ற நிகழ்வுகளைவிட, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் குற்றங்களின் நிகழ்வு மிகவும் குறைவாக உள்ளது என்பதையெல்லாம் நான் சுட்டிக்காட்டினேன். அதையெல்லாம் சொன்ன பிறகுகூட அதைச் சிந்தையில் கொள்ளாமல் குற்றச்சாட்டாகவே சொல்லிக் கொண்டிருந்தால் அதில் எந்த அர்த்தமும் இல்லை.

நான் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்திற்கு ஆற்றிய உரையின் பிரதிகள் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களின் மேஜைகளிலும் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த உரையைப் படித்துப் பார்த்தாலே எதிர்கட்சித் துணைத் தலைவருக்கு வேண்டிய பதில்கள் அதிலேயே இருக்கும். இதைச் சொன்ன பிறகுகூட செங்கல்பட்டில் இத்தனைக் கொலைகள் நடந்தன. இன்னொரு ஊரில் இத்தனை குற்றங்கள் நிகழ்ந்தன என்றால் குற்றங்கள் நிகழ்ந்து கொண்டுதான் இருக்கின்றன. குற்றங்களின் எண்ணிக்கை என்ன, விகிதாச்சாரம் என்ன என்பதைத் தான் பார்க்க வேண்டும். குற்றங்கள் நிகழ்ந்து காவல் துறை, இந்த அரசு நடவடிக்கை எடுக்கவில்லையா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எந்தக் குற்ற நிகழ்விலாவது நடவடிக்கை இல்லை என்பதை ஆதாரங்களுடன் நிரூபித்தால் தேவையான நடவடிக்கையை இந்த அரசு எடுக்கும்.

எனது உரையின் பிரதிகள் இன்றைக்கு அனைத்து உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. அது மேஜையிலேயே இருக்கிறது. இப்போதுகூட ஒன்றும், தாமதமாகிவிடவில்லை. உறுப்பினர் இந்தப் புத்தகத்தை எடுத்து 58ஆவது பக்கத்தைப் படிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ‘‘குற்றங்கள் குறைந்தன’’ என்ற தலைப்பின் கீழ் நான் சொன்ன புள்ளிவிவரங்கள் அனைத்தும் உள்ளன, படித்துப் பார்க்க வேண்டும்.

நடவடிக்கை இல்லையென்று சொல்ல வேண்டுமென்றால் இப்படி அல்ல. வாய் வழியாக சொல்வது அல்ல. அதை எழுத்துப் பூர்வமாக ஒரு புகாராகத் தர வேண்டும்.

எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைப் படித்துவிட்டு அதைத் தெளிவாக புரிந்துகொண்டு அதன் பிறகு கருத்து சொல்ல வேண்டும். அவர் இப்பொழுது காவல் துறையைப் பற்றி குறிப்பிட்டார். இதில் இந்த அரசு பொறுப்பேற்றது முதல் 24 ஆயிரத்து 503 புதிய காவலர் மற்றும் அலுவலர் பணியிடங்கள் உருவாக்கப்பட்டுள்ளன என்று இருக்கிறது. அடுத்த வரியில் ‘‘இந்தியாவிலேயே முதல் முறையாகத் தொடங்கப்பட்டுள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படைத் திட்டம் முதலமைச்சர் அவர்களின் சிந்தனையில் உதித்த உன்னதத் திட்டமாகும். ஏற்கெனவே உறுதியளித்தவாறு இத்திட்டத்திற்கென 10 ஆயிரத்து 99 நபர்கள் தேர்வு செய்யப்பபட்டுள்ளனர்’’ என்று இருக்கிறது. அந்த எண்ணிக்கையிலிருந்து இந்த எண்ணிக்கையைக் கழித்துவிட்டு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் 24 ஆயிரத்து 503 புதிய அலுவலர்களை நியமித்ததாகச் சொல்கிறார்கள். ஆனால், 10 ஆயிரத்து 99 நபர்கள்தான் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள்.

மீதமுள்ளவர்களை உடனடியாக பணியில் அமர்த்த வேண்டும் என்கிறார். முதலில் குறிப்பிட்டது காவலர் பணியிடங்கள். 24 ஆயிரத்து 503 ஏற்கெனவே ஒப்புதல் அளிக்கப்பட்ட, Sanction அளிக்கப்பட்ட காவலர் பணியிடங்கள்.

இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது இளைஞர் படை. அது புதிதாக இந்த அரசு உருவாக்கிய இளைஞர் படை. அது இந்தியாவிலேயே வேறு எங்கும் கிடையாது. இதுவரை காவல் துறையிலும் கிடையாது. இதற்குத் தனியாக ஆட்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். இதற்குத்தான் 10 ஆயிரத்து 99 நபர்கள் தேர்வு செய்யப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது. அந்தத் தேர்வு முடிந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த எண்ணிக்கையையும், இந்த எண்ணிக்கையையும் போட்டுக் குழப்பிக் கொள்ளக் கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, காவல் துறையில் காலிப் பணியிடங்களை நிரப்புவது என்றால் நினைத்த மாத்திரத்தில் உடனடியாகச் செய்யக்கூடிய காரியம் அல்ல. அதற்கென்று விதிமுறைகள் இருக்கின்றன, அதற்கென்று ஒரு நடைமுறை இருக்கிறது. அதற்கென்று குறிப்பிட்ட Procedure இருக்கிறது. அதன்படி எத்தனை பணியிடங்களை நிரப்ப வேண்டுமோ அதற்கு Uniform Services Recruitment Board என்று ஒரு வாரியம் இருக்கிறது. அதுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்கள் விளம்பரம் கொடுக்க வேண்டும். இந்தப் பணியிடங்களில் தேர்வு செய்யப்பட விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என்று சில தேதிகள் கொடுக்கிறார்கள். அதன் பிறகு விண்ணப்பங்கள் பெறப்படும். அதன் பிறகு பல்வேறு சோதனைகள், test-கள், தேர்வுகள் நடத்தப்படுகின்றன. அதன் பிறகுதான் அவர்கள் தேர்வு செய்யப்படுகிறார்கள். அதன் Written Test இருக்கிறது. Physical Efficiency Test இருக்கிறது. Physical Measurements Test இருக்கிறது. இப்படி பல்வேறு சோதனைகள், தேர்வுகள்

உள்ளன. அவையெல்லாம் முடிய வேண்டும். அதன் பிறகுதான் இறுதித் தேர்வு அறிவிக்கப்படும். அதன் பின்னர் அவர்களுக்குக் குறைந்தபட்சம் 7 மாத காலம் பயிற்சி அளிக்க வேண்டும். ஆகவே, காவல் துறையில் பணியிடங்களை நிரப்புவது என்றால் குறைந்தபட்சம் அந்த Procedurel Complete செய்வதற்கு ஒன்றரை ஆண்டுக் காலம் பிடிக்கும். எதிர்க்கட்சித் துணைத் தலைவர் சொல்கிறார் என்பதற்காக உடனடியாக யாரையும் நாம் பணியில் அமர்த்த முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ ★ ★

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
**செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்கள்
சென்னை ஹோட்டல் ஐடிசி கிராண்ட் சோழாவில்
21.2.2014 அன்று தமிழ்நாடு தொலைநோக்கு ஆவணம் 2023 –
பகுதி–II, தமிழ்நாடு தொழிற்கொள்கை 2014,
தமிழ்நாடு ஆட்டோமொபைல் மற்றும் ஆட்டோ உதிரிபாகங்கள்
கொள்கை 2014 மற்றும் தமிழ்நாடு உயிரித் தொழில்நுட்பக் கொள்கை
2014ஆகியவற்றையும், தமிழ்நாடு அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டு
வாரியத்தின் வலைதளத்தையும் வெளியிட்டும்,
புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளும் நிகழ்வுக்கு
முன்னிலை வகித்தும் ஆற்றிய உரையின் தமிழாக்கம்.




## நவீன, மதச்சார்பற்ற வளமை மிகுந்த இந்தியா உருவாகும்!

**மா**ண்புமிகு நிதி மற்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.ஓ. பன்னீர்செல்வம் அவர்களே, மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே,இந்தியத் தொழில் கூட்டுக்குழுவின் (CII) தலைவர் திரு. கிரிஸ் கோபால கிருஷ்ணன் அவர்களே, இந்தியத் தொழில்




கூட்டுக்குழுவின் முன்னாள் தலைவரும், டிவிஎஸ் மோட்டார் நிறுவனத் தலைவருமான திரு. வேணு சீனிவாசன் அவர்களே, இந்தியத் தொழில் வணிகக் கூட்டமைப்பின் (FICCI) தலைவர் திரு. சித்தார்த் பிர்லா அவர்களே, இந்திய அய்க்கிய தொழில் வணிகக் கூட்டமைப்பின் (ASSOCHAM) தலைவர் திரு. ரானா கபூர் அவர்களே, தமிழக அரசின் தலைமைச் செயலாளர்

திருமதி. ஷீலா பாலகிருஷ்ணன் அவர்களே, தொழில்துறை முதன்மைச் செலயலாளர் திரு.சி.வி. சங்கர் அவர்களே,அரசு அலுவலர்களே, பெரியோர்களே, தாய்மார்களே,

2011ல் எனது அரசு 3ஆவது முறையாகப் பதவியேற்றதிலிருந்து, தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம்— 2023ல் குறிப்பிடப்பட்டுள்ள மாபெரும் பணிகளைப் பூர்த்தி செய்வது குறித்து, நான் அயராது பாடுபட்டு வருகிறேன். இந்தத் திட்டத்தில் உற்பத்தித் துறையில் ஒவ்வொரு ஆண்டும் 14 சதவீத வளர்ச்சி இலக்கை நான் நிர்ணயித்திருந்தேன். மேலும் 2023ஆம் ஆண்டுக்குள் மாநிலத்தின் பொருளாதாரத்தில் அனைத்துத் துறைகளிலும் 15 இலட்சம் கோடி ரூபாய் ஒட்டுமொத்த முதலீட்டுக்கு வழிவகை செய்யப்பட்டிருந்தது. உற்பத்தி தொடர்பான இலக்குகளை அடைய மொத்தம் 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எனது முன்னிலையில் கடந்த 2012ஆம் ஆண்டு கையெழுத்திடப்பட்டன. இதன்மூலம் மொத்தம் 26 ஆயிரத்து 625 கோடி ரூபாய் முதலீட்டுக்கு உறுதி அளிக்கப்பட்டது. இன்று

தொழில்துறையில் மொத்தம் 5 ஆயிரத்து 81 கோடி ரூபாய் முதலீட்டுக்கான மேலும் 16 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுகின்றன. இதில் 16 ஆயிரத்து 282 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது. இதையும் சேர்த்து மொத்தம் இதுவரை எனது அரசு தற்போதைய ஆட்சியில்,




**முதலீட்டாளர்களுக்குப் பாராட்டு**

33 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டு, அதன் மூலம் 31 ஆயிரத்து 706 கோடி ரூபாய் முதலீட்டுக்கு வழி செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு இலட்சத்து 62 ஆயிரத்து 667 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. முதலீடு என்பது நியாயமான எதிர்பார்ப்புகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் நம்பிக்கை என நான் அடிக்கடி தெரிவித்து வந்துள்ளேன். இது நம்பிக்கை ஓட்டு போன்றது. தமிழ்நாட்டின் மீது நம்பிக்கை வைத்துள்ள முதலீட்டாளர்கள் அனைவரையும் பாராட்டுகிறேன். தொடர்ந்து அவர்கள் இதே நம்பிக்கையை நீட்டிப்பார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

**உறுதியான நம்பிக்கை**

எனது அரசுக்கு முன்புள்ள மிகப்பெரிய சவால் என்னவென்றால், தற்போது நிலவும் நிச்சயமற்ற சர்வதேச பொருளாதாரச் சூழ்நிலையில், உள்நாட்டில் மந்தநிலை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், அவற்றைக் கடந்து பொருளாதார

வளர்ச்சியை எட்டுவதாகும். வளர்ச்சி அடைந்த நாடுகள் கூட, இப்போதுதான் கடும் பொருளாதார நெருக்கடியிலிருந்து மெதுவாக மீண்டு வருகின்றன. சீனாவின் அந்நிய நேரடி முதலீடு பெரிய அளவில் இருந்தது, இப்போது சரிவடைந்து வருவதாகத் தோன்றுகிறது. எனினும், நீண்டகால அடிப்படையில் சர்வதேச பொருளாதார வலிமை ஆசியாவை நோக்கி, நகர்ந்துள்ளது. குறிப்பாக இந்தியா மற்றும் சீனாவை நோக்கி திரும்பியுள்ளது. இந்தியாவில் தமிழ்நாடு இத்தகைய வலிமையின் மையமாக உருவெடுக்கும் என்ற உறுதியான நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

தமிழ்நாட்டின் முக்கியப் பங்களிப்புடன் புத்தெழுச்சிப் பெற்ற இந்தியா உருவாகும் என்ற நம்பிக்கை உள்ளது. சமுதாயத்தில் அனைவருக்குமான பகிரங்க சந்தைகள் நிறைந்த ஒரு நாடு உருவாகும். முயற்சி மற்றும் அறிவாற்றலால் உருவாக்கப்பட்ட, படைப்பாற்றல் கொண்ட நாடு உருவாகும். வளர்ச்சி மற்றும் சமத்துவத்துடன் கூடிய நாடு உருவாகும். அமைதி, ஸ்திரத் தன்மை மற்றும் வளர்ச்சி ஆகியவற்றைக் கொண்ட நாடு உருவாகும். நவீன, மதச்சார்பற்ற, வளமை மிகுந்த இந்தியா உருவாகும். இந்த நாள் வெகு தொலைவில் இல்லை என்று உங்கள் அனைவருக்கும் நான் உறுதியளிக்கிறேன்.

இந்த உயரிய இலட்சியத்தை மனதில் கொண்டுதான் தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 தொகுப்பை வெளியிட்டேன். இந்த இலட்சியத்தை நிஜமாக்குவதில் நான் உறுதியாக இருக்கிறேன். இந்த உறுதியைக் காப்பாற்றும் விதமாக தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 பகுதி–2ஐ இன்று நான் வெளியிட்டிருக்கிறேன். இதில், துறைவாரியான அணுகுமுறை குறித்த அறிக்கைகளும், இடம்பெறவுள்ள உட்கட்டமைப்புத் திட்டங்களின் அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. இந்தத் தொகுப்பில் மின்சாரம், போக்குவரத்து, தொழில் மற்றும் வணிக

உட்கட்டமைப்பு, நகர்ப்புர உட்கட்டமைப்பு மற்றும் சேவைகள், வேளாண்மை மற்றும் மனிதவளம் ஆகிய 6 முக்கியத்துறைகள் தொடர்பான 217 உட்கட்டமைப்புத் திட்டங்கள் குறித்த அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம்–2023 முதல் பகுதி வெளியிடப்பட்டபோது தெரிவிக்கப்பட்ட சில யோசனைகள் இந்த 2வது பகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. அதன்படி, வேளாண் துறையில் முதலீடானது 40 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து, ஒரு லட்சத்து 21 ஆயிரத்து 400 கோடி ரூபாய் அளவுக்குக் கணிசமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மனிதவளத் துறையில் முதலீடானது 30 ஆயிரம் கோடி ரூபாயிலிருந்து 59 ஆயிரத்து 140 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. மற்ற முக்கியத்துறைகளில் முதலீட்டு அளவுகள் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட அளவில் பராமரிக்கப்படுகிறது. ஒட்டுமொத்த முதலீட்டு இலக்கு 15 இலட்சம் கோடி ரூபாயாக உள்ளது.

**இரட்டை இலக்க வளர்ச்சி**

இதன் மூலம் தமிழ்நாடு தொலை நோக்குத் திட்டம் 2023 தொகுப்பின் பலன்கள் கிட்டுவது உறுதி செய்யப்பட்டுள்ளது. 2004–2005ல் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 11.45 சதவீதமாகவும், 2005–2006ல் 13.69 சதவீதமாகவும் இருந்தது. 2007–2008ல் வளர்ச்சி விகிதம் 6.13 சதவீதமாகவும், 2008–2009ல் 5.45 சதவீதமாகவும் குறைந்தது. 2013–2014ல் தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் மீண்டும் வளர்ச்சிஅடைந்துள்ளது. 2012–2013ல் 4.14 சதவீதமாக இருந்த வளர்ச்சி, இப்போது 6.13 சதவீதமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழகத்தின் வளர்ச்சிப் பாதை பொதுவாக உயர்ந்துகொண்டே வருகிறது. அனைத்திந்திய வளர்ச்சி விகிதங்களைக் காட்டிலும் இது அதிகமாக உள்ளது. தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதத்தை இரட்டை இலக்கமாக அதிகரிக்க முடியும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கை உள்ளது.

துறைவாரியான மாற்றங்கள் தமிழகத்தை உயர் வளர்ச்சிப்பாதையில் கொண்டு செல்ல மிகவும் முக்கியமானது. இந்த மாற்றத்தின் மையமானது, உற்பத்தித் துறையின் பங்கை அதிகரிப்பதாகும். ஒட்டுமொத்த மாநில உற்பத்தி துணைத் துறையின் பங்கு தற்போது 17 சதவீதமாக உள்ளது. தமிழ்நாடு தொலைநோக்குத் திட்டம் 2023ன்படி இதை 2022–2023ஆம் ஆண்டுக்குள் 22 சதவீதமாக உயர்த்த தீர்மானித்துள்ளது. வேளாண்மைக்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளித்து அதன் வளர்ச்சியை விரைவுப்படுத்துவதுடன், உற்பத்தித் துறையில் இன்னும் ஏராளமானோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்க நாம் கவனம் செலுத்த வேண்டியுள்ளது.

2011ஆம் ஆண்டுஎனது அரசுபதவியேற்றபோது,மாநிலத்தின் மின்சார அமைப்புகள் 40 ஆயிரம்கோடி ரூபாய் அளவுக்குக் கடனில் சிக்கித் தவித்துக்கொண்டிருந்தன. இது முந்தைய அரசு எங்களுக்கு விட்டுச்சென்ற கசப்பான சொத்து. கடந்த 2 ஆண்டுகளில் மேலும் பல மின்சாரத் திட்டங்களை ஏற்படுத்தவும், மின்கடத்தல் மற்றும் விநியோகத்தை மேம்படுத்தவும் மாநில அரசு கணிசமான நிதியை ஒதுக்கியது. தற்போது நடைபெற்று வரும் திட்டங்கள் வேகமாக ஒருங்கிணைக்கப்பட்டு மொத்த மின்உற்பத்தித் திறன் 2 ஆயிரத்து 500 மெகாவாட்டுக்கு மேல் அதிகரிக்கப்பட்டுள்ளது.

மேலும், பல்வேறு திட்டங்களுக்காக 3 ஆயிரத்து 300 மெகாவாட் அளவுக்கு மின்சாரத்தை வாங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், உற்பத்தித் திறனை அதிகரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. நீண்டகால மற்றும் நடுத்தர கால மின்சார கொள்முதல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மரபுசாரா எரிசக்தி உற்பத்தித் துறையில் தமிழகம் தலைமை வகித்து வருகிறது. காற்றாலை மின்உற்பத்தியில் தமிழகம் நாட்டிலேயே முதலிடம் வகிக்கிறது. காற்றாலைகளிலிருந்து

மின்சாரத்தை வெளியேற்ற 400 கிலோ வோல்ட் பசுமை எரிசக்திப் பாதைகள் அமைக்கப்பட்டு வருகின்றன. விரிவான சூரியசக்தி கொள்கையை பல்வேறு புதிய அணுகுமுறைகளுடன் எனது அரசு நடைமுறைப்படுத்தி வருகிறது.

ஜப்பான் நாட்டின் சர்வதேச கூட்டுறவு நிறுவனத்திடமிருந்து தமிழகம் நிதி உதவியைப் பெற்று தமிழ்நாட்டின் மின்கடத்தல் முறையை மேம்படுத்த பயன்படுத்தி வருகிறது. இந்த அனைத்துமுயற்சிகளாலும் மின்துறையில் தேவைக்கும், விநியோகத்திற்கும் இடையிலான பற்றாக்குறை வெகுவாகக் குறைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. எனது அரசின் இந்த முயற்சிகள் அனைத்தும் 2011ல் கடும் மின் வெட்டால் அவதியுற்று வந்த தமிழகம், விரைவில் மின்சார வசதியில் அனைத்துத் தடைகளையும் வெற்றிக் கொண்டுவிடும் என்பதை பெருமிதத்துடன் தெரிவிக்கிறேன்.

எனது அரசு வெறும் வாய்பேச்சு அரசல்ல என்பதையும், மிக உயரிய கொள்கை இலட்சியங்களை முன்வைத்து செயல்படுகிறது என்பதையும் எடுத்துக்காட்டவே நான் இந்த விவரங்களை குறிப்பிடுகிறேன். எடுத்தக்கொள்கையில் விலகாமல், இலக்கை எய்துவதற்காக கடுமையான முடிவுகளை அரசு எடுத்து வருகிறது.

**புதிய கொள்கைகள்**

இன்றைய தினம் தமிழ்நாடு தொழிற்கொள்கை 2014, தமிழ்நாடு உயிரித் தொழில்நுட்ப கொள்கை 2014, தமிழ்நாடு ஆட்டோ மொபைல் மற்றும் ஆட்டோ உதிரி பாகங்கள் கொள்கை 2014 ஆகிய 3 புதிய கொள்கைகளை நான் வெளியிட்டுள்ளேன். எனது அரசு 1992 மற்றும் 2003ல் வெளியிட்ட தொழிற் கொள்கைகளால் ஏற்பட்ட ஆக்கப்பூர்வமான பயன்களை நான் நினைவுகூருகிறேன். 1992ல் வெளியிடப்பட்ட தொழிற்




கொள்கையானது, சென்னை மாநகரம் உலகின் மிகப்பெரிய மோட்டார் வாகன உற்பத்தி மையங்களில் ஒன்றாக மாற வழிவகுத்தது. 2003ல் வெளியிடப்பட்ட கொள்கையானது மின்னணுத் தொழில்துறையில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது. இன்று தமிழகம் இந்தியாவிலேயே மின்னணு வன்பொருட்கள் ஏற்றுமதியில் முதலிடம் வகித்து வருகிறது.

### புதிய தொழில் கொள்கை 2014

புதிய தொழில் கொள்கை 2014ஐ வெளியிட்டதில் எனது நோக்கம் என்னவென்றால், உற்பத்தித் துறையில் உலக நாடுகளுடன் தமிழகத்தைப் போட்டியிடச் செய்யும் வகையில் அதனைவலிமைப்படுத்துவதாகும். இந்த கொள்கையில் வர்த்தகத் துறையினருக்கு சாதகமான சூழ்நிலையை உருவாக்க புதிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளன. உலகத்தரம் வாய்ந்த உட்கட்டமைப்பை உருவாக்குதல், வேலைவாய்ப்பு மற்றும்

திறன் மேம்பாட்டை உருவாக்குதல் போன்ற அம்சங்கள் இதில் இடம்பெற்றுள்ளன. இதன் மூலம் தமிழ்நாடு முதலீட்டாளர்கள் நாடி வரும் இலக்காக மாறும் என்று நான் உறுதியாக நம்புகிறேன். இதன் வாயிலாக 20 இலட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக வழி ஏற்படும். இந்தக் கொள்கை தொழில் துறையில் புதிய சகாப்தத்தை ஏற்படுத்தும் என நம்புகிறேன். தமிழ்நாட்டை உற்பத்தித் துறையில் உலகின் முன்னணி மையங்களில் ஒன்றாக உருவாக்கும் என்றும் நம்புகிறேன்.

ஆட்டோ மொபைல் மற்றும் ஆட்டோ உதிரி பாக துறைகளின் முக்கியத்துவத்தை அங்கீகரித்து எனது அரசு தனியாக தமிழ்நாடு ஆட்டோ மொபைல் மற்றும் ஆட்டோ உதிரி பாகங்கள் கொள்கை 2014 என்ற புதிய கொள்கையைக் கொண்டு வந்துள்ளது. இந்தக் கொள்கையானது, இத்துறையில் வருங்காலத்தில் மேலும் வளர்ச்சி ஏற்படவும், வலுப்படுத்தவும் உதவும். 5 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கவும் உலகின் தலைசிறந்த 5 ஆட்டோ குழுமங்களில் சென்னையை ஒன்றாக மாற்றவும் இந்தக் கொள்கை வழிவகை செய்கிறது.

தமிழ்நாட்டில் ஆட்டோ மொபைல், இன்ஜினியரிங் பொருட்கள், ஜவுளி, தோல் போன்ற துறைகளில் தமிழ்நாடு முன்னணி வகித்து வரும் நிலையில் உயிரித் தொழில்நுட்பம், வானூர்தித்துறை, நானோ தொழில்நுட்பம் போன்ற நவீன துறைகளிலும் கவனம் செலுத்தவேண்டியது அவசியம் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். தமிழ்நாட்டில் தகுதி வாய்ந்த, திறன்மிக்க மனிதவளம் ஏராளமாக உள்ள நிலையில், அறிவுசார் பொருளாதார சக்தியாக தமிழகம் முன்னேறுவதற்கு வாய்ப்புகள் சாதகமாக அமைந்துள்ளன.

**உயிரித் தொழில்நுட்பக் கொள்கை 2014**

உயிரித் தொழில்நுட்பத்தின் வாய்ப்புகள் குறித்து ஆரம்பத்திலேயே உணர்ந்துகொண்ட ஒரு சில மாநிலங்களில்

தமிழ்நாடும் ஒன்று. இதன்படி, முதலாவது உயிரித் தொழில்நுட்ப பூங்கா சென்னையில் அமெரிக்காவின் கார்னல் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப ஒத்துழைப்புடன், கடந்த 2004ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதல் செயல்பட்டு வருகிறது. TICEL-2 என்ற அதிநவீன 6 இலட்சம் சதுர அடி பரப்பிலான உயிரிப் பாதுகாப்பு 2, 3 மண்டலங்கள் விரைவாக உருவாக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பின்னணியில் தான், தமிழ்நாடு உயிரித் தொழில் நுட்பக்கொள்கை – 2014 வெளியிடப்பட்டுள்ளது.

உட்கட்டமைப்புத் திட்டங்களை விரைவாகச் செயல்படுத்துவதற்காக தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டுச் சட்டம் விதிமுறைகள் மற்றும் ஒழுங்குக் கட்டுப்பாட்டு விதிகள் ஆகியவை அடங்கிய கொள்கை வெளியிடப்பட்டுள்ளது. மேலும், ஒப்பந்தப் புள்ளிகள் கோருவதில் வெளிப்படைத் தன்மையை வலியுறுத்தும்வகையில்விதிமுறைகளும்உருவாக்கப்பட்டுள்ளன. அண்மையில் வெளியிடப்பட்ட ஐ.நா. அறிக்கையில், அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு இடையே உரிய சட்டப்பூர்வ அங்கீகாரத்தை வழங்கியுள்ள முதலாவது மாநிலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்திற்கு நான் தலைவராக இருக்கிறேன். இந்த வாரியம், உட்கட்டமைப்புக் கொள்கை வரைமுறைகளை செயல்படுத்தும் பொறுப்பு வகிக்கிறது.

மின்னணு ஆளுமை முயற்சியின் மற்றொரு அம்சமாக நான் இன்று தமிழ்நாடு உட்கட்டமைப்பு மேம்பாட்டு வாரியத்தின் வலைதளத்தை வெளியிட்டுள்ளேன். இதற்கு உதவியாக முற்றிலும் தானியங்கிமயமான செயல்பாட்டு முறைகள் நடைமுறைப்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் முதலீட்டு சூழ்நிலை மிகவும் ஊக்கமளிப்பதாக உள்ளது. இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையமும்,

இந்திய அரசின் வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சகத்தின் கீழுள்ள தொழில் கொள்கை மற்றும் மேம்பாட்டுத்துறையும் வெளியிட்டுள்ள புள்ளி விவரங்கள் இதனை உறுதி செய்வதாக அமைந்துள்ளன.

இந்திய பொருளாதாரக் கண்காணிப்பு மையத் தகவலின்படி கடந்த 2011 ஜூன் மற்றும் 2014 ஜனவரி மாதத்திற்கு இடைப்பட்ட காலத்தில், தமிழகத்தின் முதலீட்டு வளர்ச்சி, ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 800 கோடி ரூபாயாக அதிகரித்துள்ளது. கருநாடகம், மகாராஷ்ட்ரா, குஜராத் போன்ற மற்ற மாநிலங்களைக் காட்டிலும் அதிகரித்து, தமிழ்நாட்டின் வளர்ச்சி விகிதம் 18.2 சதவீதத்தை எட்டியுள்ளது. மத்திய தொழில் வர்த்தக அமைச்சகத்தின், தொழில்கொள்கை மற்றும் மேம்பாட்டுத் துறையின் தொழில் உதவிச் செயலகம் அளித்த புள்ளி விவரங்களின் அடிப்படையில், கடந்த 2011ஆம் ஆண்டு மே தொடங்கி 2013ஆம் ஆண்டு டிசம்பர் வரையிலான 32 மாத காலத்தில், தமிழகத்தில், தொழில் தொடங்க விரும்புவோர் மற்றும் தொழில்முனைவோர் செய்து கொண்ட ஒப்பந்தங்களின் வாயிலாக மத்திய அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்ட முதலீடு, 1 இலட்சத்து 2,908 கோடி ரூபாய் ஆகும். இது 32 சதவீத உயர்வு.

வேலைவாய்ப்புகள் அதிகரிப்பதே, பொருளாதார வளர்ச்சித் தூண்டலை உறுதி செய்யும். எனது தலைமையிலான அரசின் நேர்மறையான நடவடிக்கைகளால், கடந்த 2011 மார்ச் மாதத்தில், தொழிலாளர் வைப்பு நிதி நிறுவனத்தில் 84 இலட்சமாக இருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கை, 2013 டிசம்பர் மாதத்தில் 1.61 கோடியாக அதிகரித்தது. ஆனாலும், என்னுடைய வெற்றியில் நான் நின்றுவிடவில்லை. மாநிலத்திற்கு மேலும் மேலும் முதலீடுகளை வரவேற்க விரும்பினேன். அதன் உச்சகட்டமாக, தமிழகத்தில் முதல்முறையாக, உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு, வரும் அக்டோபர் மாதம் ஏற்பாடு

செய்துள்ளோம். அதில், உங்களின் தீவிர பங்களிப்பை நான் எதிர்நோக்கியுள்ளேன்.

எனது உரையை நிறைவு செய்யும் முன், இன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்துகொண்டுள்ள தொழில்நிறுவனங்களுக்கு, மீண்டும் எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய அரசின் மீது நீங்கள் நம்பிக்கை வைத்துள்ளீர்கள். தமிழகத்தில் ஏற்கெனவே நூற்றுக்கணக்கான தொழில் நிறுவனங்கள் தங்களது தொழிலை வெற்றிகரமாக மேற்கொண்டு வரும் நிலையில், உங்கள் தொழில் திட்டங்கள் மிகப்பெரிய வெற்றிபெற முழு ஆதரவையும், ஒத்துழைப்பையும், எனது அரசு அளிக்கும் என்று உறுதிகூற விரும்புகிறேன். நமக்கு நாம் நிர்ணயித்துள்ள சவாலான கால கெடுவுக்குள், நமது தொலைநோக்குப் பார்வை மற்றும் பணிகளை ஒருங்கிணைந்து நிறைவு செய்ய அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். தமிழகத்தின் முன்னேற்றத்தில், விருப்பம் கொண்டுள்ள அனைவரின் உதவியுடன், நமது குறிக்கோளுடன் கூடிய தொலைநோக்கை அடைவோம் என நான் முழுமையாக நம்புகிறேன்.

தமிழக மக்கள் உயர்தரமான உட்கட்டமைப்பு வசதிகள், வாழ்வாதாரத்துக்கான வழிவகைகள் ஆகியவற்றைப் பெற்று, தமிழக மக்களின் அனைத்து விருப்பங்களையும் நிறைவேற்றுவதுடன், திருப்திகரமான வாழ்க்கையை அவர்கள் நடத்தும் வகையில், தமிழ்நாடு முதல் மாநிலமாக விளங்கும்.

நன்றி!

★ ★ ★

**"தமிழகமே எனது குடும்பம்.**
**தமிழ்நாட்டு மக்களே என் பிள்ளைகள்.**
**தமிழக மக்களின் நலனே என் நலன்."**

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
செல்வி **ஜெ ஜெயலலிதா** அவர்கள்